பகவான் விஷ்ணுவின் பெருமைக் காவியம்!
இளைய தலைமுறை அறியும் வகையில் கண்கவர்
ஓவியங்களுடன் காட்டாற்று வெள்ளமெனப் பொங்கும் மொழியில்!

புராணங்களில் ரத்தினம் என்று
போற்றப்படும் பாகவதத்தை
எளிமையுடன் இனிமையுடன்
நெஞ்சுநிறை பக்தியுடன்
அர்ப்பணிக்கிறோம்!

ரூ.150

ISBN 978-81-8368-588-7

வரம்

Religion
Cover illustration:
Shyam

ஸ்ரீமத் பாகவதம்



உமா சம்பத்

முதல் பாகம்

1. கருவைக் கலைக்க வந்த அஸ்திரம்! ... 09
2. பரீட்சித்துவுக்கு பட்டாபிஷேகம் ... 18
3. செத்த பாம்பால் வந்த சாபம்! ... 24
4. பூமியை மீட்க வந்த வராக அவதாரம் ... 32
5. அரக்கர்களான துவார பாலகர்கள்! ... 43
6. தீக்குளித்த தாட்சாயணி ... 53
7. வானத்தில் உதித்த புதிய நட்சத்திரம் ... 65
8. குதிரையைத் திருடிய இந்திரன்! ... 75
9. சிவன் உபதேசித்த விஷ்ணு ஸ்தோத்திரம் ... 85
10. அழகிய மானும், ஆசாபாசமும். ... 92
11. இந்திரனைத் துரத்திய பிரம்மஹத்தி தோஷங்கள்! ... 99
12. பக்தனுக்காக வந்த உக்ர அவதாரம்! ... 117
13. அசுரர்களை ஏமாற்றிய மோகினி! ... 132
14. மூவுலகையும் அளந்த வாமனச் சிறுவன்! ... 140
15. இளமையைத் தொலைத்த யயாதி ... 149
16. மீனாக வந்த மகா விஷ்ணு! ... 156

உள்ளே...

இரண்டாம் பாகம்

1. எதிரியாகப் பிறந்த எட்டாவது குழந்தை! ... 177
2. குழந்தையைக் குறிவைத்த அசுரர்கள்! ... 186
3. கொஞ்சம் குறும்பு; கொஞ்சம் விஷமம்! ... 194
4. பிருந்தாவனமும் நந்தகுமாரனும் ... 205
5. காளிங்க நர்த்தனமாடிய நந்தகுமாரன்! ... 216
6. காற்றினிலே வரும் கீதம்! ... 220
7. ராஸலீலை.. ராஸ நடனம்.. ஜலக்ரீடை! ... 226
8. அழிக்கிறான் கண்ணன்; அழைக்கிறான் கம்சன்!... 237
9. மதுராபுரி சாகசங்கள்! ... 247
10. குருதட்சணையாக ஓர் உயிர்! ... 257
11. ஜராசந்தனின் தொடர் போர்! ... 265
12. கண்ணனுக்கு வந்த காதல் கடிதம்! ... 272
13. நரகாசுரன், ஜராசந்தன் முடிவு! ... 284
14. கண்ணனைப் பழித்த சிசுபாலன்! ... 293
15. பாணாசுரனைப் பாதுகாத்த பரமேஸ்வரன்! ... 301
16. யதுகுலத்தின் முடிவு, பரீட்சித்தின் முக்தி! ... 311

ஸ்ரீமத் பாகவதம்
முதல் பாகம்

1

கருவைக் கலைக்க வந்த அஸ்திரம்!

இன்னும் ஏழே நாள்களில் பரீட்சித்து மன்னனின் வாழ்க்கை முடியப்போகிறது!

மக்களின் நன்மைக்காக காட்டுக்குள் வேட்டையாடப்போனவனை, விதி சர்வ சாதாரணமாக வேட்டையாடிவிட்டது! அங்கே ஒரு சிறுவன் கொடுத்த சாபம், மிகப்பெரிய மன்னனின் ஆயுளை சில விநாடிகளிலேயே மிகக் குறுகியதாக நிர்ண யித்துவிட்டது!

ஆம்! பாண்டவர்களின் வம்சத்தில் கடைசியாக மிஞ்சியிருந்த பரீட்சித்து ராஜனை, மரணம் விரைவாக நெருங்கிக்கொண்டிருந்தது.

'சிறியதோ பெரியதோ, உணர்ச்சிவசப்பட்டு ஒருவரை அவமதிக்கும் செயல் எத்தனை பெரிய

விபரீதத்தில் முடிந்து விடுகிறது!' என்று மனம் புழுங்கினான் பரீட்சித்.

அதுவும் அவனுக்கு நேரப்போவது சாதாரண மரணமல்ல! பாம்புகளின் அரசனான தட்சகன் என்னும் பாம்பு கடித்து சாகப் போகிறான் அவன்!

'ஒரு அரசனை கொல்லப்போவது மற்றொரு அரசன்தான்' - விரக்தியுடன் சிரித்துக்கொண்டான் பரீட்சித்.

பரீட்சித்தை மரணம் துரத்துவது இதுவொன்றும் முதல்முறை அல்ல! தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே கலைந்து போயிருக்க வேண்டியவன் அவன்.

மகாபாரதப் போரின் கடைசிநாளின்போதே மரணம் அவனை துரத்தத் தொடங்கிவிட்டது. அப்போது, கருவிலேயே அழிந்து போயிருக்கவேண்டியவன் அவன். அழித்து விடத் துடித்தவன் துரோணரின் மகனான அஸ்வத்தாமன்.

ஏன், என்ன காரணம்? கருவின் மீதுகூட அஸ்வத்தாமனுக்கு அப்படி என்ன விரோதம்?

எல்லாம் பழிக்குப் பழி விவகாரம்தான்!

***

பதினெட்டு நாள் பாரதப்போர் முடிவுக்கு வந்திருந்தது.

பீமனால் தொடைகள் பிளக்கப்பட்டு, குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்தான் துரியோதனன். தரையிலிருந்து எழுந்து கொள்ள முடியாமல், குமுறும் கோபத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு, இரண்டு கைகளாலும் பூமியை அடித்துக் கொண்டு புழுதியில் புரண்டுகொண்டிருந்தான். மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவனுடைய உடலைத் தின்பதற்காக, கழுகுகளும் நரிகளும் அங்கே சூழ்ந்திருந்தன. காத்துக்கொண்டிருந்தன.

துரோணரின் மகனும் துரியோதனனின் நண்பனுமான அஸ்வத்தாமன், அங்கே ஓடோடி வந்தான். உயிர் போகாமல் மரண வலியுடன் துடிதுடித்துக்கொண்டிருந்த துரியோதன னைக் கண்டான். அவனிருந்த நிலையைக் காணச்சகிக்காமல் கண்ணீர்விட்டுக் கதறி அழுதான். கோபத்தினால் சிவந்த விழிகளுடன் ஆக்ரோஷமாகச் சொன்னான்:

'துரியோதனா! எனது தந்தை துரோணர் கொடூரமாகக் கொல்லப்பட்டபோதுகூட நான் இத்தனை வேதனை அடைய வில்லை. ஆனால் உன்னை இந்தச் சூழலில் பார்க்கும்போது, மனம் எரிமலையாகக் கொதிக்கிறது. சத்தியமாகச் சொல் கிறேன். எதிரிக்கூட்டம் மொத்தத்தையும் இன்றிரவே ஒருவரைக்கூட விட்டுவைக்காமல் தீர்த்துவிடுகிறேன்' என்று சபதமெடுத்துக் கிளம்பினான்.

நள்ளிரவில் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்த நேரத்தில், பாண்டவர்கள் பாசறைக்குள் புகுந்தான் அஸ்வத்தாமன். அப்போது பாண்டவர்கள் அங்கில்லாததால், திரௌபதியின் ஐந்து மகன்களான உப பாண்டவர்கள் உட்பட அனைவரை யும் கொன்று பழி தீர்த்துக்கொண்டான். பின், பாண்டவர் களுக்குப் பயந்து ஓடி ஒளிந்துகொண்டான்.

மகன்களைப் பறிகொடுத்த திரௌபதி கதறித் துடித்தாள். கண்ணீர் விட்டாள். துயரம் தாங்கமுடியாமல் மார்பில் அடித்துக்கொண்டு அழுதாள்.

'ஐயோ! எனது பிள்ளைகள் போரில் இறந்துபோயிருந்தால் கூட, வீரத் தாயாக மகிழ்ச்சி கொள்வேனே! கொடியவன் அஸ்வத்தாமன் கையால் கொலை செய்யப்பட்டல்லவா மாண்டு கிடக்கிறார்கள்? பெற்ற வயிறு பற்றி எரிகிறதே? அந்த அஸ்வத்தாமனைத் தண்டிக்க யாருமே இல்லையா?' என்று கத்திக் கூப்பாடு போட்டாள்.

அவளின் பெற்ற வயிறு பதறித் தவித்தது. வேதனை தாள முடியாததாக இருந்தது.

திரௌபதியின் துயரத்தால் ஆவேசம் கொண்டான் அர்ஜுனன்.

'யுத்த தர்மத்தை மீறி அநீதியாக நடந்துகொண்ட அந்த அஸ்வத்தாமனின் தலையைக் கொண்டுவந்து திரௌபதியின் காலடியில் போடுகிறேன்!' என்று கர்ஜித்தபடி, கண்ணனுடன் தேரில் ஏறிப் புறப்பட்டான்.

உயிருக்குப் பயந்து பாகீரதி நதிக்கரையில் வியாசரின் ஆசிரமத்தில் பதுங்கியிருந்த அஸ்வத்தாமன், அர்ஜுனன் வருவதைக் கண்டதுமே பதறி எழுந்தான்.

அர்ஜுனனை எளிதில் வெல்ல முடியாது என்பதால், மிகக் கொடியதும் உலகத்தையே சர்வ நாசப்படுத்தக்கூடியதுமான சக்தி வாய்ந்த பிரம்மாஸ்திரத்தை அர்ஜுனன்மீது ஏவினான்.

நெருப்பைக் கக்கியபடி சீறிப் பாய்ந்துவந்த பிரம்மாஸ்திரத்தைக் கண்டு திகைத்துப்போனான் அர்ஜுனன்.

கிருஷ்ணன் அவனிடம், 'அர்ஜுனா, கவலைப்படாதே! பிரம்மாஸ்திரத்தை மற்றொரு பிரம்மாஸ்திரத்தால்தான் வெல்லமுடியும். நீயும் பிரம்மாஸ்திரத்தை ஏவி, அந்த பிரம்மாஸ்திரத்தை அமைதியாக்கு!' என்றான். அப்படியே செய்தான் அர்ஜுனன்.

இரண்டு அஸ்திரங்களும் எதிரெதிராக ஒன்றையொன்று நெருங்கின.

அப்போது வியாசரும், நாரதரும் அந்த அஸ்திரங்களுக்கு இடையே வந்து நின்றுகொண்டார்கள். அஸ்வத்தாமனையும் அர்ஜுனனையும் கடிந்துகொண்டார்கள்.

'உலகத்தையே அழிக்கக்கூடிய நாசகார அஸ்திரங்களை, இப்படியா பொறுப்பில்லாமல் ஏவுவது? மீண்டும் இதை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்றார்கள்.

ரிஷிகளின் வேண்டுகோளை ஏற்று, தான் செலுத்திய அஸ்திரத்தை திரும்பப் பெற்றுக்கொண்டான் அர்ஜுனன்.

பிரம்மாஸ்திரத்தை ஏவுவதைவிட அதை திரும்பப் பெற்றுக் கொள்வது மிகக் கடினமான காரியம். மிகுந்த மனோவலிமை பெற்றவர்களால்தான் அதைச் சாதிக்கமுடியும். அர்ஜுனன் அஸ்திரத்தைத் திரும்பப் பெற்றதுபோல அஸ்வத்தாமனால் செய்ய முடியவில்லை. அதற்கான வலிமை இல்லாமல் அவன் தோற்றுப்போனான்.

தலை கவிழ்ந்து நின்றிருந்த அஸ்வத்தாமனை, கயிறால் கட்டி இழுத்துச்சென்று திரௌபதியின் முன் நிறுத்தினான் அர்ஜுனன்.

அப்போது கிருஷ்ணன் போலியான கோபத்துடன், 'அர்ஜுனா! அந்தணனாக இருக்கவே தகுதியற்றவன் இவன். உன் மகன் களைக் கொன்ற இந்தக் கொடியவனை, உன் கைகளாலேயே வெட்டி வீழ்த்து' என்றான்.

அர்ஜுனனுக்கு அதைச் செய்ய மனம் வரவில்லை. தனது குரு துரோணரின் மகனான அஸ்வத்தாமனை தன் கைகளாலேயே கொல்வதா என்று தயங்கினான்.

துயரத்தின் உச்சத்தில் திரௌபதிக்கும் மனம் மாறிப்போனது. அஸ்வத்தாமனின் நிர்க்கதியான நிலையைக் கண்டு மன மிரங்கியவள், 'இவன் எனது பிள்ளைகளைக் கொன்ற பாவி யானாலும், குரு துரோணாச்சாரியாரின் மகன். எனது மகன் களைப் பறிகொடுத்ததுபோல இவனது தாய் கௌதமியும் இவனை இழந்து கண்ணீர் வடிக்கவேண்டாம். போகட்டும், விட்டுவிடுங்கள்' என்றாள்.

ஆம்! ஒரு தாயின் பாசமும் துக்கமும் வேதனையும் கண்ணீரும் மற்றொரு தாய்க்குத்தானே தெரியும்!

திரௌபதியின் நல்லெண்ணத்தால், தருமனும் நகுல சகா தேவனும் மனம் மகிழ்ந்துபோனார்கள். ஆனால் பீமனுக்கு மட்டும் அஸ்வத்தாமனை மன்னிக்க மனம் வரவில்லை.

'உறங்கிக்கொண்டிருந்த அப்பாவிக் குழந்தைகளை தர்மத் துக்கு விரோதமாகக் கொன்ற பாவி இவன்! இவனை

மன்னிக்கவே கூடாது. அர்ஜுனா, அவனைக் கொன்றுவிடு!' என்று கர்ஜித்தான்.

கிருஷ்ணன் அதை ஆமோதித்தான்.

'பீமன் சொல்வது சரிதான். அர்ஜுனா! அஸ்வத்தாமனுடைய தலையைத் துண்டிப்பேன் என்று சபதம் செய்து புறப்பட்டவன் நீ! அந்தவகையில் என்ன தண்டனை தரவேண்டும் என்று உனக்குத் தோன்றுகிறதோ அதைச் செய்!' என்றான்.

கண்ணன் குறும்புடன் சொல்ல, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட அர்ஜுனன்,

அஸ்வத்தாமன் தலையில் அணிந்துகொண்டிருந்த மிகச் சக்தி வாய்ந்த ரத்தின மணியுடன் சேர்த்து அவனுடைய சிகையை அறுத்து, உயிருடன் விரட்டிவிட்டான்.

ஓர் அந்தணனின் சிகையை அறுப்பதே அவனைக் கொல்வதற்குச் சமம்தான் என்பதால், இந்தத் தண்டனையே போதும் என்று அப்படிச் செய்தான் அர்ஜுனன்.

ஆனாலும், அஸ்வத்தாமனின் கொடூரச்செயல் அத்துடன் நிற்காமல் தொடரத்தான் செய்தது.

பாரதப்போரில் உயிர் நீத்த எல்லோருக்கும் இறுதிக்கடன் செய்து முடித்தபிறகு, கிருஷ்ணன் துவாரகைக்கு திரும்பத் தயாரானான்.

அப்போது, அபிமன்யுவின் மனைவியான உத்திரை பயந்து அலறியபடி ஓடி வந்தாள்.

'கிருஷ்ணா, என்னைக் காப்பாற்றுங்கள்! எனக்கு அடைக்கலம் கொடுங்கள்! சீறும் பாம்பு விஷம் கக்குவதைப்போல, எரியும் நெருப்பைக் கக்கியபடி ஒரு அஸ்திரம் என்னைத் துரத்தி வருகிறது. அந்த பாணத்தால் என் உயிர் மட்டும் போகுமானால் நான் பயம் கொள்ளமாட்டேன். என்னுடன் சேர்ந்து வயிற்றில் இருக்கும் குழந்தையும் செத்துப்போய், பாண்டு குலமே வம்சம் இல்லாமல் அழிந்துபோகுமே என்றுதான் பரிதவிக்கிறேன். ஆபத்பாந்தவா! அனாதரட்சகா! நீங்கள்தான் வயிற்றில் இருக்கும் என்னுடைய கருவைக் காப்பாற்றி, காத்தருள வேண்டும்!' என்று தஞ்சமடைந்தாள்.

பாண்டவர் குலத்தையே அடியோடு அழித்துவிடுவதற்காக, அஸ்வத்தாமன் 'அபாண்டவீயம்' என்னும் அஸ்திரத்தை ஏவியிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டான் கிருஷ்ணன். அந்த அஸ்திரத்தை தனது சுதர்சன சக்கரத்தால் மட்டுமே அழிக்கமுடியும் என்பதால், தானே ஜோதி ரூபமெடுத்து உத்திரையின் கர்ப்பத்தினுள் புகுந்தான். கருவைக் கலைக்க வந்த அபாண்டஸ்திரத்தை அங்கேயே தடுத்து அழித்து கர்ப்பத்தைக் காப்பாற்றினான்.

கிருஷ்ணனின் கருணையைக்கண்டு அனைவரும் போற்றித் துதித்தார்கள்.

மெய் சிலிர்த்துப்போன குந்தி, ஆனந்தக்கண்ணீருடன், கண்ணனை வணங்கினாள்.

'கிருஷ்ணப் பிரபுவே! ஆதியும் அந்தமும் இல்லாத சிறப்புக்குரியவனே! உன் பாதங்களை வணங்குகிறேன். எங்களைத் துரத்தும் துன்பங்களிலிருந்து, தொடர்ந்து நீதான் எங்களைக் காத்து வருகிறாய். இப்போதும் பாண்டு குலம் அழியாமல் நீயே ரட்சித்தாய். உனது இத்தனை கருணைக்கும் அருளுக்கும், நாங்கள் எவ்வாறு நன்றிக்கடன் தீர்க்கப் போகிறோம்? பகவானே! நீயே இந்த உலகத்தின் அதிபதி. நீயே ஆத்மா. இந்த உலகமே நீதான். எத்தனை இடையூறுகள் குறுக்கிட்டாலும், நதியானது எல்லாவற்றையும் தாண்டி எப்படி கடலைச் சென்றடைகிறதோ, அதைப்போல எல்லாப் பிறவிகளிலும் உன் நினைப்பே எங்கள் நெஞ்சத்தில் இருந்து உன் பாத கமலங்களைச் சரணடைய வேண்டும். நீயே எங்களை ஆட்கொள்ள வேண்டும். அருள்புரிவாய் கண்ணா!' என்று துதித்தாள்.

கண்ணன் தன் மோகனப் புன்னகையுடன் 'அப்படியே ஆகட்டும்' என்று அருளினான்.

பின் அவன் துவாரகைக்குப் புறப்படத் தயாரானபோது, தருமன் அவனைத் தடுத்தான்.

'கிருஷ்ணா! நண்பர்கள், உறவினர்கள், பெரியோர்கள் என்று அனைவரையும் போரில் பறிகொடுத்து நிம்மதியிழந்து தவிக்கிறேன். இன்னும் சிறிது காலம் நீ எங்களுடன் இருந்தால், மனம் ஆறுதல் பெறுவேன்' என்று வேண்டினான்.

தர்மனின் வேண்டுகோளை ஏற்று அவர்களுடன் தங்கினான் கிருஷ்ணன்.

'யுத்தத்தில் நடந்த மரணங்களுக்கு நான் பொறுப்பாகி விட்டேனே' என்று மனம் கலங்கிய தருமனுக்கு, கண்ணன் தேறுதல் கூறினான்.

'தர்ம புத்திரனே! நீ ஒருபோதும் கலக்கமடைய தேவையில்லை. சமாதானத்தையே நாடியபோதும் போரானது உன் மீது திணிக்கப்பட்டது. போரை எதிர்கொள்வதே க்ஷத்திரிய தர்மம்! எனவே, ஒரு க்ஷத்திரியனுக்கு உரிய கடமையையே நீ செய்து முடித்திருக்கிறாய். இதுவே ராஜநீதி! இதைப்பற்றி பிதாமகர் பீஷ்மரிடம் கேட்டுப் பார். உன் மனக்குழப்பம் தீரும்படி அவரே உனக்கு இதை விளக்குவார்' என்றவன், பாண்டவர்களை அழைத்துக்கொண்டு பீஷ்மரை தரிசிக்கச் சென்றான்.

குருக்ஷேத்திர பூமியில் உத்திராயண காலத்தில் உயிர் விடுவதற்காக அம்புப்படுக்கையில் காத்திருந்தார் பீஷ்மர். அனைவரும், அவரைப் பணிந்து வணங்கி நின்றார்கள். கிருஷ்ணன் பீஷ்மரைக் காண, வருகிறான் என்பதை அறிந்து தேவ ரிஷிகளும் விசுவாமித்திரர் முதலான பிரம்ம ரிஷிகளும் ராஜ ரிஷிகளும் இன்னும் பிரம்மாவும் நாரதரும்கூட அங்கு வந்தார்கள்.

மரணத் தறுவாயிலும் புன்முறுவல் மாறாத முகத்துடன் அனைவரையும் வரவேற்றார் பீஷ்மர். பெரியோர்களை வணங்கி, சிறியவர்களுக்கு ஆசி கூறினார். பிறகு தர்மனின் மனக் கலக்கத்தை தெரிந்துகொண்டு, அவன் மனம் தெளிவடையும் படியாக தரும நெறிகளையும் ராஜ நீதியையும் விரிவாக உபதேசித்தார்.

ஸ்ரீமன் நாராயணனே கிருஷ்ணனாக அவதரித்திருக்கிறான் என்பதை உணர்ந்தவரான பீஷ்மர், இறுதியாக மனத்தினாலேயே அவனை போற்றித் துதித்தார். கண் இமைக்கவும் மறந்தவராக, கிருஷ்ணனையே உள்ளம் குளிர தரிசித்தபடி இருந்தார். உத்திராயண காலம் நெருங்கியதும், பகவானின் திருநாமத்தை உச்சரித்தபடியே தன் உயிரை விடுத்து முக்தியடைந்தார்.

அவருடைய ஜீவன், ஜோதி வடிவத்தில் கிருஷ்ணனுடைய உடலோடு சென்று கலந்ததைக் கண்டு, அனைவரும் திகைத்துப்போனார்கள். பரவசத்துடன் கிருஷ்ணனைப் போற்றி வணங்கினார்கள்.

தருமன், பிதாமகர் பீஷ்மருக்கு ஈமக்கடன் செய்துமுடித்ததும் கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பினான்.

கிருஷ்ணனைப் பிரிந்திருந்த துவாரகாபுரி மக்கள் அவன் வருகையினால் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆரவாரமாக வரவேற்றுக் கொண்டாடினார்கள். அவதார புருஷனான பகவானும் அவர்களிடத்தில் மாயையை ஏற்படுத்தி, தன்னை ஒரு சாதாரண மானிடன் போலவே காண்பித்துக்கொண்டான். கோபிகைகளுடன் கொஞ்சிக்குலவி அவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தி, ஒரு ஸ்திரி லோலன் போலவே திரிந்தான். பிருந்தா வனத்தில் அவனுடைய சிருங்கார ராசலீலை தொடர்ந்தது.

***

2

பரீட்சித்துவுக்கு பட்டாபிஷேகம்

அஸ்தினாபுரத்தில் தருமன், ராஜ்ய பரிபாலனத்தை சிறப்பாக நடத்திவந்தான். அவனுடைய ஆட்சியில் ராஜ்ஜியம் செழிப்பாக இருந்தது. மக்கள் எவ்விதக் குறையுமின்றி மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்.

கண்ணனால் கருவிலேயே காப்பாற்றப்பட்ட உத்திரையின் கர்ப்பம் நல்லமுறையில் வளர்ந்தது. அவள் பத்தாம் மாத முடிவில், ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

பகவான் விஷ்ணுவால் காப்பாற்றப்பட்டதால், குழந்தைக்கு 'விஷ்ணுராதன்' என்று பெயர் சூட்டப்பட்டது. அத்துடன் அக்குழந்தை தன்னைக் காணவந்தவர்கள் ஒவ்வொருவரையும்

உற்றுநோக்கியது. தான் கர்ப்பத்தில் இருந்தபோது அங்கே தன்னைக் காக்கவந்த அழகிய நாயகன் இவர்தானா என்று ஒவ்வொருவரையும் அது பரீட்சித்துப் பார்த்ததால், குழந்தைக்கு 'பரீட்சித்' என்றும் பெயரிடப்பட்டது. அப்பெயரே அவனுக்கு நிலைத்தும் போனது.

தரும புத்திரன் ஜோதிடர்களை அழைத்து, குழந்தையின் ஜாதகத்தைக் கணிக்கச்சொல்லி அவனுடைய எதிர்காலத்தைப்பற்றி விசாரித்தான்.

'இந்தக் குழந்தை, மிக நல்ல பண்புகள் கொண்டவனாகத் திகழ்வான். இக்ஷ்வாகு, ஸ்ரீராமன், சிபிச் சக்ரவர்த்திபோல உலகம் புகழும்வகையில் மிகச்சிறப்பாக அரசாள்வான். பின்னாளில் ஒரு ரிஷி புத்திரனின் சாபத்துக்கு ஆளாகி அதனால் மரணமடைவான். ஆனாலும் தன் கடைசி நாள்களில் சுகர் மகரிஷியிடம் 'பாகவதம்' கேட்டு, பகவான் நாராயணனின் திருவடிகளைச் சென்று சேர்வான்' என்று ஜோதிடர்கள் பரீட்சித்தின் ஜாதகத்தைக் கணித்துக் கூறினார்கள்.

பாண்டு வம்சத்தின் ஒரே வாரிசான பரீட்சித் பெரும் புகழ் பெற்று விளங்குவான் என்பதைக்கேட்டு பாண்டவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். பரீட்சித்தை சகல கலைகளிலும் வல்லவனாக, சிறப்பாக வளர்த்தார்கள்.

இந்தச் சமயத்தில் 'பாரதப்போரில் பங்குகொள்ளாமல் மனம் வெறுத்து தீர்த்த யாத்திரை சென்றிருந்த விதுரர் அஸ்தினாபுரம் திரும்பினார். பாண்டவர்கள் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தார்கள்.

விதுரர், தாம் தீர்த்த யாத்திரை சென்றுவந்த திருத்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் போன்றவற்றைப் பற்றியெல்லாம் அவர்களிடம் கூற, பாண்டவர்கள் குருக்ஷேத்திரப் போரின் நடப்புகளை அவரிடம் பகிர்ந்துகொண்டார்கள்.

விதுரர் மனத்தில், இப்போதும் விரக்தியும் துக்கமுமே நிரம்பி இருந்தது. காரணம், கிருஷ்ணர் பிறந்த குலமான யதுகுலம்

முழுதும், ஒரு ரிஷியிடம் பெற்ற சாபத்தால் அழிந்து போயிருந்தது. கிருஷ்ணனும் பலராமனும்கூட தங்களுடைய உயிரை விடுத்து பூவுலகைவிட்டு நீங்கியிருந்தனர். இதைப் பற்றி பாண்டவர்களிடம் தெரிவித்தால், அவர்கள் மனம் தாங்க மாட்டார்கள் என்பதால், யாரிடமும் சொல்லாமல் மனத்துக் குள்ளேயே புழுங்கினார்.

விதுரரைப்போலவே அஸ்தினாபுர அரண்மனையில் திருதராஷ்டிரனும் காந்தாரியும்கூட மனப்புழுக்கத்தில்தான் இருந்தனர்.

தருமன், அர்ஜுனன் முதலானவர்கள் திருதராஷ்டிரனையும், காந்தாரியையும் மிக நல்லமுறையில் மதிப்புடன்தான் நடத்தினார்கள் என்றாலும், பீமன் மட்டும் அவர்கள்மேல் கோபம் குறையாதவனாகவே இருந்தான். அவ்வப்போது கேலியும் கிண்டலுமாகப் பேசி, அவர்கள் மனத்தைப் புண்படுத்தினான்.

இதைப்பற்றி திருதராஷ்டிரன் விதுரரிடம் கூறி வருந்தினான்.

அப்போது விதுரர், 'மன்னா! கலிகாலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. கலி புருஷனின் லீலையால், மிக நல்லவர்களும் கூட மனம் பிறழத்தான் செய்வார்கள். மனம் வருந்திப் பயனில்லை. பெற்ற நூறு பிள்ளைகளையும் பறிகொடுத்து விட்டீர்கள். வயதும் ஆகிவிட்டது. இனியும் எதற்காக, அரண்மனை சுக போகங்களை அனுபவிக்க எண்ணுகிறீர்கள்? இங்கே, இனி உங்களுக்கு நிம்மதி கிட்டாது. பீமன் ஏதோ பிராணிக்குப் போடுவதுபோல தூக்கிவீசும் உணவை சாப்பிட்டுக் கொண்டு, நீங்கள் இங்கிருக்கத்தான் வேண்டுமா? இது ஒரு வாழ்வா? நான் சொல்வதைக் கேளுங்கள். இனியும் நீங்கள் இங்கிருக்க வேண்டாம். காட்டுக்குச்சென்று துறவறம் மேற்கொண்டு நற்கதி அடைய முயற்சி செய்யுங்கள்!' என்று கூறினான்.

விதுரன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன் யோசித்தான். அன்றிரவே, யாரிடமும் சொல்லாமல் காந்தாரியையும்

அழைத்துக்கொண்டு விதுரனுடன் அரண்மனையைவிட்டு வெளியேறி காட்டுக்குச் சென்றுவிட்டான்.

மறுநாள் திருதராஷ்டிரன் காந்தாரியைக் காணாமல் தரும புத்திரன் திடுக்கிட்டுப்போனான். ஆட்களை அனுப்பி பல இடங்களிலும் தேடிப்பார்த்தான். கிடைக்காததால் மனம் வாடி வேதனைப்பட்டான்.

அப்போது, நாரதரும் தும்புருவும் அஸ்தினாபுர அரண்மனைக்கு வந்து தருமனைச் சந்தித்தார்கள்.

நாரதர் குந்தி புத்திரனிடம், 'தரும புத்திரா! திருதராஷ்டிரனைத் தேடி வருத்தப்படாதே. அவர், காந்தாரியுடனும் விதுரனுடனும் இமயமலையின் தென்பாகத்துக்குச் சென்றுவிட்டார். அங்கே அனைவரும் கங்கையில் நீராடி அப்புனிதநீரை அருந்தி, ரிஷிகளின் மத்தியில் அவர்களின் போதனையைக் கேட்டபடி மனநிம்மதியோடு பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றிலிருந்து ஐந்தாம் நாள், திருதராஷ்டிரனும் காந்தாரியும் அவர்கள் வசிக்கும் ஆசிரமம் எரிந்து, இருவரும் அக்னியில் ஐக்கியமாகி உயிரைத் துறந்து விடுவார்கள். விதுரர் மறுபடியும் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுவிடுவார். எனவே அவர்கள் பற்றிய கவலையை விட்டு, தொடர்ந்து உன் கடமையைச் செய்து வா. உறவுகளை உண்டாக்குவதும் இணைத்து வைப்பதும் பின் பிரித்துச் செல்வதும் எல்லாமே இறைவனின் செயல்தான்! நீ தனியாகத் தான் வந்தாய். தனியாகத்தான் செல்லப்போகிறாய். ஆகவே, எவர் மீதும் ஆசையோ அன்போ பற்றோ பாசமோ வைத்து துயரத்தில் மூழ்காதே!' என்று சொல்லிவிட்டுப் போனார்.

நாரதர் சொல்லிச்சென்றதன் தத்துவார்த்தம் தருமனுக்குப் புரிந்தாலும், அவனால் எதையும் சுலபமாக உதறிவிட முடியவில்லை. பாழும் மானிடப்பிறவிக்கே உரிய பந்த பாசத்தால் மனம் தவிக்கத்தான் செய்தது.

திருதராஷ்டிரன் யாரிடமும் சொல்லாமல் வெளியேறியது ஒருபக்கம் என்றால், கண்ணனைப் பார்ப்பதற்காக துவார

கைக்குச் சென்ற அர்ஜுனன் வேறு இன்னும் திரும்பி வராதது, தருமனுக்கு கவலையைத் தருவதாக இருந்தது. மேலும் அவனைப் பயமுறுத்துவதுபோல அஸ்தினாபுரத்தில் அவனைச்சுற்றிலும் பலவிதமான கெட்ட சகுனங்கள் தென் பட்டன. நாட்டு மக்களிடையேயும் மனக்கட்டுப்பாடுகள் தகர்ந்து, பலவிதமான கெட்ட குணங்கள் படியத் தொடங்கி யிருந்தன. நல்லொழுக்கம் சிறுகச் சிறுக சிதைந்துகொண் டிருப்பது கண்கூடாகத் தெரிந்தது.

இதையெல்லாம் கண்டு தருமன் துயரம் கொண்டிருந்தபோது, அர்ஜுனன் துவாரகையிலிருந்து திரும்பினான். எப்போதும் உற்சாகத் துள்ளலோடு வரும் அவனுடைய முகம், இப்போது பொலிவிழந்து இருண்டுபோயிருந்தது. கண்களில் கண்ணீர் கரைகட்டி நின்றது.

'அர்ஜுனா! என்ன ஆனது உனக்கு? உடல்நிலை சரியில் லையா? ஏன் இப்படி இருக்கிறாய்? துவாரகையில் கிருஷ்ண னைக் கண்டாயா? எல்லோரும் நலம்தானே?' என்று கேட் டான் தருமன்.

அர்ஜுனன் மனம் உடைந்துபோனவனாகக் கதறினான்.

'அண்ணா! கண்ணன் நம்மை மோசம் செய்துவிட்டான். இனி நாம் அவனைப் பார்க்கமுடியாதபடி நம்மைவிட்டு நீங்கி விட்டான். இதுவரை எவருடைய ஆதரவினாலும் உதவி யினாலும் நாம் வெல்ல முடியாதவர்களாகப் புகழ்பெற்று விளங்கினோமோ, அவன் நம்மைக் கைவிட்டுவிட்டு போய் விட்டான். அனைவரையும் கண்ணீரில் மூழ்கடித்துவிட்டு அவன் பூவுலகத்தைவிட்டு நீங்கி, வைகுந்தம் சென்று விட் டான். ஐயோ! இனி நான் என்ன செய்வேன் அண்ணா? அவனால்தான் நான் இந்திரனையும் வென்றேன். அவன்தான், ஜராசந்தனை ஜெயிக்க பீமனுக்கு வழிவகுத்துத் தந்தான். அவன் துணை இருந்ததால்தான், துரியோதனன் துச்சாதனன் போன்ற கொடியவர்களைக் கொன்று நாம் பழி தீர்த்துக் கொள்ள முடிந்தது. கோபக்காரரான துர்வாச முனிவரின் சாபத்துக்கு ஆளாகாமல் நம்மைக் காத்தவனும் அவன்தான்!

இப்படி நம் ஒவ்வொரு அசைவையும் தீர்மானித்தவன், இந்த உலகத்திலிருந்தே மறைந்துவிட்டான் அண்ணா. யாதவ குலத்துக்குள் சண்டை ஏற்பட்டு அந்தக் குலமே அழிந்து விட்டது. பலராமனும் தன் தேகத்தைவிட்டு விண்ணுலகம் சென்றுவிட்டாராம். இப்போது நான் ஒரு பொம்மை ஆகி விட்டேன் அண்ணா. கிருஷ்ணன் இல்லாததால், நான் சக்தி யற்றுப் போய்விட்டேன். துவாரகையில் கிருஷ்ணனுக்குப் பிரியமான அவனுடைய பதினாறாயிரம் மனைவிகளை கோபர்கள் தூக்கிச்செல்வதைக் கண்டேன். அந்த அபலைப் பெண்களைக் காப்பாற்றுவதற்காக கயவர்களைத் தடுக்க முயன்றேன். ஆனால் அண்ணா! அந்த வெட்கக்கேட்டை எப்படிச் சொல்வேன்? அந்த இடையர்கள் வெகு சுலபமாக என்னைத் தோற்கடித்துவிட்டார்கள். கிருஷ்ணன் இருந்த போது நான் வைத்திருந்த அதே காண்டீபம்தான்! அதே அம்புகள்தான்! அதே ரதம்தான்! ஆனால் கிருஷ்ணன் என் அருகில் இல்லாததால், எல்லாமே வலிமை இழந்துவிட்டன' என்று சொல்லித் தேம்பினான்.

இதைக்கேட்ட தருமனும் மற்றவர்களும் துடிதுடித்துப் போனார்கள். கிருஷ்ணனே சென்றுவிட்ட பிறகு, இனி இந்த பூமியில் நாமும் இருக்கவேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

தருமன், தன் பேரனான பரீட்சித்துவுக்கு பட்டாபிஷேகம் செய்து அஸ்தினாபுரத்துக்கு மன்னனாக்கினான். பின், பாண்டவர்கள் துறவுக்கோலம் கொண்டு திரௌபதியையும் அழைத்துக்கொண்டு வடதிசை நோக்கிப் புறப்பட்டனர். உயிரைத் துறக்கும் வைராக்கியத்துடன் பயணப்பட்டவர்கள் வழியிலேயே ஒவ்வொருவராக மோட்சமடைய, இறுதியாக தருமன் சொர்க்கலோகத்தை அடைந்தான்.

இவர்களைப் போலவே விதுரரும் கடும் விரதம் இருந்து தன் உடலிலிருந்து உயிரை விடுவித்துக்கொண்டார். சாபம் நீங்கியவராக மீண்டும் யம பதவியை அடைந்தார்.

***

3

செத்த பாம்பால் வந்த சாபம்!

பரீட்சித் மிகத் திறமையானவன். நற்குணங்கள் கொண்டவன். தனது முன்னோர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாதபடி, அவன் ராஜ்ஜியத்தை மிக நல்லமுறையில் அரசாட்சி செய்து வந்தான்.

விராட மன்னனின் மகளாகிய இராவதி, பரீட்சித்துவுக்கு மனைவியானாள். அவர்களுக்கு ஜனமேஜயன் முதலான நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள்.

பரீட்சித், தனது குடிமக்களையும் சொந்தப் பிள்ளைகளைப் போலவே பாவித்து அன்புடன் நடத்தினான். அவர்களுக்குத் தேவையானதைச் செய்துகொடுத்து, எந்தத் துன்பமும் இல்லாதபடி பார்த்துக்கொண்டான். தனது வீரத்தினாலும் வல்லமையினாலும் பகைவர்களே இல்லாதபடி செய்து அஸ்தினாபுரத்தைப் பாதுகாத்தான்.

பகவான் நாராயணனின்மீது பெரும் பக்தி கொண்ட பரீட்சித், அவ்வப்போது தன்னுடைய ராஜ்ஜியம் முழுவதையும் சுற்றி வருவான். தன்னுடைய அரசாட்சியில் எந்தத் தவறுகளும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும், மக்களின் குறைகளைத் தெரிந்துகொள்வதற்காகவும் மாறுவேடம் தரித்து நகர்வலம் செல்வான். அப்படி ஒருமுறை அவன் நகர்வலம் வரும்போது, ஓரிடத்தில் விசித்திரமான காட்சி ஒன்றைக் கண்டான்.

ஒரு கம்பீரமான காளை ஒன்று தன் மூன்று கால்களிலும் அடிபட்டு, மீதமிருந்த ஒற்றைக்காலில் தட்டுத்தடுமாறி வேதனையுடன் நின்றிருந்தது. அதன் அருகில் ஓர் அழகான பசு கண்களில் கண்ணீர் வழியக் காட்சி தந்தது.

பூவுலகத்தின் தர்மமே காளையாகவும், பூமாதேவியே பசுவாகவும் அங்கே நின்றிருந்தார்கள்.

அழுதுகொண்டிருந்த பசுவிடம், தன் ஒற்றைக்காலால் தட்டுத் தடுமாறிச் சென்ற காளை, அதன் துயரத்தைப்பற்றி விசாரித்தது.

'பூமாதேவியே! எதற்காக அழுது கொண்டிருக்கிறாய்? கண்ணீர் விடும் அளவுக்கு என்ன கவலை நேர்ந்தது? மனித குலம், நல்ல பண்புகளைக் கைவிட்டு தீய எண்ணங்களின் பின் செல்வதைக் கண்டு வருந்துகிறாயா? அல்லது இனி நேர்மையில்லாத மன்னர்கள் இப்பூமியை ஆளப்போகிறார்களே என்று அதை நினைத்து கவலைப்படுகிறாயா? வரப்போகும் காலத்தில், யாகங்கள் இல்லாமல் போய் வேதமும் நிலை பெறாமல் போகப்போகிறதே என்பதற்கான வேதனையா? தருமமாகிய நான், என் மூன்று கால்களும் பழுதுபட்டு ஒற்றைக் காலுடன் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே அதற்காகவா? இல்லை கிருஷ்ண பரமாத்மா இப்பூமியை

விட்டு நீங்கிவிட்டதற்கான துக்கமா? எதற்காக இந்தக் கண்ணீர்? சொல்!' என்று கேட்டது.

பூமியாகிய பசு, 'ஆம்! நீ சொன்னது சரிதான். நான்கு கால்களால் திடமாக மனிதகுலத்தைக் காத்துவந்த தருமதேவதையான நீ, உனது மூன்று கால்களும் சிதைக்கப்பட்டு ஒற்றைக் காலுடன் வேதனைப்படுவதை என்னால் காணச் சகிக்கவில்லை. அதேபோல் பகவான் விருப்பமுடன் படைத்த மனித குலம், தனது மிக நல்ல குணங்களான சத்தியம், பொறுமை, கருணை, தானம், தைரியம் போன்றவைகளைக் கைவிட்டு ஆசையின் பிடியில் அகப்பட்டு சுயநலப் பாதையில் போகிறதே என்றும் வருந்துகிறேன். கிருஷ்ணனின் பரிசுத்தமான பாத கமலங்களை ஸ்பரிசித்துக்கொண்டிருந்தவரை பூமியாகிய நான் மிக சந்தோஷமாக இருந்தேன். இன்றோ, கலிபுருஷன் ஒட்டுமொத்த பாவங்களின் வடிவமாக ஆளுமை செலுத்தத் தொடங்கிவிட்டான். என் கதி என்னாகுமோ தெரியவில்லை!' என்று விம்மியது.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, கருத்த உடலுடனும் கோரமான உருவத்துடனும் ஒருவன் அங்கு வந்தான். தன் கையிலிருந்த தடியால், பசுவையும் காளையையும் அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினான்.

இதைக்கண்ட பரீட்சித், கோபத்தின் உச்சத்துக்குப் போனான். விறுவிறுவென்று அந்த இடத்துக்கு விரைந்தவன், பிராணிகளை வதைத்துக்கொண்டிருந்த கொடியவனைப் பார்த்து சீறினான்:

'ஏய், பாவியே! எதற்காக இந்த வாயில்லாத ஜீவன்களை இம்சிக்கிறாய்? அவை உனக்கு என்ன தீங்கிழைத்தன? எனது ஆட்சியில் இப்படியொரு கருணையில்லாத செயலைச் செய்யும் உன்னை, கொன்றாலும் பாவமில்லை' என்றவன், காளையிடம் திரும்பிக் கேட்டான்.

'அழுகின்ற பசுவே! துயரத்தில் இருக்கும் காளையே! நீங்கள் பயப்பட வேண்டாம். உண்மையில், நீங்கள் ஏதோ தேவதைகளாகத்தான் இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. சொல்லுங்கள். உங்களைக் கொடுமைப்படுத்தும் இந்தக் கொடியவன் யார்? எதற்காக உங்களை இப்படி வதைக்கிறான்?'

காளை, குற்றவாளியைக் காட்டிக்கொடுக்க விரும்பாமல், 'மன்னா! எல்லாம் விதி என்பதைத் தவிர, என்னால் வேறு என்ன சொல்லமுடியும்? நான் யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை' என்றது.

பரீட்சித் சட்டென்று புரிந்துகொண்டவனாகப் பேசினான்.

'விரோதியைக்கூட காட்டிக்கொடுக்க விரும்பாத நீ, தர்ம தேவதையாகத்தான் இருக்கவேண்டும். தவம், நல்லொழுக்கம், இரக்கம், சத்தியம் என்கிற நான்கு கால்களைக் கொண்ட நீ, இப்போது பெண்ணாசை, மது மயக்கம், தற்பெருமை போன்ற அதர்ம காரியங்களால் சத்தியத்தைத் தவிர மற்ற மூன்று கால்களையும் இழந்திருக்கிறாய் என்று புரிகிறது. சத்தியம் என்கிற அந்த ஒற்றைக்காலையும் ஒடிக்க வந்திருக்கும் இந்தக் கரிய உடல் கொண்டவன், கலிபுருஷன் என்று எண்ணுகிறேன். கண்ணீர்விட்டுக் கதறியழும் இந்தப் பசு, கிருஷ்ண பரமாத்மாவை இழந்து துயரப்படும் பூமாதேவிதானே?' என்று கேட்டான்.

பின், கட்டுப்படுத்த முடியாத கோபத்துடன் கலிபுருஷனிடம் திரும்பி, 'அப்பாவிகளையும் திக்கற்றவர்களையும் வதைக்கும் உன்னை, இதோ இப்போதே கொன்றுபோடுகிறேன்!' என்றபடி அவனை வாளால் வெட்டப்போனான்.

'வேண்டாம்! வேண்டாம் மன்னா! தயவுசெய்து என்மீது கருணை காட்டு. என்னைக் கொன்றுவிடாதே!' என்று பரீட்சித்தின் காலடியில் மண்டியிட்டான் கலிபுருஷன்.

'தஞ்சம் அடைந்ததால் பிழைத்தாய். தெய்வ பக்தியும் வேத முழக்கமும் முறையான யாகங்களும் நடைபெறும் எனது

ராஜ்ஜியத்தில், இனி நீ அடியெடுத்து வைக்கக் கூடாது. ஓடிப் போ!' என்றான் பரீட்சித்.

'மன்னா! இந்தப் பூமி முழுவதும் உன் வசத்தில் இருக்கிறது. நான் வேறு எங்கு போவேன்? அடைக்கலம் கேட்பவருக்குக் கருணை காட்டும் தர்மப் பிரபுவே! நான் எந்த இடத்தில் வாழவேண்டும் என்று நீங்களே வழிகாட்டுங்கள்!' என்று வேண்டினான்.

சரணடைந்தவர்களைக் காக்கவேண்டியது தனது கடமையே என்றெண்ணிய பரீட்சித், யோசித்துவிட்டுச் சொன்னான்.

'சரி. மது, சூது, பெண் மோகம், ஜீவஹிம்சை என்கிற நான்கு இடங்களில், நீ சென்று குடியேறிக்கொள்!'

கலிபுருஷன் தயக்கத்துடன், 'இந்த நான்கு இடங்கள் மட்டும் எனக்குப் போதாதே!' என்று கேட்டான்.

'அப்படியானால், பொன்னாசை இருக்கும் இடத்தையும் எடுத்துக்கொள்!' என்று கலிபுருஷனை அனுப்பிவைத்தான் பரீட்சித்.

கலிபுருஷன் அந்த இடத்தை விட்டுச்சென்றதும் தரும தேவதை தவம், ஆசாரம், கருணை, சத்தியம் என்கிற தன்னுடைய நான்கு கால்களையும் பூரண நலத்துடன் திரும்பப் பெற்றாள். பூமாதேவியும் துயரம் நீங்கியவளாக சுபிட்சத்துடன் காணப்பட்டாள்.

பரீட்சித்தின் நீதி தவறாத நல் ஆட்சி தொடர்ந்து நடந்தது.

ஆனால், எத்தனை நல்லவர்களையும் விதி விட்டுவைப்பதில்லை. காலத்தின் கணக்குப்படியும் அவரவர் பாவ புண்ணிய பலன்களின்படியும், விடாமல் பின்தொடரத்தான் செய்கிறது!

பரீட்சித்தின் வாழ்க்கையிலும் அது விளையாடத்தான் செய்தது. பரீட்சித்தின் மனத்தில் தேவையற்ற கோபத்தை

ஏற்படுத்தி, ஒரு மோசமான சாபத்தை அவனுக்குப் பெற்றுத் தந்தது!

***

அடர்ந்த காட்டுக்குள், பசியாலும் தாகத்தாலும் தவித்தான் பரீட்சித்!

காட்டு விலங்குகள் அடிக்கடி நாட்டு எல்லைக்குள் புகுந்து குடிமக்களைத் துன்புறுத்தி வந்ததால், அவற்றை வேட்டையாடுவதற்காக காட்டுக்குள் புகுந்திருந்தான் அவன்.

எப்போதும்போல படை பரிவாரங்களோடுதான் வந்திருந்தான் என்றாலும், விலங்குகளைத் துரத்தி வேட்டையாடிக் கொண்டே வந்த மும்முரத்தில், அவன் தனது படைகளைப் பிரிந்து இப்போது வெகுதூரம் வந்துவிட்டிருந்தான்.

உச்சிப்பொழுதாகி தலைக்குமேல் சூரியன் தகித்துக் கொண்டிருந்தது. தொண்டை, தாகத்தால் வரண்டது. பசி, உயிரைப் பிடுங்கியது. களைப்பு, உடலை துவளச்செய்தது.

தன்னந்தனியே தட்டுத் தடுமாறியபடி நடந்த பரீட்சித், தாகத்தைத் தணித்துக்கொள்ள குளம் குட்டை ஏதாவது கண்ணில் படுகிறதா என்று தேடினான். எதுவும் தென்படாமல் போகவே ஏமாற்றமடைந்தான்.

அப்போதுதான் சற்று தூரத்தில் ஓர் ஆசிரமம் இருப்பதைக் கண்டான். மனத்தில் மகிழ்ச்சி கொண்டான். ஆசிரமத்தில் இருப்பவர்கள் மூலம் தனக்கு தண்ணீரும் உணவும் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில், அதை நோக்கி விரைவாக நடந்தான்.

அந்த ஆசிரமத்தில் அங்கிரஸ் என்கிற முனிவரும் அவருடைய மகன் சிருங்கியும் வசித்து வந்தார்கள். பரீட்சித்து சென்ற நேரம், ஆசிரம வளாகத்தில் யாருமேயில்லை. சுற்றிலும் நிசப்தம் நிலவியது.

'ஐயா! இங்கு யாராவது இருக்கிறீர்களா? இந்த நாட்டு மன்னன் பரீட்சித்து வந்திருக்கிறேன். தாகத்தாலும் பசியாலும் தவிக்

கிறேன். தயவுசெய்து, சிறிதளவு நீரும் உணவும் கொடுத்து உதவுங்கள்!'

வாசலில் இருந்தபடியே குரல்கொடுத்துப் பார்த்தான். ம்ஹூம்! பதிலே இல்லை. 'உள்ளே யாருமே இல்லையா?' என்று கேட்டபடியே, தயக்கத்துடன் ஆசிரமத்தினுள் நுழைந்தான்.

உள்ளே அறையின் நடுவில் முனிவர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் தியானத்தில் மூழ்கியிருந்தார். பரீட்சித் அவரைக் கண்டு எரிச்சலடைந்தான். தான் உள்ளே வந்த சப்தம் கேட்டும்கூட அவர் கண்விழிக்காமல் இருந்தது அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

'மகரிஷி வணக்கம்! மன்னன் பரீட்சித் வந்திருக்கிறேன்!' என்றான்.

முனிவரிடம் எந்தச் சலனமுமில்லை. மீண்டும் மீண்டும் குரல் கொடுத்துப் பார்த்தான். பலனில்லை.

பசியும் தாகமும் வாட்ட, பரீட்சித்துக்குள் கோபம் மூண்டது. தான் வந்திருப்பது தெரிந்தும், முனிவர் தன்னை உபசரிக்க மனமில்லாமல் வேண்டுமென்றே நிஷ்டையில் இருப்பது போல நடிக்கிறார் என்று நினைத்தான்.

ஆத்திரத்தால் அறிவிழந்திருந்த பரீட்சித்தின் கண்களுக்கு வெளியே செத்துக் கிடந்த பாம்பு ஒன்று பார்வையில் பட்டது. அதை நோக்கிச் சென்றவன், அந்தப் பாம்பை தனது வில்லின் நுனியால் எடுத்துவந்தான். தியானத்தில் இருந்த முனிவரின் கழுத்தில் அதை மாலையாகப் போட்டான். தன்னை அவமதித்தவரை பதிலுக்கு அவமானப்படுத்திவிட்டதாக நினைத்து, திருப்தியுடன் அங்கிருந்து விலகினான்.

அந்த சிறுபிள்ளைத்தனமான செயல்தான், பரீட்சித்தின் வாழ்க்கையில் மிகப்பெரிய விபரீதத்தை ஏற்படுத்தியது.

மன்னன் பரீட்சித்து அங்கிருந்து சென்ற சிறிது நேரத்தில், முனிவரின் மகனான சிருங்கி அங்கே வந்தான். தனது

தந்தையின் கழுத்தில் செத்துப்போன பாம்பின் உடல், மாலை போல விழுந்துகிடப்பதைக் கண்டான். அதிர்ச்சியடைந்தான்.

இந்த விஷமச்செயலைச் செய்தது பரீட்சித்து மன்னன்தான் என்பதை தன் தவ வலிமையால் அறிந்த அவனுடைய மனம் கோபத்தால் கொந்தளித்தது.

'மகா தபசியான என் தந்தையிடம் அவமரியாதையாக நடந்து கொண்ட மன்னன் பரீட்சித்துவை நான் சும்மா விடமாட்டேன். அவனை தண்டித்தே தீருவேன்' என்றவன், கமண்டல நீரை எடுத்து வார்த்து சினத்துடன் கூறினான்.

'என் தந்தைக்கு அபசாரம் செய்த மன்னன் பரீட்சித்து, இன்றிலிருந்து ஏழாம் நாள், நாகராஜனான தட்சகன் என்னும் பாம்பினால் கடிபட்டு மரணமடைவான்' என்று சாபமிட்டான்.

இவன் இவ்வாறு சொல்லி முடித்தபோது தியானத்திலிருந்து மீண்ட அங்கிரஸ் முனிவர், மகனின் சாபச் சொற்களைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினார்.

'அடடா! என்ன காரியம் செய்துவிட்டாய் மகனே? நமது மன்னன் பரீட்சித் மிகவும் நல்லவன். சிறந்த பக்திமான். அப்படிப்பட்டவன், தாகத்தாலும் பசியாலும் துன்பப்பட்டு தான் என்ன செய்கிறோம் என்பதை உணராமல் அறியாமையால் இப்படிச் செய்துவிட்டான். அவன் செய்த சாதாரண ஒரு தவறுக்கு, இப்படியொரு தண்டனையை அளித்துவிட்டாயே! தவறு செய்துவிட்டாய் மகனே! பெரிய தவறு செய்து விட்டாய். உன்னை அந்த இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்!' என்று சொல்லி துயரத்தில் ஆழ்ந்தார்.

சிறுவன்தான் என்றாலும் சிருங்கியின் சாபத்தை மாற்ற முடியாதென்பதால், 'எல்லாம் விதியின் செயல்' என்றெண்ணியபடி பெருமூச்சு விட்டார்.

***

பூமியை மீட்க வந்த வராக அவதாரம்

அரண்மனையில் பரீட்சித்தும், தான் செய்து விட்ட தவறுக்காக மனம் வருந்திக்கொண்டு தான் இருந்தான்!

'எளிய அந்தணரை அவமதித்தாலே மகா பாவம் வந்து சேரும் என்பார்கள்! நானோ, தவத்தில் மூழ்கியிருந்த ஒரு முனிவருக்கு அல்லவா அபசாரம் செய்துவிட்டேன்! புத்தி கெட்டுப்போய் ஏன் இப்படியொரு கேவலமான செயலைச் செய்தேன்? கடவுளே! இதற்கு என்ன பரிகாரம்? இந்தத் தவறை நான் எப்படி சரி செய்வேன்?' என்று தவித்தான்.

இப்படி அவன் மனம் குழம்பிக்கொண்டிருந்த போதே, ரிஷி குமாரன் தனக்குச் சாபம் அளித்து விட்டான் என்கிற விவரம் அவனுக்கு வந்து



அஸ்வத்தாமனை கட்டியிழுத்து வந்து திரௌபதியின் முன் நிறுத்துகிறார்கள் கிருஷ்ணனும் அர்ஜுனனும்.

அஸ்திரம் துரத்த, உத்திரை அபயம் நாடி
கிருஷ்ணனிடம் ஓடி வருகிறாள்.

சேர்ந்தது. மனத்தில் துயரம் சூழ்ந்தது. விரக்தியுடன், 'மன்னன் என்கிற ஆணவத்தால் நான் செய்த தவறுக்காகவே இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்' என்று மனத்தை சமாதானப்படுத்திக் கொண்டான்.

அடுத்ததாகச் செய்யவேண்டிய காரியங்களை துரிதமாகச் செய்தான். முதல் காரியமாக, தனது மகன் ஜனமேஜயனுக்கு பட்டாபிஷேகம் நடத்தி அரசை அவனிடத்தில் ஒப்படைத்தான். பின், அனைத்தையும் துறந்து அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு கங்கைக்கரையை அடைந்தான். தர்ப்பைப் புல்லைப் பரப்பி அதன்மீது வடக்கு நோக்கி அமர்ந்து கொண்டான். இனி, மீதமிருக்கும் ஏழு நாள்களும் அன்னம் தண்ணீர் அருந்தாமல் பட்டினியோடு இருந்து பகவானையே நினைத்து உயிர் துறப்பதென்று தீர்மானித்தான்.

சிறந்த பக்திமானான பரீட்சித்துவின் இம்முடிவை அறிந்து, ஏராளமான முனிவர்களும் ரிஷிகளும் அவனிடம் வந்து சேர்ந்தார்கள். நாரதர், அகத்தியர், பிருகு, அங்கிரஸ், விசுவாமித்திரர் போன்ற மாமுனிவர்களும்கூட அங்கு வந்து பரீட்சித்துவைச் சந்தித்தனர்.

பரீட்சித்து, பணிவுடன் அனைவரையும் வணங்கினான்.

'ஒரே சமயத்தில் இத்தனை புனிதர்களையும் காணநேர்ந்ததை நான் மிகுந்த புண்ணியமாகக் கருதுகிறேன். எனது மரணம் நெருங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், உங்கள் தரிசனத்தால் நான் பாக்கியம் பெற்றவன் ஆனேன். மகரிஷிகளே! முனிகுமாரனின் சாபத்தை நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இப்பூவுலகில் பந்த பாசத்தால் கட்டுண்டு உழல்வதைவிட உயிர் துறந்து விண்ணுலகம் செல்வதை அவர் எனக்குத் தந்த வரமாகக் கருதுகிறேன். பெரியோர்களே, உங்களிடம் ஒரு சிறு விண்ணப்பம்! நான் நல்லவிதமாக மோட்சமடைய, உத்தமர்களான நீங்கள்தான் அருள்பாலிக்க வேண்டும்' என்று வேண்டினான்.

அப்போது, வானத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பிரகாசமான தேஜஸ் உடையவராக அங்கே சுகர் மகரிஷி தோன்றினார்.

அங்கிருந்தோர் அனைவருமே சுகர் மகரிஷியை வணங்க, பரீட்சித்து அவரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தான்.

'மகரிஷியே! பெரும் தவசீலரே! தங்கள் பாதங்கள் இம் மண்ணில் பதிந்ததால் இப்பூமி புனிதமடைந்தது. உலகம் முழுவதும் சஞ்சாரம் செய்துவரும் நீங்கள், எனது மரண சமயத்தில் அனுக்கிரகம் செய்யும்விதமாக இங்கு வந்திருப்பது எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது. தங்களின் தரிசனமே என்னுடைய பாவங்களைப் போக்கும் என்று நம்பு கிறேன். என் ஆயுளின் முடிவுக்காலமான இந்தக் கடைசி ஏழு நாள்களில், நான் என்ன செய்யவேண்டும் என்பதை தாங்கள் தான் கூறி அருளவேண்டும்!' என்று வேண்டினான்.

சுக மகரிஷி, பரீட்சித்துவை ஆசீர்வதித்துவிட்டுக் கூறினார்.

'மன்னனே! எந்த ஒரு மனிதனும் வாழ்ந்த நாள்களில் எப்படி வாழ்ந்திருந்தாலும், தன்னுடைய இறுதி நாள்களில் பகவா னைச் சரணடைந்து அவன் திருநாமங்களை உச்சரித்து சதா சர்வ காலமும் அவனையே தியானித்து வந்தால், உறுதியாக நல்வினை அடைவான் என்பது நிச்சயம். நீயும் மனத்தை அடக்கி உணர்ச்சிகளை வென்று, பகவான் நாராயணனின் பாத கமலங்களிலேயே உன் நினைவைச் செலுத்து! அதனால், பிறவியின் உன்னத நிலையை நீ நிச்சயம் அடைவாய்!' என்றார்.

'அப்படியே ஆகட்டும் மகரிஷி! பகவான் ஸ்ரீ ஹரியின் நினைவை நான் எந்தத் தருணத்திலும் கைவிட்டதில்லை. இப்போது என் மரணத் தறுவாயிலும் பகவான் கண்ண பரமாத்மாவின் லீலா விநோதங்களையும், அளக்க முடியாத அவனுடைய புகழையும் பெருமைகளையும் கேட்டபடியே

உயிர்விட ஆசைப்படுகிறேன். ஆகவே, தயவுசெய்து தாங்கள் எனக்கு, உலகைக் காத்து ரட்சிக்கும் பரமாத்மாவின் கதை யான பாகவதத்தைக் கூறவேண்டும்!' என்று கேட்டுக்கொண் டான்.

பரீட்சித்தின் வேண்டுகோளின்படியே, சுகர் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் அவனுக்கு பாகவதத்தைக் கூறத்தொடங்கி னார்:

'பரீட்சித்து மன்னனே! பாகவதமானது, எதிலும் பற்றில்லா மல் ஜீவ முக்தி அடைந்த ரிஷிகளின் மனத்தையும்கூட கவரக் கூடியது. இதை இயற்றியவர், எனது தந்தையான வேத வியாசர். வேதத்தைத் தொகுத்து, ராமாயணம், மகாபாரதம் இதிகாசங்களை எழுதிமுடித்து, மேலும் பதினெட்டு புராணங் களையும்கூட அவர் செய்துமுடித்தார். ஆனால், இத்தனை செய்துமுடித்த பிறகும்கூட அவருக்கு மனத்தில் ஏனோ திருப்தி வரவில்லை. எதையோ தான் செய்யத் தவறி விட்டது போல ஒரு தவிப்பு அவரை உறுத்திக்கொண்டே இருந்தது. ஆனால், அது என்ன என்பதுதான் அவருக்குப் புரியவே யில்லை. ஒருமுறை இதைப்பற்றி நாரதரிடம் சொல்லி வருந்தி னார் அவர்.

அப்போது நாரதர் கூறினார்:

'வியாசரே! அதற்கான காரணம் எனக்குத் தெரியும். வேதம், வேதாந்தம், இதிகாசங்கள், புராணங்கள் என்று நீங்கள் எத்தனையோ செய்தபோதும் முக்கியமான ஒன்றைச் செய்யத் தவறிவிட்டீர்கள். உலகைக் காத்து ரட்சிக்கும் பகவானின் பெருமைகளையும் மகிமைகளையும், அவனுடைய திருக் கல்யாண குணங்களையும் எடுத்துச்சொல்லாமல் விட்டு விட்டீர்கள்!

நீங்கள் இயற்றிய காவியங்களும் புராணங்களும் மக்களி டையே கடவுள் பக்தியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களை பந்த பாசங்களில் பற்று கொண்டவர்களாக

மாற்றிவிட்டன. புராண இதிகாசங்களில் இறைவனின் பெருமைகளையும் அவனுடைய மகிமைகளையும் நீங்கள் ஆங்காங்கே கூறியிருந்தாலும், சத்தியம், தர்மம், நல்லொழுக்கம் போன்றவற்றுக்கே முக்கியத்துவம் தந்ததால், பகவானின் பெருமையும் புகழும் முழுமையடையாமல் போய்விட்டது. இதனாலேயே, தங்கள் மனத்தில் ஓர் நிறைவின்மை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, மனிதர்களுக்கு கடவுளிடத்தில் பக்தி ஏற்படும்படியாக, இறைவனின் லீலைகளையும் மகிமைகளையும் போற்றி, அவனுடைய எல்லையில்லா கருணையை மனிதர்களின் மனத்தில் பதியுமாறு ஒரு காவியத்தை இயற்றுங்கள். இதைச் செய்தால், உங்களின் மனக்குறை நீங்கி ஆத்ம திருப்தி கிடைத்துவிடும்' என்றார்.

என் தந்தை இதைக்கேட்டு மனம் மகிழ்ந்தார். எவன் மூலமும் முடிவுமாக இருக்கிறானோ, எவன் மோட்சத்தை அளிக்கக் கூடியவனோ, அந்தத் திருமாலின் திவ்ய லீலைகளை பாடத் தீர்மானித்தார்.

உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டவும் அநீதியை அழிக்கவும், பகவான் விஷ்ணு பல அவதாரங்களை எடுத்துள்ளார். ஆனால் அந்த அவதாரங்களில் பல, ஹரியின் அம்சங்களை மட்டுமே கொண்ட அவதாரங்கள். ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் மட்டுமே பகவானின் பரிபூரண அவதாரங்கள். அதிலும்கூட, ஸ்ரீராமன் தன்னைக் கடவுளாக காண்பித்துக் கொள்ளாமல் மானிட அவதாரமெடுத்து மனிதனாகவே வாழ்ந்துகாட்டிய அவதாரம். கிருஷ்ணனோ, பிறந்த போதிலிருந்தே தன்னைக் கடவுளாகவே காண்பித்துக்கொண்ட அவதாரம். பால்ய பருவத்திலிருந்தே பற்பல லீலைகள் செய்து எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்டவன். எனவே, பகவான் கிருஷ்ணனின் லீலா விநோதங்களிலேயே மனம் லயித்து, அவனுடைய பெருமைகளையும் புகழையும் மகிமையையும் விளக்கி காவியம் எழுதத்தொடங்கினார்.

சரஸ்வதி நதியின் மேற்குக் கரையில் 'சம்யாப்ராசம்' என்னும் ஆசிரமம் அமைத்து, பகவான் கண்ணனின் திருவிளையாடல்களை 'பாகவதம்' என்னும் பிரபந்தமாக இயற்றி முடித்தார். பின், அந்தப் பாகவதத்தை எனக்குப் போதித்தார்.

பாகவதமானது, கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் பாவங்களைப் போக்கி பலவிதங்களிலும் நன்மைகளைத் தரக்கூடியது. பந்த பாசங்களில் சிக்கித் தவிப்பர்களுக்கு, பிறவிப் பெருங்கடலில் இருந்து மீட்டு மோட்சம் தரக்கூடியது' என்று பாகவதத்தின் சிறப்புகளைக் கூறிய சுக மகரிஷி, 'மாயன் கோபால கிருஷ்ணனின் லீலா விநோதங்களை அழகாகச் சொல்லும் பாகவதம், பகவான் நாராயணன், அண்ட சராசரங்களையும் படைப்பதும் காப்பதும் அழிப்பதுமான செயல்களில் இருந்து தொடங்குகிறது. சொல்கிறேன் கேள்!' என்று கதையை சொல்லத் தொடங்கினார்:

'உலகளந்த நாயகனான பகவான் விஷ்ணு, தன்னுடைய செயல்களை ஒடுக்கிக்கொண்டு ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் காலத்தில், உலகங்கள் எல்லாம் நீரில் மூழ்கிப் போய்க் கிடந்தன. இப்படி பகவான் ஆயிரம் வருடங்கள் நித்திரையில் இருந்த பிறகு, சிருஷ்டியானது மீண்டும் செயல்படும் நேரம் வந்தது.

அப்போது விஷ்ணுவின் நாபிக் கமலத்தில் இருந்து ஒரு தாமரை வெளிப்பட்டது. தாமரை மலரின்மீது பிரம்மன் தோன்றியிருந்தார். அவர் வெளிப்பட்டவுடன், ஆவலுடன் நான்குபுறமும் திரும்பிப் பார்த்தார். எங்கு பார்த்தாலும் நீர் நிரம்பிக் கிடக்க, தான் மட்டும் எப்படித் தோன்றினோம் என்று புரியாமல் திகைத்தார், குழம்பினார். அப்போது பகவான் நாராயணன் அவர்முன் தோன்றி, தரிசனம் தந்தார். பிரம்மன் அவரை வணங்கி பலவிதமாக போற்றித் துதித்தார். மனம் மகிழ்ந்த விஷ்ணு, பிரம்மனுக்கு அருள்பாலித்து அவரை உலக சிருஷ்டியை உண்டுபண்ணுமாறு பணித்தார்.

சிருஷ்டியானது இப்படித்தான் தொடங்கியது.

பிரம்மன், திருமாலின் கட்டளைப்படியே தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் என்று சகல ஜீவராசி களையும் படைத்தார்.

காலம் எனப்படுவதை பகவான் படைத்தார். நிமிடம், நாழிகை, மாதம், வருடம் என்று பலவிதமான கால நிர்ண யங்களை அவர் வகுத்தார். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களைப் பிரித்தார்.

இதன்படி, மனிதர்களுக்கு நூறு வருடங்கள் என்பது தேவர் களுக்கு ஒருநாள் ஆகும். உத்திராயண காலம் தேவர்களுக்குப் பகல் பொழுது. தட்சிணாயன காலம் அவர்களுக்கு இரவுப் பொழுது. இதில் பகல் பொழுதில், பிரம்மன் சிருஷ்டியைச் செய்வார். இரவுப் பொழுதில் உறங்குவார். அப்படி பிரம்மன் உறங்குகிற காலமே பிரளயம் ஏற்படும் காலமாகும்' என்று சொன்ன சுகர் மகரிஷி, தொடர்ந்து பரீட்சித்துவிடம் கூறலானார்.

'பிரம்மன் அனைத்தையும் படைத்தபோது, கூடவே ஐந்து கெட்ட குணங்களையும் படைத்துவிட்டார். அறியாமை, உடலையே தானாக பாவித்துக்கொள்ளும் தவறான எண்ணம், போகத்தின்மீது ஆசை, கோபம், மரணமே முடிவு என்று நினைப்பது போன்ற குணங்களை சிருஷ்டி செய்தார்.

பின் ஒரு கட்டத்தில் இந்த ஐந்து குணங்களைப் படைத்த தற்காக வருந்திய பிரம்மா, கடவுளைத் தியானித்து மனத்தை தூய்மைப்படுத்திக்கொண்டு மீண்டும் சிருஷ்டியில் ஈடு பட்டார்.

இப்போது அவர் சனகர், சனந்தர், சனாதனர், சனத் குமாரர் என்கிற நான்கு ரிஷிகளைப் படைத்தார். அவர்களிடம், 'புத்திரர்களே! நீங்கள் நால்வரும், இனி உங்கள் சந்ததியை விருத்தி செய்து அதன்மூலம் உலகை நிரப்புங்கள்!' என்றார்.

ஆனால் நால்வருக்குமே, இல்லறத்தில் ஈடுபட விருப்ப மில்லை. அவர்கள் பகவான் ஹரியின்மேல் பற்று கொண்டார் கள். புலன்களை அடக்கி தியானத்தில் மூழ்கிப் போனார்கள்.

இதைக்கண்ட பிரம்மன் ஆத்திரம் அடைந்தார். தந்தையாகிய தனது வார்த்தைகளை மதிக்காமல் மகன்கள் தியானத்தில் மூழ்கிவிட்டார்களே என்கிற பிரம்மனின் கோபமானது, அவருடைய புருவங்களின் மத்தியிலிருந்து பொறியாக வெளிப்பட்டது. அந்தப் பொறியிலிருந்து குமாரன் ஒருவன் வெளிப்பட்டான்.

சிவந்த நிறமுடைய அவன், அழுகின்ற கண்களோடு பிரம் மாவை வழிபட்டு, 'தந்தையே! எனக்குப் பெயர் சூட்டி, நான் எங்கு வாழவேண்டுமென்று கூறி அருளுங்கள்' என்று வேண்டினான்.

பிரம்மதேவன், 'மகனே! நீ தோன்றும்போதே அழுது கொண்டே பிறந்ததால் 'ருத்ரன்' என்று பெயர் பெறுவாய். இதயம் மற்றும் இந்திரியங்கள், உயிர், ஆகாயம், வாயு, அக்னி, நீர், பூமி, சூரியன், சந்திரன், தவம் போன்ற பதினொரு இடங் களும் உனக்கு இனி இருப்பிடங்கள்!' என்று கூறி, ருத்திர னுக்கு காலன், மனு, மகா காலன், வாமதேவன் போன்ற மேலும் பல பெயர்களையும் சூட்டினார்.

பின் ருத்ரனுக்காக, பதினொரு பெண்களை உண்டாக்கிக் கொடுத்தார்.

'ருத்ரா! நீ இந்த பதினொரு பெண்களையும் உனது மனைவி களாக்கிக் கொண்டு இவர்கள் மூலம் சந்ததிகளை உண் டாக்கு!' என்று கட்டளையிட்டார்.

ருத்ரனும், பிரம்மனின் கட்டளைப்படியே தனது மனைவிகள் மூலம் தன்னைப்போலவே சக்தி கொண்டவர்களாகவும் கோபம் உடையவர்களாகவும் ஏராளமான பிள்ளைகளைப் பெற்றான்.

ருத்ர அம்சத்துடன் சினம் கொண்டவர்களாகப் பிறந்த பிள்ளைகளைக் கண்டு, பிரம்மன் கலக்கமும் கவலையும் அடைந்தார்.

ருதரனை அழைத்து, 'ருத்ரனே! நீ பெற்ற பிள்ளைகளின் சுட்டெரிக்கும் பார்வையால், எல்லாத் திக்குகளும் பொசுங்கிப் போகின்றன. தேவர்களும்கூட அஞ்சுகிறார்கள். இப்படிப் பட்ட பிள்ளைகள் பெற்றது போதும். இனி நீ, தவத்தில் ஈடுபடுவதே நன்மை விளைவிக்கும்' என்றார்.

பிரம்மன் சொற்படி ருத்ரன் தவம் செய்யப் போனான்.

அடுத்ததாக பிரம்மன், தானே பிள்ளைகளை சிருஷ்டி செய்யும் முயற்சியில் இறங்கினார். உலகத்தை விருத்தி செய்வதற்காக தன்னைப்போலவே சக்தி கொண்டவர்களாக மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலகர், கிருது, பிருகு, வசிஷ்டர், தக்ஷர், நாரதர் என்று பத்து மகன்களை உண்டாக்கினார்.

ஆனால் இதன்பிறகும், உலகம் அவர் எதிர்பார்த்தபடி விருத்தி அடையவில்லை. இதனால் பிரம்மன் மனம் வருந்தி வேதனைப்பட்டபோது, அவருடைய உடலே இரண்டாகப் பிரிந்தது. அதில் ஒரு பாதி ஆணாகவும் மறுபாதி பெண்ணாகவும் ஆனது.

ஆணுக்கு சுவாயம்புவ மனு என்றும், பெண்ணுக்கு சதரூபை என்றும் பெயர் ஏற்பட்டது. சுவாயம்புவ மனுவுக்கு, சதரூபை மனைவியானாள். பின்னாளில் இவர்களுக்கு, ஐந்து குழந்தைகள் பிறந்தனர். இரு ஆண் குழந்தைகளுக்கு பிரியவிரதன், உத்தானபாதன் என்றும், பெண் குழந்தைகளுக்கு ஆஹூதி, தேவஹூதி, பிரஹூதி என்றும் பெயர் சூட்டப்பட்டது.

மூன்று பெண்களும் முறையே ருசி, கர்தமர், தக்ஷர் என்பவர்களை மணந்துகொண்டனர். இவர்கள் மூலம்தான் உலகில் மனித குலம் விருத்தியானது. சுவாயம்புவ மனுவின் சந்ததியினர் மூலமாகத் தோன்றியவர்கள் என்பதாலேயே, மானிடர்கள் மனுஷர்கள் என்றாகினர்.

உலகம் என்று சொல்லும்போதுதான் நினைவுக்கு வருகிறது.

முதலில் இந்த உலகமானது, சுவாயம்புவ மனுவும் சதரூபையும் தோன்றியபோது இருக்கவில்லை. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! ஆமாம்! மனுவுக்கும் அப்போது அப்படித்தான் இருந்தது.

பிரம்மனிடம் இருந்து தோன்றிய சுவாயம்புவ மனுவும், சதரூபையும் தம்பதிகளான பின், பிரம்மனைச்சென்று வணங்கினார்கள்.

மனு பிரம்மனிடம், 'பிரம்ம தேவரே! இனி நாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றிச் சொல்லுங்கள்!' என்று கேட்டனர்.

பிரம்மன் அவர்களிடம், 'மனுவே! நீயும் சதரூபையும் சேர்ந்து மக்களைப்பெற்று இனவிருத்தி செய்து பூமியாகிய உலகத்தை ஆண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டார்.

மனு, அதைக்கேட்டு திகைத்தான்.

'பூமியா? அது எங்கே இருக்கிறது? என் கண்களில் தென்படவில்லையே!' என்று கேட்டான்.

பிரம்மாவுக்கு, அப்போதுதான் பூமி பிரளய வெள்ளத்தில் மூழ்கிக்கிடப்பது நினைவுக்கு வந்தது.

மனுவும் சதரூபையும் மக்களைப் பெற்று வாழவேண்டுமானால், பூமியாகிய உலகம் வேண்டும். ஆனால் அதுவோ, நீருக்குள் மூழ்கிக்கிடக்கிறது. அதை எப்படி வெளியே கொண்டுவருவது என்று யோசித்தார். வழி ஏதும் தோன்றாததால் கவலையில் மூழ்கினார். பகவானைப் பிரார்த்தித்து கண்மூடி தியானித்தார்.

அப்போது பகவான் விஷ்ணு, பிரம்மனின் மூக்குத் துவாரத்தின் வழியாக கட்டை விரல் அளவுள்ள குட்டிப்பன்றியாக தோன்றி வெளிப்பட்டார். சிறிது நேரத்திலேயே அந்தப்

பன்றியானது படிப்படியாக வளர்ந்து ஒரு காட்டு யானை போல பெரியதாகியது.

பகவான் எடுத்த அந்த அவதாரமே வராக அவதாரம் என்பதை உணர்ந்த பிரம்மா, மரீசி, இன்னும் பல மகரிஷிகளும், சிலிர்ப் புடன் பகவானை வணங்கிப் போற்றினார்கள்.

அந்தப் பன்றி தனது கோரைப்பற்களை நீட்டிக்கொண்டு, பூமியை நீரினுள்ளிருந்து மீட்டுவருவதற்காக கடலினுள் புகுந்தது. நீந்தியபடியே பாதாளலோகம் சென்று, பூமி மூழ்கிக் கிடந்த இடத்தைக் கண்டுபிடித்தது. இரு கோரைப்பற்களால் பூமியை மீட்டுத் தூக்கியது.

அப்போது, வராகத்தைத் தடுக்கும்விதமாக ஒரு கட்டளைக் குரல் கேட்டது.

'ஏய், வராகமே! நில்! இந்தப் பூமி, பாதாளலோகத்தில் வாழ் பவர்களுக்காக பிரம்மன் படைத்தது. மரியாதையாக அதை அங்கேயே வைத்துவிட்டு வா! வந்து என்னோடு யுத்தம் செய்!' என்றது.

அந்தக் குரலுக்குரியவன் அரக்கன் இரண்யாட்சகன்!

யார் இந்த இரண்யாட்சகன்? பகவானின் வராக அவதாரத் தையே எதிர்க்கும் துணிவு, இந்த அரக்கனுக்கு எப்படி ஏற்பட்டது?'

இதைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமானால், சற்று பின்னோக்கிச் செல்லவேண்டும்! திருமாலின் இருப்பிட மாகிய வைகுண்டத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றி முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

***

5

அரக்கர்களான துவார பாலகர்கள்!

பிரம்மனின் புத்திரர்களாகிய சனகாதி முனிவர்கள் நால்வரும், வானவெளியில் சஞ்சரித்தபடி வந்துகொண்டிருந்தனர். அவர்கள் வைகுண்டத்தைக் கடக்கும்போது, பரமாத்மாவாகிய திருமாலை மகாலக்ஷ்மி யுடன் தரிசிக்க விருப்பம் கொண்டனர். ஆவலுடன் வைகுண்டத்தில் இறங்கி னார்கள்.

எல்லாக் காலங்களிலும் பூத்துக் காய்த்துக் குலுங்கும் செடி கொடிகளும் வண்ண வண்ணப்பூக்களுமாக வைகுண்டம் அழகா கக் காட்சி தந்தது. கந்தர்வர்கள் உச்சரிக்கும் பகவானின் நாமாவளிகள், நாலாதிசைகளி லிருந்தும் காதுக்கு இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தன.

சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் வைகுண்டத்தின் ஆறு தங்க வாசல்களையும் கடந்து ஏழாவது வாசலை நெருங்கினர்.

அங்கே, அந்த ஏழாவது வாசலை ஜய விஜயர்கள் என்கிற இரு துவார பாலகர்கள் காவல் காத்தபடி நின்றிருந்தனர்.

முனிவர்கள் நால்வரும் பரவசத்துடன் திருமாலின் நாமங்களைத் துதித்தபடி, துவார பாலகர்களைக் கண்டுகொள்ளாமல் அவர்களைக் கடந்து உள்ளே செல்ல முயன்றனர்.

இதைக்கண்டு ஜய விஜயர்கள் கோபம் கொண்டனர். தங்களிடம் அனுமதி பெறாமல் அவமதித்துச் செல்ல முற்பட்ட முனிவர்களை, உள்ளே நுழையவிடாமல் தடுத்தனர்.

துவார பாலகர்களின் செயலால் சனகாதி முனிவர்கள் கோபம் கொண்டனர்.

'அற்பர்களே! இறைவன் தன்னிடம் பக்தி செலுத்துபவர்களைச் சந்திக்க எப்போதும் எந்தத் தருணத்திலும் மறுப்பதில்லை. ஒரு பக்தன் தன்னை நோக்கி ஓர் அடி வைத்தால், கடவுள் அவனை நோக்கி பல அடிகள் வைத்து நெருங்கி வருகிறார். அப்படிப்பட்ட இறைவனின் இருப்பிடத்தில் வசிக்கத் தகுதியில்லாதவர்கள் நீங்கள். அகங்காரம், ஆணவம் போன்ற அற்பமான குணங்களைக் கொண்ட நீங்கள், ஆசாபாசங்கள் நிரம்பிய பூமியில் சென்று விழுவீர்களாக!' என்று சாபமிட்டனர்.

முனிவர்களின் சாபத்தைக் கேட்ட துவார பாலகர்கள் அதிர்ந்து போனார்கள். கலங்கிய கண்களுடன் முனிவர்களின் பாதங்களில் விழுந்து பணிந்தார்கள்.

'தவத்தில் சிறந்தவர்களே! அறியாமையாலும் ஆணவத்தாலும் தவறிழைத்த எங்களை தயவுசெய்து மன்னித்துவிடுங்கள். எங்களின் தவறுக்குத் தண்டனையாக உங்களின் சாபத்தை மனதார ஏற்றுக்கொள்கிறோம். ஆனாலும், சிறிதளவாவது

எங்களின்மீது கருணை காட்டுங்கள். உங்கள் சாபத்தின் படியே நாங்கள் பூமியில் பிறந்து எத்தனை பிறவிகள் எடுத்தாலும், எப்போதும் பகவான் பரந்தாமனை மறக்காமலிருக்க அருள் செய்யுங்கள்' என்று வேண்டினார்கள்.

அப்போது பரமாத்மாவாகிய திருமால் மகாலக்ஷ்மி சகிதமாக அங்கே காட்சியளித்தார். சனகாதி முனிவர்கள் ஆனந்தப் பரவசத்துடன் பகவானைத் தரிசித்து மகிழ்ந்தார்கள். அவனுடைய பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்தார்கள். பின் ஜய விஜயர்களுக்கு, தாங்கள் அளிக்க நேர்ந்த சாபத்தைப் பற்றிக் கூறி மனம் வருந்தினார்கள்.

திருமால் அவர்களைப் பார்த்து புன்முறுவலுடன் கூறினார்.

'முனிவர்களே, நீங்கள் மனம் வருந்தவேண்டாம்! எனது பக்தர்களுக்கு நேரும் அவமதிப்பை எனக்கு நேர்ந்ததாகவே கருதுகிறேன். வைகுண்டத்தின் காவலர்கள் என்கிற ஆணவத்தால் செயல்பட்ட துவார பாலகர்களுக்கு, நீங்கள் அளித்த சாபம் சரியானதே! எனினும், மனம் திருந்தி மன்னிப்புக் கேட்ட அவர்களுக்கு தாங்கள் மனம் இரங்கவேண்டும். விரைவிலேயே அவர்கள் சாபவிமோசனம் பெற்று மீண்டும் என்னிடம் திரும்பிவர கருணை காட்டவேண்டும்' என்று கேட்டார்.

'பகவானே! மூவுலகில் எது நடந்தாலும் அது தங்களின் திருவுள்ளத்தாலேயே நடைபெறுகிறது என்பதை உணராதவர்களா நாங்கள்? அனைத்தும் உங்களின் திருவிளையாடல் தானே பகவானே! ஆனாலும், தாங்கள் கூறியபடியே ஜய விஜயர்கள் விரைவிலேயே சாப விமோசனம் பெறவேண்டும் என்று இதயபூர்வமாக ஆசீர்வதிக்கிறோம்' என்றார்கள்.

பகவான், ஜய விஜயர்களிடம் கூறினார்:

'துவார பாலகர்களே! சனகாதி முனிவர்களிடம், எந்தப் பிறவியிலும் என்னை மறக்காமலிருக்க வரம் கேட்டீர்கள் அல்லவா? அது நிச்சயம் நடக்கும். மனித சுபாவமானது, நேசிப்பவர்களைவிட வெறுப்பவர்களைத்தான் அதிகமாக

நினைத்துக்கொண்டிருக்கும். எனவே, பூமியில் நீங்கள் அரக்கர்களாகப் பிறந்து என்னை வெறுப்பவர்களாக அதனாலேயே என்னை எப்போதும் நினைத்து நிந்திப்பவர்களாக இருந்து, மூன்று பிறவிகளுக்குப் பிறகு என்னை வந்து சேர்வீர்களாக!' என்று கூறினார்.

அப்போதே, துவார பாலகர்கள் பூமியை நோக்கி இழுக்கப் பட்டவர்களாக விழத்தொடங்கினார்கள்.

அதேசமயத்தில், பூமியில் அவர்கள் பிறப்பதற்கான சூழலை காலம் கச்சிதமாக வகுத்துக்கொண்டிருந்தது.

***

செக்கச் செவேலென சூரியன் மேற்கில் இறங்கிக்கொண்டிருந்தான். நதிக்கரையில் அமைந்திருந்த அந்த ஆஸ்ரமம், சூரியக் கதிர்களின் குளியலில் ஜ்வாலை போல ஜொலித்தது.

காஷ்யப முனிவரும், அவருடைய மனைவி திதியும் அந்த ஆசிரமத்தில் வசித்து வந்தனர்.

காஷ்யபர், இன்னும் இருட்டு சூழாத அந்தப் பிரதோஷ காலத்தில் தியானத்தில் மூழ்கியிருந்தார்.

கணவர் தியானத்தில் இருந்து மீள்வதற்காக, திதி தவிப்புடன் காத்துக்கொண்டிருந்தாள்.

ஆசிரமக் கூரையின் கீற்றுவழியே உள்ளே நுழைந்த மஞ்சள் வெயிலில், அவளின் மேனி தங்கமாக மின்னியது. வாசலிலும் தோட்டத்திலும் பூத்த கொடி மல்லிகைப் பூவின் மணமும், சிலுசிலுவென்று வீசிய காற்றும், மயக்கும் மாலைப்பொழுதுமாக திதியின் உள்ளம் தாபத்தில் மிதக்க, உடலில் உணர்ச்சிகள் கரைபுரண்டு அலையடித்தன. சல்லாபத் துடிப்பு பெருமூச்சாக எழுந்தது.

கணவர் தியானத்தில் இருந்து மீள்வார் என்று காத்திருந்த திதி பொறுமை இழந்தாள். அவளின் உடலும் உள்ளமும்

கணவரின் அணைப்புக்காக குழைந்து தவித்தன. தாள முடியாமல் எழுந்தவள், கால்கள் துவள காஷ்யபரை நெருங்கினாள்.

'ஸ்வாமி!' என்று கணவரின் காதோரம் கிசுகிசுப்பாகக் கூப்பிட்டாள். அவரை நெருங்கி அமர்ந்து, தன் மலர்கைகளை காஷ்யபரின் தோள்களின்மீது போட்டு வளைத்தாள்.

தியானத்திலிருந்து கலைந்தார் காஷ்யபர். பக்கத்தில் பார்த்தார்.

மனைவி திதி, தாப மயக்கத்துடனும் கிறங்கிய கண்களுடனும் சுண்டியிழுக்கும் புன்னகையால் சல்லாபத்துக்கு அழைப்பு விடுவதைக் கண்டார். ஆச்சரியம் கொண்டார்.

'திதி! உன் விருப்பம் எனக்குப் புரிகிறது. சற்றுப் பொறு! இது சிவனுக்கு உகந்த பிரதோஷ காலம். முக்கண்ணனாகிய ருத்ரன் தனது கணங்களுடன் உலா வரும் புனித வேளை. இந்தச் சமயத்தில் கணவனும் மனைவியும் கூடல் செய்வது மகா பாவம். இரவாகட்டும். உனது ஆசையை நான் பூர்த்தி செய்கிறேன்!' என்று புத்திமதி கூறினார்.

மோகத்தால் கட்டுண்டு கிடந்த திதியின் காதுகளில், காஷ்யபரின் சொல் கொஞ்சமும் ஏறவில்லை. அவள் தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதிலேயே முனைப்பாக இருந்தாள்.

'ஸ்வாமி! தயவுசெய்து என்னை மறுக்காதீர்கள். இரவுப் பொழுதுவரை பொறுத்துக்கொள்ளும் நிலையில் நானில்லை. காமம், என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக தின்றுகொண்டிருக்கிறது. வெட்கத்தைவிட்டுக் கேட்கிறேன். தயவுசெய்து வாருங்கள். இப்பொழுதே என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்!' என்று கூறியபடி, காஷ்யபரின் உடையைப் பற்றியிழுத்தாள்.

மனைவியின் உடல்பசியைப் போக்கவேண்டியது கணவனின் கடமையே என்றெண்ணிய காஷ்யபர், வேறு வழியின்றி

திதியின் கட்டாயத்துக்கு இணங்கினார். அவளின் விருப்பத்தை நிறைவேற்றி பூர்த்தி செய்தார்.

தகாத நேரத்தில் அவர்கள் உறவு கொண்டதன் பலனாக, அரக்கர்களாகப் பிறக்கவேண்டிய சாபம் பெற்ற ஜய விஜயர்கள், மிகச் சரியாக திதியின் கர்ப்பத்தைச் சென்றுசேர்ந்தனர்.

மோக உணர்வுகள் முடிந்ததும் காமத்திலிருந்து விடுபட்ட திதி, தான் முறைகேடாக நடந்துகொண்ட விதத்துக்காக மனம் வருந்தினாள். புனிதமான நேரத்தில் நடந்த தவறான உறவினால், ஏதாவது விபரீதமான விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சினாள். கலக்கத்துடன் சென்று கணவரிடம் தன் கவலையை வெளிப்படுத்தினாள்.

'ஸ்வாமி! எனக்குப் பயமாக இருக்கிறது. பிரதோஷ காலத்தில் உறவு கொண்டதினால், ருத்ரனின் கோபத்துக்கு ஆளாகி எனது கரு கலைந்து போகுமோ என்று அஞ்சுகிறேன். நீங்கள் தான் அப்படி நேராமல் காப்பாற்றவேண்டும்!' என்று வேண்டினாள்.

மனைவியின் கோரிக்கையைக் கேட்ட காஷ்யபர், மிகுந்த கோபம் கொண்டார்.

'மோகத்தால் மதி கெட்டவளே! எனது சொல்லைக் கேட்காமல் கர்ப்பம் தரிக்கக் கூடாத நேரத்தில் கர்ப்பம் கொண்டாய். அத்துடன் ருத்ரனின் கோபத்துக்கும் ஆளானாய். எனவே உனக்கு, இரண்டு கொடிய அரக்கர்களே பிள்ளைகளாகப் பிறப்பார்கள். மூவுலகையும் துன்புறுத்தி கொடுமை புரிவார்கள். கடைசியாக, பகவான் விஷ்ணுவின் கைகளாலேயே அவர்கள் மரணமடைவார்கள்!' என்று சபித்தார்.

இதைக்கேட்ட திதி அதிர்ந்துபோனாள். மனம் கலங்கி அழுதாள். ஆனாலும், தன் பிள்ளைகள் திருமாலின் கைகளால் மரணமடைவார்கள் என்பதால் மனம் சற்று சமாதானமானாள்.

திதியின் நிலையைக்கண்டு பரிதாபப்பட்ட காஷ்யபர், அவளைத் தேற்றி, 'திதி! உனது பிள்ளைகளுள் ஒருவனுக்குப் பிறக்கப்போகும் மகன், மிகச்சிறந்த பக்திமானாக பகவான் நாராயணன்மேல் பற்றுகொண்டவனாகத் திகழ்வான்' என்று சொல்லி ஆறுதல்படுத்தினார்.

திதியின் வயிற்றில் கரு வளர்ந்து வரும்போதே பலவிதமான கெட்ட சகுனங்கள் தோன்றின. பிறக்கப்போகும் தன் பிள்ளைகளால் உலகுக்கு ஏற்படப் போகும் தீமைகளின் காரணமாகவே இந்த கெட்ட சகுனங்கள் உண்டாகின்றன என்று திதி புரிந்துகொண்டாள்.

அதனாலேயே பிள்ளை பெறுவதை, தள்ளிப்போட்டுக் கொண்டே வந்து கருவை நூறு வருடங்கள்வரை சுமந்திருந்தாள். அதற்கு மேலும் தள்ளிப்போட, முடியாத நிலையில், ஒரு நாள் திதி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். அப்போது, சூரியனும் சந்திரனும்கூட ஒளி மங்கிப் போனார்கள். மூவுலகுமே இருண்டு காணப்பட்டது.

முதலில் பிறந்த குழந்தைக்கு இரண்யாட்சன் என்றும், பின்னால் பிறந்தவனுக்கு இரண்யகசிபு என்றும் காஷ்யபர் பெயர் சூட்டினார்.

பிள்ளைகள் இருவரும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். மிகுந்த வலிமை கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். மூவுலகையுமே தங்கள் காலடியில் கொண்டுவரத் திட்டமிட்டார்கள். இதற்காக மேலும் தங்கள் சக்தியை அதிகரித்துக் கொள்வதற்காகவே தவம் செய்யத் தீர்மானித்தார்கள். காட்டுக்குச் சென்று பிரம்மனை நோக்கி தவத்தில் ஈடுபட்டார்கள்.

இரண்யாட்சனும் இரண்யகசிபுவும் செய்த தீவிர தவத்தின் விளைவாக விண்ணுலகமே தகித்தது. தேவர்கள் வெப்பம் தாங்காமல் பிரம்மனிடம் சென்று முறையிட, பிரம்மா அரக்கர்களின்முன் காட்சி தந்தார்.

'காஷ்யபரின் பிள்ளைகளே! ஈடுபாட்டுடன் கூடிய உங்களின் தவத்தால் மனம் மகிழ்ந்தேன். என்ன வரம் வேண்டும், கேளுங்கள்?'என்றார்.

இரண்யாட்சனும் இரண்யகசிபுவும் பிரம்மனிடம் பலவித மான வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள். இதன் மூலம் யாராலும் வெல்லமுடியாதவர்களாக ஆனார்கள். ஆணவம் கொண்டார்கள். அவர்கள் ஆசைப்பட்டபடியே மூவுலகங்களையும் வெல்வதற்காக போருக்குப் புறப்பட் டார்கள்.

இயற்கையாகவே தேகவலிமை கொண்ட அரக்கர்கள், பிரம்மனிடம் பெற்ற வரத்தால் மேலும் பலமடங்கு சக்தி கொண்டவர்களாக இருக்கும்போது, இவர்களை எதிர்க்க யாரால்தான் முடியும்?

தேவர்கள் போரிட்டுத் தோற்றார்கள். கொடியவர்களான அரக்கர்களுக்குப் பயந்து ஓடி ஒளிந்தார்கள். தேவர்களின் தலைவனான இந்திரனும்கூட தலைமறைவானான்.

தேவலோகத்தைக் கைப்பற்றிய இரண்யாட்சன், கோபத்துடன் இந்திரனை சிறைபடுத்தத் தேடினான். அவன் கிடைக்காமல் போகவே, பல இடங்களிலும் அவனை தேடித் திரிந்தான். இந்திரனைக் கண்டுபிடிக்க முடியாததால் ஆத்திரம் கொண்டு கடலுக்குள் இறங்கி, தன் கதாயுதத்தால் அலைகளை ஓங்கி யடித்து சமுத்திரத்தைக் கலக்கி துவம்சம் செய்தான். அவனு டைய அட்டூழியத்தால், கடல் வாழ் ஜந்துக்கள் பலவும் மரண மடைந்தன. அல்லல்பட்டு அங்கும் இங்குமாக அலைந்து பதறின. கடலரசன், இரண்யாட்சனை எதிர் கொள்ளமுடியா மல் சரணடைந்தான்.

மூவுலகையுமே ஜெயித்த இரண்யாட்சன், தொடர்ந்து பெற்ற வெற்றிகளால் மேலும் ஆணவம் கொண்டான். வருணனிடம் சென்று, அவனை தன்னோடு போருக்கு வரும்படி அறை கூவல் விடுத்தான்.

அரக்கனின் திமிரான அழைப்பு வருணனுக்கு கோபத்தை ஏற்படுத்தினாலும் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டான். இரண்யாட்சனிடம் இயலாமையுடன் சொன்னான்:

'காஷ்யபர் புத்திரனே! சம வலிமை பெற்றவர்களுடன் மோதினால்தான் நீ புகழடைய முடியும். உன்னோடு போர் புரியும் சக்தி எனக்கில்லை. எனவே, என்னை விட்டுவிடு. பகவான் விஷ்ணு ஒருவர்தான் உனக்கு நிகரானவர். அவர் இப்போது வராக அவதாரம் எடுத்து பூமியை மீட்டுவரு வதற்காக கடலினுள் சென்றிருக்கிறார். உன்னால் முடிந் தால், அவருடன் போரிட்டு வெல்லமுடியுமா என்று பார்!'

வருணன் சொன்னதுமே, இரண்யாட்சன் மனம் மகிழ்ந்து போனான். விஷ்ணுவே தனக்கு சரியான எதிரி என்று அவரை வெல்வதற்காகப் புறப்பட்டான். கடலுக்குள் புகுந்து பாதாள லோகம் சென்றான்.

அந்தச் சமயத்தில்தான் வராக அவதாரம் எடுத்திருந்த பகவான், தனது கோரைப்பற்களினால் பூமியை மீட்டெடுத்து மேலே கொண்டுவந்து கொண்டிருந்தார். பன்றி உருவத்திலிருந்தவரே பகவான் விஷ்ணு என்பதை இரண்யாட்சன் உணர்ந்து கொண்டான்.

எனவேதான், 'வராகமே! அந்தப் பூமி பாதாளலோகத்தில் இருப்பவர்களுக்காக பிரம்மா அனுப்பிவைத்தது. மரியாதை யாக அதை அங்கேயே வைத்துவிடு. முடிந்தால் என்னோடு யுத்தம் செய்து, என்னை ஜெயித்துவிட்டு பூமியை மீட்டுச் செல்!' என்று வலுச்சண்டைக்கு அழைத்தான்.

திருமாலாகிய வராக மூர்த்தி, பூமியை பத்திரமாக வைத்து விட்டு இரண்யாட்சனை எதிர்க்கத் தயாரானார். இரண்யாட் சன் தனது கதாயுதத்தை ஓங்கிக்கொண்டு அவர்மீது பாய்ந் தான். அடுத்து, இருவருக்குள்ளும் மூண்டது கடும் போர்.

வராக மூர்த்தி, இரண்யாட்சனின் கதாயுதத்தைப் பிடுங்கி ஒடித்து எறிந்தார். ஆத்திரம் கொண்ட அரக்கன், அடுத்து

அவரை சூலத்தால் தாக்க முயன்றான். பகவானின் சக்ராயுதம், சூலத்தைத் தூளாக்கியது. திகைத்துப்போன இரண்யாட்சன், மாயப்போரில் இறங்கினான். சுற்றிலும் இருளை ஏற்படுத்தி பெரும் காற்றை உண்டாக்கி, கல் மழை பொழியச்செய்து வராகத்தை எதிர்த்தான். திருமால், தனது சுதர்சன சக்ரத்தால் அவனுடைய மாயைகள் அனைத்தையும் அறுத்தெறிந்தார். இறுதியாக, இரண்யாட்சனின் செவியின்கீழ் ஓங்கி அறைந்தார். அடியின் வேகம் தாங்காமல், ரத்தம் கக்கியபடி விழுந்து இறந்துபோனான் இரண்யாட்சன்.

இந்தவிதமாக பிரளய நீரிலிருந்தும் இரண்யாட்சனிடமிருந்தும் விஷ்ணு மீட்டுக்கொடுத்த பூமியில், மனுவும் சதரூபையும் தங்களது வம்சத்தை விருத்தி செய்தனர்.

பிரம்மனும், மீண்டும் சிருஷ்டியில் ஈடுபடத் தொடங்கினார். இம்முறை அவருடைய அங்கங்களிலிருந்து பதின்மூன்று ரிஷிகள் தோன்றினார்கள். அப்படி உண்டானவர்களுள், பிரம்மனின் நிழலிலிருந்து தோன்றினார் கர்த்தமர் என்பவர்.

சுவாயம்புவ மனு தனது மூன்று பெண்களில் தேவஹூதி என்பவளை, கர்த்தமருக்குத் திருமணம் செய்து தந்தான். மற்றொரு மகளான ஆஹூதியை ருசிப் பிரஜாபதிக்கும், ப்ரஹூதி என்பவளை தட்சனுக்கும் மணம் செய்வித்தான்.

ப்ரஹூதியை மணந்துகொண்ட தட்சனுக்கு, பதினொரு பெண்கள் பிறந்தனர். அத்தனை பெண்களையும் தகுதியானவர்களுக்குத் திருமணம் செய்து தந்த தட்சன், தனது கடைசி பெண்ணான ஸதி என்கிற தாட்சாயணியை, சிவபெருமானுக்கு மனைவியாக்கினான். அதன்மூலம் அழிக்கும் கடவுளுக்கு மாமனாராகி பெரும் பெருமை அடைந்தான்.

ஆனால் இதே தட்சன்தான், பின்னாளில் சிவபெருமானுக்கு எதிரியாகவும் மாறிப்போனான். தன்னுடைய மகளின் மரணத்துக்கு காரணமாகவும் ஆனான்!'

***

6

தீக்குளித்த தாட்சாயணி

உலகை உற்பத்தி செய்யும் பிரம்மனின் வாரிசுகள் என்பதால் மரீசி, அத்ரி, அங்கிரஸ், தட்சன் போன்ற பிரம்மனின் புதல்வர்கள் பிரஜாபதிகள் என்று கௌரவிக்கப்பட்டார்கள். அந்தப் பிரஜாபதிகளின் தலைவனாக தட்சன் நியமிக்கப்பட்டான்.

ஒருமுறை, பிரம்மனின் புத்திரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி சத்ரயாகம் ஒன்றை நடத்தினார்கள். அந்த யாகத்துக்கு அனைத்து தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும், பிரம்மனும், சிவபெருமானும் வந்து அமர்ந்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும் வந்த பிறகு, பிரஜாபதிகளின் தலைவனான தட்சன் உள்ளே வந்தான். அவனைக் கண்டதும் தேவர்கள் முனிவர்கள் அனைவரும்

ஆசனத்தைவிட்டு எழுந்து, தட்சனுக்கு மரியாதை செலுத்தி னார்கள்.

பிரம்மனும் சிவனும் மட்டும் எழுந்து மரியாதை செய்ய வில்லை.

பிரம்மன் தனது தந்தை என்பதால் அவர் எழுந்து கொள்ளாததை தட்சன் பொருட்படுத்தவில்லை. ஆனால் மாப்பிள்ளையாகிய சிவன், மாமனாரும் பிரஜாபதிகளின் தலைவனுமான தனக்கு உரிய மரியாதை செலுத்தாததை பெரிய அவமதிப்பாகக் கருதினான். கட்டுக்கடங்காத கோபம் கொண்டான். சுட்டெரிக்கும் பார்வையால் சிவனை முறைத்து விட்டு, கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறினான்.

'தேவர்களே! முனிவர்களே! நான் ஒரு பெரிய தவறைச் செய்துவிட்டேன். மான் குட்டியின் அழகிய கண்களைக் கொண்ட என்னுடைய மகள் ஸதியை, குரங்கின் கண்களைக் கொண்ட இந்தச் சிவனுக்குத் திருமணம் செய்துவைத்தேனே! அதுதான் நான் செய்த தவறு. மாமனாராகிய என்னை எழுந்து நின்று வரவேற்காமல், சபையில் அனைவர் முன்பாகவும் அவமதித்துவிட்டான் இந்த ருத்ரன்.

சிவன் என்பதற்கு மங்களம் என்பது பொருள். பெயரில்தான் மங்களம் இருக்கிறதே தவிர, இவன் செயல்கள் எல்லாமே அமங்களம்தான். சுடுகாட்டில் உலவிக்கொண்டு, பிணங்களை எரித்த சாம்பலை உடலில் பூசிக்கொண்டு, பிரேதங்களின் எலும்புகளை மாலையாக அணிந்துகொண்டு திரிபவனுக்கு, நல்ல குணங்கள் எங்கிருக்கப் போகிறது? பிரம்மனின் பேச்சைக்கேட்டு இந்தப் பித்தனுக்குப்போய் என் மகளை திருமணம் செய்து தந்தேனே! அதனால்தான் எனக்கு இந்த அவமரியாதை நேர்ந்தது!' என்று கடுமையான சொற்களால் சிவனை இழிவாகப் பேசியவன், அத்துடன் திருப்தியடைய வில்லை.

'இனி, இந்தச் சிவனுக்கு எந்த யாகத்திலும் அவிர்பாகம் கிடைக்காமல் போகட்டும்' என்று அனைவரும் திடுக்கிடும்

படியாக சாபமிட்டான். கோபம் தணியாதவனாகவே அங்கிருந்து வெளியேறினான்.

இத்தனை நடந்தும், சிவபெருமான் புன்னகை மாறாத முகத் துடன் அமைதியாகவே இருந்தார். ஆனால், சிவ கணங்களின் தலைவனான நந்தியால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தட்சன் போன திசையைப் பார்த்து ஆத்திரத்துடன் பொரிந் தான். 'மும்மூர்த்திகளுள் ஒருவரான இறைவனின் பெரு மையை, உணராமல் நடந்துகொண்டுவிட்டான் தட்சன். அகிலாண்ட நாயகனை அற்பத்தனமாகச் சபித்த தட்சன், முழு மூடனாகி காமத்தில் உழன்று கிடக்கட்டும். கொஞ்சமும் பண்பாடில்லாமல் மிருகம்போல நடந்துகொண்டவனுக்கு விரைவிலேயே ஆட்டுத்தலை அமையட்டும்!' என்று சபித் தான்.

நந்தியின் கோபம் அத்துடன் முற்றுப்பெறவில்லை. அங்கிருந்த அந்தணர்கள் மேலும் சீறி விழுந்தான்.

'அறிவற்றவனாகிப்போன தட்சனைத் தடுத்து, அவனுக்குப் புத்திமதி கூறாமல் வாய்மூடிக் கிடந்த நீங்கள், சிவனுக்குத் துரோகம் செய்தவர்களாகிவிட்டீர்கள். இனி, நீங்கள் கற்ற வேதமும் வித்தையும் உங்களுடைய மேன்மை நிலைக்கு உதவாமல் போகட்டும். அதை வயிற்றுப்பிழைப்புக்காக விற்று வாழும்படியான வாழ்க்கையே உங்களுக்கு அமையட்டும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என மூவாசை களிலும் சிக்கி வதைபட்டு, யாசகம் பெற்றே வாழும் கதியை நீங்கள் பெறுவீர்களாக!' என்று அந்தணர்களையும் சபித்து முடித்தான்.

சாபமும் பாபமும் அத்தனை சீக்கிரத்தில் முற்றுப்பெறுமா என்ன?

நந்தி, அந்தணர்களைச் சபித்ததினால், பிருகு மகரிஷி கோபம் கொண்டவரானார். அவரும் சீறி எழுந்து பதிலுக்குச் சபித்தார்.

'ருத்ரனுடைய கணங்களும் அவரை வணங்குபவர்களும் அவரைப் பின்பற்றுபவர்களும், வேதத்தை அறியாத மூடர்களாகிப் போகட்டும். சடைமுடி கொண்டு, சாம்பலை உடலில் பூசிக்கொண்டு மது மாமிசங்களை வைத்துப் பூஜிப்பவர்களாக, வேதத்துக்கு விரோதமான சடங்குகளைச் செய்யும் பாஷாண்டிகளாகத் திரியட்டும்!' என்றார்.

யாகத்தில் நடந்த இப்படியான நிகழ்ச்சிகள், சிவபெருமானை வருத்தம்கொள்ள வைத்தன. எதுவும் பேசாமல் தனது சிவ கணங்களை அழைத்துக்கொண்டு அவர் கைலாயத்துக்குத் திரும்பினார்.

இதற்குப்பிறகு, தட்சனுக்கும் சிவபெருமானுக்குமான விரோதம் மேலும் வளர்ந்தது. தட்சன் 'வாஜபேயம்' என்னும் யாகத்தைச் செய்தபோது, அதற்கும்கூட சிவனை அழைக்கவும் இல்லை. சிவனுக்கு அவிர்பாகம் கொடுக்கவுமில்லை.

அடுத்ததாக 'பிரகஸ்பதிஸவம்' என்கிற மிகப்பெரிய யாகத்தைத் தொடங்கினான் தட்சன். சிவனைத் தவிர மற்ற எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி, அந்த யாகத்தை மிகுந்த பொருட்செலவுடன் ஆடம்பரமாக நடத்தத் திட்டமிட்டான்.

அந்த யாகத்தில் கலந்துகொள்வதற்காக தேவர்கள், கந்தர்வர்கள், பிரம்ம ரிஷிகள், தேவ ரிஷிகள் போன்றவர்கள் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள், தங்கள் மனைவிகளுடன் கண்ணைக் கவரும் பட்டாடைகளும் விதவிதமான ஆபரணங்களும் அணிந்து கலகலப்பாகப் பேசிச்சிரித்து விமானங்களில் செல்வதை, தட்சனின் மகள் ஸதிதேவி பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவர்களின் உற்சாகத்தைப் பார்த்த தாட்சாயணிக்கு, தானும் சென்று தனது தந்தையின் யாகத்தில் கலந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அவள் தன் கணவரான சிவனிடம் சென்று தயக்கத்துடன் தன் ஆசையை வெளியிட்டாள்.

'ஸ்வாமி! என் தந்தை நடத்தும் யாகத்துக்கு, மூவுலகிலிருந்தும் எல்லோரும் கலந்துகொள்ளச் செல்கிறார்கள். அங்கு என்னுடைய எல்லாச் சகோதரிகளும் அவர்களின் கணவர்களுடன் வந்திருப்பார்கள். எனக்கு, அவர்கள் அனைவரையும் சந்தித்துப்பேச ஆசையாக இருக்கிறது. கூடவே, என் தாயையும் தந்தையையும்கூட பார்த்து மகிழ்வேன். என் தந்தை உங்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை என்பது உண்மைதான். ஆனால், இம்மாதிரியான யாகங்களில் கலந்துகொள்வதற்கு யாரும் அழைக்கவேண்டியதில்லை. அழைப்பில்லாமலும் சென்று கலந்துகொள்ளலாம். ஆகவே, நாமும் சென்று கலந்துகொள்ளலாமே!' என்று அழைத்தவள், சிவனின் வருத்தத்தை அவரின் பார்வையிலேயே உணர்ந்துகொண்டு, 'சரி. உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நீங்கள் வரவேண்டாம். நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை. நான் மட்டுமாவது சென்று வர அனுமதி கொடுங்கள்!' என்று வேண்டினாள்.

தட்சனின் ஆணவத்தையும் அகம்பாவத்தையும் நன்கு அறிந்திருந்த சிவபெருமான், மெல்லப் புன்னகைத்தபடி ஸதியிடம் கூறினார்.

'தாட்சாயணி! உனது தந்தை நம்மை அழைக்கவில்லை என்றால், அவர் நம்மிருவரையும் மதிக்கவில்லை என்றுதானே அர்த்தம்? மதிக்காதவர்கள் இடத்துக்குச் செல்வது அத்தனை நல்லதல்ல தேவி! நீ தட்சன் மகளாக இருந்தபோதும், என் மனைவியென்பதால் அவன் உன்னை மதிக்கமாட்டான். கடுமையான சொற்களைப் பேசி உன்னைத் துன்புறுத்தும் விதமாக நடந்துகொள்வான். இதையெல்லாம் நீ தாங்கமாட்டாய். நான் சொல்வதைக் கேள். யாகத்துக்குச் செல்லும் உன் எண்ணத்தை விட்டுவிடு!' என்றார்.

கணவரின் பேச்சைக் கேட்கும் நிலையில் ஸதிதேவி இல்லை. தாயையும் சகோதரிகளையும் பார்க்கவேண்டும் என்கிற ஆசை, அவளை மிதமிஞ்சி அலைக்கழித்தது. எனவே, சிவனிடம் விடாமல் கேட்டுக்கொண்டே இருந்தாள். அவர் மறுக்க மறுக்க, ஸதியின் பிடிவாதம் அதிகரித்தது. அழுதாள்,

அடம் பிடித்தாள், சண்டையிட்டாள். கடைசியாக, யாகத்துக்கு தான்மட்டும் தனியாகவே செல்வதென்று முடிவெடுத்துக் கிளம்பியே விட்டாள்.

இனிமேல் அவளைத் தடுக்க முடியாதென்பதால் சிவபெருமான், ஸதிக்குத் துணையாக நந்திதேவரையும் மற்ற கணங்களையும் கூடவே அனுப்பிவைத்தார்.

மிகவும் சந்தோஷமாகப் புறப்பட்டுப் போனாள் ஸதிதேவி. ஆனால் தட்சனின் யாகக் கூடத்தில் சிவன் சொன்னது போலவேதான் நடந்தது.

ஸதியை அவளின் தாயும் சகோதரிகளும் அன்புடன் வரவேற்றார்கள் என்றாலும், தட்சனும் மற்றவர்களும் அவளைச் சிறிதும் மதிக்கவில்லை. எல்லோரையும் வரவேற்று உபசரித்த தட்சன், ஸதியைக் கண்டுகொள்ளாதது போலவே புறக்கணித்து அவளை அவமதித்தான்.

தட்சனின் இச்செய்கையால் மனம் புண்பட்டுப்போன ஸதி, யாகத்தில் தனது கணவருக்குச் சேரவேண்டிய அவிர்பாகம் ஒதுக்கப்படாததைக் கண்டு மேலும் கொந்தளித்துப் போனாள்.

தட்சனிடம் ஆவேசத்துடன் சென்றவள், 'தந்தையே! நீங்கள் மாபெரும் தவறு செய்கிறீர்கள். மும்மூர்த்திகளுள் ஒருவரான பரமேஸ்வரனை, நீங்கள் யாகத்துக்கு அழைக்காதது மன்னிக்க முடியாத குற்றம். ஏனோ தெரியவில்லை! யாரிடமும் விரோதம் பாராட்டாத ஈசனிடம், நீங்கள் மட்டும்தான் பகையுணர்வு பாராட்டுகிறீர்கள். இது சரியல்ல! யாகத்தில் அவருக்குச் சேரவேண்டிய அவிர்பாகத்தைத் தராமலிருப்பது முறையுமல்ல. இதனால் தீமைகள்தான் விளையும். உங்கள் மனத்தை மாற்றிக்கொள்ளுங்கள். இனியாவது, சிவனுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து அவருக்கான அவிர்பாகத்தை அளித்து, நடந்த தவறுக்குப் பரிகாரத்தைத் தேடிக் கொள்ளுங்கள்!' என்று அறிவுரை கூறினாள்.

தட்சன் ஆணவச் சிரிப்புடன், 'எனக்குப் புத்திமதி சொல்ல உனக்குத் தகுதியில்லை தாட்சாயணி. யார் யாரை மதிக்க வேண்டுமோ, அவர்களை யாகத்துக்கு அழைத்துவிட்டேன். இம்மாதிரி புனிதமான யாகத்தில் கலந்துகொள்ள உன் கணவனுக்கு அருகதையில்லை. அவன் மனைவி என்பதால், உனக்கும் இங்கு இடமில்லை. பித்தனின் மனைவியாகிய உன்னை, யார் இங்கு அழைத்தது? எதற்காக வந்தாய்? மரியாதையாக இங்கிருந்து வெளியே செல்!' என்று கர்ஜித்தான்.

தட்சன், சிவனை நிந்தித்து ஸதிதேவியை அவமானப்படுத்தியதால், சிவகணங்கள் கோபமடைந்தார்கள். தட்சனை தாக்க முற்பட்டார்கள். ஸதிதேவி அவர்களைத் தடுத்துவிட்டு, தட்சனைப் பார்த்துச் சீறினாள்:

'அகம்பாவம் பிடித்த தட்சனே! சிவனை பகைத்துக்கொள்வதன் மூலம் உனது அழிவை நீயே தேடிக்கொள்கிறாய். உனக்கு மகளாகப் பிறந்ததையே மகா பாவமாகக் கருதுகிறேன். உனது ரத்த சம்பந்தத்தால் ஏற்பட்ட எனது உடலையே நான் வெறுக்கிறேன். இந்த உடல், இனி எனக்கு வேண்டாம்!' என்று சொன்னவள், வடக்கு நோக்கி அமர்ந்து யோகத்தில் மூழ்கினாள்.

மனத்தில், கணவரான ஈஸ்வரனைத் தியானித்தபடி தன்னைச் சுற்றி யோகத் தீயை மூட்டிக்கொண்டாள். அதில் தன் உடலை எரித்துக்கொண்டு சாம்பலானாள்.

ஸதி இப்படிச் செய்வாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஸதியின் மரணத்தால் நிலைகுலைந்துபோன பூத கணங்கள், ஆக்ரோஷத்துடன் வீறுகொண்டு எழுந்தார்கள். தட்சனைத் தாக்கவும் யாகத்தை அழிக்கவும் முனைந்தார்கள்.

இதைக் கண்ட பிருகு மகரிஷி, பூத கணங்களை வெல்வதற்காக யாக குண்டத்தின் அக்னியிலிருந்து தேவ கணங்களை உண்டாக்கினார். அந்தத் தேவ கணங்கள் சிவ கணங்களுடன் சண்டையிட்டு அவர்களைத் தாக்கி விரட்டியடித்தனர்.

யாகத்துக்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போய் இருந்தார்கள். கண்ணெதிரே தனது மகள் உயிரைவிடத் தீர்மானித்த போதும், தட்சன் அவளைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது எல்லோரையும் திடுக்கிடச் செய்தது. இதனால் அனைவரும் தட்சனைப் பழித்தனர்.

கோபமூர்த்தியான ருத்ரன் இனி என்ன செய்வாரோ என்று நடுங்கினர்.

'ஆணவத்தின் உச்சத்தில் ஆட்டம் போடும் தட்சன், நாசத்தைத் தான் சந்திக்கப்போகிறான்!' என்று எண்ணியபடி, நாரதர் கயிலாயத்தை நோக்கி விரைந்தார்.

***

வெள்ளியை உருக்கி வார்த்ததுபோல, பனிமூடிக் கிடந்த கயிலையில், சிவபெருமான் கண்மூடி நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

நாரதர் பதற்றத்துடன் ஓடிவந்து, 'பரமேஸ்வரா! மகாதேவா! நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. ஸதி தேவியார் யோகத் தீயில் தனது பிராணனைப் போக்கிக்கொண்டுவிட்டார்' என்று கதறினார்.

தேவ கணங்களிடம் தோற்றுப்போய் திரும்பி வந்த பூத கணங்கள், தட்சனின் யாக சாலையில் நடந்தவற்றை ஈசனிடம் தெரிவித்தார்கள்.

சிவபெருமானின் முகம் செந்தழலாக சிவந்துபோனது. கோபத்தினால் நெற்றிக்கண் திறந்துகொண்டது. ஆவேசம் கொண்ட ஈசன், தனது சடைமுடியிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி கீழே போட்டார். அதிலிருந்து, வீர இளைஞனான வீரபத்ரன் என்பவன் வெளிப்பட்டான். சடை முடியும், மூன்று கண்களும், ஆயிரம் கைகளுடனும் ஆஜானுபாகுவாக, கழுத்தில் கபால மாலை அணிந்து பார்க்கவே பயங்கரமாகக் காட்சியளித்தான்.

சிவனை வணங்கிய வீரபத்ரன், 'இறைவா! நான் செய்ய வேண்டியது என்ன? கட்டளையிடுங்கள்' என்று கேட்டான்.

'வீரபத்ரா! நமது படைகளை அழைத்துக்கொண்டு தட்சனின் யாகசாலைக்குச் செல். தட்சனைக் கொன்று அவனுடைய யாகத்தை அழித்துவிட்டு வா!' என்று ஆணையிட்டார்.

சிவ பூதகணங்களுடன் புறப்பட்ட வீரபத்ரன், பெரும் சூறாவளி போல தட்சனின் யாக சாலைக்குள் புகுந்தான். பூத கணங்கள் ஆவேசத்துடன் யாக மண்டபத்தை இடித்து நொறுக்கி, யாக குண்டத்தை உடைத்து மற்ற பொருள்களையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கினார்கள்.

வீரபத்ரன், தன்னைத் தாக்க முற்பட்ட தேவ கணங்களை ஆக்ரோஷமாகத் தாக்கினான். எதிர்த்தவர்கள் அனைவரையும் அடித்து நொறுக்கினான். ஓட ஓட விரட்டினான். சிவ கணங்களுள் ஒருவரான மணிமான், பிருகு முனிவரின் தாடி மீசையைப் பிடுங்கி எறிந்து தீயில் பொசுக்கினார். தட்சன் சிவனை இகழ்ந்தபோது சிரித்த பூஷா என்பவனின் பற்களை, உடைத்து நொறுக்கினார் சண்டிகேஸ்வரர். நந்திதேவர் பகன் என்பவனின் கண்களைப் பிடுங்கி வீசினார். தேவர்களும் பூத கணங்களால் தாக்கப்பட்டு தப்பியோடினார்கள்.

வீரபத்ரன் தட்சனை உதைத்துத் தள்ளி, வாளால் அவனுடைய கழுத்தை வெட்டினார். ஆனால் வாள் மழுங்கிப்போனதே தவிர, தட்சனின் தலையை வெட்ட முடியவில்லை. வீரபத்ரன், தட்சனை தரதரவென்று இழுத்துப்போய் யாகப் பசுக்களை வெட்டிக்கொல்லும் பலிபீடத்தின்மீது வைத்து அவனுடைய தலையை ஆட்டை அறுப்பதுபோல அறுத்து தீயில் வீசினான். அது பொசுங்கிச் சாம்பலானது.

இதைக்கண்ட பூத கணங்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தார்கள். வெற்றிகோஷத்துடன் கயிலாயத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

யாகசாலையில் சிவ கணங்களிடமிருந்து தப்பித்து ஓடிய தேவர்கள், அலறியடித்துக்கொண்டு பிரம்மலோகம்

சென்றார்கள். நடந்தது அனைத்தையும் பிரம்மனிடம் சொல்லி முறையிட்டார்கள்.

பிரம்மன் வேதனையுடன், 'தட்சன் சிவனை நிந்தித்ததும், அவருக்கு அவிர்பாகம் கொடுக்காமல் போனதும் மன்னிக்க முடியாத குற்றம். நீங்களோ சிவ நிந்தனை நடந்த இடத்தில் இருந்தது மட்டுமில்லாமல், பூர்த்தியாகாத யாகத்தில் கலந்து கொண்ட குற்றத்தையும் செய்திருக்கிறீர்கள். தட்சனுடைய அவமதிப்பால் தனது மனைவி மாண்டுபோன துக்கத்தில் சினத்துடன் இருக்கிறார் சிவபெருமான். அவருடைய கோபம் மூவுலகத்தையுமே அழிக்கக் கூடியது. ஆனாலும் வெகு சீக்கிரமே கோபம் தணிந்து சந்தோஷம் கொள்ளக்கூடியவரும் அவர்தான். வாருங்கள்! நாம் அனைவரும் அவரிடமே சென்று சரணடையலாம். சரணடைந்தவர்களைக் காக்கும் கருணைத் தெய்வமான அவர் நம்மைக் கைவிடமாட்டார்' என்று கூறினார்.

பிரம்மனின் சொற்படியே எல்லோரும் சிவனைத் தரிசிக்க விரைந்தார்கள்.

கயிலையில் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமர்ந்திருந்தார் பரமேஸ்வரன். யோகிகள் அவரைச் சூழ்ந்து நிஷ்டையில் இருக்க, நாரதருக்கு பிரம்ம தத்துவத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார் ஈசன். பிரம்மன் வருவதைக் கண்டு அவரை அன்புடன் வரவேற்றார்.

பிரம்மன் சிவனை வணங்கி, 'விதியின் மாயையில் சிக்கியதாலேயே தட்சன் உமக்கு அவிர்பாகம் தரமறுத்த மூடனாகி அபசாரம் செய்துவிட்டான். எனவே, தட்சனின் தவறை மன்னித்து அவனை தாங்கள் உயிர்ப்பித்துத் தரவேண்டும். யாகத்தைப் பூர்த்திசெய்ய அருள்பாலிக்க வேண்டும்' என்று வேண்டினார்.

'பிரம்ம தேவரே! தட்சனின் ஆணவத்தை அழித்து அவனுக்குப் புத்தி புகட்டவே நான் அவனைத் தண்டித்தேன். இனி, தங்களின் விருப்பப்படியே அவனை உயிர்ப்பிக்கிறேன். தட்சனின் தலை அக்னியில் பொசுங்கிவிட்டதால் ஆட்டின் தலையை அவனுக்குப் பொறுத்துங்கள். அதுபோல பகனுக்குக் கண்களும், பூஷாவுக்குப் பற்களும், இன்னும் யார் யாருக்கு எந்தெந்த அவயங்கள் போனதோ அவை திரும்பக் கிடைக்கும். பிருகு முனிவருக்கு, ஆட்டின் தாடியும் மீசையும் முளைக்கும்!' என்றார்.

சிவன் சொன்னபடியே தட்சன் ஆட்டுத்தலையுடன் உயிர் பெற்று எழுந்தான். சிவனிடம் தனது தவறுக்கு மன்னிப்புக் கோரியவன், 'மகேஸ்வரா! பாதியில் நின்றுபோன யாகத்தை தாங்கள்தான் முன்வந்துநின்று அதைப் பூர்த்தியாக்கித் தரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான்.

தட்சன் வேண்டிக்கொண்டபடி சிவன் யாக பூமிக்கு வந்தார். திருமாலாகிய பகவான் விஷ்ணுவும் அங்கு வந்து அனைவரையும் ஆசீர்வதித்தார். யாகம் நல்லபடியாக நடந்து நிறைவடைந்தது. அனைவரும் அவரவர் இடத்துக்குத் திரும்பினார்கள்.

தட்சன் மகளாக உயிர் துறந்த ஸதிதேவி, பின் இமவானுக்கும் மேனாவுக்கும் மகளாகப் பிறந்து, பார்வதியாக பரமேஸ்வரனை தவமிருந்து திருமணம் செய்துகொண்டாள். சகலமும் சுபமாக முடிந்தது' என்று சொல்லிமுடித்தார் சுகர் மகரிஷி.

பரமேஸ்வரன் - பார்வதியை மனத்துக்குள் வணங்கித் துதித்த பரீட்சித், பின் சுகரிடம் கேட்டான்:

'ஸ்வாமி! சுவாயம்புவ மனுவின் ஐந்து மக்களில், மூன்று மகள்களைப்பற்றிக் கூறினீர்கள். அவரின் மகன்கள் இருவர் என்னவானார்கள்?'

'சரியாகக் கேட்டாய் பரீட்சித். அந்த மகன்களில் ஒருவனுக்குப் பிறந்த வாரிசு, பகவானின் அருளால் விண்ணுலகில் மிக அற்புதமான பதவியை அடைந்தான். மெய் சிலிர்க்கவைக்கும் சரிதம் அது! தந்தை தட்சனால் ஸதிதேவி எப்படி வேதனையில்

தவித்தாளோ, அதுபோல தந்தையால் புறக்கணிக்கப்பட்டு தவித்த பரிதாபத்துக்குரிய மகனின் கதை அது.

இத்தனைக்கும் அவன் சிறுவன். அப்படியொன்றும் அவன் பெரிதாக ஆசைப்பட்டு விடவும் இல்லை. அவன் விரும்பியதெல்லாம் தனது தந்தையின் மடியில் அமர ஒரு சிறு இடம்!' என்ற சுக மகரிஷி, தொடர்ந்து கதை சொல்லத் தொடங்கினார்.

***

தியானத்திலிருக்கும் ஆங்கிரஸ முனிவரின் கழுத்தில், செத்த பாம்பை மாலையாகப் போடுகிறான் பரீட்சித்.



காஷ்யபர் முனிவரை அவருடைய மனைவி திதி காமத்துடன் தழுவுகிறாள்.

வானத்தில் உதித்த புதிய நட்சத்திரம்

பிரம்மனின் மகனான சுவாயம்புவ மனுவுக்கு, மூன்று மகள்களைத் தவிர இரண்டு மகன்களும் உண்டு. பிரிய விரதன், உத்தான பாதன் என்கிற அவர்கள் இருவரில் உத்தான பாதன், சுநீதி என்கிற கன்னிகையை திருமணம் செய்துகொண்டான். அவர்களுக்கு துருவன் என்கிற அழகான மகன் பிறந்தான். பின்னாளில் உத்தான பாதன் சுருசி என்கிற மற்றொரு பெண்ணையும் காதலித்து மணம் புரிந்து கொண்டான்.

இரண்டாவது மனைவி சுருசியின்மேல் மிகுந்த மோகம் கொண்ட உத்தான பாதன், முதல் மனைவி சுநீதியை மறந்தே போனான். அவளை சுத்தமாகப் புறக்கணித்துவிட்டு

சுருசியின் அந்தப்புரமே கதியாகக் கிடந்தான். சுருசிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு உத்தமன் என்று பெயரிட்டார்கள்.

குழந்தைகள் இருவரும் வளர்ந்து சிறுவர்களானார்கள்.

ஐந்து வயதுச் சிறுவனான துருவன், தந்தை தங்களைக் காண வராததால் தானே தந்தையைத் தேடி, அடிக்கடி சுருசியின் அந்தப்புரத்துக்கு ஓடி வந்துவிடுவான். அங்கு தனது தம்பியான உத்தமனோடு விளையாடிக்கொண்டிருப்பான்.

ஒருமுறை, துருவனும் தம்பி உத்தமனும் விளையாடிக் கொண்டே தந்தையிடம் ஓடினார்கள். உத்தமன் தந்தை உத்தான பாதனின் மடியில் ஏறி அமர்ந்துகொள்ள, துருவன் தானும் ஏறி தந்தையின் மடியில் உட்கார முயற்சித்தான். அப்போது அவனுடைய சிற்றன்னையான சுருசி, கோபத் துடன் துருவனைக் கீழே பிடித்துத் தள்ளினாள்.

பின் துருவனிடம் கடுமையான தொனியில், 'நீ மன்னனின் முதல் மகனாக இருக்கலாம். ஆனால் அதனாலேயே, உன் தந்தையின் மடியில் அமரும் உரிமையோ அரியாசனத்தில் ஏறும் தகுதியோ இருப்பதாக நினைத்துக்கொள்ளாதே! என் வயிற்றில் பிறப்பவனுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைக் கும். புரிகிறதா? போ! போ! அடுத்த ஜென்மத்திலாவது எனக்கு மகனாகப் பிறக்கவேண்டும் என்று கடவுளை நினைத்து தவம் செய். அந்த ஆண்டவனிடம் வரம் கேட்டு வாங்கிக்கொண்டு வா! இப்போது இங்கிருந்து செல்!' என்று கூறி, விரட்டி விட்டாள்.

மாற்றாந்தாயின் சுடுமொழியால் துருவனின் மனம் வேதனை யடைந்தது. கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தது. இதைக் கண்ட உத்தான பாதன் உள்ளுக்குள் வேதனையடைந்தாலும், சுருசிக்குப் பயந்து மௌனமாக இருந்துவிட்டான்.

துருவன், துக்கம் தாங்காமல் உதடுகள் விம்ம தேம்பிக் கொண்டே தாயிடம் ஓடினான். அவள் மடியில் விழுந்து கதறினான். சுநீதி பதறிப்போனாள்.

'கண்ணே, துருவா! என்னப்பா? என்னாயிற்று? யார் உன்னைத் துன்புறுத்தினார்கள்?' என்று தவிப்புடன் கேட்டாள்.

துருவன், சிற்றன்னையின் அந்தப்புரத்தில் நடந்தவைகளைக் கூறினான்.

சுநீதி மனம் உடைந்துபோனாள். கணவர் தன்னைத்தான் புறக்கணித்து விட்டார் என்றால், கடைசியில் குழந்தையிட மும் பாராமுகமாக நடந்துகொண்டுவிட்டாரே என்று வருந்தினாள். தனது சக்களத்தியான சுருசியின்மீதும் கோபம் கொண்டாள். ஆனால் ஆதரவற்ற அபலையான தான், அவளை என்னதான் செய்துவிட முடியும்?

ஆதங்கத்துடன் மகனிடம் கூறினாள்.

'மகனே! உன் சிற்றன்னை சொன்னது சரிதான். விதி நம்மை வஞ்சித்துவிட்டது. துரதிர்ஷ்டசாலியான என் வயிற்றில் பிறந்ததாலேயே உன் தந்தையின் மடியில் அமரும் பாக்கியம்கூட உனக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ஆதரவற்றவர்களான நம்மை அந்த ஆண்டவன் தான் ஆதரிக்க வேண்டும். இதற்காக வருந்தாதே! பகவான் விஷ்ணுவைப் பிரார்த்தனை செய். உனக்கு நன்மையே விளையும்' என்று சமாதானப்படுத்தினாள்.

'அம்மா! நாராயணனை நினைத்தால் அவர் என்ன தருவார்?' என்று கேட்டான் துருவன்.

'நீ வேண்டும் எதையும் தருவார் கண்ணே! பிரம்மதேவன் அவரைப் பூஜித்துதான் பிரம்ம பதவியை அடைந்தான். பாண்டவர்கள் இழந்த ராஜ்ஜியத்தைப் பெற்றார்கள். நீ அரசபதவியை அடைய விரும்பினாலும் சரி, தேவலோகத் தையே கைப்பற்ற நினைத்தாலும் சரி, திருமாலின் பாதகமலங் களைச் சரணடைந்தால் நீ விரும்பியது எதுவும் கிடைக்கும்!' என்றாள்.

துருவன் மனத்தில் தாயின் சொற்கள் ஆழமாகப் பதிந்தன. தானும் நாராயணனை நினைத்து தவம் செய்யத் தீர்மானித் தான். தாயின் அனுமதியை பெற்றுக்கொண்டு காட்டை நோக்கிச் சென்றான்.

அப்போது திரிலோக சஞ்சாரியான நாரதர் அந்தப் பக்கம் வந்தார். அறியாச் சிறுவன் ஒருவன் காட்டுப்பாதையில் தன்னந்தனியே அஞ்சாமல் செல்வதைக் கண்டார். ஆச்சரியம் கொண்டார். துருவனைத் தடுத்து நிறுத்தினார்.

'பாலகனே, யார் நீ? கொடிய விலங்குகள் நடமாடும் இந்த பயங்கரமான காட்டுக்குள் எதற்காக வந்தாய்?' என்று விசாரித் தார்.

துருவன் அவரிடம் 'தான் உத்தான பாதனின் மகன்' என்று சொல்லி, 'கடவுளைக் காண்பதற்காக அவரை நோக்கித் தவம் செய்யப்போகிறேன் மகரிஷி!' என்று பால்மணம் மாறாத வார்த்தைகளால் இனிமையாகக் கூறினான்.

நாரதருக்கு ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம்! ' இத்தனை சிறிய பாலகன் தவம்செய்யப் போகிறானா! சாத்தியமா இது? குழந்தை யார் பேச்சையோ கேட்டு அறியாமையால் பேசு கிறான்' என்று எண்ணி துருவனுக்குப் புரியும்படியாக கூறினார்.

'குழந்தாய்! கடவுளைப் பார்ப்பது அத்தனை சுலப மில்லைப்பா. பெரிய பெரிய முனிவர்களும் ரிஷிகளும்கூட ஆண்டாண்டு காலமாக தவமிருந்து கடவுளைக் காண முடியாதபோது, சிறுவனான உன்னால் அதை எப்படி சாதிக்க முடியும்? நான் சொல்வதைக் கேள்! நீ பெரியவனாக வளர்ந்த பிறகு வேண்டுமானால் தவமிருக்க முயற்சி செய். இப்போது, வீட்டுக்குத் திரும்பிச்செல்' என்றார்.

ஆனால், துருவன் தனது முயற்சியில் இருந்து பின் வாங்கு வதாக இல்லை. 'என்னால் முடியும். நான் நிச்சயம் கடவுளை தரிசித்தே தீருவேன்! நாம் உண்மையான அன்போடு கூப்பிட்

டால் பகவான் கட்டாயம் வருவான் என்று என் அன்னை சொல்லியிருக்கிறார்கள். அது நடக்கும்!' என்று உறுதியாகக் கூறினான்.

நாரதர் அதற்குமேலும்கூட தவமிருப்பதில் இருக்கும் கஷ்டங் களைப்பற்றி விவரித்துப் பார்த்தார். அப்போதும் துருவன் தன் மனஉறுதியிலிருந்து கொஞ்சமும் தளரவில்லை.

அவனின் அசாத்தியமான நம்பிக்கையையும் திடமான எண்ணத்தையும் கண்டு நாரதர் மெய்சிலிர்த்துப்போனார். அவனுக்கு உதவி செய்ய விருப்பம் கொண்டார்.

'துருவா! உன்னுடைய மனம் தளராத நம்பிக்கை எனக்குத் திகைப்பூட்டுகிறது. மகிழ்ச்சியைத் தருகிறது. உனது முயற்சி யில் நீ வெற்றிபெற வேண்டும் என்றே விரும்புகிறேன்' என்றவர், துருவனுக்கு தவம் செய்வதற்கான வழிமுறை களைக் கூறினார்.

'துருவா! யமுனை நதிக்கரையில் 'மதுவனம்' என்கிற புண்ணியத்தலம் இருக்கிறது. நீ அங்கே சென்று உன் தவத்தைத் தொடங்கு. நீலவண்ண தேகத்தைக் கொண்ட வனும் அலங்கார நாயகனுமான ஸ்ரீ ஹரியை மனத்தில் நிறுத்தி தியானம் செய். இப்போது நான் சொல்லும் 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய' என்கிற மகா மந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்து வா. மன வலிமையுடன், பகவத் பக்தியைக் கைவிடாமல் இதை நீ இடைவிடாமல் செய்துவந்தால், பகவான் நாராயணன் நிச்சயம் உனக்கு தரிசனம் தருவார்' என்று உபதேசித்தவர், அவனை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

துருவன் மதுவனம் நோக்கிப் போனதும், நாரதர் புறப்பட்டு துருவனின் தந்தையான உத்தான பாதனிடம் சென்றார். அங்கே உத்தான பாதன், மகன் துருவனை நினைத்து வருந்திக் கொண்டிருந்தான். நாரதரைக் கண்டதும் அவரை வணங்கி தனது வேதனையைப் பகிர்ந்துகொண்டான்.

'துருவனைப் பொறுத்தவரையில் நான் ஒரு தகுதியற்ற தகப்பனாக நடந்துகொண்டுவிட்டேன் மகரிஷி. மனம் வெறுத்துப்போன பாலகன் காட்டுக்குச் சென்றுவிட்டான். கொடிய விலங்குகளால் அவனுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டதோ, எங்கு கஷ்டப்படுகிறானோ தெரியவில்லை. அவன் உயிரோடு இருக்கிறானா என்றே எனக்குப் பயமாக இருக்கிறது' என்று கலங்கினான்.

'உத்தான பாதனே, கவலையை விடு! உனது மகன் துருவன் யாராலும் சாதிக்கமுடியாததை சாதிக்கப் பிறந்தவன். அவன் நிச்சயம் கடவுளைத் தரிசித்து அவர் அருளைப் பெறுவான். பெரும்புகழையும் பெறுவான். மனம் வருந்தாமல் காத்திரு!' என்று நாரதர் உத்தான பாதனுக்கு ஆறுதல் கூறிச்சென்றார்.

குழந்தைகள் இருக்கும் இடத்தில் குதூகலம் குடியேறும் என்பதுபோல, துருவன் வருகையினால் மதுவனம் பல மடங்கு பசுமையுடன் அழகாகக் காட்சியளித்தது. பறவை களின் இனிய ஒலியும் மான்களின் துள்ளோட்டமுமாக, யமுனை நதிக்கரை துள்ளலாகத் தெரிந்தது.

துருவன், யமுனை நதிக்கரையில் நாரதர் உபதேசித்தபடியே தீவிரமான தவத்தில் ஈடுபட்டான். பகலில் மட்டும் சாப்பிட்டு இரவில் உபவாசமிருந்தான்.

அந்தப் பகல் உணவுக்கும், மூன்று நாள்களுக்கு ஒருமுறை விளாம்பழத்தையும் இலந்தைப் பழத்தையும் மட்டும் சாப்பிட்டு வந்தவன், இரண்டாம் மாதம், ஆறுநாள்களுக்கு ஒருமுறை வெறும் புல், சருகு, இலை இவைகளை மட்டுமே சாப்பிட்டு, மூன்றாம் மாதம், ஒன்பது நாள்களுக்கு ஒருமுறை நீரை மட்டுமே உணவாகக் கொள்ள ஆரம்பித்தான்.

நான்காம் மாதம் காற்றை மட்டுமே உணவாகக் கொள்ளத் தொடங்கியவன், ஐந்தாம் மாதம் அதையும் நிறுத்தி கல்போல இறுகிப்போனான். மகா விஷ்ணுவை மனத்தில் தியானித்து, ஒற்றைக்காலால் நின்றபடி அவன் செய்த உக்கிரமான

தவத்தின் விளைவாக பூமியே நடுங்கியது. தேவர்கள் மூச்சு விடவும் முடியாமல் திணறினார்கள். உக்கிரமான தவத்தின் வெப்பம் அவர்களைச் சுட்டெரித்தது. எல்லோரும் வைகுண் டம் சென்று மகா விஷ்ணுவிடம் முறையிட்டார்கள்.

துருவனின் பெருமையை தேவர்கள் உணரவேண்டும் என்பதற்காகவே காத்திருந்த பெருமான், இதற்கு மேலும் அந்தச் சிறுவனை சோதிக்க விரும்பாமல் துருவனுக்கு முன்பு தோன்றினார்.

இடைவிடாமல் விஷ்ணுவைத் தியானித்துக்கொண்டிருந்த துருவன், அவர் நேரிலேயே வந்திருப்பதை அறியவில்லை.

மகாவிஷ்ணு புன்னகையுடன் தனது கையிலிருந்த சங்கினால் துருவனின் கன்னத்தை வருடினார். 'துருவா! கண் விழித்துப் பார். உன் மகாவிஷ்ணு வந்துவிட்டேன்!' என்றார்.

துருவன், திருமாலின் இனிய குரல் கேட்டு கண் விழித்தான். பகவானின் தரிசனம் கண்டான். மெய் சிலிர்த்துப்போனான். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். நாராயணனை பலவிதமாகத் துதித்துப் பாடினான். 'திருமாலே! நாராயணா! என்றும் எப்போதும் உன்னை மறக்காமல் இருக்கின்ற வரம் தா!' என்று வேண்டினான்.

மகாவிஷ்ணு அவனைக் கொஞ்சி மகிழ்ந்து, 'என் அன்பு பாலகனே! நீ அடைய விரும்புவதை நான் அறிவேன். உன் தந்தை உத்தான பாதன், ராஜ்ஜியத்தை உன்னிடம் ஒப்படைத்து விட்டு காட்டுக்குச் செல்லப்போகிறான். நீ இந்தப் பூமியை இருபத்தாறாயிரம் ஆண்டுகள் நீதிநெறி தவறாமல் ஆண்டு வருவாயாக! அதன்பிறகு, விண்ணுலகில் அழிவில்லாத நித்தியமான ஸ்தானத்தை அடைந்து சிறப்படைவாய்!' என்று வரமளித்து மறைந்தார்.

துருவன் மனத்திருப்தியுடன் நாடு திரும்பினான். அவன் இறைவனை நேரில் தரிசித்துவிட்டு வரும் செய்தி எங்கும் பரவியது. உத்தான பாதனும் துருவனின் தாயும்

சிற்றன்னையும் மற்றுமின்றி, நாட்டு மக்களும்கூட ஒன்று திரண்டுவந்து அவனை வரவேற்றனர்.

தாய் சுநீதி, மகனைத் தழுவிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் விட்டாள். தந்தை உத்தான பாதன் மகனிடம் மன்னிப்புக் கேட்டு அவனை அள்ளிக்கொண்டான். சிற்றன்னை சுருசியும் கூட மனம் திருந்தி துருவனைக் கொஞ்சி மகிழ்ந்தாள். ஆசிகள் கூறினாள். அனைவரும் துருவனைக் கொண்டாடிமகிழ்ந் தனர்.

துருவன் வளர்ந்து வாலிபனானான். அதற்கு மேலும் தாமதிக்க விரும்பாத உத்தான பாதன், துருவனுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்தான். ராஜ்ஜியத்தை அவனிடம் ஒப்படைத்து விட்டு தவம் செய்ய காட்டுக்குப் போனான்.

துருவன், நாட்டை மிக நல்லமுறையில் அரசாண்டான். அவன் சிம்சுமாரன் என்கிற பிரஜாபதியின் மகளான பிரமியை திருமணம் செய்துகொண்டான். அவர்களுக்கு கல்பன், வத்சரன் என்கிற பிள்ளைகள் பிறந்தார்கள். இதற்குப்பிறகு வாயுவின் மகளான 'இளை' என்பவளை மணந்து அவள் மூலம் உத்கலன் என்கிற மகனையும் ஒரு பெண்ணையும் பெற்றான்.

துருவன் மூலம் இப்படியாக வம்சம் விருத்தியாக, துருவனின் தம்பியான உத்தமனோ திருமணம் செய்துகொள்ளாமலே தவிர்த்து வந்தான். வேட்டைப் பிரியம் கொண்டவனான உத்தமன், ஒருநாள் இமயமலைச்சாரலில் வேட்டைக்குச் செல்லும்போது அங்கே ஒரு யட்சனால் கொல்லப்பட்டான். உத்தமனைத் தேடிப்போன அவனுடைய தாய் சுருசியும், மகன் இறந்துபோன துக்கம் தாங்காமல் செத்துப்போனாள்.

இதைக் கேள்விப்பட்ட துருவன் கட்டுக்கடங்காத கோபம் கொண்டான். விண்ணுலகில் யட்சர்களின் நகரமாகிய அளகா புரியின்மேல் படையெடுத்துச் சென்றான். யட்சர்களை போருக்கு அழைத்து, தன்னை எதிர்த்தவர்களை தாக்கி, கொன்றுகுவித்தான்.

யட்சர்கள், துருவனைச் சமாளிக்கமுடியாமல் மாயப்போரில் இறங்கினார்கள். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்துநின்று அஸ்திரங்களை எய்து தாக்குதல் நடத்தினார்கள். துருவன் மகா விஷ்ணுவைத் தியானித்து நாராயணாஸ்திரத்தைத் தொடுத் தான். அதன் அற்புத சக்தியால் மாயைகள் விலகி, யட்சர்கள் கூட்டம் கூட்டமாக மடிந்தார்கள். தப்பித்தவர்கள் பயந்துபோய் ஓடி ஒளிந்தார்கள்.

அப்போது துருவனின் பாட்டனாரான மனு அங்கே தோன்றி, போரை நிறுத்தும்படி துருவனுக்கு ஆணையிட்டார். உத்த மனின் விதி முடிந்துவிட்டது. அதனால், யாரோ ஒரு யட்சன் செய்த தவறுக்காக எல்லா யட்சர்களையும் கொல்வது நியாயம் இல்லை' என்று கூறினார்.

மனுவின் சொற்களால் மனம் சாந்தமடைந்த துருவன், அத்துடன் போரை நிறுத்திக்கொண்டான். யட்சர்களின் தலைவனான குபேரனுடன் சமாதானம் செய்துகொண்டான். மனம் மகிழ்ந்த குபேரன், 'மன்னா, தங்களுக்கு வேண்டும் வரங்களைக் கேளுங்கள்!' என்றான்.

துருவன் அவனிடம், 'குபேரா! அற்ப சுகங்கள் எதுவும் எனக்கு வேண்டாம். எப்போதும் எல்லாக் காலங்களிலும் பகவானை மறவாதிருக்க வரம் தந்தால் நான் மிகவும் மகிழ்வேன்' என்று கேட்க, குபேரன் அப்படியே வரமளித்தான்.

அதன்பின் பூவுலகம் திரும்பி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி நடத்தினான் துருவன். பின் தன் மகன் உத்கலனிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு துறவறம் மேற்கொண்டவன், பத்ரிகாசிரமம் சென்று தவத்தில் மூழ்கி னான்.

ஒருநாள், விண்ணுலகிலிருந்து தங்க விமானம் ஒன்று துருவ னிடம் வந்திறங்கியது. அதிலிருந்து இறங்கிய இருவர், 'நாங்கள் பகவான் நாராயணனிடம் உங்களை அழைத்துப் போக வந்திருக்கிறோம்' என்று சொல்லி, துருவனை

விமானத்தில் ஏற்றிக்கொண்டார்கள். அப்போது வானவர்கள், துருவனை பூத்தூவி வாழ்த்தினார்கள். கந்தர்வர்கள் கானம் பாடினார்கள்.

துருவன் மகா விஷ்ணு அருள்பாலித்தபடி, வான மண்டலங்கள் அத்தனையையும் தாண்டி ஆகாயத்தில் நட்சத்திரமாக மாறிப் பிரகாசித்தான்' என்று சொல்லிமுடித்த சுகர் மகரிஷி, 'மன்னா! துருவ சரித்திரம் மிக அற்புதமானது. இதைக் கேட்டாலோ படித்தாலோ பாராயணம் செய்தாலோ மிகுந்த பலன்கள் உண்டாகும். யார் யாருக்கு என்னென்ன தேவையோ அவைகள் கிட்டும். செய்த பாவங்களுக்கு விமோசனம் கிடைக்கும். எப்போதும் கடவுள் பக்தி மனத்தில் நிலைத்திருக்கும்' என்ற சுகப் பிரம்ம மகரிஷி, 'பரீட்சித்து ராஜனே! இந்த துருவ சரித்திரம் போலவே, அவனுக்குப் பின் வந்த பிருது சக்ரவர்த்தியின் வரலாறும்கூட விசேஷமானதுதான். அதைச் சொல்கிறேன் கேள்!' என்று பாகவதத்தை தொடர்ந்து கூறத் தொடங்கினார்.

***

8

குதிரையைத் திருடிய இந்திரன்!

துருவனுக்குப் பின் அரசாண்ட அவனுடைய மகன் உத்கலன், உலக இன்பங்களில் பற்றில்லாதவனாக ஒரு துறவி போலவே வாழ்க்கை நடத்தினான். அரசு செலுத்துவதில் நாட்டமில்லாதவனாக, சதா சர்வ காலமும் கடவுள் தியானத்திலேயே காலத்தைக் கழித்தான். இதனால், அரச பரிபாலனம் ஸ்தம்பித்துப் போனது.

அரசவையைச் சேர்ந்த பெரியவர்கள் இதைப் பற்றி ஆலோசித்துவிட்டு, உத்கலனுக்குப் பதிலாக துருவனின் மற்றொரு மனைவியான பிரமியின் மகன் வத்சரனை ராஜ்ஜியத்துக்கு மன்னனாக்கினார்கள். அவன் சுவதி என்பவளை மணந்து, தனது வம்சத்தை விருத்தி செய்தான்.

வத்சரனுக்குப் பிறகு, புஷ்பார்ணன், வியுஷ்டன், சர்வதேஜன், சக்ஷுஸ், உல்முகன், அங்கன் என்று ஒவ்வொருவரும் அரசனாகி ஆட்சிபுரிந்தார்கள்.

அங்கன் என்பவன் அரசாண்டபோது அவன் ஒரு அசுவமேத யாகம் செய்தான். ஆனால் யாகத்தில் அளிக்கப்பட்ட அவிர் பாகத்தைப் பெற்றுக்கொள்ள தேவர்கள் எவரும் வரவில்லை. இதனால் மன்னன் அங்கன் மனவேதனையடைந்தான்.

'எந்தக் குறையும் இல்லாமல்தானே யாகத்தை நடத்தினேன்? அப்படியிருக்கும்போது தேவர்கள் ஏன் அவிர்பாகம் பெற்றுக் கொள்ள வரவில்லை? நான் என்ன தவறு செய்தேன்?' என்று யாகத்தை நடத்திவைத்த அந்தணர்களிடம் வருத்தத்துடன் கேட்டான் அங்கன்.

அப்போது அங்கு வந்த மகரிஷி ஒருவர், 'மன்னா! இப்பிறவி யில் நீ எந்தத் தவறும் செய்யவில்லை. யாகத்திலும் எந்தக் குறையுமில்லை. ஆனால், முன் ஜென்மத்தில் நீ செய்த பாவத்தின் விளைவாக இப்பிறவியில் உனக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. அப்படி உனக்கு சந்ததி இல்லாததால்தான் தேவர்கள் அவிர்பாகம் பெற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்' என்று கூறினார்.

இதனால் மனம் கலங்கிப்போன அங்கன், 'ஸ்வாமி! இப்போது நான் என்ன செய்யவேண்டும்?' என்று மகரிஷியிடம் கேட் டான்.

'முதலில், நீ உன் வம்ச விருத்திக்காக புத்திர காமேஷ்டி யாகம் செய். அதன் பலனாக சந்ததி பெருகும். அதன்பிறகு நீ யாகத் தைச் செய்தால், தேவர்கள் வந்து அவிர்பாகத்தை ஏற்றுக் கொள்வார்கள்' என்று வழி கூறினார்.

அங்கன் உடனடியாக புத்திரகாமேஷ்டி யாகம் செய்தான். சிறந்த முறையில் செய்யப்பட்ட அந்த யாகத்தின்போது, யாக குண்டத்திலிருந்து கையில் தங்கப் பாத்திரத்துடன் ஒரு தேவ புருஷன் வெளிப்பட்டான். அங்கனிடம் அந்தப் பாத்திரத்தைக்

கொடுத்து, 'இந்தப் பாத்திரத்திலிருக்கும் பாயசத்தை உன் மனைவிடம் கொடு!' என்று சொல்லிவிட்டு மறைந்து போனான்.

பாயசத்தைப் பருகிய அங்கனின் மனைவி, விரைவிலேயே கர்ப்பவதியாகி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அங்கன் அந்தக் குழந்தைக்கு 'வேனன்' என்று பெயர் சூட்டி, மிகுந்த பாசத்துடன் வளர்த்தான். ஆனால், அந்தப் பிள்ளையோ மிகுந்த துஷ்டனாக கொடுமைக்காரனாக வளர்ந்தான்.

சிறுவயதிலேயே மிருகங்களை சித்ரவதை செய்து கொல் வதும், சக சிறுவர்களை வதைப்பதும், குழந்தைகளின் கழுத் தைத் திருகிக்கொல்வதுமாக பல கொடூரச்செயல்களைச் செய்தான்.

இதனால் மனம் பதறிய அங்கன், மகன் வேனனைத் திருத்த பலவிதங்களிலும் முயற்சித்தான். அவனை நல்வழிப்படுத்த படாத பாடுபட்டான். ஆனால், அதில் தோல்வியே அடைந் தான். தன் முயற்சிகள் எதுவுமே பலனளிக்காததால் மனம் விரக்தியடைந்த அங்கன், ஒருநாள் இரவு யாரிடமும் சொல் லாமல் ராஜ்ஜியத்தைத் துறந்து கானகத்துக்குச் சென்று விட்டான்.

அரசன் காணாமல் போனதை அறிந்த மந்திரி பிரதானிகள் அதிர்ந்துபோனார்கள்!

அரசன் இல்லாமல் இருக்கும் ராஜ்ஜியம் அபாயகரமானது. நாட்டுக்குள் தீயவர்களின் கை மேலோங்கி அவர்கள் அக் கிரமம் செய்யத் துணிந்துவிடுவார்கள். இவர்களிடம், அப்பாவி மக்கள் சிக்கிக்கொண்டு துன்பப்படுவார்கள். அதுமட்டுமல்ல! எதிரி நாட்டு அரசர்களும் படையெடுத்து வந்து ராஜ்ஜியத்தை அபகரிக்க முயலுவார்கள்.

இதையெல்லாம் எண்ணிப்பார்த்த அமைச்சர்கள், தீயவன் என்று தெரிந்தும் வேறுவழியில்லாமல் அங்கனின் மகன்

வேனனை ராஜ்ஜியத்துக்கு அரசனாக்கினார்கள். அதனா லேயே பின்னாளில் வேதனைப்பட்டார்கள்.

சுபாவத்திலேயே கொடியவனான வேனனின் அட்டகாசம், அவன் மன்னனாகிய பிறகு மேலும் அதிகரித்தது. நாட்டை ஆளும் மமதையால், அவன் தன்னைக் கடவுளாகவே பாவித்துக்கொண்டான்.

நாட்டில் யாகம், ஹோமம், தானம், தவம் எவையும் நடை பெறக் கூடாது என்று கட்டளையிட்டான். அதைமீறி யாகங் கள் செய்ய முற்பட்ட ரிஷிகளையும் முனிவர்களையும் சிறையில் அடைத்து சித்ரவதை செய்தான். அடிபணி யாதவர்களை கொஞ்சமும் கருணையில்லாமல் கொன் றான்.

இதையெல்லாம் பார்த்த மகரிஷிகள் பதறிப்போனார்கள். அனைவரும் ஒன்றுதிரண்டு மன்னனிடம் சென்றார்கள். கடவுளைத் துதிப்பதற்கும் யாகங்கள் செய்வதற்கும் அனுமதி கேட்டு கெஞ்சினார்கள். இவர்கள் எல்லோருமே தவத்தில் சிறந்த வல்லமை பெற்ற முனிவர்கள்.

இவர்களின் சக்தியை உணராத வேனன், ஆணவமாகச் சிரித்த படி, 'மன்னன் என்பவன் கடவுளின் அம்சம்தானே! எனவே, நேரிடையாக தரிசனம் தரும் என்னைப் பூஜிக்காமல் எதற்கு கண்ணுக்குத் தெரியாத கடவுளைத் துதிக்கிறீர்கள்? கேட்டுக் கொள்ளுங்கள். இனி, நானே கடவுள்! நான் மட்டும்தான் கடவுள்! எனவே, ராஜ்ஜியத்தில் உள்ள அனைத்துக் கோயில் களையும் இடித்துவிட்டு எனக்குக் கோயில் கட்டுங்கள். என்னை ஆராதித்தே வேள்விகளும் வழிபாடும் நடக்கட்டும்' என்றான்.

ஆணவத்தின் உச்சத்தில் அவன் பேசியதைக் கேட்ட பிருகு முதலான மகரிஷிகள் அளவில்லாத கோபம் அடைந்தார்கள். அவர்களின் கோபத்தினால் ஏற்பட்ட பெருமூச்சு அக்னியாக மாறி, நொடியில் வேனனைக் கொன்றது.

முன்பு, அங்கன் ராஜ்ஜியத்தைத் துறந்து சென்றபோது அமைச்சர்கள் எதை நினைத்து பயந்தார்களோ அது இப்போது நடந்தது!

வேனன் இறந்துபோய் ராஜ்ஜியத்தை ஆள அரசன் இல்லாத தால், நாட்டில் அதர்மம் தலைவிரித்தாடியது. கொலையும் கொள்ளைகளும் சர்வ சாதாரணமாக நடைபெற்றன. திருடர் களாலும் கொலைகாரர்களாலும் மக்கள் துன்பமடைந்தார்கள்.

இதைக்கண்ட ரிஷிகள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். வேனனின் வம்சம் அவனுடன் முடிந்துபோகாமல் தொடரவைக்கத் தீர்மானித்தார்கள்.

இறந்துபோன வேனனின் தொடையைக் கடைந்தார்கள். அதிலிருந்து கோரமான உருவமுடைய ஒருவன் தோன்றி னான். வேனன் செய்த பாவங்களின் மொத்த உருவமாகத் தோன்றிய அவனால், நாட்டுக்கு நன்மையேற்படாது என்ப தால் முனிவர்கள் அவனை, 'நிஷித' (விலகி இரு) என்றார்கள். அவனுடைய வம்சத்தில் வந்தவர்களே நிஷாதர்கள் என்றழைக்கப்பட்ட வேடர்கள். இவர்கள் ராஜ்ஜியத்தை விட்டு விலகி காட்டுக்குள்ளேயே இருந்துகொண்டார்கள்.

பிறகு முனிவர்கள், வேனனுடைய புஜங்களைக் கடைந் தார்கள். அதிலிருந்து, ஓர் ஆணும் பெண்ணும் தோன்றி னார்கள். அவர்கள் மகாவிஷ்ணுவின் அம்சமாகத் தோன்றிய வர்கள் என்பதால், ஆணுக்கு 'பிருது' என்றும் பெண்ணுக்கு 'அர்ச்சி' என்றும் பெயர் சூட்டினார்கள்.

பின், பிருதுவுக்கு அர்ச்சியைத் திருமணம் செய்துவைத்து பட்டாபிஷேகம் நடத்தினார்கள். அந்த விழா மிகுந்த கோலா கலமாக நடந்தது. வானவர்கள் பூமாரி பொழிய, கந்தர்வர்கள் கானம் பாட, அப்சரஸ்கள் நடனமாடினார்கள். தேவர்கள் வெகுமதிகளைக் கொண்டுவந்து குவித்தார்கள்.

பிருது, வந்திருந்தவர்கள் அனைவருக்கும் நன்றிகூறி வணங்கி, வாழ்த்துகளைப் பெற்றுக்கொண்டு நாட்டை ஆளத்தொடங்கி னான்.

பிருது பூவுலகத்தை ஆளத் தொடங்கியபோது, பசியும் பஞ்சமும் பட்டினியுமாக மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருந் தனர். பூமியில் விளைச்சலே இல்லாமல் இருந்தது.

இதைக்கண்ட பிருது, மனம் வருந்தினான். என்ன காரணம் என்று அவன் ஆராயத் தொடங்கியபோது, பூமாதேவியே இதற்குக் காரணம் என்று அறிந்துகொண்டான். அனைத்து வகை தானியங்களையும் விதைகளையும் அவள் தனக் குள்ளேயே வைத்துக்கொண்டதால்தான் பூமியில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்று தெரிந்துகொண்ட பிருது, அளவில்லாத ஆத்திரம் அடைந்தான்.

பூமாதேவியைத் தண்டிப்பதற்காக வில்லில் அம்பைத் தொடுத்து, அவளை தாக்க முற்பட்டான்.

பூமாதேவி பயந்துபோய் ஒரு பசுவாக மாறி ஓடத்தொடங்கி னாள். பிருது, அவளைத் துரத்திச்சென்று பிடித்தான்.

பூமாதேவி நடுக்கத்துடன், 'பிருது மகாராஜாவே! ஒரு பெண் ணைப்போய் கொல்ல நினைக்கிறாயே! இது நியாயமா?' என்றாள்.

'மக்களுக்குக் கெடுதல் செய்ய நினைப்பவர்களைத் தண்டிப் பதே மன்னனின் கடமை! யாகங்கள் செய்யப்படும்போது அளிக்கப்படும் அவிர்பாகத்தைப் பெற்றுக்கொண்டு, பிரம்மன் அளித்த தானிய வகைகளைத் தராமல் பதுக்கிக்கொள்கிறாயே! நீ செய்வது மட்டும் நியாயமா? ஏன் இப்படி மக்களை வதைக்கிறாய்?' என்று கேட்டான் பிருது.

முன்பு வராக அவதாரம் எடுத்து தன்னைக் காப்பாற்றிய மகா விஷ்ணுவின் அம்சமே பிருது மன்னன் என்பதைப் புரிந்து கொண்ட பூமாதேவி, பிருதுவிடம் பணிவுடன் கூறினாள்.

'ராஜனே! பூமியில் நீண்ட நாள்களாக பூஜைகள் யாகங்கள் நடைபெறாமல் போனதாலேயே விளைச்சலை வெளியிடா மல் அடக்கிக்கொண்டேன். நெடுநாள்களாக அவை எனக்குள்ளேயே அடங்கிவிட்டதால் மொத்தமும் ஜீரணமாகி விட்டன. பகவானின் அம்சமாகிய உன்னால், முடிந்தால் எனக்குள்ளிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்!'

பிருது சில நொடிகள் யோசித்தான். பின் தனது மூத்தோரான சுவாயம்புவ மனுவைக் கன்றாக்கி, தன்னையே மாடு கறப்பனாக மாற்றிக்கொண்டு பூமியாகிய பசுவிடமிருந்து புல், பூண்டு, மூலிகைகள், தானியங்கள், விதைகள் போன்ற மக்களுக்குத் தேவையான அனைத்து விளைச்சலையும் கறந்து கொண்டான்.

பிருதுவைப்போலவே மற்ற தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும்கூட, பூமாதேவியிடமிருந்து தங்களுக்குத் தேவை யான ஞானத்தையும் அமிர்தத்தையும் மது போன்றவை களையும் கறந்துகொண்டனர்.

அரசனான பிருது, பூமியை தனது மகளாகவே ஏற்றுக் கொண்டான். அதனாலேயே பூமிக்கு, 'பிருத்வி' என்று பெயர் ஏற்பட்டது. மலைகளையும் சிகரங்களையும் தகர்த்துச் சம மாக்கி, நிலங்களைச் சமப்படுத்தினான். பயிர்கள் செழிப்பாக வளரும்படி செய்தான். நாடு, நகரங்கள், கிராமங்களை நிர்மா ணித்தான். குடிமக்கள் சந்தோஷமாக சுபிட்சமாக வாழும்படி பார்த்துக்கொண்டான்.

இதன்பின் பிருது மன்னன், பூவுலகின் சக்ரவர்த்தியாக அசுவமேத யாகம் செய்ய நிச்சயித்தான். அதுவும் ஒன்றல்ல, இரண்டல்ல! நூறு அசுவமேத யாகங்கள் செய்யத் தீர்மானித்து ஏற்பாடுகள் செய்தான். அதற்கு மூவுலகங்களிலிருந்தும், அந்தணர்களும் ரிஷிகளும் முனிவர்களும் வந்து குவிந்தனர். யாகத்துக்கு பிரம்மா, விஷ்ணு, சிவன் என மும்மூர்த்திகளும் வந்து கலந்துகொண்டனர். ஒன்றன்பின் ஒன்றாக யாகங்கள் குறைவின்றி நடைபெறத் தொடங்கின.

தேவலோகத்தின் அதிபதியான இந்திரன் இதைக்கண்டு மனத்துக்குள் பயந்துபோனான். அசுவமேத யாகங்கள் செய்து

முடித்து, பிருது சக்ரவர்த்தி தனது இந்திரப் பதவியை அடைந்து விடுவானோ என்று நடுங்கினான். யாகம் நடைபெறாமல் தடுக்கத் திட்டமிட்டான்.

யாகம் நடந்துகொண்டிருந்தபோது, யாருக்கும் தெரியாமல் யாகக் குதிரையை திருடிச்சென்று மறைத்துவிட்டான். இதைப் பார்த்துவிட்ட அத்ரி மகரிஷி, பிருதுவின் மகனான விஜிதாஸ் வனிடம் குதிரையை மீட்டுவருமாறு சொல்லி அனுப்பினார்.

விஜிதாஸ்வனிடமிருந்து தப்பிப்பதற்காக, இந்திரன் துறவி வேடமிட்டு ஆகாயத்தில் சென்றான். முதலில் ஏமாந்து போனாலும், பிறகு துறவி வேடத்தில் இருப்பது இந்திரனே என்று கண்டு கொண்ட விஜிதாஸ்வன் அவனை துரத்திப் பிடித்தான்.

சிக்கிக்கொண்ட இந்திரன் வேறுவழியில்லாமல் அப்போ தைக்கு குதிரையைக் கொடுத்துவிட்டுச் சென்றான். ஆனால், முயற்சியை கைவிடாமல் மீண்டும் குதிரையைத் திருடிக் கொண்டு போய்விட்டான்.

இந்திரனுடைய இந்த அற்பமான செயலினால் பிருது மகா கோபம் கொண்டான். 'நானே சென்று அந்த இந்திரனைக் கொன்று குதிரையை மீட்டுவருகிறேன்' என்று ஆவேசத் துடன் புறப்பட்டான்.

ரிஷிகள், பிருதுவைச் சமாதானப்படுத்தினார்கள்.

'மன்னா! யாகத்துக்குத் தீட்சை எடுத்த நீ, இங்கிருந்து போகக் கூடாது. அதுமட்டுமில்லாமல், யாகப் பசுவைத் தவிர வேறெந்த ஜீவனையும் கொல்லவும் கூடாது. இந்திரனை எங்களிடம் விட்டுவிடு. மந்திரங்களை உச்சரித்து இந்திரனை தானாகவே இங்கு வரவழைத்து, யாக குண்டத்தில் பலியாக்கி விடுகிறோம்!' என்று கூறினார்கள்.

அப்போது பிரம்மன் அவர்களைத் தடுத்தார்.

'யாகங்களில் அவிர்பாகம் பெற்றுக்கொள்ளும் தேவர்களின் அதிபதியாகிய இந்திரனைக் கொல்லமுற்படுவது சரியல்ல! தொண்ணூற்றியொன்பது யாகங்களைச் செய்தபோதே பிருது, இந்திரனை விடவும் புகழ் பெற்றுவிட்டான். எனவே, அவன் நூறாவது யாகத்தைச் செய்யவேண்டிய அவசியமில்லை' என்றார்.

பின் பிருதுவிடம் திரும்பி, 'ராஜனே! தன்னுடைய தேவேந்திர பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்கிற பயத்தினா லேயே இந்திரன் இப்படியொரு தவறைச் செய்துவிட்டான். நீயும் இந்திரனும், இருவருமே விஷ்ணுவின் அம்சம் கொண்ட வர்கள்தான். எனவே, இந்திரனை மன்னித்துவிடு' என்று அறிவுறுத்தினார்.

பின்னர், பிருது தனது தொண்ணூற்றியொன்பதாவது யாகத்தை மகா விஷ்ணுவின் முன்னிலையில் பூர்த்தி செய் தான். அந்த யாகத்துக்கு இந்திரனும் வந்திருந்து வாழ்த்தினான்.

மகா விஷ்ணு பிருதுவை ஆசீர்வதித்து, 'பிருது! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள். தருகிறேன்!' என்றார்.

பிருது அவரை வலம் வந்து வணங்கி, 'பகவானே! எப்போதும் உம்மையே நினைத்து, உங்களையே துதித்து, உங்களையே பாடி, உங்கள் புகழையே கேட்டு பரவசமாகவேண்டும் பகவானே!' என்று கேட்டான்.

'அப்படியே ஆகட்டும்! நீண்ட நெடுங்காலங்கள் நீ இப் புவியை தர்மம் தவறாமல் ஆண்டு, இறுதியாக எம்மை வந்து சேர்வாய்' என்று அருளினார்.

அதன்படியே, பிருது பகவத் பக்தி நிறைந்தவனாகவே நீண்ட காலங்கள் பூவுலகத்தை அரசாண்டான். முதுமையில் தனது மகன்களிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு கானகம் சென்றான். அங்கு தவம் செய்து, இறுதியாக பகவானின் பாதகமலங்களைச் சென்றடைந்தான்' என்று சுகர் மகரிஷி

சொல்ல, மனத்தூய்மையுடன் கண்கள் கசிய கேட்டுக் கொண் டிருந்தான் பரீட்சித்.

'மகரிஷி! நான் எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ தெரியவில்லை. இன்று தங்கள் திருவாக்கினால் இப்புண்ணிய கதையைக் கேட்கும் பாக்கியம் பெற்றவனானேன். அந்த இறைவனுக்கும் புண்ணிய சீலரான தங்களுக்கும் மிக்க நன்றி. தொடர்ந்து சொல்லுங்கள் ஸ்வாமி!' என்றான்.

***

9

சிவன் உபதேசித்த விஷ்ணு ஸ்தோத்திரம்

பிருது சக்ரவர்த்திக்குப் பிறகு, அவனுடைய மகன் விஜிதாஸ்வன் பட்டத்துக்கு வந்தான். அவன் தன் மற்ற சகோதரர்களான தன்வகேசன், திரவிணன், ஹர்யக்ஷன், விருகன் என்கிற நால்வருக்கும் நான்கு திக்கு களைப் பங்கிட்டுக் கொடுத்து பூவுலகத்தை ஆண்டான்.

பின், விஜிதாஸ்வனின் மகனான அவிர்த் தானன் பட்டத்துக்கு வந்தான். இவனுக்குப் பிறகு அவிர்த்தானனின் ஆறு மகன்களில் ஒருவனான பர்ஹிஷத் அரசனானான்.

பர்ஹிஷத், சமுத்திர ராஜனின் மகளாகிய சதக்ருசி என்பவளை திருமணம் செய்துகொண்டான்.

இவர்களுக்கு பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் 'பிரசேதஸர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

பர்ஹிஷத் தன்னுடைய பத்துப் பிள்ளைகளையும் அழைத்து, 'எல்லோரும் மக்களைப் பெற்று வம்சத்தைப் பெருக்குங்கள்' என்று சொல்ல, அவர்கள் இல்லறத்தைத் தொடங்கும் முன் பாக இறைவனைத் தரிசித்து அவன் அருளைப்பெற ஆசைப் பட்டார்கள்.

அனைவரும் தவம் செய்வதற்காக ஒரு சிறந்த இடத்தை தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். ஓரிடத்தில் அற்புதமான ஏரியொன் றைக் கண்டார்கள். ஏரியை நெருங்கியபோது, அங்கே இனிமையான இசை ஒலித்துக்கொண்டிருந்தது. ஏராளமான கந்தர்வர்கள் பலவகையான வாத்தியங்களை இசைத்துக் கொண்டு கானம் பாடிக்கொண்டிருந்தார்கள்.

இசையில் மனம் லயித்தபடி பிரசேதஸர்கள் நின்று கொண் டிருக்க, குபீரென்று ஓர் ஒளிவெள்ளம் ஏரிக்குள்ளிருந்து வெளிப்பட்டது. முக்கண்ணனாகிய பரமசிவன் ஏரிக்குள் ளிருந்து வெளியே வந்து பிரசேதஸர்களை நெருங்கினார்.

'பிரசேதஸர்களே! நீங்கள் ஹரியின் பக்தர்கள் என்பதை நான் அறிவேன். எனவே, பகவான் மகா விஷ்ணுவைப் பூஜிப்பதற் காக உங்களுக்கு ஒரு ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறேன். கேட்டுக்கொள்ளுங்கள். இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்பவர் களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகி அவர்களின் தூய விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்' என்று சொல்லி, விஷ்ணுவின் பெருமைகளைப் போற்றித் துதிக்கும் 'ருத்ர கீதத்தை' அவர்களுக்கு உபதேசித்தார்.

'நான் விஷ்ணுவைக் குறித்து பாடியதனால் 'ருத்ரகீதம்' என்று வழங்கப்படுகிற இந்த யோகாதேசத்தை, பகவான் விஷ்ணுவே சிருஷ்டித் தொழிலுக்கு உதவியாக எனக்கும் பிரம்மாவுக்கும் போதித்தார். இதை விடியற்காலையில் ஜெபிப்பவனுக்கு எல்லா பாவங்களும் விலகும். நீங்களும் பயபக்தியுடன் ஜெபம்

செய்யுங்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்' என்று சொல்லி மறைந்தார்.

பிரசேதஸர்கள் இந்த யோகாதேசத்தை பதினாறாயிரம் ஆண்டுகள் நீரில் நின்றபடி தூய மனத்துடன் பகவான் விஷ்ணுவை நினைத்து இடைவிடாமல் ஜெபித்து வந்தார்கள். அவர்களின் உறுதியான பக்தியைக் கண்டு மகிழ்ந்த மகா விஷ்ணு, கருடன் மீதேறி வந்து அவர்களுக்குக் காட்சி கொடுத் தார்.

'பிரசேதஸர்களே! சகோதரர்கள் பத்துபேரும் மிக ஒற்றுமை யாக மன உறுதியுடன் செய்த தவத்தைப் பாராட்டுகிறேன். சிவன் உங்களுக்கு உபதேசித்த இந்த ருத்ரகீதத்தை ஜெபிப் பவர்கள், தூய உள்ளத்தையும் விரும்பியதை அடையவும் செய்வார்கள்' என்று கூறினார்.

பின் பிரசேதஸர்களிடம், 'கண்டு எனும் முனிவருக்கும் ஒரு தேவலோக மங்கைக்கும் பிறந்தவள் பிரம்மலோசா. அவளின் தாய், குழந்தையைப் பெற்றதுமே கைவிட்டு விண்ணுலகம் சென்றுவிட்டாள். அதன்பின் மரங்களின் தேவதைகள்தான் பிரம்மலோசாவை எடுத்து 'மாரீஷை' என்று பெயர் சூட்டி வளர்த்தனர். அக்குழந்தையின் அழகைக் கண்டு மகிழ்ந்த சந்திரன், அவள் உண்பதற்காக அமிர்தத்தையே கொடுத்தான். நீங்கள், பேரழகியான அவளை மணந்துகொள்ளுங்கள். அவள் மூலம் உங்களுக்கு பிரம்மதேவனைப் போன்ற ஒரு மகன் பிறப்பான். அவனால் உங்கள் வம்சம் மேலும் தழைக்கும். நீங்கள் நெடுங்காலம் பூவுலகை ஆண்டு அதன் பின் என்னை வந்து அடைவீர்கள்' என்று அருள்புரிந்தார்.

பகவான் சொன்னபடியே பிரசேதஸர்கள் மாரீஷையை மணந்துகொண்டார்கள். இவர்களுக்கு தட்சன் என்பவன் பிறந்தான். முன்பு ஸதிதேவியின் தகப்பனாக இருந்து ருத்ர னால் கொல்லப்பட்ட அதே தட்சன்தான், இப்போதும் தட்சனாகப் பிறந்திருந்தான்.

பிரசேதஸர்கள் அதன்பின் பத்து லட்சம் ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்தார்கள். இறுதியாக நாரதரிடம் உபதேசம் பெற்று, பகவானைத் துதித்து தவம் செய்து அவரின் திருவடியை அடைந்தார்கள்' என்று பரீட்சித்துவிடம் கூறிய சுக மகரிஷி, 'மன்னா! நீ கேட்டபடி சுவாயம்புவ மனுவின் மகன்களுள் ஒருவனான உத்தான பாதனின் வம்சத்தைப்பற்றிக் கூறினேன். அடுத்ததாக உத்தான பாதனின் சகோதரனான பிரியவரதனின் வம்சத்தைப்பற்றிக் கூறுகிறேன், கேள்' என்றார்.

'சுவாயம்புவ மனுவின் மூத்த மகனான பிரியவரதனுக்கு உலக இன்பங்களில் கொஞ்சமும் நாட்டமில்லை. அதனாலேயே நாராயணனின் பரம பக்தனாகிய பிரியவரதன், தந்தை ராஜ்ஜியத்தைக் கொடுத்தபோதும் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டான். சதா சர்வ காலமும் கடவுளைத் துதித்து வழி படுவதையே வாழ்க்கையாகக் கழித்து வந்தான்.

ஒருமுறை பிரம்ம தேவன் பிரியவரதனை அழைத்து, 'பிரிய வரதா! உலக இன்பங்களைத் துறந்து இந்திரியங்களை வென்ற நீ, இல்லறத்தில் ஈடுபட்டால் பகவத் பக்தி குறைந்துவிடும் என்று எண்ணுகிறாய். அது தவறு! இல்லறத்தில் இருப்பது துறவறத்தைக் காட்டிலும் மேலானது. இல்லறத்தில் இருந்து கொண்டும் மனத்தில் பற்றில்லாதவனாக இருந்தால், கடவுள் சிந்தனை எப்போதும் இருக்கும். எனவே, விரைவில் திருமணம் செய்துகொண்டு வம்சத்தை விருத்தி செய்!' என்று அறிவுரை கூறினார்.

பிரம்மாவின் புத்திமதிப்படி பிரியவரதன் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தான். அவனுக்கு, தேவலோகச் சிற்பியான விஸ்வகர்மாவின் மகளான பர்ஹிஷ்மதியை மனைவியாக நிச்சயித்து மணம் செய்துவைத்தார்கள்.

பிரியவரதன் - பர்ஹிஷ்மதி தம்பதிக்கு ஊர்ஜஸ்மதி என்கிற பெண்ணும், பத்துப் பிள்ளைகளும் பிறந்தார்கள். இது தவிர பிரியவரதன், தான் இரண்டாவதாக மணந்துகொண்ட மனைவிமூலம் மேலும் மூன்று பிள்ளைகளை அடைந்தான்.

பிரியவரதனின் மகளாகிய ஊர்ஜஸ்மதி, அசுரர்களின் குலகுரு வான சுக்ராச்சாரியாரை மணந்துகொண்டு தேவயானி என்னும் மகளைப் பெற்றாள்.

பிரியவரதன் பிள்ளைகளில் மூவர் ரிஷிகளாகி விட, மற்ற வர்கள் தந்தை பிரித்துக்கொடுத்த இடங்களைப் பரிபாலித்து அரசு நடத்தினார்கள்.

பிரியவரதன் இறுதியாக பகவானை நோக்கித் தவமிருந்து முக்தியடைந்தான்.

பிரியவரதனின் மகன்களுள் ஒருவனான ஆக்னீதரன் என்பவன் ஜம்பூத்வீபத்தை ஆண்டுவந்தான். இவன் தனக்கு நற்குணங்கள் கொண்ட மகன் ஒருவன் பிறக்கவேண்டும் என்று பிரம்மனை நோக்கித் தவமிருந்தான்.

மகன் பிறக்கவேண்டுமானால் மனைவி ஒருத்தி வேண்டு மல்லவா? பிரம்மா, பூர்வசித்தி என்கிற தேவலோக மங்கையை அக்னீதரன் தவம் செய்துகொண்டிருந்த இடத் துக்கு அனுப்பிவைத்தார்.

அழகிய பெண்ணான பூர்வசித்தி, ஆக்னீதரன் இடத்துக்கு வந்து கால் சலங்கைகள் சப்தமிட அவன் கண்களில் படுமாறு உலவினாள். கண் திறந்து பார்த்த அக்னீதரன் பூர்வசித்தியைக் கண்டான். கண்டதுமே அளவில்லாத காதல் கொண்டான். அவளை மணந்துகொண்டு பல்லாயிரம் ஆண்டுகள் சந்தோஷ மாகக் குடும்பம் நடத்தினான்.

இவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர். ஆக்னீதரன் தனது ராஜ்ஜியத்தை ஒன்பது பகுதிகளாகப் பிரித்து ஒன்பது மகன்களையும் அரசர்களாக்கினான்.

கடமை முடிந்ததால் பூர்வசித்தி விண்ணுலகம் சென்றாள். அவளின் பிரிவைத் தாங்கமுடியாத ஆக்னீதரன் துயரம் கொண்டவனாகி விரைவிலேயே இறந்துபோனான். ஆக்னீதர னின் ஒன்பது பிள்ளைகளும் மேரு பர்வதனின் ஒன்பது மகள்களை மணந்துகொண்டனர்.

ஆக்னீதரனின் முதல் மகனான நாபி, மேரு பர்வதனின் மகள் மேரு தேவியை மணந்துகொண்டிருந்தான். இவர்களுக்கு நீண்ட வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் கிடைக்க வில்லை. தனக்கு வாரிசு இல்லையே என்கிற குறை, நாபியின் மனத்தை வாட்டியது.

நாபி, பகவான் விஷ்ணுவைப் பிரார்த்தித்து மனைவியுடன் சேர்ந்து யாகங்கள் செய்தான். இதனால் மனம் மகிழ்ந்த திருமால், யாக குண்டத்தில் தோன்றி அவர்கள்முன் காட்சி யளித்தார். அப்போது யாகத்தை நடத்திவைத்த முனிவர்கள், பகவான் நாராயணனை வணங்கித் துதித்து, 'பகவானே! எங்களின் மன்னன் நாபிக்கு தங்களைப் போன்ற திருமகன் பிறக்கவேண்டும்' என்று வேண்டினார்கள்.

'வேதியர்களே! நீங்கள் கோரியபடி, நாபிக்கு நானே மகனாகப் பிறப்பேன்' என்று சொல்லி அருள்பாலித்து மறைந்தார் மகாவிஷ்ணு.

பகவான் வாக்களித்தபடியே, நாபியின் மனைவியாகிய மேருதேவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். நாபி, மனம் மகிழ்ந்து போனான். குழந்தைக்கு 'ரிஷபன்' என்று பெயரிட்டு சீரும் சிறப்புமாக வளர்த்தான். ரிஷபன், குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபனாகி தந்தைக்குப்பின் அரசாட்சியை ஏற்றுக்கொண்டான்.

ரிஷபன், இறைவனின் அம்சமானதால் அவனுடைய தேசம் சுபிட்சமாக இருந்தது. குடிமக்கள் எந்தக் குறையும் இல்லாமல் சந்தோஷமாக வாழ்ந்தனர். ரிஷபனின் புகழ் எங்கும் பரவியது. எல்லோரும் அவனைக் கொண்டாடினார்கள்.

மூவுலகங்களில் உள்ளவர்களும் ரிஷபனைப் பாராட்டியதால், இந்திரன் அவன்மீது பொறாமை கொண்டான். ரிஷபனின் நாட்டில் மழை பெய்யாதபடி செய்தான். பகவானின் சொரூப மாகிய ரிஷபனுக்கு இது தெரியாமல் போகுமா என்ன? அவன் தனது சக்தியினால் ராஜ்ஜியத்தில் மழை பொழியச்செய்து

தேசத்தைச் செழிப்பாக்கி இந்திரனின் கர்வத்தை அடக்கி னான்.

இந்திரன், ரிஷபனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தனது மகள் ஜயந்தியை ரிஷபனுக்குத் திருமணம் செய்து தந்தான். ரிஷபன்-ஜயந்தி தம்பதிக்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் மூத்த மகன்தான் பரதன். முதிய பருவம் அடைந் ததும் மகன் பரதனிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்த ரிஷபன், காட்டுக்குச் சென்று துறவறம் மேற்கொண்டான். முக்தி பெற்றான்.

ரிஷபனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த பரதனின் கதை, ஒரு மனிதன் ஆசாபாசங்களில் சிக்கிக்கொள்வதால் அவனுடைய பிறவியையே அது எப்படி ஆட்டிப்படைக்கிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம். பாவம்! ஒரு விலங்கின்மீது கொண்ட பாசம்தான் அவனை எப்படியெல்லாம் அலைக்கழித்து விட்டது!

***

அழகிய மானும், ஆசாபாசமும்

பரதன் ஆண்ட பாரத தேசம் எல்லா வளங்களும் பெற்று, நீர் நிலைகள் பெருகி மக்களுக்குச் சிறு குறைவும் ஏற்படாமல் சொர்க்கலோகம் போலவே திகழ்ந்தது.

நீதிநெறி தவறாமல் ஆட்சி செய்த பரதன், விஸ்வரூபன் என்பவனின் மகளான பஞ்சஜனியை மணந்து ஐந்து பிள்ளைகளை அடைந்தான். பின் பல ஆண்டுகள் ராஜ்ஜியத்தை நல்லபடியாக அரசாண்ட பரதன், இறுதியாக தன் கடைசி நாள்களில் கடவுள் சிந்தனையுடன் காலம் கழித்து மோட்சம் பெற ஆசைப்பட்டான்.

நாடு, அரசாட்சி, அரண்மனை, செல்வ சுகங்கள், ஆசை மனைவி, பாசத்துக்குரிய மகன்கள் என்று

எல்லா பற்றுகளையும் அறுத்துவிட்டு, தன் மகன்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு கானகம் சென்றான்.

கண்டகி நதிக்கரைக்குச் சென்றவன் அங்கிருந்த புலஹர் என்பவரின் ஆசிரமத்தில் தங்கினான். அங்கிருந்தபடியே பகவத் தியானத்தில் ஈடுபட்டான்.

சொந்த பந்தங்கள், ஆசாபாசங்கள் என அனைத்தையும் உதறி எறிந்துவிட்டு வந்தவனின் வாழ்க்கையில், விதி வசீகரமாக விளையாடியது!

ஒருநாள் பரதன் நதியில் குளித்துக்கொண்டிருக்கும்போது, கர்ப்பிணியான பெண்மான் ஒன்று அங்கே வந்தது. நதியில் தண்ணீர் பருகி தாகத்தைத் தீர்த்துக்கொண்டது. அப்போது திடீரென்று ஒரு சிங்கத்தின் கர்ஜனை கேட்க, அதைக்கேட்டு மிரண்டுபோன மான் தப்பியோடுவதற்காக தாவிக் குதித்தது. தவறிப்போய் ஆற்றில் விழுந்தது. அது பயந்து தாவும்போது, அதன் வயிற்றிலிருந்த குட்டி பிரசவமாகி வெளியே கரையில் வந்து விழுந்தது. தண்ணீரில் விழுந்த தாய் மான் தத்தளித்தது. நீந்த முடியாமல் மூழ்கி, செத்துப்போனது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த பரதன் மனம் வேதனையடைந்தான். தாயை இழந்த மான் குட்டி பசியுடன் அல்லாடுவதைக் கண்டு துயரம் கொண்டான். அதைத் தானே வளர்க்க முடிவெடுத்து தூக்கிக்கொண்டான். ஆசிரமத்துக்கு அழைத்துப்போய் அன்புடன் அதை பராமரிக்கத் தொடங்கினான்.

மான் குட்டியின் அழகும் துள்ளலும் துடிப்பும் பரதனின் மனத்தை மிகவும் கவர்ந்தது. அதை மிகவும் பாசத்துடன் பராமரித்தான். நாளடைவில் பரதன் மான் குட்டியின்மீது அளவுகடந்த பிரியம் கொண்டான். அதைக் குளிப்பாட்டுவது, உணவிடுவது, கொஞ்சி விளையாடுவது என்று நாள் முழுவதையும் அதிலேயே செலவிட்டான். எங்கும் எப்போதும் மான் குட்டியைத் தூக்கிக்கொண்டே அலைந்தான். இதனால்,

அவன் கடவுளைத் தியானிப்பதும் பூஜை வழிபாடுகள் செய்வதும் படிப்படியாக குறைந்துபோனது.

பரதனின் இறுதிநாள் நெருங்கியது. அவன் மரணம் அடையும் கடைசித் தருணத்திலும் மான் குட்டியின் நினைவாகவே உயிர் துறந்ததால், அடுத்த பிறவியில் பரதன் ஒரு மானாகவே பிறந்தான்!

மானாகப் பிறந்தாலும், பரதனுக்கு போன ஜென்மத்தின் ஞாபகம் அகலாமல் இருந்தது. கடந்த பிறவியில் தான் மான் குட்டியின்மீது வைத்த பாசத்தின் காரணமாகவே இந்தப் பிறவியில் மானாகப் பிறந்திருக்கிறோம் என்று புரிந்து மனம் வருந்தினான் பரதன். இனி இந்தத் தவறு ஏற்படக் கூடாது என்கிற வைராக்கியத்துடன், தனது தாய் மானைப் பிரிந்து புறப்பட்டான். போன பிறவியில் தான் வசித்த புலஹருடைய ஆசிரமத்துக்கே சென்று கடவுளைத் தியானித்தபடி தனது இறுதிநாள் வருவதற்காகக் காத்திருந்தான். காலம் வந்ததும் கண்டகி நதியில் மூழ்கி உயிர் துறந்தான்.

பரதனின் பிறப்பு அத்துடன் முடியவில்லை!

அடுத்த பிறவியில் ஓர் அந்தணருக்கு மகனாகப் பிறந்தான் பரதன். அந்தணருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ஒன்பது பிள்ளைகள். இரண்டாவது மனைவிக்கு ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள். அதில் ஆண் மகன்தான் மான் உருவத்திலிருந்து இப்பிறவிக்கு வந்திருக்கும் பரதன்.

இந்தப் பிறவியிலும் முன் ஜென்ம ஞாபகங்களுடன் பிறந்த பரதன், எந்த பந்த பாசங்களுக்கும் ஆட்படாமல், எதன்மீதும் பற்று வைக்காமல் நிர்மலமான மனத்துடன் இருக்க வைராக் கியம் கொண்டான். அதன்படியே வாழ்க்கை நடத்தினான்.

உலக இன்பங்களில் நாட்டம் கொள்ளாமல் எப்போதும் பகவான் நாராயணனின் நினைவாகவே ஜடம் போல் திரிந்த பரதனை, எல்லோரும் பித்தன் என்றே கருதினார்கள். அவனுக்குள் ஒரு ஞானி இருப்பதை யாரும் அறிந்துகொள்ள வில்லை.

அறிவற்ற மூடன் போலவே நடந்துகொள்ளும் பரதனைப் பற்றிய துயரத்திலேயே, அவனுடைய தாயும் தந்தையும் இறந்து போனார்கள். சகோதரர்களோ துளியும் பாசமில்லா மல், பரதனை ஒரு வேலைக்காரனைப் போலவே நடத்தி னார்கள். எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் சித்தன் போக்கு சிவம் போக்கு என்பது போலவே உணர்ச்சிகளற்று உலவினான் பரதன்.

குளிக்காமல், தினப்படி நியமங்கள் அனுசரிக்காமல், அழுக் கடைந்த உடைகளுடன் கிடைத்த வேலையைச் செய்து, கொடுத்த உணவைச் சாப்பிட்டுக்கொண்டு கண்ட இடத்தில் படுத்துக் காலம் கழித்தான்.

இப்படி ஒரு ஜடம் போலவே வாழ்க்கையைச் செலுத்திய பரதனுக்கும் வந்தது ஓர் ஆபத்து! அது, ஒரு திருடர் தலைவன் மூலமாக வந்துசேர்ந்தது!

அந்தத் திருடர் தலைவனுக்கு வெகு காலமாக பிள்ளை இல்லை. இதனால் மனம் வருந்திய திருடர் தலைவன் தன்னுடைய பூசாரியின் சொற்படி குல தெய்வம் காளிக்கு நரபலி கொடுக்கத் தீர்மானித்தான்.

ரத்த பலி கொடுத்தால், காளி மனம் மகிழ்ந்து பிள்ளை வரம் தருவாள் என்று நம்பினான். தனது ஆட்களை அழைத்து 'பத்ரகாளிக்குப் பலிகொடுக்கத் தகுந்தவனாக நல்ல திடகாத்திரமான வாலிபனைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டு அனுப்பிவைத்தான்.

பலி தேடிப் புறப்பட்ட திருடர் தலைவனின் ஆட்கள் தகுதி யான நபரைத் தேடி திரிந்தார்கள். அப்போது அவர்களின் கண்களில் பட்டான் பரதன். வாலிபனாகவும் அழகாகவும் தென்பட்ட பரதனைக் கண்டதும், திருடனின் ஆட்கள்

மகிழ்ந்துபோனார்கள். பரதனை, தங்களின் இடத்துக்குக் கட்டித்தூக்கி சென்றார்கள்.

அங்கே அவனைக் குளிப்பாட்டி, புத்தாடைகள் உடுத்தி, சந்தனம் பூசி, மாலை அணிவித்து பத்ரகாளியின்முன் பலி பீடத்தில் நிறுத்தினார்கள்.

காளியை அலங்கரித்து பூஜைகள் நடத்தி தேவியின் முன்பாக ரத்த பலி கொடுக்க, பரதனின் தலையை நோக்கிக் கத்தியை இறக்கினான் திருடர் தலைவன்.

அந்தச் சமயத்திலாவது பரதன் பயம்கொள்ள வேண்டுமே! உடல் நடுங்கவேண்டுமே! ம்ஹூம்! எதுவுமில்லை. அவன் முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லை.

பற்றற்ற யோகியான பரதனின் தவாக்னி காளியையே சுட்டெரித்துவிடுவது போலிருக்க, காளி கடும் கோபம் கொண்டாள். கொடூர ரூபத்துடன் வெளிப்பட்டவள் திருடர் தலைவனின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி, அங்கே கூடியிருந்த அத்தனைபேரையும் கொன்று அவர்களுடைய ரத்தத்தைக் குடித்து கூத்தாடினாள். அந்தப் பாவிகளின் தலைகளைத் துண்டித்து, தனது பூத கணங்களுடன் சேர்ந்து பந்தாடி மகிழ்ந்தாள்.

இத்தனையையும் பார்த்தும் எந்தச் சலனமுமில்லாமலே வெளியேறினான் பரதன்.

அடுத்ததாக அவன் சிக்கிக்கொண்டது ஒரு மன்னனிடத்தில்!

சிந்து தேசத்தின் மன்னனான ரஹூகுணன் என்பவன், கபில முனிவரிடம் உபதேசம் பெறுவதற்காக சென்றுகொண்டிருந்தான்.

அவனுடைய பல்லக்கைத் தூக்கிச்சென்ற ஆட்களில் ஒருவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், வேறு நபரைத் தேடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது அந்தப் பக்கமாக வந்தான் பரதன்.



தந்தை தட்சனின் யாகத்துக்குச் செல்ல, சிவனிடம் அனுமதி கேட்கும் தாட்சாயணி.



தூணைப் பிளந்துகொண்டு வெளிப்படும்
நரசிம்ம அவதாரம்.

கட்டுமஸ்தான உடலைக் கொண்ட பரதனைக் கண்டதும், அரசனின் ஆட்கள் அவனை பல்லக்குத் தூக்கியாக வேலைக்குச் சேர்த்துக்கொண்டார்கள்.

ஜட பரதன் வழக்கம்போல பகவத் தியானத்துடன் உலக நினைவே இல்லாமல் ஏனோ தானோவென்று நடந்து வர, மற்ற பல்லக்குத் தூக்கிகள் வேகம் தடைப்பட்டு தள்ளாடினார்கள். இதனால், பல்லக்கு அங்கும் இங்குமாக அலைந்தது.

அரசன் ரஹூகுணன் வெளியே எட்டிப்பார்த்து பல்லக்குத் தூக்கிகளைக் கோபித்தான். அவர்கள் ஜட பரதனைக் காட்டி, 'அரசே! இந்தப் பித்தனால்தான் இப்படி ஆனது. இவன் சீராக நடக்காமல் ஏதோ யோசனையிலேயே வருகிறான் மன்னா!' என்று குறை கூறினார்கள்.

ரஹூகுணன் ஜட பரதனைப் பார்த்து, 'ஏய்! நீ ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் கடுமையான தண்டனை அளிப்பேன்!' என்று மிரட்டினான்.

அதைக்கேட்டுச் சிரித்தான் ஜட பரதன்.

'மன்னா! நீ என்னை எப்படி தண்டித்தாலும், அது இந்த உடலுக்குத்தானே தவிர ஆத்மாவாகிய எனக்கில்லை. அரசன் என்கிற ஆணவத்தால் இப்போது என்னைத் தண்டிப்பேன் என்கிறாய். இது மாறும். நாளை நான் அரசனாகலாம். நீ வேலைக்காரனாகலாம். எதுவும் நிரந்தரமில்லை. நடப்பவை எதுவும் நம் கையில் இல்லை. இதெல்லாம் உனக்கெங்கே புரியப் போகிறது!' என்று சொல்லியபடி தொடர்ந்து பல்லக்கைச் சுமந்து நடந்தான்.

ஜட பரதனின் வார்த்தைகளைக் கேட்ட மன்னன் ரஹூகுணன் திடுக்கிட்டுப் போனான். பல்லக்கிலிருந்து இறங்கி பரதனின்முன் பணிவுடன் வணங்கினான்.

'ஸ்வாமி! பித்தனைப்போலக் காணப்படும் நீங்கள் நிச்சயம் ஒரு யோகியாகத்தான் இருக்கவேண்டும். தயவுசெய்து

என்னுடைய குற்றத்தைப் பொறுத்தருளுங்கள். என்னை மன்னித்து, ஞான உபதேசம் அருளுங்கள்!' என்று வேண்டினான்.

ஜட பரதன், அரசன் ரஹூகுணனை உற்றுநோக்கினான். ஞானப்பிச்சை பெற்றுக்கொள்ளத் தகுதியான பாத்திரம்தான் அரசனின் மனம் என்று புரிய, அவனுக்கு உபதேசிக்கத் தொடங்கினான். ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பை விளக்கிக்கூறி ரஹூகுணனுக்கு பக்தியின் பெருமையை உணர்த்தினான். பின் முக்தி பெறும் வழியை உபதேசித்துவிட்டு முத்தாய்ப்பாக, 'ரஹூகுணா! நிலையற்ற மனித வாழ்க்கையின்மீது ஆசை வைக்காதே! ஆசாபாசங்களை அறுத்தெறிந்துவிட்டு முதலும் முடிவுமாக நிற்கும் பகவானின் திருவடியை இறுக்கமாகப் பற்றிக்கொள். முக்தி பெறுவாய்!' என்று சொல்லிவிட்டு தன் போக்கில் போகத் தொடங்கினான்.

பரதனுக்கு, சுமதி என்ற பிள்ளை இருந்தான். அவன்மூலம் பரதனின் வம்சம் தொடர்ந்து தழைத்தது. சுமதியின் மகன் தேவாசித்து, தேவாசித்துவின் மகன் தேவததிமுகன் என்று தலைமுறை தலைமுறையாக செழித்துப் பரவியது' என்று சொல்லி நிறுத்தினார் சுக மகரிஷி.

பரீட்சித் ஆர்வத்துடன் கேட்டான்:

'ஸ்வாமி! பிரசேதஸர்களின் புதல்வனாக தட்சன் மீண்டும் பிறந்தான் என்று கூறினீர்களே! அவன் என்னவானான்? என்ன செய்தான்?'

சுகப் பிரம்ம மகரிஷி புன்னகையுடன், 'மறுபடி பிறந்த தட்சன், மீண்டும் ஏதாவது பிரச்னை செய்திருப்பானோ என்ற ஆர்வத்தில்தானே கேட்கிறாய்? இல்லை. அப்படி எதுவும் நடைபெறவில்லை. ஆனால், நாரதர்தான் தட்சனின் காரியத்துக்கு இடையூறு செய்து சாபத்தை வாங்கிக் கட்டிக்கொண்டார். சொல்கிறேன் கேள்!' என்றபடி, கதையைத் தொடர்ந்தார்.

***

11

இந்திரனைத் துரத்திய பிரம்மஹத்தி தோஷங்கள்!

பிரசேதஸர்களுக்கும் மரங்களின் தேவதைகள் வளர்த்த தத்துப் பெண்ணான மாரீஷைக்கும் மகனாகப் பிறந்த தட்சன் மீண்டும் பிரஜாபதியானான்.

அவன் மூன்று உலகங்களிலும் தேவர்கள், அசுரர்கள், மனிதர்களைச் சிருஷ்டி செய்வதற்காக தன் மனத்தாலேயே உருவம் கொடுத்துப் பார்த்தான். ஆனால், அந்த சிருஷ்டிகள் முழுமையடையவில்லை. இதனால் மனம் வருந்தியவன் விந்திய பர்வதத்தை அடைந்து அங்கிருந்த 'அகமர்ஷணம்' என்கிற நதிக்கரையில், பகவான் மகாவிஷ்ணுவை தியானித்து தவம் புரிந்தான்.

அவனுடைய சிறந்த தவத்தால் மனம் மகிழ்ந்த திருமால், நேரில் தரிசனம் தந்தார். 'தட்சனே! நீ

த்வஷ்டா என்பவரின் மகளான அஸிக்னியை மணந்துகொள். அவள் மூலம் உன் சந்ததி பெருகும்!' என்று சொல்லிமறைந் தார்.

விஷ்ணு கூறியபடியே அஸிக்னியை மணந்துகொண்ட தட்சன், அவள் மூலமாக 'ஹர்யச்வர்கள்' என்கிற பதினாயிரம் பிள்ளைகளைப் பெற்றான். அவர்களையும் வம்சத்தை விருத்தி செய்யும்படியாகச் சொல்லி அனுப்பினான்.

தந்தையின் கட்டளைப்படி புறப்பட்ட ஹர்யச்வர்கள் மேற்கு திசை நோக்கிச் சென்றனர். இல்லறத்தில் ஈடுபடும் முன்பாக தங்களுடைய தபோபலத்தைப் பெருக்கிக்கொள்ள நினைத் தனர். சிந்துநதி கடலில் சங்கமிக்கும் 'நாராயணசரஸ்' என்னும் இடத்தில் தவம் செய்யத் தொடங்கினார்கள்.

அப்போது அங்கு வந்த நாரதர், ஹர்யச்வர்களின் மனத்தை மாற்றி, பிரஜைகள் சிருஷ்டி செய்வதிலிருந்து பக்தி மார்க் கத்துக்குத் திருப்பிவிட்டார். நாரதரின் உபதேசத்தால் பகவத் பக்தியில் ஈடுபாடு கொண்ட ஹர்யச்வர்கள், பகவானை நினைத்து ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி இறுதியாக முக்தி பெற்றனர்.

இதைத் தெரிந்துகொண்ட தட்சன், நாரதரின் மேல் வருத்தம் கொண்டான். ஆனாலும் மனம் தளராமல் மீண்டும் மனைவி அஸிக்னியோடு சேர்ந்து, 'சபலாச்வர்கள்' என்கிற ஆயிரம் பிள்ளைகளைச் சிருஷ்டித்தான். அவர்களையும் வம்சத்தை மேலும் பெருக்குமாறு சொல்லி அனுப்பினான்.

அந்த சபலாச்வர்களையும் நாரதர் சென்றமுறை போலவே சிருஷ்டியில் ஈடுபட விடாமல் தடுத்து, பகவத் பக்தியில் ஆழ்த்தி முக்திபெறச் செய்துவிட்டார். இம்முறை தட்சன் கொந்தளித்துப்போனான். மிகுந்த ஆத்திரத்துடன் சென்று நாரதரைச் சந்தித்தான்.

'நாரதரே! உமது கலக புத்தி மாறவே மாறாதா? நீர் திருந்தவே மாட்டீரா? என் மகன்களின் மனத்தைக் கெடுத்து அவர்களை

பகவத் பக்தியில் ஆழ்த்தி என் நோக்கத்தை நிறைவேற விடாமல் செய்துவிட்டீரே! மனம் வேதனைப்பட்டு சொல் கிறேன். அங்கும் இங்கும் கலகம் செய்து சந்தோஷப்படும் நீர், இப்படியே நிரந்தரமாக எங்கும் தங்கமுடியாமல் நாடோடி யாகவே திரியக்கடவீர்!' என்று சாபமிட்டான்.

நாரதரும் பதிலுக்கு தட்சனைச் சபிக்கமுடியும். என்றாலும் அதைச் செய்யாமல், 'நடப்பவை யாவும் நன்மைக்கே' என்று சாபத்தை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார்.

பின், மீண்டும் தட்சனும் அவன் மனைவியுமாகச் சேர்ந்து அறுபது பெண்களைப் பெற்றார்கள். அவர்களில் பத்துபேரை 'தர்மர்' என்கிற பிரஜாபதிக்கும், பதின்மூன்று பெண்களை கச்ய பிரஜாபதிக்கும், இருபத்தேழு பேரை சந்திரனுக்கும், இருவரை ருத்ரனுக்கும், இன்னும் இருவரை அங்கிரஸுக்கும், மேலும் இருவரை கிருசாச்வர்களுக்கும், மற்ற நால்வரை தார்க்ஷ்யனுக்கும் திருமணம் செய்துகொடுத்தான்.

இந்த அறுபது பெண்கள் மூலம் தட்சனின் சந்ததி பெருகியது. தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், அப்சரஸ்கள், வஸுக்கள், பூதங்கள், ருத்ர கணங்கள் மட்டுமில்லாமல் பசுக்கள், நாகங் கள், பறவைகள் போன்ற உயிரினங்களையும்கூட உற்பத்தி செய்து அவர்கள் மூவுலகங்களையும் நிரப்பினார்கள்.

எல்லாமே மிகச்சரியாக நடந்துகொண்டிருந்த கால கட்டத் தில்தான், சுகவாசிகளான தேவர்களுக்கு ஆணவம் தலைக் கேறி அவர்களின் வீழ்ச்சி தொடங்கியது!

***

தேவலோகம் அன்றைக்குக் கோலாகலமாயிருந்தது!

தேவலோகத்தின் அதிபதியான இந்திரன் தன் மனைவி இந்திராணியுடன் ராஜசபையின் சிம்மாசனத்தில் அமர்ந்திருந் தான். சபையில் அவனைச் சுற்றிலும் அஷ்ட வசுக்களும் அச்வினி தேவர்களும், கந்தர்வர்களும், கின்னரர்கள்,

சித்தர்கள், சாரணர்கள், வித்யாதரர்கள் என எல்லோரும் கூடியிருந்தார்கள்.

கந்தர்வர்கள் கானம் பாட, அப்சரஸ்கள் நாட்டியமாட, கின்னரர்கள் இசைக்கருவிகளை வாசிக்க அனைவரும் சோமபானம் அருந்தியபடி உற்சாகத்தின் உச்சகட்டத்தில் மெய்மறந்திருந்தனர்.

அப்போது அங்கே சபைக்குள் பிரவேசித்தார் தேவர்களின் குலகுருவான பிரகஸ்பதி. மூவுலகத்தினரும் போற்றும் பெருமை பெற்ற ஆசாரியார் அவர்.

இந்திரன் பிருகஸ்பதி வந்ததைக் கவனித்தான் என்றாலும், அவரை வரவேற்று உபசரிக்காமல் கேளிக்கைகளில் மனம் லயித்துப்போய் பிருகஸ்பதியை அலட்சியப்படுத்தினான்.

இதைக்கண்ட பிருகஸ்பதி மனம் வருத்தமடைந்தார். எப்போதும் சிம்மாசனத்தைவிட்டு இறங்கி வந்து பணிவுடன் வணங்கி வரவேற்கும் இந்திரன், வேண்டுமென்றே தன்னை அலட்சியப்படுத்திவிட்டான் என்று கருதினார். இந்திரபதவி தந்த இறுமாப்பும் சொர்க்கலோகத்தின் சுகபோகங்களுமே அவனிடத்தில் இப்படியொரு அகம்பாவத்தை உண்டாக்கியுள்ளன என்று நினைத்தபடி, மௌனமாக சபையைவிட்டு வெளியேறினார்.

கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் இந்திரன் சுயநினைவு பெற்றவனாக பதறிப் போனான். 'அடடா! குலகுரு பிரகஸ்பதியை வரவேற்காமல் போனோமே!' என்று மனம் வருந்தி அவரைத் தேடினான். அவர் இல்லை என்றதும் கலங்கிப்போனான். அவரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்கலாம் என்று புறப்பட்டான்.

தன் தவ வலிமையினால் இதைத் தெரிந்துகொண்ட பிருகஸ்பதி, எவருடைய கண்ணுக்கும் தென்படாமல் மறைந்துவிட்டார். இந்திரன் எல்லா இடங்களிலும் அவரைத் தேடியலைந்து காணாமல் திகைத்தான்.

இந்தச் செய்தி எல்லா இடங்களிலும் பரவியது. பிருகஸ்பதி தேவர்களைவிட்டுப் போய்விட்டார் என்பது தெரிந்ததுமே அசுரர்கள் அளவில்லாத மகிழ்ச்சியடைந்தார்கள். தேவர்களைத் தாக்குவதற்கு இதுதான் சரியான சமயம் என்று தீர்மானித்தார்கள். தங்களின் குலகுருவான சுக்ராச்சாரியாரின் உதவியோடு பலமடங்கு வலிமையைப் பெருக்கிக்கொண்டு தேவலோகத்தின்மீது படையெடுத்தார்கள்.

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் பெரும் போர் மூண்டது. குரு சுக்ராச்சாரியார் அசுரர்களை வழி நடத்த, தேவர்கள் தங்களுக்கு ஆலோசனை சொல்ல பிருகஸ்பதி இல்லாததால் மிக மோசமாக அசுரர்களிடம் தோற்றுப்போனார்கள். அசுரர்களின் தாக்குதலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அவர்களிடமிருந்து தப்பித்து ஓடி ஒளிந்தார்கள்.

இந்திரன், தேவர்களை அழைத்துக்கொண்டு பிரம்மலோகம் சென்றான். 'பிரம்ம தேவரே, தாங்கள்தான் அசுரர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டும்!' என்று கதறினான்.

பிரம்மன் இந்திரனைக் கண்டித்தார்.

'இந்திரா! ஒருவர் எத்தனை உயர்ந்த நிலைக்குப் போனாலும் கர்வம் கொள்ளக் கூடாது. நீ ஆணவத்துடன் குலகுருவை அவமதித்ததாலேயே தேவர்களுக்கு இந்தத் துன்பம் ஏற்பட்டது. ஆனால் அசுரர்களோ, தங்கள் குரு சுக்ராச்சாரியாரைப் பூஜித்து மேலும் மேலும் வலிமைபெற்று வருகிறார்கள். அவர்கள் இனியும் தொடர்ந்து தேவலோகத்தைக் கைப்பற்றவே முயற்சிப்பார்கள். குருவை இழந்து நிற்கும் நீங்கள், முதலில் வேறொரு குருவை தேடிக்கொள்ளுங்கள்!' என்றார்.

'நாங்கள் யாரை குருவாகக் கொள்வது என்று நீங்கள்தான் வழி காட்டவேண்டும்!' என்று பிரம்மனையே வேண்டினான் இந்திரன்.

'த்வஷ்டாவின் மகனான விச்வரூபன் என்பவன் தலைசிறந்த பிரம்மஞானி. வயதில் சிறியவன். ஆனாலும் வேதங்களை

முழுமையாக அறிந்தவன். பிருகஸ்பதிக்குப் பதிலாக உங்களின் குருவாக இருக்கத் தகுதிபெற்றவன் அவன் ஒருவன் தான். நீங்கள் அவனிடம் சென்று உங்களின் ஆசாரியனாக இருக்க கேட்டுப்பாருங்கள். அவன் சம்மதித்தால் நீங்கள் நன்மையடையலாம்!' என்றார்.

த்வஷ்டா என்கிற அந்தணனுக்கும், ரசனா என்கிற அசுர குலப் பெண்ணுக்கும் மகனாகப் பிறந்தவன் விச்வரூபன். மூன்று தலைகளைக் கொண்ட விச்வரூபன் அரக்க குலத்தினரின் மீதும் பாசம் கொண்டவனாயிற்றே என்று யோசித்தான் இந்திரன். ஆனாலும் வேறுவழியில்லாமல் விச்வரூபனிடம் சென்று அவனை தங்களுக்கு குருவாக இருக்குமாறு வேண்டி னான்.

விச்வரூபனுக்கு ஆசாரியர் பதவியின் மீதெல்லாம் ஆசை யில்லை. ஆனாலும் தேவர்கள் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட தாலும், துன்பத்தில் இருக்கும் அவர்களுக்கு உதவிசெய்ய விரும்பியதாலும் இந்திரனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான்.

தேவர்களின் குலகுருவான விச்வரூபன் இந்திரனுக்கு 'நாராயண கவசம்' என்னும் மகா மந்திரத்தை உபதேசித்தான். அசுரர்களை வெற்றிகொள்ளும்விதமாக அந்த மகா மந்தி ரத்தை எப்படி ஜபிக்கவேண்டும் என்று சொல்லிக்கொடுத் தான்.

இந்திரன் மகா சக்தி வாய்ந்த நாராயண கவசத்தின் மகிமை யால் அடுத்தடுத்து நடந்த போர்களில் அசுரர்களை வெற்றி கொண்டான். விச்வரூபனுக்கு நன்றி தெரிவித்து அவனைக் கௌரவித்தான்.

விச்வரூபன் தொடர்ந்து தேவர்களுக்கு குலகுருவாக இருந்து அவர்களை வழிநடத்தி வந்தான். ஆனாலும், தாய்வழி உறவினர்களான அசுரர்கள்மீதும் அவன் அன்பு கொண்ட வனாக இருந்தான். அதனால் யாகங்கள் செய்து தேவர்களுக்கு

அவிர்பாகங்கள் அளிக்கப்படும்போது, யாருக்கும் தெரியாமல் அவிர்பாகத்தில் ஒரு பகுதியை அவன் அசுரர்களுக்கும் அளித்துவந்தான்.

ஒருமுறை இதைத் தெரிந்துகொண்ட இந்திரன் கொதித்துப் போனான். தேவர்களின் குலகுருவான விச்வரூபன் அசுரர் களின்மேல் அன்புகொண்டு தங்களுக்குத் துரோகம் செய்து விட்டானே என்கிற ஆத்திரத்துடன், விச்வரூபனிடம் சென்று ஆவேசத்துடன் அவனுடைய மூன்று தலைகளையும் வெட்டி வீழ்த்திக் கொன்றான்.

கோபத்தால் அறிவிழந்து ஓர் அந்தணனைக் கொன்றதன் காரணமாக, இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அந்தப் பாவத்தைப் போக்கிக்கொள்வதற்காக, பாவத்தை நான்காகப் பிரித்து பூமி, நீர், விருட்சங்கள்(மரங்கள்) மற்றும் பெண்களிடம் அதைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். இதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டால் வரங்கள் தருவதாகக் கூறினான்.

நால்வரும் சம்மதித்து பாவங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அவர்கள் ஏற்றுக்கொண்ட பாவத்தினாலேயே பூமி பாலை வனமாகியது. மரங்களில் பால் கசிந்தது. நீரில் நுரை ஏற்பட் டது. பெண்களுக்கு மாதவிலக்கு உண்டானது. பதிலுக்கு இந்திரன் தந்த வரங்களாக, பூமியில் ஏற்படும் பள்ளங்கள் தாமாகவே தூர்ந்தன. மரங்கள் வெட்ட வெட்டத் துளிர்த்தன. நீர் அள்ள அள்ளக் குறையாமல் சுரந்தது. பெண்களுக்கு, பிரசவத்துக்குப் பின்னும் கணவனுக்கு இன்பம் தரும் தன்மை உண்டானது.

இந்திரன் இந்த விதமாக பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து தப்பித்தாலும், அடுத்ததாக ஓர் ஆபத்தும் அவனுக்குக் காத் திருந்தது!

இந்திரனால் தன் மகன் கொல்லப்பட்டதை அறிந்த த்வஷ்டா, அவன்மேல் கடும் கோபம் கொண்டான். இந்திரனை

அழிப்பதற்காகவே ஒரு யாகத்தைச் செய்தான். அந்த யாகத்தின் போது யாக குண்டத்தின் அக்னியிலிருந்து வெளிப்பட்டான் ஓர் அசுரன். அவன் விருத்ராசுரன்!

'ஓம் நமோ நாராயணாய' என்று ஜபித்தபடியே அக்னி குண்டத்திலிருந்து வந்தான் விருத்ராசுரன்.

அட! ஓர் அசுரன் நாராயணனைத் துதித்து ஜபிப்பதா? ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா? விருத்ராசுரனின் முன் பிறவியைத் தெரிந்துகொண்டால் ஆச்சரியம் ஏற்படாது. வாருங்கள் பார்ப்போம்!

***

ஆங்கிரஸ முனிவருக்கு, மன்னன் சித்ரகேதுவைப் பார்த்த போதே அவன் ஏதோ துயரத்தில் மூழ்கியிருக்கிறான் என்று தெரிந்தது.

சித்ரகேது, சூரசேன நாட்டின் மன்னன். அவனுடைய மனைவி பட்டத்து ராணி கிருதத்யுகி. இவளைத் தவிரவும், சித்ரகேது வுக்கு மேலும் பல மனைவிகள் இருந்தனர். ஆனால் என்ன பிரயோசனம்? இத்தனை மனைவிகள் இருந்தும் ஒருவருக் கும் குழந்தை பிறக்கவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல சித்ரகேது கவலையடைந்தான். கடைசிவரை தனக்கு புத்திரபாக்கியம் கிட்டாமலே போய் விடுமோ என்று பயந்தான். அரச பரிபாலனத்திலோ மற்ற சுக போகங்களிலோ எதிலுமே நாட்டமில்லாமல் மனத்தில் அமைதியிழந்தவனாகவே திரிந்தான்.

இந்தச் சமயத்தில்தான் ஆங்கிரஸ முனிவர், சித்ரகேதுவின் அரண்மனைக்கு வருகை தந்தார்.

மன்னன் சித்ரகேது அவரை சகல மரியாதைகளுடன் வரவேற் றான். அரண்மனையிலேயே எல்லா வசதிகளும் செய்து தந்து பயபக்தியுடன் உபசரித்தான். தானே முன்நின்று அனைத்து பணிவிடைகளும் செய்தான்.

சித்ரகேதுவின் அன்பான உபசரிப்பால் மனம் மகிழ்ந்த ஆங்கிரஸ முனிவர் அவனிடம் கேட்டார்:

'மன்னா! உன் முகத்தில் துயரம் தெரிகிறது. மனத்தில் ஏதோ குறை இருப்பதை என்னால் உணரமுடிகிறது. அது என்ன வென்று சொல். முடிந்தால் தீர்த்துவைக்க முயற்சிக்கிறேன்!' என்றார்.

சித்ரகேது அவரிடம் கண்ணீர் மல்கச் சொன்னான்.

'ஸ்வாமி! ஒருவன் என்னதான் சீரும் சிறப்புமாக புகழ் பெற்றிருந்தாலும், புத்திரபாக்கியம் இல்லாவிட்டால் அவ னுக்கு மோட்சம் கிடைக்காது என்கிறது சாத்திரம். எனக்கு ஏராளமான மனைவிகள் இருந்தும் யார் மூலமாகவும் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. நீங்கள்தான் நான் நரகத்தை அடையாமல் காக்கவேண்டும்!' என்று வேண்டினான்.

மன்னன் சித்ரகேதுவின் வேண்டுகோளை ஏற்று, ஆங்கிரஸ முனிவர் புத்திரபாக்கியத்துக்காக விசேஷ யாகம் ஒன்றை நடத்தினார். யாகத்தின் பிரசாதத்தை சித்ரகேதுவின் பட்டத்து ராணியான கிருதத்யுகிக்கு அளித்தார்.

'சித்ரகேது! நீ விரும்பியபடி விரைவிலேயே உனக்கு வாரிசு உண்டாகும். கிருதத்யுகி ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுப் பாள்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆங்கிரஸ முனிவர் சொன்னது போலவே கிருதத்யுகி, அழகான ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். மன்னன் சித்ரகேது அளவில்லாத மகிழ்ச்சியடைந்தான். குழந்தை பிறந்ததை கோலாகலமாகக் கொண்டாடினான். ராஜ்ஜியத் துக்கு ஒரு வாரிசைத் தந்த கிருதத்யுகியின்மேல் பெரும் அன்பு கொண்டு அவள் பக்கத்திலேயே இருந்தான். எந்தநேரமும் குழந்தையைப் பார்த்துப் பார்த்து மனம் பூரித்தான். மற்ற எந்த மனைவிகளையும் அவன் பார்க்கக்கூடச் செல்லவில்லை.

இதனால் சித்ரகேதுவின் மற்ற மனைவிகள் கோபம் அடைந் தனர். கிருதத்யுகியின் மேல் பொறாமை கொண்டனர். அவள்

பெற்ற குழந்தையினால்தானே மன்னர் தங்களைப் புறக் கணிக்கிறார் என்கிற ஆத்திரத்துடன் குழந்தையைக் கொல்லத் திட்டமிட்டனர். யாருக்கும் தெரியாமல் பாலில் விஷம் கலந்து கொடுத்து குழந்தையைக் கொன்றனர்.

குழந்தை இறந்து போய்விட்டதை அறிந்த கிருதத்யுகி மனம் உடைந்து போய் கதறினாள். தாளமுடியாத துக்கத்துடன் அழுது அழுது மயங்கி விழுந்தாள்.

மன்னன் சித்ரகேதுவோ கிருதத்யுகிக்கும் மேலாக துயரத்தில் மூழ்கி, பித்துப் பிடித்தவன் போல ஆனான். ராஜ்ய பரிபாலனத்தில் கவனமின்றி குழந்தையின் நினைவாக அரண்மனையிலேயே முடங்கிக் கிடந்தான்.

அப்போது ஆங்கிரஸ முனிவரும் நாரத மகரிஷியும் அங்கு வந்தனர். சித்ரகேதுவுக்கு ஆறுதல் சொல்லி அவன் மனத்தைத் தேற்ற முயன்றார்கள்.

'மன்னா, பிறக்கும் உயிர்கள் எல்லாம் ஏதோ ஒரு காலத்தில் மடியத்தான் வேண்டாம். இது காலத்தின் கட்டாயம். உடல் என்பது மாயை. உடல் அழிந்தாலும் ஆன்மா அழிவதில்லை. இறந்து போனது உன் குழந்தை என்கிற பற்றையும் பாசத்தையும் விட்டு விடு. அது போன ஜென்மத்தில் என்னவாக இருந்தது என்பது யாருக்குத் தெரியும்? அப்போது அதற்கு உன்னுடன் என்ன உறவு இருந்தது? இந்த ஜென்மத்தில் உனக்கு மகனாகப் பிறந்து மரித்துவிட்டது. அடுத்த பிறவியில் அது வேறொருவருக்கு பிள்ளையாகப் பிறக்கும். இது ஒரு வட்டம். எல்லாமே மாயைதான். மனிதர்கள் எல்லோரும் தனியாகத்தான் பிறக்கிறோம். இறுதியில் தனியாகத்தான் செல்லப் போகிறோம். இடையில் பந்தம் பாசம் என்று நாமாகத்தான் சிக்கிக் கொள்கிறோம். இனியாவது ஆசாபாசங்களை அறுத்தெறி. பகவான் திருவடிகளில் உன் மனத்தைச் செலுத்து' என்று உபதேசித்தனர்.

மன்னன் சித்ரகேது மனத்தெளிவு பெற்றான்.

நாரதர் அவனிடம், 'சித்ரகேது! நான் இப்போது உனக்கு பகவான் நாராயணனை அடையக்கூடிய மந்திரத்தை உபதேசிக்கிறேன். இதை ஜெபித்து தியானத்தில் ஈடுபடு. பெரும் ஸித்திகளைப் பெறுவாய்!' என்று சொல்லி மந்திரத்தை உபதேசித்தார்.

சித்ரகேது அவர் கூறியபடியே தியானத்தில் ஆழ்ந்தான். ஏழு நாள்கள் நீரை மட்டும் அருந்தியபடி மந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்து வந்தான். அவனுடைய மனம் ஒன்றிய தியானம் பலனளித்தது. எட்டாவது நாள் அவன் வித்தியாதரர்களின் மன்னனாகும் தகுதி பெற்றான். இதன் காரணமாக அவன் ஆகாயத்தில் உலவவும் பாதாளத்தில் புகுந்து செல்லவும் கூடிய ஆற்றல்களைப் பெற்றான். நினைத்த நாழிகையில் எங்கும் செல்லக்கூடிய வல்லமை அடைந்தான்.

ஒருமுறை, அவன் தன்னுடைய விமானத்தில் ஏறி ஆகாய மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தபோது கைலாய மலையைக் கடந்துசெல்ல வேண்டி வந்தது.

கைலாய மலையில் சிவபெருமான் தனது பூத கணங்கள், முனிவர்கள், சித்தர்கள், சாரணர்கள் சூழ, பார்வதி தேவியை தன் மடியின்மீது வைத்து அணைத்தபடி அமர்ந்திருந்தார்.

இதைக்கண்ட சித்ரகேது கேலியாகச் சிரித்தபடி, 'சாதாரண மனிதன்கூட தன் மனைவியை யாரும் அறியாமல்தான் கொஞ்சுவான். ஆனால் உலகத்தையே ரட்சிக்கும் சிவன், துளியும் வெட்கமின்றி மற்றவர்கள் கண்ணெதிரில் மனைவியைக் கட்டியணைத்துக்கொண்டு குலவுகிறார். இது மகா கேவலம்!' என்று முகம் சுளித்தான்.

சித்ரகேதுவின் சொற்களைக் கேட்ட பரமேஸ்வரன், புன்னகைத்தபடியே மௌனமாக இருந்தார். ஆனால், பார்வதிதேவி கோபம் கொண்டாள்.

'வித்யாதரர்களின் மன்னன் ஆகிவிட்டதால் மமதை கொண்டுவிட்டான் இந்த மடையன். மகா ரிஷிகளும் மற்றைய

தேவர்களும் போற்றி வழிபடும் மகாதேவனை நிந்தித்த இந்த சித்ரகேது அசுரனாகப் பிறக்கட்டும்!' என்று சாபமிட்டாள்.

பார்வதியின் சாபச்சொற்களைக் கேட்ட சித்ரகேது, விமானத்தி லிருந்து இறங்கி வந்து பார்வதியை வணங்கினான்.

'தாயே! உன் சாபத்தை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள் கிறேன். சுகம், துக்கம், இன்பம், துன்பம், மரணம், பிறப்பு எல்லாமே ஒன்றுதான். இவை யாவும் உடலைத்தான் பாதிக்குமே தவிர ஆன்மாவுக்கு எந்தச் சம்பந்தமுமில்லை. நடப்பவை எல்லாம் விதியின் செயல்தான். என் கர்மாவை நான் அனுபவித்தே ஆகவேண்டும். நான் கூறியது தவறென் றால் என்னை மன்னித்துவிடுங்கள்!' என்று சொல்லிவிட்டு, விடைபெற்றுக்கொண்டான்.

பார்வதிதேவி ஆச்சரியமடைந்தாள்.

பரமசிவன் அவளிடம், 'தேவி! இவன் மகா விஷ்ணுவின் பரம பக்தன்: நாரதரிடம் நாராயண மந்திர உபதேசம் பெற்றவன். அதனால்தான் பக்குவமான மனத்துடன் பணிவான வார்த்தை களைக் கூறினான். உன் சாபத்தையும் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டான். ஸ்ரீ ஹரியின் பக்தர்கள் எத்தனை துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் மனவலிமை பெற்றவர்கள் என்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? இவன் இப்போதும் எப் போதும் திருமாலின் பக்தனாகவே நீடித்து இருப்பான்!' என்று சித்ரகேதுவைப் பாராட்டினார்.

அந்தச் சித்ரகேதுதான் பார்வதியிடம் பெற்ற சாபத்தின்படி இப்போது த்வஷ்டாவின் யாக குண்டத்திலிருந்து விருத்ராசுர னாக வெளிப்பட்டான். சிவன் சொன்னபடியே மாறாத ஹரி பக்தனாகவே இருந்தான்.

த்வஷ்டாவின் விருப்பப்படி இந்திரனை அழிப்பதற்காக உருவான விருத்ரன், விண்ணுக்கும் மண்ணுக்குமாக விசுவரூப மெடுத்தான். பயமுறுத்தும் கோர உருவத்துடன் தேவர்களைத் தாக்கினான். விருத்ராசுரனின் பயங்கரத் தாக்குதலைச் சமாளிக்கமுடியாத தேவர்கள் சிதறி ஓடினார்கள்.

இந்திரன், பலவகையான அஸ்திரங்களை விருத்ராசுரனின் மீது ஏவினான். விருத்ரன் அத்தனை பாணங்களையும் வெகு சாதாரணமாக தாக்கி அழித்தான். இந்திரனை கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினான். விருத்ரனை எதிர்கொள்ளமுடி யாமல் இந்திரன் பின்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விருத்ராசுரனிடமிருந்து தப்பித்து ஓடிய இந்திரன், வைகுந்தம் சென்று நாராயணனைச் சரணடைந்தான்.

'பகவானே! பக்தர்களின் துன்பங்களைப் போக்குபவனே! இப்போது எங்களுக்கு உங்களைத் தவிர வேறு கதியில்லை. நீங்கள்தான் விருத்ராசுரனிடமிருந்து எங்களைக் காக்க வேண்டும்!' என்று கதறினான்.

விஷ்ணு அவன்மீது இரக்கம் கொண்டார்.

'இந்திரா, கவலைப்படாதே! விருத்ராசுரனை வெல்ல வழி சொல்கிறேன் கேள்! ததீசி என்கிற மகரிஷி கானகத்தில் தவம் செய்துகொண்டிருக்கிறார். தீவிர விரதத்தினாலும் யோக சக்தியினாலும் தன் உடலை வஜ்ரம்போல் வைத்திருப்பவர் அவர். நீங்கள் அவரிடம் சென்று அவருடைய எலும்பைக் கேளுங்கள். கருணை மனம் கொண்ட ததீசி மறுக்காமல் தருவார். அந்த எலும்பைப்பெற்று விசுவகர்மாவிடம் கொடுத்து அதிலிருந்து ஓர் ஆயுதத்தைச் செய்துகொள். அந்த ஆயுதத்தினால், நீ எளிதில் விருத்ராசுரனை வென்றுவிடலாம்' என்றார்.

இந்திரனுக்கு எலும்பைத் தரவேண்டுமானால் ததீசி மகரிஷி உயிர் துறக்கவேண்டும். அப்போதுதான் அவர் உடலிலிருந்து எலும்பை எடுத்து ஆயுதம் செய்யமுடியும். ததீசி மகரிஷி உயிர் துறக்கத் துணிவாரா என்று தெரியவில்லை. யாருக்காகவோ தன் உயிர் போவதை எவர்தான் விரும்புவார்கள்?

ஆனாலும் மகா விஷ்ணு கூறியபடி இந்திரன், ததீசி மகரிஷியிடம் சென்றான். மனம் கூசியபடி தயக்கத்துடன் அவருடைய முதுகெலும்பைக் கேட்டு யாசித்தான்.

சிறிதும் யோசிக்காமல் கருணை மனத்துடன் சம்மதம் தந்தார் ததீசி மகரிஷி.

'என்றைக்கு இருந்தாலும் இந்த உடல் அழியத்தான் போகிறது. அழியப்போகும் அந்த உடல் மற்றவர்களுக்கு நன்மையைத் தருமானால், அதைவிட சந்தோஷம் வேறென்ன இருக்கிறது?' என்றவர், அப்போதே தியானத்தில் அமர்ந்தார். உடலை உதறிவிட்டு தனது ஆத்மாவை பரமாத்மாவோடு ஐக்கியப் படுத்திக்கொண்டார்.

ததீசியின் எலும்பில் இருந்து வஜ்ராயுதத்தை உருவாக்கித் தந்தான் விசுவகர்மா.

இந்திரன் அந்த வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி விருத்ராசுரனுடன் போரிட்டான்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கடும்போர் மூண்டது.

இம்முறை அசுரர்கள், தேவர்களிடம் அடிபட்டு தோற்று ஓடினார்கள். ஆனாலும்கூட விருத்ரனை வெல்வது எளிதாக இல்லை. அவன் மிகுந்த உக்கிரத்துடன் போரிட்டான்.

'இந்திரா! தேவர்களுக்கு குருவாக இருந்த விச்வரூபனையே கொன்ற பாவி நீ. இதற்கு நான் உன்னைப் பழிவாங்கியே தீருவேன். என் சூலத்தால் உன் உடலைப் பிளப்பேன். அப்படியல்லாமல் ஒருவேளை நான் இந்தப் போரில் உன் வஜ்ராயுதத்தால் இறந்தாலும் கவலை கொள்ளமாட்டேன். பகவானைத் துதித்து அவர் திருவடிகளைப் பற்றிக் கொள்வேன். அரக்கனாக இருந்தாலும் நான் நரகத்துக்குப் போகமாட்டேன். மோட்சத்தையே அடைவேன். ஆனால், போரில் வெற்றி பெற்றாலும்கூட உனக்கு மன நிம்மதி கிடைக்காது. இது நிச்சயம்!' என்றபடி சூலாயுதத்தை ஏந்தியபடி இந்திரன்மீது பாய்ந்தான்.

இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் சூலம் ஏந்திய விருத்ராசுரன் கையை வெட்டி வீழ்த்தினான். உடனே விருத்ரன் தன் மற்றொரு கையினால் ஆயுதம் ஏந்தி சண்டையிட்டான். இந்திரன் அந்தக் கையையும் துண்டித்தான். பின் விருத்ரன் தன்னுடைய வாயை அகலமாகத் திறந்து இந்திரனை அப்படியே விழுங்கினான். இந்திரன், அசுரனின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டான். வஜ்ராயுதத்தால் விருத்ரனின் மண்டையில் ஓங்கியடித்து அவனைக் கொன்றான்.

விருத்ராசுரனின் உயிர் பிரிந்து அவனுடைய ஆத்மா, பகவானின் திருவடியைச் சென்று சேர்ந்தது.

ஆனால் இந்திரனை, தோஷம் பற்றிக்கொண்டது! ஏற்கெனவே விச்வரூபனைக் கொன்றதன் மூலமாக ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக்கொள்ளவே படாதபாடு வேண்டியிருந்தது. இப்போதோ விருத்ரனைக் கொன்றதன்மூலம் மறுபடியும் அதே பிரம்மஹத்தி தோஷம் இந்திரனைப் பற்றிக் கொள்ள துரத்தி வந்தது!

இந்திரன் அந்த பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து தப்பிக்க, மானசரோவரத்தில் ஒரு தாமரைத் தண்டின் வழியாக நுழைந்து உள்ளே தங்கிக்கொண்டான். இப்படி அவன் ஆயிரம் ஆண்டுகள் ஒளிந்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்திரன் இவ்வாறு தண்ணீருக்குள் தங்கியிருந்ததால், யாகங்களில் அளிக்கப்பட்ட அவிர்பாகங்களை அக்னியால் அவனிடம் கொண்டுசேர்க்க முடியவில்லை. எனவே, உண்ண உணவும் கிடைக்காமல் இந்திரன் தவித்தான்.

இந்தச் சமயத்தில்தான் சந்திர குலத்தில் பிறந்த நகுஷன் என்பவன், நூறு அசுவமேத யாகங்களைச் செய்து முடித்திருந்தான். எவன் ஒருவன் நூறு அசுவமேத யாகங்களைச் சிறப்பாக செய்துமுடிக்கிறானோ அவன் இந்திர பதவியை அடைவான் என்பதால், நகுஷன் தேவலோகத்தின் இந்திர பதவியை அடைந்து தேவர்களுக்கு அரசன் ஆனான்.

சொர்க்கலோகத்தின் சுகபோகங்கள் நகுஷனை இன்பத்தில் ஆழ்த்தின. எல்லா தேவர்களும் அவன் அடிபணிந்து வணங்கி நின்றனர். அரசு, பதவி, செல்வம் அனைத்தும் பெற்ற நகுஷன், நாள்கள் செல்லச் செல்ல நற்குணங்கள் இழந்து ஆணவம் கொண்டவனானான்.

இந்திர பதவியை அடைந்துவிட்டதால், இந்திரனின் மனைவி யான இந்திராணியும் தனக்கே சொந்தமென்று கருதினான். அவளை அடையத் துடித்தான். இந்திராணியிடம் சென்று தனது விருப்பத்துக்கு இணங்குமாறு அவளை வற்புறுத்தி னான். நகுஷனின் தொல்லை தாங்காத இந்திராணி, தேவர் களின் குருவான பிருகஸ்பதியிடம் சென்று முறையிட்டாள். நகுஷனிடமிருந்து தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினாள், கதறி அழுதாள்.

இந்திராணியின் நிலையைக் கண்ட பிருகஸ்பதி அவள்மீது இரக்கம் கொண்டார். நகுஷனிடமிருந்து தப்பிப்பதற்காக யோசனை ஒன்றைத் தெரிவித்தார்.

'இந்திராணி! முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும். வஞ்சக எண்ணம் கொண்ட நகுஷனை அவனுடைய ஆணவத் தால்தான் அழிக்கவேண்டும். எனவே, நீயும் நகுஷன் மீது அன்புகொண்டவள் போல நடித்து, நகுஷனை கணவனாக ஏற்றுக்கொள்வதாகக் கூறு. ஆனால் அவன் உன்னிடத்தில் வரும்போது, அவனுடைய பல்லக்கை சப்த ரிஷிகள்தான் சுமந்து வரவேண்டும் என்று சொல். பிறகு பார், நகுஷன் என்னாகிறான் என்பதை!' என்று வழிசொல்லிக் கொடுத்தார்.

இந்திராணி, பிருகஸ்பதி சொன்னபடியே நிபந்தனை விதித் தாள். நகுஷன் மகிழ்ச்சியுடன் அதற்கு ஒப்புக் கொண்டான்.

சப்த ரிஷிகளை அழைத்து, இந்திராணியின் இடத்துக்கு தன்னை பல்லக்கில் சுமந்து செல்லும்படி கட்டளையிட்டான்.

தேவர்களின் தலைவன் என்பதால், மகா தபசிகளான சப்த ரிஷிகளும் அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நகுஷனின் பல்லக்கைத் தூக்கிச்சென்றார்கள்.

இந்திராணியை அடையும் மோகத்துடிப்பிலிருந்த நகுஷ னுக்கு, சப்த ரிஷிகள் பல்லக்கைச் சுமக்கும் வேகம் போத வில்லை. அவர்கள் ஆமைபோல் மெதுவாகச் செல்வதாகத் தோன்றியது. எனவே எரிச்சலுடன், 'ஸர்ப்பஸர்ப்ப' என்று தன் கால் கட்டை விரலால் ரிஷிகளை குத்தித் தூண்டினான். (ஸர்ப்ப என்றால் வேகம் என்றும் பாம்பு என்றும் இரண்டு அர்த்தங்கள் வடமொழியில் உண்டு)

மகா யோகிகளான சப்த ரிஷிகள் நகுஷனின் அவமதிப்பைக் கண்டு சீறி எழுந்தார்கள்.

'பெரியவர்களிடத்தில் பணிவு இல்லாமல் மோகத்தில் அறிவிழந்த நகுஷனே! உன் வார்த்தைப்படியே சர்ப்பமாகவே மாறிக் கிட!' என்று சாபமிட்டார்கள்.

அந்த நொடியே, பெரும் மலைப்பாம்பாக மாறி பூமியில் விழுந்தான் நகுஷன்.

மீண்டும் தேவலோகம் அரசன் இல்லாது போனது.

பின், ரிஷிகள் எல்லோரும் கூடி இந்திரனுக்காக அசுவமேத யாகம் செய்து அவனுடைய பிரம்மஹத்தி தோஷத்துக்கு நிவர்த்தி செய்து அவனை மீட்டார்கள். மீண்டும் தன் இந்திர பதவியில் அமர்ந்து, மூவுலகங்களையும் ஆளத் தொடங்கி னான் இந்திரன்.'

இந்தச் சமயத்தில் சுகர் மகரிஷியிடம் கதை கேட்டுக்கொண் டிருந்த பரீட்சித், தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைக் கேட்டான்:

'ஸ்வாமி! பகவானுக்கு அவருடைய படைப்பில் எல்லோரும் சமம்தானே? அப்படியிருக்க, அவர் இந்திரனுக்கும் தேவர் களுக்கும் அனுக்கிரகம் செய்து அசுரர்களை தானே அழித்ததும் அழிக்க உதவி செய்ததும் ஏன்?'

'பரீட்சித்! பகவான் எல்லோருக்குமே அருள்பாலிக்கத்தான் செய்கிறார். அது நமக்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை, அவ்வளவுதான்! துஷ்டர்களுக்கு அவர் தண்டனை தருவது

போல நமக்குத் தோன்றினாலும், அதுவும் அவர்களுக்கு நன்மை செய்வதற்குத்தான்! பக்தி, சிநேகம், காதல்(காமம்), பயம், விரோதம் என்ற இந்த ஐந்துவகைகளுமே பகவானை அடைவதற்கான மார்க்கம்தான். என்னைப்போன்ற மக ரிஷிகள் பக்தியாலும், பாண்டவர்கள் போல சிநேகத்தாலும், கோபிகைகள் போல காதலாலும், பயத்தால் கம்சன் போன்ற வர்களாலும், விரோதத்தால் இரண்யாட்சன், இரண்யகசிபு போன்றவர்களாலும் பகவானைச் சென்று சேர்கிறார்கள்.

துவார பாலகர்களான ஜய விஜயர்கள் மூன்று பிறவிகள் அசுரர்களாகப் பிறந்து பகவானை அடைவார்கள் என்று சாபம் ஏற்பட்டதல்லவா? அந்தச் சாபத்தின்படிதான் அவர்கள் முதல் பிறவியில் இரண்யாட்சன் இரண்யகசிபுவாகவும், அடுத்த பிறவியில் ராவணன் கும்பகர்ணனாகவும், கடைசி ஜென்மத்தில் சிசுபாலன் தந்தவக்த்ரர்களாகவும் பிறந்து பகவானால் வதம் செய்யப்பட்டு சாப விமோசனம் அடைந்து அவருடைய திருவடியைச் சென்று சேர்ந்தார்கள்' என்றார் சுகர் மகரிஷி.

'ஸ்வாமி! இரண்யாட்சன் வராக அவதாரத்தின் மூலம் கொல்லப்பட்டதைக் கூறினீர்கள். இரண்யகசிபு என்ன வானான்? அவன் என்ன செய்தான்?'

இரண்யகசிபுவின் கதையைச் சொல்லத் தொடங்கினார் சுகர் மகரிஷி.

***

பக்தனுக்காக வந்த உக்ர அவதாரம்!

விஷ்ணுவின்மேல் தீவிரப் பகையோடும், தீராத கோபத்தோடும் இருந்தான் இரண்ய கசிபு!

அவனுடைய தம்பி இரண்யாட்சனை வராக அவதாரம் எடுத்துக்கொன்றவன் என்பதால் விஷ்ணுவை பழிதீர்த்துக் கொள்ள துடித் தான். ஆனால், விஷ்ணுவை அவனால் கண்டு பிடிக்கத்தான் முடியவில்லை.

பக்தர்களின் கண்களுக்கே எளிதில் தட்டுப் படாதவர், பாவியின் கண்களுக்கு அத்தனை சுலபத்தில் அகப்பட்டு விடுவாரா என்ன?

இரண்யகசிபு, ஆத்திரத்துடன் தன் அரக்கப் படையினருக்குக் கட்டளையிட்டான்.

'மூவுலகிலும் பூஜைகள், யாகங்கள், வேள்விகள், வேதம் ஓதுவது எதுவும் நடைபெறக் கூடாது. கடவுளைப் பூஜிப்பவர்களையும் யாகம் நடத்துபவர்களையும், வேதம் ஓதும் அந்தணர்களையும் பசுக்களையும் அடித்துக் கொல்லுங்கள். அந்த இடங்களை தீயிட்டுக் கொளுத்துங்கள். நம் எதிரிகளான தேவர்கள் அவிர்பாகங்கள் கிடைக்காமல் செத்துத் தொலையட்டும். தேவர்களுக்கு ஆதரவாகவும் அசுரர்களுக்கு எதிரியாகவும் உள்ள அந்த மகா விஷ்ணு, மனம் வேதனைப்பட்டு வெளிப்படட்டும். அப்போது நான் அவனைக் கொன்று, அவன் ரத்தத்தால் என் தம்பிக்கு அர்ப்பணம் செய்கிறேன்' என்று கொந்தளித்தான்.

இரண்யகசிபுவின் ஆணைப்படியே அசுரர்கள் வேள்விகளை அழித்து, அந்தணர்களை வதைத்து, தீயிட்டுக் கொடுமை புரிந்தனர்.

பின் இரண்யகசிபு, நீண்ட ஆயுளையும் எவராலும் வெல்ல முடியாத வலிமையையும் பெறுவதற்காக தவம் செய்யத் தீர்மானித்தான். மந்திர மலைக்குச் சென்றான். அங்கே கட்டை விரலால் மட்டுமே பூமியில் நின்று, கைகளை உயரே தூக்கிக் கொண்டு பிரம்மனை நோக்கிக் கடுமையான தவத்தில் மூழ்கினான்.

அவனுடைய தவம் வருடக்கணக்கில் தொடர்ந்தது. அவன் மேல் புதர் மூடி, புற்று வளர்ந்து மறைத்தது. எறும்புகளும் கரையான்களும் அவன் உடலை அரிக்கத் தொடங்கின. உணவு தண்ணீர் இல்லாமல் உடல் இளைத்து எலும்பானது.

இரண்யாட்சனின் தவத்தின் விளைவாக பூமி நடுங்கியது. கடல்கள் கொந்தளித்தன. நட்சத்திரங்கள் விழுந்தன. தவாக்னி நான்கு திசைகளையும் சுட்டெரித்தது. சொர்க்கத்திலிருந்த தேவர்கள் வெப்பத்தைத் தாங்கமுடியாமல் துடித்தனர். பிரம்மனிடம் சென்று முறையிட்டார்கள்.

இரண்யகசிபுவின் தவத்தை நிறுத்துவதற்காக அவன்முன் தோன்றினார் பிரம்மா.

பிரம்மதேவனின் தரிசனத்தைக் கண்டுமகிழ்ந்து அவரை வணங்கினான் இரண்யகசிபு.

'இரண்யகசிபு! உன்னுடைய கடுமையான தவம் என்னை மகிழ்வித்தது. உனக்கு, என்ன வரம் வேண்டும் கேள்?' என்றார்.

'பிரம்மதேவரே! எனக்கு மரணமே வரக் கூடாது. யமன் என் வாசலை எட்டியும் பார்க்கக் கூடாது!' என்று கேட்டான் இரண்யகசிபு.

'இரண்யா! மரணமே இல்லாத வாழ்வு யாருக்கும் கிடைக்காது. ஒரு ஜீவன் பிறவி எடுத்தால் அது ஏதாவது ஒரு காலத்தில் அழியத்தான் வேண்டும். வேறு வரத்தைக் கேள்!'

இரண்யகசிபு வேறு வகையில் தன் ஆயுளை நீட்டித்துக் கொள்ள முடிவெடுத்தான். அதன்படி வரங்களைக் கேட்டான்.

'பிரம்மதேவரே! நீங்கள் படைத்த எவராலும் எதனாலும் எனக்கு மரணம் வரக் கூடாது. நான் வசிக்கும் இடத்துக்கு உள்ளேயோ வெளியிலோ; இரவிலோ பகலிலோ; ஆகாயத்திலோ பூமியிலோ என் உயிர் போகக் கூடாது. எந்த ஆயுதங்களாலும் கொல்லப்படக் கூடாது. அசையும் அசையாப் பொருள் எதனாலும் மற்றும் தேவர்களாலோ அசுரர்களாலோ, அப்சரஸ்களாலோ நாகங்களாலோ எந்த இனத்தின் மூலமாகவும் எனக்கு சாவு வரக் கூடாது. அஷ்டமா ஸித்திகள் எல்லாம் எனக்குக் கைகூட வேண்டும். மூவுலகங்களையும் நான் ஆள வேண்டும்' - அடுக்கிக்கொண்டே போனான் இரண்யகசிபு.

பிரம்மா வேறுவழியில்லாமல், இரண்யகசிபு வரிசையாகக் கேட்ட வரங்களை அளித்துவிட்டுச் சென்றார்.

எளிதில் மரணம் நெருங்க முடியாதவனாக சந்தோஷத்துடன் நாடு திரும்பினான் இரண்யகசிபு.

அப்போதே தன் அசுரப்படைகளுடன் புறப்பட்டு மூவுலகங்களையும் வென்றான். இந்திரனை அடித்துத் துரத்திவிட்டு

தேவலோகத்தைக் கைப்பற்றிக்கொண்டான். அஷ்டதிக் பாலகர்களும் தேவர்களும் அனைவரும் அவனுக்கு அடிமையானார்கள். சூரியன் சந்திரன் உள்ளிட்ட எல்லா நவக்கிரகங்களும் அவனுடைய அரண்மனையில் வேலைக்காரர்களாக பணியாற்றினார்கள்.

'மரணமே இல்லாதவன் நான். இனி எனக்கு அழிவில்லை. எனவே, நானே கடவுள்!' என்று அறிவித்துக்கொண்டான் இரண்யகசிபு.

மூவுலகங்களிலும் இருந்த கடவுளர்களின் கோயில்கள் இடிக்கப்பட்டன. எல்லா இடங்களிலும் இரண்யகசிபுவுக்கு ஆலயங்கள் கட்டப்பட்டன. அனைவரும் இரண்யகசிபுவையே கடவுளாகத் தொழ கட்டாயப்படுத்தப்பட்டனர். கட்டளைக்கு அடிபணிய மறுத்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டனர்.

முனிவர்கள், ரிஷிகள், அந்தணர்கள், தேவர்கள் எல்லோருமே அசுரர்களால் துன்புறுத்தப்பட்டார்கள். வேதனையைத் தாங்கிக்கொள்ளமுடியாமல் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பகவான் நாராயணனைத் துதித்தார்கள்.

பகவான் அசரீரியாக அவர்களுக்கு அபயம் அளித்தார்.

'பக்தர்களே! வரங்கள் பெற்றதன் காரணமாக மரணமில்லாதவன் என்கிற மமதையோடு மேலும் மேலும் தவறு செய்கிறான் இரண்யகசிபு. ஆனால், எவன் ஒருவன் அடக்கம் இல்லாமல் தன் சக்தியை தவறான வழியில் செலுத்தி அப்பாவிகளைத் துன்புறுத்துகிறானோ அப்போதே அவன் அழிவு நெருங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். மூவுலகத்தையும் துன்புறுத்தி வரும் இரண்யகசிபு, எப்போது அவனுடைய மகனான பிரகலாதனைத் துன்புறுத்தி விரோதம் செய்கிறானோ அப்போது நானே அவனைக் கொல்வேன்!' என்று ஆறுதல் கூறினார்.

பகவான் அப்படிச் சொன்னதற்கு காரணம் இருந்தது. இரண்யகசிபுவின் பிள்ளையான பிரகலாதன், பகவான்

நாராயணனின் பரம பக்தன். தூக்கத்திலும் விழிப்பிலும் ஸ்ரீஹரியின் நினைவாகவே இருப்பவன். மனத்தில் சதா சர்வ காலமும் அவனையே பூஜிப்பவன்.

சரி! மகா விஷ்ணுவை மனமார வெறுக்கும் இரண்யகசிபுவின் பிள்ளை எப்படி இத்தனை தீவிர நாராயண பக்தனானான்?

இதற்குக் காரணமான நிகழ்ச்சி இரண்யகசிபு தவம் செய்யச் சென்றிருந்தபோது நடந்தது!

இரண்யகசிபு மந்திர மலைக்கு தவம்செய்யச் சென்றதும், அதுதான் சமயமென்று இந்திரன் தனது படையினருடன் அசுரர்கள்மீது படையெடுத்துச் சென்றான். அவர்களைத் தாக்கி வீழ்த்திவிட்டு இரண்யகசிபுவின் மனைவியான லீலாவதியைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான்.

அப்போது நாரதர் அவனை வழிமறித்தார்.

'இந்திரா! எதற்காக இரண்யகசிபுவின் மனைவியைத் தூக்கிச் செல்கிறாய்?' என்று கேட்டார்.

'நாரதரே! இவள் வயிற்றில் இரண்யனின் அரக்க வாரிசு வளர்ந்து வருகிறது. அது பிறந்தால் தகப்பனைப்போல் தேவர்களுக்கு தொல்லை கொடுக்கத்தான் செய்யும். எனவேதான், கருவையும் சேர்த்து இவளைக் கொன்றுவிடப் போகிறேன்!'

'இந்திரா! நீ எத்தனை பெரிய தவறு செய்ய இருந்தாய் தெரியுமா? இவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை, பகவான் நாராயணனின் பரம பக்தனாக உலகமே போற்றும் அளவுக்குப் புகழ்பெறப் போகிறது. இந்த மகனைக் காரணமாக வைத்துதான் இரண்யகசிபு வதம் செய்யப்படப் போகிறான். எனவே, இவளை விட்டுவிடு!'

இந்திரன் மனம் மாறி இரண்யகசிபுவின் மனைவியை நாரதரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றான். நாரதர் அவளை தன் ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று பத்திரமாக வைத்துப் பராமரித்தார். பிரகலாதன் அவள் வயிற்றில் கருவாக

இருக்கும்போதே, திருமாலின் பெருமைகளையும் அவர்மீது செலுத்தும் பக்தி யோகத்தையும் ஞான யோகத்தையும் உபதே சித்தார்.

தவம் பூர்த்தியாகி வரங்கள் பெற்றுவந்த இரண்யகசிபு, இந்திரன் தன் மனைவியைக் கடத்திக்கொண்டு போனதை அறிந்து ஆத்திரம் கொண்டான். பின் நாரதர் அவளைக் காப்பாற்றி பாதுகாப்பாக வைத்திருக்கிறார் என்று தெரிந்து, அவருக்கு நன்றி தெரிவித்து தன் மனைவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். இதற்குப் பிறகு தான் அவன் தேவலோகத்தின்மீது படையெடுத்து இந்திர னைத் துரத்தியது நடந்தது.

நாரதரிடம் கருவிலேயே உபதேசம் பெற்ற பிரகலாதன், பிறந்த பின்பும் மகா விஷ்ணுவின் பரம பக்தனாகவே இருந்தான். இது நெடுநாள் வரை இரண்யகசிபுவுக்குத் தெரியவில்லை.

பிரகலாதனிடம் பேரன்பு கொண்டிருந்தான் இரண்யகசிபு. அவன் கல்வி கற்கும் காலம் வந்ததும் சுக்ராச்சாரியாரின் மகன் களிடம் கல்வி கற்க, குருகுலத்துக்கு அனுப்பி வைத்தான்.

அங்கேதான் தொடங்கியது பிரகலாதனுக்கு பேராபத்து!

ஒருநாள் பிரகலாதனின் ஆசிரியர்கள் அலறியடித்துக்கொண்டு இரண்யகசிபுவின் சபைக்கு ஓடி வந்தார்கள்.

'மகாராஜா! மகாராஜா! இளவரசர் பிரகலாதன் தன்னுடன் படிக்கும் குருகுலத்து மாணவர்களையெல்லாம் தவறான பாதைக்கு திசை திருப்புகிறார். நமது எதிரியான அந்த ஹரியின் நாமத்தை அவர் ஜெபிப்பது மட்டுமில்லாமல் மற்ற அசுர பாலர்களுக்கும் சொல்லிக்கொடுத்து ஜெபிக்கச் சொல்கிறார். ஆசிரமம் முழுதும் அந்த ஹரியின் நாமமே எதிரொலிக்கிறது' என்று புலம்பினார்கள்.

அதைக்கேட்டு இரண்யன் கோபம் கொண்டான். பிரக லாதனை உடனே அழைத்து வரும்படி சொன்னான்.

'தந்தையே, அழைத்தீர்களாமே!' - தேன் சொட்டும் குரலுடன் பிரகலாதன் அவனெதிரே வந்து நின்றபோது இரண்யனுக்கு அவனைக் கோபித்துக்கொள்ள முடியவில்லை. கொஞ்சத் தான் தோன்றியது.

ஆசையுடன் அவனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, 'பிரகலாதா! உன் மனத்தை யாரோ கெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அறியாமையினால் நீ நமது குலத்தின் எதிரியான அந்த நாராயணனின் பெயரைச் சொல்கிறாயாமே! மகனே! நாராயணன் நம் குல எதிரி. என் தம்பியைக் கொன்ற வன். நான் தவம்செய்யப் போனபோது உன் தாயைக் கடத்திச் சென்றானே இந்திரன்! அவனுக்கு ஆதரவு தருபவன். அவர்கள் எல்லாம் நமது அசுர குலத்தின் எதிரிகள். எனவே, இனி ஹரியின் பெயரைச் சொல்லாதே' என்று அன்புடன் சொன்னான்.

'தந்தையே! பகவான் நாராயணன் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர். என் சிறிய தந்தை இரண்யாட்சன் பூமாதேவி யைக் கடலுக்கு அடியில் சிறைவைக்க முயன்றதால்தானே நாராயணன் அவரைக் கொன்றார்! தவறு செய்தவர்களை நீங்கள் தண்டிப்பதில்லையா?' - அழகாகப் பேசினான் பிரகலாதன்.

குழந்தை தெரியாமல் பேசுகிறான் என்று நினைத்த இரண்யகசிபு, மேலும் பொறுமையுடன் நாராயணனை வெறுக்கும்படி பிரகலாதனுக்கு அநேகவிதமாக அறிவுரைகள் கூறினான்.

ஆனால் பிரகலாதனோ இரண்யகசிபு சொல்வது தவறென்று சொல்லி, 'தந்தையே! நாமெல்லாம அழியும் உடலைப் பெற்றவர்கள். பகவான் நாராயணன் நித்யமானவன். அவனே உலகைப் படைத்தும், காத்தும், அழித்தும் ரட்சிப்பவன். நாராயணனே மங்களம். நாம் அவனுடைய திருவடியைப் பற்றிக்கொள்வோமானால் கிடைத்தற்கரிய மோட்சத்தைப் பெறுவோம். ஸ்ரீமன் நாராயணனின் திருவடியைப் பற்ற

வேண்டுமானால் அதற்கான எளிய வழி அவனுடைய திருநாமம்தான்! அவனுடைய திருநாமம் அவனைக் காட்டிலும், அவன் சரித்திரத்தை விடவும் மங்களமானது. 'நாராயணா' என்று நாம் சொல்கிற சப்தத்தைக் கேட்கிறபோது, அப்படியே உருகிப் போய்விடுவார் பரமாத்மா!' என்று சொல்லி, இதைத் தொடர்ந்து அஷ்டோத்திர நாராயண மந்திரமான 'ஓம் நமோ நாராயணாய' என்பதை தன்னை மறந்து ஜெபிக்கத் தொடங்கினான்.

பரம எதிரியின் பெயரை தன்னுடைய மகன் தன்னெதிரிலேயே சொல்வதைக் கேட்ட இரண்யகசிபு பொறுமை இழந்தான். கட்டுக்கடங்காத கோபம் கொண்டான். எதிரியைத் துதிப்பவன் தன் மகன் ஆனாலும் உயிரோடு இருக்கக் கூடாது என்கிற முடிவுக்கு வந்தான்.

காவலர்களை அழைத்து, 'இந்தக் குலத் துரோகியை மலை உச்சியிலிருந்து உருட்டிவிடுங்கள்' என்று கட்டளையிட்டான். தாய் லீலாவதி, மகனை மன்னிக்கும்படி கெஞ்சினாள். காலில் விழுந்து கதறினாள். இரண்யன் கேட்கவில்லை.

அரசனின் கட்டளைப்படியே காவலர்கள், பிரகலாதனை மலையிலிருந்து கீழே உருட்டிவிட்டனர். பிரகலாதனோ நாராயண நாமத்தை உச்சரித்தபடி உடம்பில் சிறிய காயம்கூட இல்லாமல் திரும்பினான்.

கோபம் தீராத இரண்யன் பாலில் விஷத்தைக் கலக்கி கொடுக்கச் செய்தான். கொடிய நாகத்தைக் கொண்டு கடிக்க விட்டான். யானையைக் கொண்டு மிதிக்கவிட்டான். ஆனால், எதுவுமே பிரகலாதனை பாதிக்கவில்லை. யானை, மிதிப்பதற்கு பதிலாக பிரகலாதனை மண்டியிட்டு வணங்கியது.

அதன்பின்னும் இரண்யன் மனம் மாறவில்லை. ஒரு பெரும் பாறையுடன் பிரகலாதனை, இரும்புச் சங்கிலிகளால் கட்டச் செய்தான். பிரகலாதனுடன் சேர்த்து பாறையை நடுக்கடலில் போடச்சொன்னான். அப்போதும் அவன் எண்ணம் ஈடேறவில்லை. பிரகலாதன் சாகவில்லை.

'ஓம் நமோ நாராயணா' என்று பிரகலாதன் ஹரியின் நாமத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்க அந்தப் பெரும் பாறையே தெப்பமாக மாறி பிரகலாதனை கரையில் கொண்டு வந்து சேர்த்தது.

இரண்யன் தீர்மானம் செய்தான். இறுதியாக ஒருமுறை மகனிடம் பேசிப்பார்ப்போம் என்றெண்ணி பிரகலாதனை சபா மண்டபத்துக்கு அழைத்துவரச் சொன்னான்.

மிகுந்த பணிவோடும் கூப்பிய கரங்களுடனும் தந்தை முன் வந்து நின்றான் பிரகலாதன்.

இரண்யகசிபு கோபமும் பாசமுமாகக் கேட்டான்: 'பிரகலாதா! ஏன் இப்படி, தவறுக்கு மேல் தவறு செய்கிறாய்? என் வல்லமைக்குப் பயந்து மூவுலகங்களும் நடுங்கிக்கொண்டிருக்க, என்னை எதிர்க்கும் தைரியம் உனக்கு எப்படி வந்தது?'

பிரகலாதன் மிகவும் அமைதியாக பதில் கூறினான்.

'தந்தையே! எனக்கும் உங்களுக்கும், ஏன் உலக ஜீவன்கள் அனைத்துக்கும் துணிவைக் கொடுப்பவர் நாராயணனே! அவரே நம் எல்லோருக்கும் பலம். அவர் அனைவருக்கும் பராக்கிரமம் வழங்குபவர். மனத்துக்கு சக்தியைக் கொடுப்பவர். இனியாவது, உங்களுடைய அகங்காரத்தை விட்டுத் தள்ளுங்கள். நாராயணின் திருவடியைப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களின் சகல பாவங்களையும் மன்னித்து அருள்புரிவார்' என்று உபதேசித்தான்.

இரண்யன் அடங்காத ஆத்திரம் கொண்டான். 'நாராயணனா? எனக்குப் பயந்து ஓடி ஒளிந்துகொண்ட கோழை! அவன் என்னைக்காட்டிலும் மேலான கடவுளா? இப்போது அவன் எங்கிருக்கிறான் சொல்?'

'தந்தையே! அவன் இல்லாத இடமே இல்லை. அண்ட சராசரங்கள் அனைத்திலும் இருக்கிறான். தூணிலும் இருக்கிறான். துரும்பிலும் இருக்கிறான். சர்வ வியாபி அவன்!'

'அப்படியா! இதோ இந்தத் தூணில் இருக்கிறானா?' என்று பக்கத்திலிருந்த தூணைக் காண்பித்துக் கேட்டான்.

'ஆம். அவர் இதிலும் இருக்கிறார்!' - நம்பிக்கையுடன் சொன்னான் பிரகலாதன்.

'அதை இப்போதே பார்த்துவிடுகிறேன்! அந்தத் துரோகி வெளிப்பட்டால் ஒழித்துவிடுகிறேன்!' என்றபடி, இரண்யன் ஆத்திரத்துடன் அருகிலிருந்த தூணை தன் கையிலிருந்த கதாயுதத்தால் ஓங்கி அடித்தான்.

விளைந்தது பேராச்சரியம்!

தூணைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டது ஒரு விசித்திர உருவம். மனிதனாகவும் இல்லாமல் மிருகமாகவும் இல்லாமல், சிங்க முகமும் மனித உடலும் கொண்டு வெளிப்பட்டார் நரசிம்ம பகவான்.

மேலும் கீழுமாக, விண்ணுக்கும் மண்ணுக்குமாக, பூமிக்கும் ஆகாயத்துக்குமாக நின்ற நரசிங்க மூர்த்தியைப் பார்த்து வியந்து, அதிர்ச்சியடைந்து நின்றான் இரண்யன்.

அளவிடமுடியாத மகா கோபத்துடன் செக்கச் சிவந்த கண்களும், சுழல்கின்ற நாக்கும், கோரப் பற்களும், கூர்மையான கத்தி போன்ற நீள நகங்களுமாக நரசிம்ம மூர்த்தி இரண்யனை நோக்கி வந்தார்.

இது தன்னுடைய எதிரியான ஸ்ரீ ஹரியே என்று உணர்ந்த கொண்ட இரண்யன், கோபத்துடன் கதையைச் சுற்றிக் கொண்டு அவர்மீது பாய்ந்தான். நரசிம்ம மூர்த்தி, அவனுடைய கதையை ஒடித்து எறிந்தார். இரண்யனை ஒரு பொம்மை போல தூக்கிக்கொண்டு நடந்தவர், வாசற்படியின் மீது சென்று அமர்ந்தார்.

இரண்யனை தன் மடிமீது இருத்திக்கொண்டு கூரிய நகங்களினால் அவன் வயிற்றைக் கிழித்து, குடலை உருவி மாலையாகப் போட்டுக்கொண்டு ரத்தத்தைப் பருகினார்.

இந்தக் காட்சியைக் கண்ட தேவர்கள் ஜெயகோஷம் செய்து வணங்கினார்கள்.

இரண்யன் பெற்ற வரத்தின்படியே, அது பகலும் இல்லாத இரவும் இல்லாத அந்திப்பொழுது! நரசிம்ம அவதாரமோ, மனிதனும் இல்லை முழுப் பிராணியும் இல்லை. இது பிரம்மாவின் படைப்பும் இல்லை. தரையிலோ ஆகாயத்திலோ சாவு நேரக் கூடாது என்பதால் நரசிம்மர் இரண்யகசிபுவை தன் மடியின் மீதே போட்டுக்கொண்டார். எந்த ஆயுதத்தினாலும் அழியக் கூடாது என்பதால் தன் கூரிய நகங்களையே ஆயுதமாகக் கொண்டு அவனைக் குத்திக் கிழித்தார் நரசிம்மர்.

இரண்யனை அழித்தபின்னும் நரசிம்மரின் கோபம் அடங்கவில்லை. சினத்துடன் கர்ஜித்தபடி மேனியெல்லாம ரத்த அபிஷேகத்துடன் பயங்கரமாகக் காட்சியளித்தார். அப்போது பூமி நடுங்கியது. கடல் கொந்தளித்தது. தேவர்கள் எல்லாம் அந்தப் பேருருவத்தைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். மகாலக்ஷ்மியும் நரசிம்மரை நெருங்கப் பயந்தாள்.

பிரம்மன், பிரகலாதனை அழைத்தான். 'பிரகலாதா! இப்போது நரசிம்மரை அமைதிப்படுத்த உன் ஒருவனாலேயே முடியும். நீ அவர் அருகில் சென்று சாந்தப்படுத்து!' என்று கூறினார்.

பிரகலாதன் விஷ்ணுவை நெருங்கி அவரை ஸ்தோத்திரங்களால் போற்றித் துதித்தான். பகவான் மனம் மகிழ்ந்து, 'பக்தப் பிரகலாதா! உனக்கு, என்ன வரம் வேண்டும் கேள்?' என்றார்.

'பகவானே! ஆசை இல்லாத மனத்தை எனக்குக் கொடு. எப்போதும் உன்னை மறவாத வரத்தைக் கொடு. அது போதும்' என்றான் பிரகலாதன்

'பரம பக்தனே! உனது புகழ் இந்த உலகத்தில் நீண்டு நிலைக்கும். இந்த யுகம் முடியும்வரை அசுரர்குல மன்னனாக இருந்து சிறப்பான ஆட்சி நடத்தி கடைசியில் என்னிடம் வந்து சேருவாய்!' என்று ஆசீர்வதித்தார்.

பின், சுக்ராச்சாரியாரைக் கொண்டு பிரகலாதனுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து அவனை மூன்று உலகுக்கும் அதிபதியாக்கினார்.

என்று இரண்ய கசிபுவின் வதத்தைக் கூறி முடித்த சுகர் பிரம்மரிஷி பரீட்சித்திடம் மேலும் சொன்னார்.

'பகவானின் நிரசிம்ம அவதாரத்தை நாழிகை அவதாரம் என்பார்கள். பக்தர்கள் துயரப்படுவதை காணச் சகிக்காதவர் அவர். தன்னைச் சரணடைந்தவர்களின் துன்பத்தை நாழிகை நேரத்தில் தீர்த்து அருள் பாலிப்பவர். இப்படி பரந்தாமனின் அவதார மகிமைகள் ஒவ்வொன்றும் சொல்லச் சொல்ல இனிப்பவை. பகவான் நாராயணன் கருணாசாகரன். அசுரர்கள், மனிதர்கள், விலங்குகள் என்றெல்லாம் பாகுபாடு கொள்ளாமல், 'தெய்வமே' என்று ஒரு யானை கூப்பிட்டதும் கூட அதன் துன்பத்தைத் துடைக்க ஓடோடி வந்தவன்'

'ஸ்வாமி, முதலையின் வாயில் சிக்கித் தவித்த கஜேந்திர யானையைத்தானே சொல்கிறீர்கள்!'

'ஆமாம்... பரீட்சித்! அந்த முதலையும் சரி, யானையும் சரி... இரண்டுக்குமே அதன் முன்பிறவி தொடர்பால்தான் இப்பிறவி ஏற்பட்டது!' என்றவர் கஜேந்திர மோட்சத்தைப் பற்றிக் கூறத் தொடங்கினார்.

'திரிகூடம் என்பது, பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று உச்சிகளைக் கொண்ட மலை. வைரமும், மரகதமும், ரத்னங்களும் கொட்டிக் கிடக்கும் மலை. அந்த மலையில் ஏராளமான அருவிகள் கொட்டி, எப்போதும் நீர் ஓடிக்கொண்டேயிருந்தது. அடர்ந்த மரங்களும், செடிகொடிகளும், வண்ணப்பூக்களும், மலைச்சரிவை அழகு செய்தன.

கந்தர்வர்களும், வித்யாதரர்களும், அப்ஸரஸ்களும், ஸித்தர்களும் வந்து போகும் அந்தப் பிரதேசத்தில், வருணனுக்குச் சொந்தமான பெரிய பூங்காவனம் ஒன்று இருந்தது. அதில் அழகான தடாகம் ஒன்றும் அமைந்திருந்தது. மலையிலிருந்து



முதலை வாயிலிருந்து கஜேந்திர யானையைக் காப்பாற்றும் மகாவிஷ்ணு.



தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைய, மகாலக்ஷ்மி வெளிப்படுகிறாள்.

கொட்டும் அருவி நீர் அந்தக் தடாகத்தில்தான் சேகரமாகிக் கொண்டிருந்தது.

ஒருநாள், யானைகளின் தலைவனான கஜேந்திரன் என்கிற யானை, தனது தோழர்களுடனும், மற்ற பெண் யானைகள், குட்டி யானைகளுடனும் அந்தத் தடாகத்துக்கு வந்தது. கோடை வெப்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக நீருக்குள் இறங்கியது.

துதிக்கையால் நீரை அள்ளியெடுத்து, தன் உடல் முழுவதும் ஊற்றிக் கொண்டும், மற்ற யானைகளின் மீது விசிறியெறிந்தும் விளையாடித் திளைத்தது! திடீரென்று அது பயத்துடன் அலறிப் பிளறியது. 'எல்லா யானைகளும் கரையேறுங்கள்!' என்று கத்தியது.

கஜேந்திர யானை எதற்காக அலறுகிறான், ஏன் தங்களை கரைக்குப் போகச் சொல்கிறான் என்று புரியாமல் யானைகள் திகைத்தன. பின்புதான் கஜேந்திர யானையின் காலை ஒரு பயங்கரமான முதலையொன்று கவ்வி இழுப்பதைக் கண்டன. அவற்றிலும் பயத்தோடு பிளிறின.

முதலை, கஜேந்திரனின் காலை பற்றி தடாகத்துக்குள் இழுக்க முயன்றது. யானையோ முதலையின் வாயிலிருந்து, தன் காலை விடுவித்துக் கொள்ளப் போராடியது. யானையின் காலிலிருந்து ரத்தம் வழிந்து தடாகத்தைச் சிவப்பாக்கியது.

அரசனான கஜேந்திர யானைக்குத் துணையாக எல்லா யானைகளும் ஒன்று சேர்ந்து உதவிக்கு வந்தன. கஜேந்திரனை கரைக்கு இழுக்க முயற்சித்தன. முடியாமல் சோர்ந்தன.

முதலைக்கும், யானைக்குமான இந்தப் போராட்டம், நிாள் கணக்கில் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் யானை சோர்ந்து போனது! 'முதலையிடம் தோற்றுப் போய் அதற்கு பலியாகி விடுவோம்' என்று தோன்ற, 'இனி கடவுளே கதி' என்று மனத்தில் நனைத்தது.

அப்படி அது நனைத்தபோதே, முன் ஜென்மத்தில் தான் ஜெபித்த வந்த பகவானின் ஸ்தோத்திரம் அதன் ஞாபகத்துக்கு வந்தது.

கஜேந்திர யானை, மனமார மகாவிஷ்ணுவை தியானித்து, உள்ளப்பூர்வமாக ஸ்தோத்திரத்தை சொன்னது. 'ஆதிமூலமே! என்னைக் காப்பாற்று!' என்று அலறியது.

யானையின் குரல் கேட்டதுமே, மகா விஷ்ணு, கருட வாகனத்தின் மீது பறந்து வந்தார். தனது சக்ராயுதத்தை முதலையின் மீது செலுத்தி, அதைக் கொன்றார். கஜேந்திரனைக் காப்பாற்றினார்.

விஷ்ணுவால் கொல்லப்பட்ட முதலையின் உடலிலிருந்து ஒரு கந்தர்வன் தோன்றினான். அவன் பெயர் ஹூஹூ.

ஒருமுறை அவன் தன் மனைவிகளுடன், குளத்தில் விளையாடி ஜலக்ரீடை செய்தபோது, சற்றுத் தள்ளி தேவலர் என்கிற முனிவர் நீரில் நின்றுகொண்டு அனுஷ்டானம் செய்து கொண்டிருந்தார். கந்தர்வன், விளையாட்டாக நீருக்குள்ளேயே சென்று, அவர் காலைப் பற்றியிருந்தான். கவனம் கலைந்த முனிவர் கோபம் கொண்டார். 'நீருக்குள் எனது காலை பற்றி யிழுத்து, பதற வைத்த நீ, ஒரு முதலையாகப் போ!' என்று சபித்து விட்டார்.

இப்பொழுது விஷ்ணுவின் சுதர்சனத்தால் கொல்லப்பட்டு சாபம் நீங்கியவனான் அந்த கந்தர்வன். பகவானை வணங்கி விட்டு தேவலோகம் சென்றான்.

மகாவிஷ்ணு அன்புடன் தனது திருக்கரங்களால், கஜேந்திர யானையை தடவிக் கொடுக்க அவனும் மனிதனாக மாறினான்.

கஜேந்திரன், முன் ஜென்மத்தில் இந்த்ரத்யும்னன் என்னும் பெயரில் பாண்டிய அரசனாக இருந்தவன். இவன் ஒருமுறை மலைய பர்வதம் என்னும் மலையில் தவம் செய்து கொண்டிருந்தபோது, அகத்திய முனிவர் அங்கே வந்தார்.

பூஜையில் மூழ்கியிருந்ததால், மன்னன் அகத்தியரைக் கவனிக்கவில்லை. விருந்தினனாக வந்த தன்னை அரசன் அவமதித்துவிட்டான் என்று கருதிய அகத்தியர், 'மதங் கொண்டு என்னைக் கவனிக்காமல் இருந்த இவன் ஒரு யானையாகப் பிறக்கட்டும்!' என்று சபித்தார்.

கஜேந்திரன் அந்த பூர்வ ஜென்மத்தின் நனைவாலேயே, ஆபத்தில் ஹரியை ஸ்தோத்திரம் செய்தான். பகவானின் ஸ்பரிசத்தால் சாபத்திலிருந்து மீண்டான். விமோசனம் பெற்ற மன்னன் பகவானின் அருளால் மோட்சமடைந்தான்!' என்றார் சுகர் மகரிஷி.

'ஆஹா! பகவானின் எல்லையில்லாக் கருணையை கேட்கும் போதே மனம் குளிர்ந்து போகிறது மகரிஷி! நானும் பகவானின் திருவடியைப் பற்றிக் கொண்டு மோட்சமடையத்தான் விரும்புகிறேன். இனியொரு பிறவி வேண்டாம் என்றே யாசிக்கிறேன்! யானைக்கும் மோட்சமளித்த ஸ்ரீ ஹரிதான் என்மீது கருணை காட்ட வேண்டும்!' என்று பெருமூச்சு விட்டான்.

பின்தொடர்ந்து, 'ஸ்வாமி! இரண்யகசிபுவின் வதத்துக்குப் பிறகு பிரகலாதனின் பட்டாபிஷேகம் நிடந்தது. அதற்குப் பிறகு தேவர்கள், ரிஷிகளின் துயரம் நீங்கியதல்லவா? என்று கேட்டான்.

'ஆம்! இரண்யன் வதம் செய்யப்பட்டதால் தேவர்களின் துயரம் நீங்கியது. அவர்கள் மீண்டும் உற்சாகமடைந்தார்கள்.

மறுபடியும் இந்திர பதவியை அடைந்த இந்திரன், அது நாள்வரை தான் அடைந்த துன்பங்களிலிருந்து அப்போதும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை; பணிவும் பெறவில்லை.

பகவான் மகா விஷ்ணு தனக்குப் பக்கபலமாக இருக்கிறார் என்கிற தைரியத்தில் இனி தன்னை எதிர்க்க யாருமில்லை என்கிற ஆணவம் கொண்டான்.

அந்த கர்வம் வெளிப்படக்கூடாத இடத்தில் வெளிப்பட்டது. விளைவோ ஒரு சாபத்தில் முடிந்தது!

13

அசுரர்களை ஏமாற்றிய மோகினி!

இந்திரன் ஒருமுறை தன் ஐராவத யானையின்மேல் ஏறிச் சென்றுகொண்டிருந்தான். அப்போது வழியில் எதிர்ப்பட்டார் துர்வாச மகரிஷி.

இந்திரனைக் கண்ட துர்வாசர், மிகுந்த சந்தோஷத்துடன் தன் கையில் வைத்திருந்த தாமரைப் பூ மாலையை, இந்திரனுக்கு பிரியத்துடன் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட இந்திரன் மாலையை அணிந்து கொள்ளாமல் வெகு அலட்சியமாக யானையின் முதுகின்மீது போட்டான்.

யானை அந்த மாலையை துதிக்கையால் எடுத்து, காலின்கீழ் போட்டு மிதித்து நசுக்கியது. இதைக் கண்ட துர்வாசர் அடங்காத கோபம் கொண்டார்.

'இந்திரா! உனது இந்த ஆணவத்துக்கு சொர்க்கலோகத்தின் அதிபதி என்கிற திமிரும், செல்வ சுக போகங்களும்தானே காரணம்? நீயும் உன்னைச் சார்ந்த தேவர்களும், செல்வம், பதவி, அதிகாரம் அனைத்தையும் இழந்து உடல் வலிமையும் குன்றிப்போவீர்களாக!' என்று சாபமிட்டார்.

இந்திரன் பதறிப்போனான். துர்வாசரிடம் மன்னிப்புக் கேட்டான். கொடுத்த சாபத்தை திரும்பப் பெறமுடியாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் துர்வாசர்.

துர்வாசரின் சாபம் பலித்தது! வலிமை குன்றிப்போன தேவர்களின்மீது அசுரர்கள் படையெடுத்து வென்றனர். தேவலோகமும் அனைத்துச் செல்வங்களும் அசுரர்களின் கைக்குப் போனது. இந்திரனும் தேவர்களும் பயந்து ஓடி ஒளிந்தார்கள்.

வேறு வழியில்லாமல் வழக்கம்போல அழுது புலம்பிக் கொண்டு பிரம்மனிடம் சென்று கதறினார்கள். அவர் அனைவரையும் அழைத்துக்கொண்டு மகா விஷ்ணுவிடம் சென்றார். எல்லோரும் விஷ்ணுவின் திருவடிகளில் பணிந்து முறையிட்டார்கள்.

இந்திரன், 'பகவானே! நான் செய்தது தவறுதான். இனி எப்போதும் தவசீலர்களை அவமதிக்க மாட்டேன். எந்த நிலையிலும் ஆணவம் கொள்ளமாட்டேன். எங்களை ரட்சித்துக் காப்பாற்றுங்கள் பிரபோ!' என்று வேண்டினான்.

இந்திரன் தவறை உணர்ந்து கெஞ்சியதால் மனம் இரங்கிய மகா விஷ்ணு, 'தேவர்களே! நீங்கள் மனம் வருந்திப் பயனில்லை. அசுரர்களை இப்போது வெல்லமுடியாது. அதற்கான காலம் இன்னும் வரவில்லை. முதலில் துர்வாசரின் சாபத்தால் இழந்துபோன வலிமையை தேவர்கள் அனைவரும் திரும்பப் பெறவேண்டும். அதற்கு நீங்கள் பாற்கடலைக் கடையவேண்டும். அப்போது வெளிப்படும் அமிர்தத்தை அருந்தினால், நீங்கள் பழைய நிலைக்கு மீண்டு விடலாம். ஆனால் நீங்கள் இப்போது இருக்கும் நிலையில், பாற்கடலை

தனியாகக் கடையமுடியாது. எனவே, அசுரர்களையும் உங்களுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்றார்.

'அசுரர்கள் இதற்குச் சம்மதிப்பார்களா? அப்படியே சம்மதித் தாலும் அவர்களும் அமிர்தத்தில் பங்கு கேட்பார்களே!'

'ஆமாம். தரத்தான் வேண்டும்! அதை நான் பார்த்துக் கொள் கிறேன். நீங்கள் சென்று தாற்காலிகமாக அசுரர்களுடன் சமாதானம் செய்துகொள்ளுங்கள். அவர்களை பாற்கடலைக் கடைய அழைத்து வாருங்கள். மந்திர மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பை கயிராகவும் கொண்டு பாற்கடலை கடையத் தொடங்குங்கள். வேண்டும் உதவியை நானும் செய்கிறேன்' என்று தேவர்களை அனுப்பிவைத்தார்.

தேவர்கள் விஷ்ணு கூறியபடியே அசுரர்களுடன் சமாதானம் செய்துகொண்டார்கள். அமிர்தத்தில் பங்கு தருவதாகச் சொல்லி, பாற்கடலைக் கடைய அவர்களின் சம்மதத்தைப் பெற்றார்கள்.

அசுரர்களும் தேவர்களும் பாற்கடைக் கடையும் முயற்சியில் இறங்கினார்கள். அவர்கள் மந்திர மலையை பாற்கடலுக்குத் தூக்கிச்செல்லும்போது கனம் தாங்காமல் கீழே போட்டு விட்டார்கள். பின் நாராயணன் தன் கருட வாகனத்தின்மீது வந்து மந்திர மலையை சர்வ சாதாரணமாக தூக்கிப்போய் கடலில் போட்டார்.

பாற்கடலில் மந்திர மலை மத்தாகியது. வாசுகி நாகம் கயிறாகி யது. வாசுகி நாகத்தின் தலைப்பகுதியை அசுரர்கள் பிடித்துக் கொள்ள, வால் பகுதியை தேவர்கள் பிடித்துக் கொண்டனர். பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். ஆனால் மந்திர மலை கனம் தாங்காமல் கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது. தேவர்களும் அசுரர்களும் இதைக்கண்டு மனம் பதைத்தார்கள். மனம் சோர்ந்துபோனார்கள்.

உடனே மகா விஷ்ணு, மந்திர மலையைத் தாங்குவதற்காக ஆமையாக (கூர்மாவதாரம்) வடிவெடுத்தார். கடலுக்குள்

சென்று மந்திர மலையை தன் முதுகின்மீது ஆடாமல் அசை யாமல் தாங்கிக்கொண்டார். மலை மறுபடியும் மேலெழுந்தது.

தேவர்களும் அசுரர்களும் உற்சாகம் கொண்டவர்களாக மீண்டும் கடலைக் கடைந்தார்கள். இப்போது இன்னொரு அபாயம் ஏற்பட்டது.

கயிறாக இருந்த வாசுகிப் பாம்பு, தேவர்களும் அசுரர்களும் வலிமையுடன் தன்னை இழுப்பதால் வேதனையடைந்தது. வலி தாங்காமல் ஆலகாலம் என்னும் விஷத்தைக் கக்கியது. அந்த விஷத்தின் வீரியம் தாங்காமல் எல்லோரும் பயந்து ஓடினார்கள். சிவ பெருமானிடம் சென்று உதவி கேட்டார்கள்.

பரமேஸ்வரன் கருணையுடன் தேவர்களைக் காப்பதற்காக, அந்த ஆலகால விஷத்தை அள்ளிப் பருகினார். பார்வதி பதறிப் போய், தன் கணவனின் கழுத்தில் கை வைத்து விஷம் உள்ளே போகாமல் தடுத்து நிறுத்தினாள். அதனால் சிவனின் கழுத்து நீலமாகியது. எல்லோரும் அவரை 'நீலகண்டன்' என்று போற்றினார்கள்.

மறுபடியும் பாற்கடல் கடையும் பணி தொடங்கியது. விடா முயற்சி பலனைத் தந்தது. பாற்கடலிலிருந்து, ஒவ்வொன்றாக வெளிப்படத்தொடங்கின.

முதலில் காமதேனு வெளிப்பட்டாள். யாகங்களுக்குத் தேவையான பால், நெய், தயிர் ஆகியவற்றைத் தரும் அந்த தேவ பசுவை ரிஷிகள் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்ட னர். அடுத்து உயர்ந்த ஜாதிக்குதிரையான 'உச்சைசிரவஸ்' தோன்றியது. அதை அசுரர்களின் தலைவனான மகாபலி பெற்றுக்கொண்டான். பின் வெளிப்பட்ட பாரிஜாத மரத்தை யும் அப்சர கன்னிகைகளையும் தேவர்கள் சொந்தமாக்கிக் கொண்டனர்.

இதன்பின் ஒளி வெள்ளத்துடன் சௌந்தர்ய தேவியாக மகாலக்ஷ்மி வெளிப்பட்டாள். தேவர்கள் அனைவரும்

அவளைத் துதித்து ஆராதித்தனர். லக்ஷ்மி தனக்கு ஏற்ற நாயகனாக விஷ்ணுவைத் தேடிச்சென்று மாலையிட்டாள். அவரும் மகாலக்ஷ்மியை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு தன் மார்பிலே எப்போதும் வாசம் செய்பவளாக வைத்துக் கொண்டார். மகாலக்ஷ்மிக்குப் பிறகு, மது பானங்களுக்கு அதி தேவதையான வருணி கடலிலிருந்து தோன்றினாள். அவளை, அசுரர்கள் மிகுந்த ஆசையுடன் தங்களுக்குப் பெற்றுக் கொண்டார்கள்.

பிறகு விஷ்ணுவின் அம்சமான ஆயுர்வேத புருஷன் தன்வந்திரி தோன்றினான். அவன் தன் கையில் அமிர்த கலசத்துடன் வெளிப்பட்டான்.

அமிர்தம் வெளிப்பட்டது தெரிந்ததும் அசுரர்கள், தன்வந்திரி யின் கையிலிருந்து அமிர்த கலசத்தை பிடுங்கிக்கொண்டு ஓடினார்கள். தேவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். திருமாலிடம் சென்று முறையிட்டார்கள்.

திருமால் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்: 'கவலைப்படா தீர்கள்! அமிர்தம் உங்களுக்குக் கிடைக்க நான் வழி செய் கிறேன்!' என்றார்.

அசுரர்களோ கையில் அமிர்தம் கிடைத்தும்கூட, தங்களுக்குள் யார் முதலில் அருந்துவது என்று சண்டையிட்டுக் கொண் டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் மகா விஷ்ணு, உலகின் ஒட்டுமொத்த அழகும் திரண்ட ஒரு பேரழகு மோகினியாக வடிவெடுத்து அசுரர்களின்முன் வந்தார்.

மோகினியைக் கண்ட அசுரர்கள் கையிலிருந்த அமிர்தத்தை யும் மறந்து, அவளுடைய அழகில் மெய்மறந்து நின்றார்கள்.

மோகினி அவர்களை நெருங்கி, 'அழகிய அசுர வீரர்களே! எதற்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள்.

அசுரர்கள் எல்லோருமே அவளை அடையும் விருப்பத்துடன் மோகினியிடம் குழைந்தார்கள்.

'அழகிய தேவதையே! நாங்கள் இந்த அமிர்தத்தைப் பங் கிட்டுக்கொள்வதற்குத்தான் சண்டையிட்டுக்கொள்கிறோம். எங்களின் இந்த மோதலைத் தீர்ப்பதற்காகத்தான் பிரம்மன் உன்னைப் படைத்து அனுப்பியிருக்கிறான் போலிருக்கிறது. இந்தா, இந்த அமிர்த கலசத்தை நீயே பெற்றுக் கொள்! எங்கள் அனைவருக்கும் இதைப் பகிர்ந்து கொடு!' என்று சொல்லி; மோகினியிடம் அமிர்த கலசத்தை ஒப்படைத்தனர்.

மோகினி மயக்கும் புன்னகையுடன் அதை வாங்கிக்கொண்டு, 'முன்பின் தெரியாத பெண்ணிடம் போய் நம்பிக்கை கொள் கிறீர்களே! நான் இதைப் பங்கிடும்போது என்மேல் சந்தேகம் கொள்ளமாட்டீர்களே?' என்று கேட்டாள்.

'உன்மீது நாங்கள் முழு நம்பிக்கை கொண்டுவிட்டோம். நீ எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும்!' - கோர ஸாகச் சொன்னார்கள் அசுரர்கள்.

'சரி. அப்படியானால் பங்கிட்டுத் தருகிறேன். அசுரர்களும் தேவர்களும் இணைந்துதான் இதற்காக உழைத்திருக்கிறீர்கள். எனவே, இரண்டு தரப்பினருமே வரிசையாக அமருங்கள்' என்றாள்.

தேவர்கள் ஒருபுறமும் அசுரர்கள் மறுபுறமுமாக அமர்ந் தார்கள். மோகினி, தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கிக் கொண்டே அசுரர்களைப் பார்த்து மயக்கும் புன்னகையுடன், தன் வசீகர விழிகளால் அவர்களை மயங்கவைத்தாள். அசுரர்கள் அவள் அழகில் சொக்கிப்போய் கிறங்கினார்கள்.

அசுரர்களில் ஒருவன் மட்டும், மோகினி தேவர்களுக்கு அமிர்தத்தை அள்ளி அள்ளிக் கொடுப்பதையும் அசுரர்களுக்கு வெறும் கரண்டியை மட்டும் கவிழ்த்து ஏமாற்றுவதையும் உணர்ந்துகொண்டான். அவன் பெயர் ராகு.

ராகு, மோகினியின் சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, சட்டென்று யாருக்கும் தெரியாமல் தேவர்களின் வரிசையில் போய் அமர்ந்துகொண்டான். அமிர்தத்தைப் பெற்று அருந்தினான். இதைப் பார்த்துவிட்ட சூரிய சந்திரர்கள் அந்த அசுரனை விஷ்ணுவிடம் காட்டிக்கொடுத்தார்கள். விஷ்ணு, தன் சுதர்சன சக்ரத்தால் அவனுடைய தலையைத் துண்டித்தார்.

ஆனால் ராகு அமிர்தம் அருந்தி இருந்ததால் அவனுக்கு மரணம் ஏற்படவில்லை. அவனுடைய தலையும் உடலும் தனித் தனியே இயங்கித் துடித்தன. பிரம்மன், ராகுவின் துண்டித்த தலையோடு பாம்பின் உடலையும், அவன் உடலோடு பாம்பின் தலையையும் இணைத்து இயங்க வைத்தார். அவையே ராகு, கேதுவாக நவக்கிரகங்களில் ஒன்றாகின.

இப்போதும், ராகுவும் கேதுவும் தன்னைக் காட்டிக்கொடுத்த சூரிய சந்திரர்களை விரட்டி விழுங்குவதே கிரகண காலமாகிறது.

மோகினி வடிவமெடுத்த திருமால், தேவர்களுக்கு அமிர்தத்தை முழுவதும் கொடுத்துவிட்டு, கருடன் மீதேறிப் பறந்துவிட்டார்.

அசுரர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிந்து குமுறினார்கள். சீற்றத்துடன் தேவர்களைத் தாக்கினார்கள். மறுபடியும் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் மூண்டது.

அசுர மன்னன் மகாபலி மாயா யுத்தம் செய்தான். இந்திரன் அதை எதிர்கொள்ள முடியாமல் துவண்டான். அப்போது மகா விஷ்ணு அங்கே தோன்றி பலியின் மாயையை அறுத்தெறிந்தார். காலநேமி என்கிற அசுரன் விஷ்ணுவை எதிர்த்துப் போர் செய்து அவர் கையால் மடிந்தான். நமுசி என்பவன் இந்திரனை கோபாவேசத்துடன் தாக்கினான். இந்திரன் எத்தனை முயற்சித்தும் அவனைக் கொல்லமுடியவில்லை. அவன்மீது செலுத்திய பாணங்கள் அத்தனையும் பலனில்லாமல் போனது. வஜ்ராயுதத்தால் தாக்கியும் நமுசியைக் கொல்ல முடியவில்லை.

இந்திரன் செய்வது புரியாமல் திகைத்தான். அப்போது ஓர் அசரீரி ஒலித்தது.

'இந்திரா! இவன் உலர்ந்த மற்றும் ஈரமான ஆயுதங்களால் மரணம் வரக் கூடாது என்று வரம் பெற்றிருக்கிறான். எனவே, உலர்ந்தும் இல்லாமல் நனைந்தும் இல்லாமல் இருக்கும் ஒன்றால்தான் இவனைக் கொல்லமுடியும்!' என்று கூறியது.

இந்திரன் யோசித்தான். முழுவதும் உலர்ந்தும் இல்லாமல் முழுவதும் ஈரமாகவும் இல்லாத கடல் நுரையை ஆயுதமாகக் கொண்டு நமுசியைக் கொன்றான். அந்த யுத்தத்தில் அசுரர்களின் மன்னனாகிய மகாபலியும் மாண்டுபோனான். இதற்குமேல் அரக்கர்களும் அடுக்கடுக்காக பலியாகி மாண்டார்கள்.

அரக்கர் இனமே அழிந்து போய்விடுமோ என்று பயந்துபோன பிரம்மா, அங்கே வந்து போரை அத்துடன் நிறுத்தச் சொன்னார். அசுரர்களை மேலும் மேலும் கொல்லவேண்டாமென்று தடுத்தார்.

அதன்படியே இந்திரன் போரை நிறுத்திவிட்டு, தேவர்களை அழைத்துக்கொண்டு விண்ணுலகம் திரும்பினான்.

அசுரர்கள், இறந்துபோன தங்களின் தலைவன் மகாபலியின் உடலைத் தூக்கிக்கொண்டு குலகுருவான சுக்ராச்சாரியாரிடம் வந்தார்கள். அவர் தன் மிருத சஞ்சீவினி மந்திரத்தால் மகாபலிக்கு உயிர் கொடுத்து எழச்செய்தார். அங்கங்கள் துண்டுபட்டுக் கிடந்த மற்ற அரக்கர்களையும் பிழைக்கவைத்தார்.

பிரம்மன் விரும்பியபடி, போர் அத்துடன் முற்றுப் பெறவில்லை. மீண்டும் தொடரத்தான் செய்தது! அதன் காரணமாகவே மகா விஷ்ணு மற்றொரு அவதாரம் எடுக்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது!

***

14

மூவுலகையும் அளந்த வாமனச் சிறுவன்!

தேவர்களிடம் தோற்றுப்போன அவமானத்தை மகாபலியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவர்கள் தங்களுக்கு அமிர்தத்தைத் தராமல் ஏமாற்றிய கோபம் வேறு உள்ளுக்குள் கொழுந்து விட்டு எரிந்தது.

தேவர்களைப் பழிவாங்கத் துடித்தான் மகாபலி. அவர்களை வெற்றி கொண்டு தேவலோகத்தைக் கைப்பற்றினால்தான் மனது ஆறுதல் அடையும் போலிருந்தது.

மகாபலியின் மனவேதனையைத் துடைக்க சரியான திட்டத்துடன் வந்தார் குலகுரு சுக்ராச்சாரியார்.

'மன்னனே மகாபலி, கவலைப்படாதே! அசுரர் குலம் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க நான் ஒரு வழி சொகிறேன் கேள். நீ உடனடியாக 'விஸ்வஜித்' என்கிற மகா யாகத்தைச் செய். அந்த யாகத்தை நானும், என் குலத்தவர்களாகிய பிருகு வம்சத்து அந்தணர்களும் முன் நின்று நடத்தித் தருகிறோம். யாகத்தைச் சரியாக செய்து முடித்தால் அசுரர்களுக்கு பெரும் வலிமை கிடைக்கும். நீங்கள் நினைத்தது நிறைவேறும். சொர்க்கத்தை மட்டுமல்ல, மூவுலகங்களையுமே கைப்பற்றி சக்ரவர்த்தியாக நீ முடி சூட்டிக் கொள்ளலாம்!' என்றார்.

அவர் சொன்னது மிகச் சரியாகவே நிறைவேறியது.

நியமங்கள் தவறாமல் புனிதம் தவறாமல் செய்யப்பட்ட யாகத்தின் முடிவில், ஹோம குண்டத்திலிருந்து ஒரு தங்க ரதமும், மிகச் சிறந்த குதிரைகளும், வில், அம்புறாத் தூணி, மற்றும் பலவிதமான ஆயுதங்களும் வெளிப்பட்டன. பலியின் பாட்டனாராகிய பிரகலாதன் அங்கு தோன்றி, எப்போதும் வாடாத ஒரு மலர் மாலையை அவனுக்கு அணிவித்து ஆசீர்வதித்தார்.

யாகத்தின் மூலம் கிடைத்த அற்புத ரதத்தில் ஏறி, சக்தி வாய்ந்த ஆயுதங்களுடன் தேவர்கள் மீது படையெடுத்தான் மகாபலி. வழியெங்கும் தன்னை எதிர்த்த அத்தனை தேவர்களையும் தோற்கடித்து, இந்திரனின் தலைநகரான அமராவதி நகரை முற்றுகையிட்டான். இந்திரனை வெளியே வந்து தன்னுடன் போரிடுமாறு அறைகூவி அழைத்தான்.

இறந்து போன பலி உயிர் பெற்று எழுந்து வருவான் என்று இந்திரன் எதிர்பார்க்கவில்லை. அசுரர் படையைக் கண்டு பயந்து நடுங்கியவன், தன்னுடைய குருவான பிருகஸ்பதியிடம் சென்று ஆலோசனை கேட்டான்.

பிருகஸ்பதி, 'இந்திரா, பிருகு வம்சத்து அந்தணர்கள் மூலம் யாகம் செய்து அளவில்லாத பலம் பெற்றுவிட்டான் மகாபலி. இப்பொழுது அவனை யாராலும் எதிர்க்கமுடியாது. அவனை

வெல்லக்கூடியவர் நாராயணன் மட்டுமே. எனவே தேவர்கள் எல்லோரும் தற்சமயத்துக்கு தப்பியோடி தலைமறைவாக இருங்கள். காலம் கூடி வரும்போது தேவர்களுக்கு நல்லது நடக்கும்!' என்றார்.

பிருகஸ்பதியின் யோசனைப்படி இந்திரனும் தேவர்களும் தலைமறைவானார்கள். எதிர்ப்பே இல்லாமல் தேவலோகம் வெகு சுலபமாக பலியிடம் சிக்கியது. மூன்று உலகங்களையும் கைப்பற்றிய பலி, மகாபலி சக்ரவர்த்தியானான். அனைத்து உலகங்களையும் மிக நல்லமுறையில் சிறப்பாக ஆட்சி செய்தான். தன்னை நாடி வந்தவர்கள் அனைவருக்கும் அவர்கள் கேட்டதை வாரி வழங்கினான். இந்த நிலைக்கு தன்னை உயர்த்திய குரு சுக்ராச்சாரியருக்கும், அவரைச் சார்ந்த பிருகு குல அந்தணர்களுக்கும் ஏராளமான செல்வங்களை அள்ளித் தந்து அவர்களைக் கௌரவித்தான்.

மகாபலி அடைந்த இந்த இந்திர பதவி எப்போதும் நிலைப்பதற்காக மேலும் நூறு அசுவமேத யாகங்கள் செய்ய ஏற்பாடு செய்தார் சுக்ராச்சாரியார்.

அதே சமயத்தில் மகாபலியிடமிருந்து இந்திர பதவியைப் பறிப்பதற்காகவும் ஒரு ஜீவன் முயற்சி செய்து கொண்டிருந்தது!

அந்த ஜீவன்...அதிதி! காஷ்யபர் முனிவரின் மனைவி.

காஷ்யப முனிவரின் மற்றொரு மனைவியான திதியின் வம்சத்தினரான அசுரர்குலம் மகிழ்ச்சியோடு இருக்க, தன்னுடைய சந்ததியரான தேவர்கள் ஒளிந்து மறைந்து வாழ்வது அதிதிக்கு மன வேதனையைத் தந்தது.

காஷ்யபர் அதிதியின் துயரத்தைப் புரிந்துகொண்டு ஆறுதல் கூறினார்.

'அதிதி! நடப்பவை யாவும் பகவானின் விருப்பம். அதை மாற்ற விரும்பினால் அவனிடம்தான் சரணடையவேண்டும். நீ 'பயோவிரதம்' என்கிற சிறப்பான நோன்பை தூய்மையுடன் செய்தால் நாராயணன் நிச்சயம் அருள்புரிவார்' என்று கூறிய அவர் நோன்புக்கான வழிமுறைகலையும் சொல்லித் தந்தார்.

அதிதியும் தன் கணவர் உபதேசித்தபடி, பக்தி சிரத்தையுடன் தூய்மையான மனத்துடன் சிறிதும் நெறி தவறாமல் விரதத்தைக் கடைபிடித்தாள்.

அவளுடைய தீவிரமான ஈடுபாட்டைக் கண்டு மகிழ்ந்த மகா விஷ்ணு அவள் முன் தோன்றினார்.

'தேவர்களின் தாயே! உனது நோக்கத்தை நானறிவேன். மகாபலி அசுரன் ஆனாலும், தர்மநெறி தவறாதவனாக, ஒழுக்கத்தில் சிறந்தவனாக, இறைவன் மேல் பக்தி செலுத்துபவனாக மூவுலகங்களையும் நல்லமுறையில் ஆண்டு வருகிறான். இப்போது தெய்வ அனுக்கிரகம் அவன் பக்கம் இருக்கிறது. ஆனாலும் நீ கடைபிடித்த விரதம் வீண் போகாது. நானே உனக்கு மகனாகப் பிறந்து சரியான சமயத்தில் தேவர்களுக்கு அவர்களின் உலகத்தை மீட்டுத் தந்து வாழ வைக்கிறேன்' என்று அருள்பாலித்து மறைந்தார்.

காலம் விரைந்தோடியது. மகா விஷ்ணு தான் தந்த வாக்குறுதியின்படியே, அதிதிக்கும் காஷ்யபருக்கும் மகனாகப் பிறந்தார். அதுவும் வாமனனாக, மிகக் சிறிய குள்ள வடிவத்துடன் அவதரித்தார்.

தேவர்கள், தங்கள் துயரம் தீரப் போகிறதென்று மகிழ்ந்தார்கள். பூத்தூவி வாழ்த்தினார்கள். பகவானே தங்களுடைய குழந்தையாகப் பிறந்ததைக் கண்டு அதிதியும் காஷ்யபரும் ஆனந்தப் பரவசமடைந்தார்கள்.

குழந்தையாகப் பிறந்த வாமனன், குப்புறப் படுக்காமல், தவழாமல், சட்டென்று ஐந்து வயது அந்தணச் சிறுவனாக மாறினான்.

காஷ்யபர், தன் மகனுக்கு உபநயனம் (பூணூல் அணிவித்தல்) செய்வித்தார். அந்த உபநயன் நிகழ்ச்சிக்கு தேவர்கள்

அனைவரும் வந்து கலந்துகொண்டனர். பிருகஸ்பதி வாமன ருக்கு பூணூல் அணிவிக்க, தந்தை காஷ்யபர் அரைஞாண் கயிறைக் கட்டினார். பூமாதேவி வாமனருக்கு மான் தோலை அளிக்க, சந்திரன் தண்டத்தையும், பிரம்மதேவன் கமண்டலத் தையும், சரஸ்வதி ஜபமாலையையும், குபேரன் பிச்சைப் பாத்திரத்தையும் கொடுத்தார்கள். பார்வதி தேவி வாமனனின் பிட்சைப் பாத்திரத்தில் முதல் பிட்சையிட்டாள்.

இனி வாமன அவதாரத்தின் நோக்கம் நிறைவேற வேண்டிய காரியம்தான் மிச்சமிருந்தது.

இந்த சமயத்தில் மகாபலி சக்ரவர்த்தி, நர்மதை நதிக்கரையின் வட பகுதியில் அசுவமேத யாகம் நடத்திக் கொண்டிருந்தான். நூற்றுக்கும் மேலான அந்தணர்கள் சூழ்ந்து மிகுந்த சிரத்தை யுடன் அதில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சிறுவனான வாமனன், தாழங்குடையைப் பிடித்த படி அந்த யாக சாலையை நோக்கிச் சென்றார்.

கோடி சூரியப் பிரகாசத்துடன், புன்னகைத்த முகத்துடன் வரும் அந்தணச் சிறுவனைக் கண்டு அனைவரும் திகைத்துப் போய் நின்றார்கள். யார் இந்தச் சிறுவன்? சூரியனா? சந்திரனா? சனத் குமாரனா? என்று ஆச்சரியப்பட்டார்கள்.

பலிச் சக்ரவர்த்தி அந்தணச் சிறுவனை அன்புடன் எதிர் கொண்டு வரவேற்றான். அவனை அழைத்து வந்து ஆசனத் தில் அமர வைத்து உபசரித்தான். பின் பணிவுடன் கேட்டான்.

'குறு முனிவர் போலத் தென்படும் அந்தணச் சிறுவரே, உமது வரவினால் இந்த யாகசாலை புனிதமடைந்தது. நானும் புண்ணியம் பெற்றேன். தயவுசெய்து உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். பசுவோ, பொன்னோ, பொருளோ, வீடோ, கிராமமோ, யானைகளோ, குதிரைகளோ எது வேண்டுமானாலும் கூச்சப் படாமல் கேளுங்கள். சந்தோஷமாகத் தருகிறேன்' என்றான்.

வாமனச் சிறுவன் புன்னகைத்தான்.

'பலிச் சக்ரவர்த்தியே, கேட்பவர் யாசிப்பதையும் விட அள்ளித் தரும் வள்ளலே! உன்னுடைய நல்ல குணத்தைப் பாராட்டு கிறேன். பிரகலாதனின் வம்சத்தில் வந்த நீ தர்மவானாக இருப்பதில் ஆச்சரியமில்லை. தேவர்கள் அந்தணர்கள் வேடத்தில் வந்து யாசிக்கிறார்கள் என்பது தெரிந்தும் தன் உயிரையே கொடுத்தவன் உன் தந்தையான விரோசனன். அப்படிப்பட்ட குலத்தில் வந்த நீ எதைக் கேட்டாலும் தருவாய் என்பதை நான் அறிவேன். ஆனால் எனக்கு வேண்டிய தெல்லாம் எனது கால்களினால் அளந்த மூன்றடி நிலம் மட்டுமே! நீ அதைத் தந்தால் மட்டும் போதும்!' என்றான்.

வாமனச் சிறுவனின் சொற்களைக் கேட்டு பலிச் சக்ரவர்த்தி ஆச்சரியமடைந்தான்.

'சிறுவனே, உன் வயதுக்குத் தகுந்தபடி குழந்தை போலவே யாசிக்கிறாய். உன் காலடியினால் அளந்தால் என் கையகல நிலம் கூட இருக்காதே. மூவுலகங்களையும் ஆளும் என் னிடம், இத்தனை சிறியதாகவா கேட்பது? இனி உன் வாழ்க் கையில் பஞ்சமே இல்லாதபடி, மிகப் பெரியதாக கேட்டுப் பெற்றுக் கொள். நாடோ, நகரமோ, ராஜ்ஜியமோ என்ன வேண்டும் உனக்கு?'

வாமனன் புதிராகப் புன்னகைத்தபடி, 'சகரவர்த்தியே, தேவைக்கு மேல் ஆசைப்படுபவனுக்கு எதைக் கொடுத் தாலும் திருப்தி கிடைக்காது. கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடைபவனே உண்மையான அந்தணன். எனவே நீ, நான் கேட்ட மூன்றடி நிலத்தைக் கொடுத்தால் போதும்!'

அதற்கும் மேல் வாதம் செய்ய விரும்பாத பலிச் சக்ரவர்த்தி, சிறுவனுக்கு மூன்றடி நிலத்தைத் தாரை வார்த்துத் தருவதற் காக கமண்டல நீரைக் கையிலெடுத்தான். அவன் தானம் செய்யப் போகும் தருணம், குரு சுக்ராச்சாரியார் மன்னனைத் தடுத்தார்.

'பலிச் சக்ரவர்த்தியே, நில்! இங்கு இந்தச் சிறுவன் நடத்தும் நாடகத்தை நானும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்.

அப்பாவியாக உன் முன் நிற்கும் இந்த அந்தணச் சிறுவன் யார் தெரியுமா? உன்னுடைய மூவுலகங்களையும் சகல ஐஸ்வரி யங்களையும் அபகரித்துக் கொள்வதற்காக வந்திருக்கும் மகாவிஷ்ணுவே இவர்! மூன்று அடிகளால் உன் மொத்த சந்தோஷத்தையும் பறித்துப் போகவே வந்திருக்கிறார் இந்த காக்கும் கடவுள். இவரிடம் ஏமாறாதே!

தானம் தர்மம் என்பதெல்லாம் தனக்கு மிஞ்சித்தான். ஒருவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கொடுத்த வாக்குறுதி யிலிருந்தும் மீறலாம். அதில் எந்த அதர்மமுமில்லை. எனவே இந்தச் சிறுவன் வேண்டியதைக் கொடுக்காதே. திருப்பி யனுப்பி விடு!' - எச்சரித்தார் சுக்ராச்சாரியார்.

பலிச் சக்ரவர்த்தி அவர் பேச்சை ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

'குருவே, என்னை மன்னித்து விடுங்கள்! யாசித்தவர்களுக்கு உயிரையே தந்தவர் என் தந்தை என்பதை இந்தச் சிறுவனே சொன்னான் அல்லவா? அப்படியிருக்க கேவலம் பொருளா சைக்காக என் வாக்குறுதியை மீறச் சொல்கிறீர்களே. என் குலத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தும் இந்தக் காரியத்தை நிச்சயம் நான் செய்யமாட்டேன். வந்திருப்பவர் மகா விஷ்ணு வாக இருந்து, அவர் என்னை ஆசீர்வதித்தாலும் சரி, அழித் தாலும் சரி! அவர் யாசித்ததை நான் தந்தே தீருவேன். தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்' - உறுதியாகச் சொன்னான் மகாபலி.

மன்னன் தனது பேச்சைக் கேட்க மறுத்ததால் கோபம் கொண்ட சுக்ராச்சாரியார், 'மகாபலி! என் வார்த்தையை அவமதித்த நீ ராஜ்ஜியத்தை இழக்கத்தான் போகிறாய்!' என்று சாபமிட்டார்.

பலிச் சக்ரவர்த்தி அதையும் ஏற்றுக்கொண்டு, வாமனச் சிறுவனுக்கு தான் அளித்த வாக்குறுதியின்படியே, மூன்றடி நிலத்தை அளிப்பதாகச் சொல்லி நீரை தாரை வார்த்துக் கொடுத்தான்.

அடுத்த நாழிகை அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது!

வாமனின் சிறிய உருவம் வளரத் தொடங்கியது. பூமிக்கும் ஆகாயத்துக்குமாக விசுவரூபம் எடுத்து நின்றார் வாமனர்.

அனைவரும் அந்தப் பேருருவம் கண்டு மலைத்து நின்றனர்.

வாமன அவதாரம் எடுத்த பெருமான், தன் ஓரடியால் பூலோ கத்தை அளந்தார். தன் உடலால் வானத்தை வியாபித்து, இரு கைகளால் எட்டுத் திசைகளையும் தொட்டு நின்றார். அடுத்த இரண்டாவது அடியால் சொர்க்கலோகம், மஹர்லோகம், தபோலோகம் அனைத்தையும் தாண்டி சத்திய லோகத்தில் அவரின் பாதம் பதிந்தது.

சத்திய லோகத்தில் இருந்த பிரம்மன், பகவானின் திருவடிக்கு தன் கமண்டல நீரால் அபிஷேகம் செய்ய, அதுவே 'விஷ்ணுபதி' என்கிற புனித கங்கையாக கீழே பாய்ந்தது.

வாமனனின் மூன்றாவது அடிக்கு இடமே இல்லை. அவர் பலியிடம் கேட்டார். 'அசுர மன்னனே, மூன்றடி நிலம் தருவ தாக வாக்களித்தாய். பூலோகமும், மேல் உலகங்களுமே என் இரண்டு அடிகளுக்கு சரியாகிவிட்டன. மூன்றாவது அடிக்கு இடம் எங்கே?'

'விஷ்ணு பிரபோ, தயவுசெய்து என்னை சத்தியம் தவற வைத்து நரகத்தில் ஆழ்த்தி விடாதீர்கள். உங்கள் மூன்றாவது அடிக்கு என் தலையைத் தருகிறேன்!' என்ற பலிச் சக்ரவர்த்தி, மண்டி யிட்டுப் பணிந்தான்.

மகா விஷ்ணு மனம் மகிழ்ந்தார்.

'மகாபலி, உன்னைப் பாராட்டுகிறேன். கடைசிவரையிலும் மனம் தளராமல் சத்தியத்தைக் காப்பாற்றினாய். நீ வாழ்க! இனி நீ உனது அசுரர்களுடன் பாதாளலோகத்துக்குச் சென்று உன் மக்களுடன் சந்தோஷமாக இரு. அந்த பாதாளலோகத்தில் துவாரபாலனாக நானே என் சுதர்சன சக்ரத்துடன் உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன்!' என்று சொல்லி தனது மூன்றாவது

அடியை பலியின் தலையின் மீது வைத்து அழுத்தி, அவனை பாதாளலோகத்துக்கு அனுப்பி வைத்தார்.

கஷ்யபர்-அதிதிக்கு மகனாகப் பிறந்த உபேந்திரன் என்கிற வாமனன் தன் சகோதரனான இந்திரனுக்கு மீண்டும் சொர்க்கலோகத்தைக் கொடுத்து அவனுடைய இந்திரப் பதவியை மீட்டுக் கொடுத்தான்.

பின் மகா விஷ்ணு, சுக்ராச்சாரியாரிடம், 'சுக்ராச்சாரியாரே, ஆரம்பிக்கப்பட்ட யாகம் முடிவடையாமல் போனால் அது மகாபலியையே பாதிக்கும். அவனை பாவம் சூழ்ந்து கொள்ளும். எனவே நீங்கள் யாகத்தைப் பூர்த்தி செய்யுங்கள்' என்றார்.

அதன்படியே சுக்ராச்சாரியார் யாகத்தைப் பூர்த்தி செய்து முடித்தார்'

சுகர் மகரிஷி, வாமன அவதார மகிமையைச் சொல்லி முடித்தார்.

அப்போது பரீட்சித், 'ஸ்வாமி, பகவான் நாராயணனே பாராட்டிய நற்குணங்கள் கொண்டவனான பலிச் சக்ரவர்த்தியை குரு சுக்ராச்சாரியாரே சபித்தது எந்தவிதத்தில் நியாயம்?' என்று கேட்டான்.

'அந்தச் சாபம் அன்பின் மிகுதியால் விளைந்தது. தவசீலர்கள் கோபமடைந்தால் யார், என்ன என்பதைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். இதே சுக்ராச்சாரியார் தன் மாப்பிள்ளையான யயாதியையே சபித்தவர் தெரியுமா?'

'என்ன! மாப்பிள்ளையை மாமனாரே சபித்தாரா? எதற்காக? அதுமட்டுமல்ல யயாதி ஒரு மன்னன். அவன் அசுரர் குலகுருவான சுக்ராச்சாரியாரின் மகளை மணந்து கொண்டான் என்பதே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லுங்கள் ஸ்வாமி' என்று கேட்டான்.

சுகர் மகரிஷி, மன்னன் யயாதியின் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

15

இளமையைத் தொலைத்த யயாதி

தாமரைப் பூக்களும். அல்லி மலர்களும் பூத்திருந்த அந்தக் குளத்தில். பூக்களுக்குப் போட்டியாக. சில அழகான பெண்களும் நீந்திக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண்களில் ஒருத்தி அசுரர்களின் மன்னனான விருஷனின் மகள் சர்மிஷ்டை. இன்னொரு பெண் அசுரர் குலகுருவான சுக்ராச்சாரியாரின் மகள் தேவயானி. கூடவே நீந்திக் கொண்டிருந்த மற்றப் பெண்கள் சர்மிஷ்டையின் அரண்மனைத் தோழிகள்.

எல்லோரும் கலகலவெனச் சிரித்தபடி, போட்டி போட்டு நீந்திக் கொண்டு, ஒருவரின் மேல் ஒருவர் நீரை அள்ளி வீசிக்கொண்டு, விளையாடி

மகிழ்ந்தனர். அவர்களின் உல்லாசத்தில் பொழுதுபோனதே தெரியவில்லை. அந்திப்பொழுது கவிழ்ந்து இருள் சூழும் நேரமாகி விடவே, அனைவரும் அவசரம் அவசரமாகக் கரையேறினார்கள்.

குளக்கரையில் வைத்திருந்த தங்களின் ஆடைகளை எடுத்து அணியத் தொடங்கினார்கள். அப்போது சர்மிஷ்டை அவசரத்தில் தவறுதலாக, தேவயானியின் உடைகளை எடுத்து உடுத்திக்கொண்டாள்.

ஆசாரம் கடைபிடிப்பவளான தேவயானிக்கு அதைக் கண்டு கோபம் வந்துவிட்டது. சர்மிஷ்டை தன் தோழி என்பதைக் கூட நினைக்காமல் சுள்ளென்று எரிந்து விழுந்தாள்.

'தேவர்களும் வணங்கக்கூடிய அந்தணர் குலத்தில் பிறந்தவள் நான். உன் அசுரர்குலத்துக்கே குருவாக இருப்பவர் என் தந்தை. இதையெல்லாம் மறந்து, வேள்விப் பொருளைக் கவ்விச் செல்லும் நாயைப் போல, புனிதம் தெரியாமல் என் ஆடையை எடுத்து அணிந்து கொண்டாயே! கண்ணில்லாத குருடியா நீ?' என்றாள்.

தேவயானியின் நெருப்பு வார்த்தைகள், சர்மிஷ்டையையும் கோபம் கொள்ளச் செய்தன!

அவளும் சீற்றத்துடன், 'நாக்கை அடக்கிப் பேசு. அசுரர் மன்னனாகிய என் தந்தையிடம் கையேந்தி பிச்சையெடுக்கும் அந்தணர் குலத்தில் பிறந்த உனக்கு இத்தனை ஆணவமா? எனக்கு பணிப்பெண்ணாக சேவை செய்ய வேண்டிய நீ, என்னையா கேவலமாகப் பேசுகிறாய்? உனக்கு இப்போதே புத்தி கற்பிக்கிறேன் பார்!' என்று சொல்லி, தேவயானியிடம் இருந்த ஆடையையும் பிடுங்கிக்கொண்டு, அவளை பக்கத்திலிருந்த கிணற்றில் தள்ளி விட்டாள்.

'கிணற்று நீரிலேயே கிடந்து விரைத்துப் போ!' என்று சொல்லிவிட்டு, தோழிகளுடன் புறப்பட்டுப் போய்விட்டாள்.

முழுதாக இருள் கவிந்துவிட்டது. கிணற்றில் விழுந்த தேவயானி, 'காப்பாற்றுங்கள்! என்னை யாராவது காப்பாற்றுங்கள்!' என்று அபயக் குரல் கொடுத்துக் கொண்டே இருந்தாள்.

அப்போதுதான், அங்கு வந்தான் யயாதி. இவன் நகுஷனின் மகன். நகுஷனுக்குப் பிறகு இவன்தான் ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தான்.

கானகத்தில் வேட்டையாடிக் களைத்து, தாகத்துக்காக கிணற்றின் அருகில் வந்த யயாதி ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டு திடுக்கிட்டுப் போனான். கிணற்றில் எட்டிப் பார்த்தவன், உள்ளே ஒரு இளம்பெண் விழுந்து கிடப்பதைக் கண்டு, தன் மேலாடையை எடுத்து அவளுக்கு அணிந்து கொள்ள வீசினான். பின் அவள் கையைப் பிடித்து, மேலே தூக்கிக் காப்பாற்றினான்.

'பெண்ணே நான் மன்னன் யயாதி! நீ யார்?' என்று கேட்டான்.

தேவயானி வெட்கத்துடன் தலைகுனிந்தபடி பேசினாள்.

'அரசே நான் சுக்ராச்சாரியாரின் மகள். பெயர் தேவயானி. என் தோழியின் சதியினால் கிணற்றில் விழுந்தேன். கிணற்றிலிருந்து, என் கையைப் பற்றித் தூக்கியதனால், நீங்கள்தான் என்னை மணந்து கொள்ளவேண்டும்!' என்று வேண்டினாள்.

தேவமங்கைபோல், அழகே உருவெடுத்து நின்ற தேவயானியின் மேல் யயாதியும் காதல் கொண்டான். அவளை திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதி தந்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டான்.

வீடு திரும்பிய தேவயானி, தந்தை சுக்ராச்சாரியாரிடம், சர்மிஷ்டை தனக்கிழைத்த தீங்கைப் பற்றிக் கூறினாள். இதைக் கேட்டு மனம் வருந்திய சுக்ராச்சாரியார், இனி விருஷனின் தேசத்தில் இருக்க வேண்டாமென்று நினைத்து, தன் மகளுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

அசுரவீரர்கள் மூலம் இதைக் கேள்விப்பட்ட அசுர மன்னன் விருஷன், சுக்ராச்சாரியார் எல்லை தாண்டும் முன்பாக, அவரைத் தேடிச் சென்று சந்தித்து மன்னிப்புக் கேட்டான். தன்னை விட்டுப் போக வேண்டாமென்று கெஞ்சினான்.

சுக்ராச்சாரியார், 'என் மகள் தேவயானியின் விருப்பமே தன் விருப்பம்! பாதிக்கப்பட்டவள் அவள்தான். அவள் சொன்னால் நான் இங்கிருக்கிறேன்!' என்றார்.

மன்னன் தேவயானியிடம்திரும்பி, 'அம்மா தேவயானி... உன்னையும் நான் என் மகளைப் போல்தான் கருதுகிறேன். என் மகள் சர்மிஷ்டை செய்தது தவறுதான். அதற்கு நீ என்ன தண்டனை கொடுத்தாலும் அவள் ஏற்றுக் கொள்வாள். நீயும், உன் தந்தையும் இங்கிருந்து போக வேண்டாம்!' என்று வேண்டினான்.

தேவயானி, மன்னனிடம், 'சரி, என் தந்தை குருவாக இங்கு நீடிக்க வேண்டுமானால், நான் விதிக்கும் நிபந்தனையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் திருமணமாகி என் கணவரின் வீட்டுக்குச் செல்லும்போது, சர்மிஷ்டை எனது பணிப்பெண்ணாக கூட வரவேண்டும்!' என்றாள்.

குருவையும், குரு புத்திரியையும் சாந்தப்படுத்துவதற்காக மன்னன் விருஷனும் அதற்கு ஒப்புக் கொண்டான்.

அதன்படி, தேவயானி யயாதியை மணந்து கொண்டு செல்லும் போது, சர்மிஷ்டையும், தேவயானியின் பணிப்பெண்ணாக அவளுடனேயே சென்றாள்.

அப்போது சுக்ராச்சாரியார், யயாதியை தனியாகக் கூப்பிட்டு எச்சரித்தார்.

'யயாதி, மகள் தேவயானியின் மேல் நான் மிகுந்த பாசம் வைத்திருப்பதால்தான், அவள் விருப்பப்படி க்ஷத்திரியனான உனக்கு அவளை மணம் செய்து கொடுத்தேன். அவள் சிறிது துன்பம் அடைந்தாலும் நான் மனம் தாங்க மாட்டேன். உன் பிரியமும் பாசமும், அவளிடத்தில் மட்டுமே நிலைக்க வேண்டும். அவளுடன் வரும் சர்மிஷ்டையின் மேல் எப்போதும் நாட்டம் கொள்ளக் கூடாது. இது நான் உனக்கு இடும் கட்டளை!'

சுக்ராச்சாரியாரின் கட்டளை சர்மிஷ்டைக்கும் தெரிந்தது. எப்போதுமே தடுக்கப்பட்ட, மறுக்கப்பட்ட ஒன்றை அடைவதில்தானே மனம் நாட்டம் கொள்கிறது! சர்மிஷ்டைக்கும் அதுதான் நேர்ந்தது.

சர்மிஷ்டை, மன்னன் யயாதியின் மேல் அளவுகடந்த காதல் கொண்டாள். மனதுக்குள்ளே வைத்து மருகினாள்.

மன்னன் யயாதி, மனைவி தேவயானியுடன் இன்பமாகக் காலம் கழித்தான். அவர்களுக்கு குழந்தைகள் பிறந்து வளர்ந்தன. சர்மிஷ்டை இதைக்கண்டு மனம் புழுங்கினாள். தனக்கும் குழந்தைகள் வேண்டும் என்று ஏங்கினாள்.

ஒருசமயம், தன் உள்ளத்து ஆசையை யயாதியிடம் வெளிப்படுத்தி அழுதாள். யயாதி அவள் மேல் இரக்கம் கொண்டான். இரக்கம் பாசமாகியது. பாசம் காதலாகியது.

யயாதியும், சர்மிஷ்டையும் யாருக்கும் தெரியாமல் இணைந்தார்கள். சந்தோஷமாக இருந்தார்கள். அவர்கள் காதலை வெகுகாலம் மறைக்க முடியவில்லை. சர்மிஷ்டைக்கும் குழந்தைகள் பிறந்தன. யயாதி, சர்மிஷ்டையின் தொடர்பு தேவயானிக்குத் தெரிந்து போனது.

தேவயானி கொந்தளித்துப் போனாள். தந்தை சுக்ராச்சாரியாரிடம் சென்று முறையிட்டாள். அழுது புலம்பினாள். கோபம் கொண்ட சுக்ராச்சாரியார், யயாதியிடம் வந்தார்.

'யயாதி... நான் சொன்னதை மறந்து, என் மகளுக்கு துரோகம் செய்துவிட்டாய், இளமைத் திமிரினால்தானே சர்மிஷ்டையுடன் சல்லாபம் புரிந்தாய். இதோ இப்போதே அந்த இளமையை இழந்து முதுமையடைவாய்!' என்று சாபமிட்டார்.

அப்போதே யயாதி கிழட்டுத்தன்மை அடைந்தான். சுக்ராச் சாரியாரிடம் மண்டியிட்டு வேண்டினான்.

'ரிஷியே, உங்கள் மகள் மேல் எனக்கு இன்னும் ஆசை குறையவில்லை. நாங்கள் இன்னும் இல்லற சுகத்தில் பூரண திருப்தியடையவில்லை. அதற்குள் என்னை இப்படி சபித்து விட்டீர்களே. தயவுசெய்து என்மீது கருணை காட்டுங்கள். மீண்டும் இளமையைத் திரும்பத் தாருங்கள்!' என்று கண்ணீர் விட்டான்.

'மன்னனே, கொடுத்த சாபத்தை மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால், ஒருவழி இருக்கிறது. உனது முதுமையை எந்த இளைஞனாவது சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டால், அவனுடைய இளமையை நீ அடையலாம்!' - என்று சொல்லிவிட்டுப் போனார் சுக்ராச்சாரியார்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் அஞ்சுவது முதுமை யைக் கண்டுதானே! அப்படியிருக்க எந்த இளைஞன்தான் விருப்பத்துடன் முதுமையைப் பெற்றுக் கொள்வான்.

பொன்னும், பொருளும் இன்னும் ஏராளமான செல்வங்களை அள்ளித் தருவதாகச் சொல்லியும்கூட ராஜ்ஜியத்தில் எந்த ஒரு இளைஞனும் யயாதியின் முதுமையைப் பெற்றுக் கொள்ள முன் வரவில்லை.

கடைசியாக யயாதி தன் பிள்ளைகளிடம், கேட்டான். அவர் களுடைய இளமையைத் தந்து உதவும்படி யாசித்தான். எல்லா பிள்ளைகளும் மறுத்துவிட, கடைசிப் பிள்ளையான பூரு, தந்தைக்கு தன் இளமையைத் தருவதாக சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டான். தன் யௌவனத்தைத் தந்துவிட்டு தந்தை யின் கிழட்டுத்தனத்தை பெற்றுக் கொண்டான்.

யயாதி அளவில்லாத சந்தோஷமடைந்தான். அநேக வருஷங் கள் மனைவியுடன் சிற்றின்ப சுகத்தை அணு அணுவாக அனுப வித்தான். எத்தனைதான் காமத்தில் முங்கித் திளைத்தபோதும் எண்ணெய் ஊற்றிய தீ போல அது மேலும் மேலும் கொழுந்து விட்டு எரிந்ததே தவிர, அதை அணைக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் யயாதிக்கு விரக்தி ஏற்பட்டது.

உடல் ஆசையை அனுபவித்து தீர்ப்பதென்பது முடியவே முடியாது என்பது அவனுக்குத் தெரிந்து போனது! காமத்தை உதறினால் தவிர அதிலிருந்து விடுபடமுடியாது என்பதைப் புரிந்து கொண்ட யயாதி, மனத்தை திசை திருப்பி இறை பக்தியில் கவனத்தைச் செலுத்தினான். சிற்றின்ப சுகத்தை பக்தியின் மூலம் பொசுக்கினான்.

பின் மகன் பூருவிடமே அவனுடைய இளமையை திரும்பக் கொடுத்து விட்டு, தன் முதுமையைப் பெற்றுக் கொண்டு கானகம் சென்றான். தவம் செய்து முக்தி பெற்றான்.

யயாதியின் கதையைச் சொல்லி முடித்தார் சுகர் மகரிஷி.

'ஸ்வாமி, தாங்கள் வாமன அவதாரத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து, சுக்ராச்சாரியார் மூலமாக அது யயாதியின் கதை யில் வந்து முடிந்துவிட்டது. வாமன அவதாரம், வராக அவதாரம் இதற்கெல்லாம் முன்பாக திருமால் முதன் முதல் எடுத்த மச்ச அவதாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறது ஸ்வாமி. பகவான் அந்த அவதாரத்தை எதற்காக எடுத்தார்? மச்ச அவதாரத்தின் நோக்கம் என்ன என்பதை எடுத்துக் கூறவேண்டும்!' என்று கேட்டான் பரீட்சித்.

'திருமாலின் திரு அவதாரப் பெருமைகளைப் பேசுவதை விட வேறென்ன சந்தோஷம் இருக்கிறது? சொல்கிறேன். கேள்' என்று தொடங்கினாள சுகர் மகரிஷி.

***

16

மீனாக வந்த மகா விஷ்ணு!

பிரம்மன் எப்போது உறங்கச் செல்வார் என்று காத்திருந்தான் ஹயக்ரீவன்!

ஹயக்ரீவன் குதிரை முகம் கொண்ட அசுரன். பிரம்மனிடமிருந்து வேதங்களைத் திருடிக் கொண்டு செல்வதற்காகவே அவன் பதுங்கி மறைந்திருந்தான்.

தட்சியாயண காலம் வந்தால் பிரம்மன் தூக்கத்தில் ஆழ்ந்து விடுவான். அந்தச் சமயத்தில் பிரளயமும் ஏற்பட்டு மூவுலகங் களும் நீரில் மூழ்கிவிடும். வேதங்களை எடுத்துக்கொண்டு நீருக்கடியில் சென்று பதுங்கிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டிருந் தான். தன் சதிச் செயல் யாருக்கும் தெரியா தென்று நினைத்திருந்தான்.

ஆனால் பாவம்! பகவான் நாராயணன், இவனை அழிப் பதற்காகவே, அவதாரம் எடுத்துவிட்டதை ஹயக்ரீவன் அப்போது அறிந்திருக்கவில்லை!

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழ்த்துவதுபோல, ஹயக்ரீவனை அழிப்பதற்காக மட்டுமின்றி, தன் பரமபக்தன் ஒருவனை வரப்போகும் பிரளயத்திலிருந்து காப்பதற்காகவும், அந்த திருஅவதாரத்தை மேற்கொண்டிருந்தார் மகாவிஷ்ணு.

அந்த பக்தன், சத்திய விரதன்!

பெயருக்குத் தகுந்தது போல, சத்தியத்தில் பற்றுள்ளவன் சத்தியவிரதன். மன்னனாக இருந்தபோதும், பந்தபாசங்களில் நாட்டமில்லாதவன். ஆசாபாசங்களுக்கு அடிமையாகாதவன். திருமாலின் பக்தனாக ஒரு மகரிஷி போலவே ஆசிரமம் அமைத்து வாழ்ந்து வந்தவன்.

ஒருநாள் சத்தியவிரதன் கிருதமாலா ஆற்றின் கரையில், தன் முன்னோர்களுக்காக ஜலதர்ப்பணம் செய்து கொண்டிருந் தான். அப்போது அவன் அள்ளிய உள்ளங்கை நீரில் ஒரு சிறிய மீன் இருந்தது. அதனால் அந்த நீரை திரும்ப ஆற்றிலேயே விடப் போனான். உடனே அந்த மீன் பதறியபடி பேசியது.

'மன்னனே, என்னை நீ இந்த நதியிலேயே திரும்ப விடுவா யானால், அதிலுள்ள பெரிய மீன்கள் என்னைத் தின்றுவிடும். தயவுசெய்து என்மீது இரக்கம் காட்டு!' என்றது.

சத்தியவிரதன் ஆச்சரியம் அடைந்தான் என்றாலும், மீனின் மீது பரிதாபப்பட்டு, அதை தனது கமண்டலத்துக்குள் போட்டுக் கொண்டு, ஆசிரமத்துக்குத் திரும்பினான்.

அன்றைய இரவுக்குள் மீன் கமண்டலத்தை அடைக்கும் விதமாக வளர்ந்து விட்டது.

மறுநாள் அது சத்தியவிரதனிடம், 'இத்தனை சிறிய இடத்தில் என்னால் நீந்தக்கூட முடியவில்லை. எனவே, என்னை வேறு இடத்துக்கு மாற்று!' என்று வேண்டியது.

மன்னன் அதை நீர் நிரம்பிய ஒரு மண்பானைக்குள் விட்டான். சற்று நேரத்திலேயே அது அந்தப் பானையையும் அடைத்துக் கொண்டு வளர்ந்து விட்டது! அடுத்து அதைக் கொண்டு போய் ஒரு குட்டைக்குள் விட்டான் சத்தியவிரதன். அவன் கண்ணெதிரிலேயே அந்த மீன் மீண்டும் மளமளவென வளர்ந்து, குட்டையும் போதாதபடி அடைத்து நின்றது.

மேலும் குளம், ஏரி என்று அடுத்தடுத்து இடத்தை மாற்றிக் கொண்டே போனான் மன்னன். இடத்தை மாற்ற மாற்ற மீன் வளர்ந்து கொண்டே சென்றது. கடைசியாக சத்தியவிரதன் அந்த மீனைக் கொண்டு போய் கடலில் விட்டான்.

அப்போதும் அந்த மீன் பயந்தது போல, 'மன்னா, இந்தக் கடலிலும் திமிங்கலம், முதலைகள் போன்ற பெரிய ஜந்துக்கள் இருக்கும். அவை என்னைக் கொன்றுவிடும். என்னை தனியே விட்டுப் போகாதே!' என்று பதறியது.

மீனின் வளர்ச்சியில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் கொண்டிருந்த சத்திய விரதனின் மனத்தில் திடீரென்று அப்போதுதான் ஒரு தெளிவு பிறந்தது.

'வடிவத்தில் ஒரு மீன் போலத் தோன்றினாலும், இது நிச்சயம் பகவான் நாராயணனின் லீலைதான்' என்ற முடிவுக்கு வந்தான்.

'கடவுளே! திருமாலே! நீங்கள்தான் இப்படி மீனாக வந்திருக் கிறீர்கள் என்று தோன்றுகிறது. இதென்ன திருவிளையாடல்! எதற்காக என்னை சோதிக்கிறீர்கள்?' என்று கேட்டான்.

மச்ச அவதாரம் எடுத்திருந்த மகா விஷ்ணு அவனிடம் சொன்னார்.

'சத்திய விரதா, நீ நினைத்தது சரிதான். இன்றையிலிருந்து ஏழாம் நாள் சகல லோகங்களும் பிரளயத்தில் மூழ்கப் போகின்றன. அப்போது உன்னை நோக்கி ஒரு படகு வரும். உன்னைக் காப்பாற்றுவதற்காகவே நான் அனுப்பும் படகு

அது. அதில் மூலிகைகள், விதைகள், செடிகொடிகளோடு, சப்த ரிஷிகளையும் ஏற்றிக்கொள். அப்போது நான் திமிங்கல வடிவத்தில் உம்மிடம் வருவேன். படகை என் செதில்களில் கட்டி விடு. நான் இழுத்துச் செல்வேன்!' என்றார்.

'பகவானே, படகை எதனால் உம்மோடு கட்டுவது? அது தவிர பிரளய காலத்தில் இருள் சூழ்ந்திருக்குமே. எதுவுமே கண்ணுக் குத் தென்படாதே!' என்று கேட்டான் சத்தியவிரதன்.

'வாசுகி பாம்பைக் கயிறாக்கி, படகை என் செதில்களில் கட்டி விடு. இருட்டை நினைத்துக் கவலைப்படாதே. சப்த ரிஷி களே வெளிச்சமாகவும், வழிகாட்டியாகவும் இருப்பார்கள்!' என்று மீன் யோசனை சொல்லிவிட்டுச் சென்றது.

அதற்குப் பின் சத்திய விரதன், பிரளயம் வரப்போகும் நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஏழாம் நாள், கறுத்த மேகங்கள் திரண்டு ஆகாயம் இருண்டது. வானத்தைக் கிழித்துவிட்டது போல இடி, மின்னலுடன் மழை இடைவிடாமல் கொட்டி யது. புயலும், காற்றும் சீறியடிக்க கடல் கொந்தளித்தது. சகல லோகங்களும் நீரில் மூழ்கியது.

அப்போது தர்ப்பாசனத்தில் மிதந்து கொண்டிருந்த சத்திய விரதனை நோக்கி படகு ஒன்று வந்தது. மன்னன், இறைவன் சொன்னபடி, சகல மூலிகைகளையும், வித்துக்களையும், சப்தரிஷிகளையும் படகில் ஏற்றிக்கொண்டான். படகு அங்கும் இங்கும் அலைபாய்ந்தது.

அது மூழ்கும் தருணத்தில் திமிங்கலம் வந்து சேர்ந்தது. சத்தியவிரதன், வாசுகி பாம்பினால் படகை திமிங்கலத்துடன் கட்டினான். பின் பகவானைத் தொழுதபடி தனக்கு ஆத்ம ஞானத்தை போதிக்குமாறு கேட்டான். அவன் பிரார்த்தித்தபடி நாராயணன் தத்துவார்த்தங்களை அவனுக்கு உபதேசித்தார். அந்த உபதேசமே மச்ச புராணம். பின், உயரத் தூக்கியடித்த அலைகளின் மத்தியில், சூறைக் காற்றுக்கும், சுழலுக்கும் பலியாகாமல், மச்ச அவதாரப் பெருமான், படகை பத்திரமாக இழுத்துச் சென்றார்.

அந்தச் சமயத்தில் பிரம்மன் தூக்கத்திலிருந்து கண் விழித்தான். எழுந்தவன் அதிர்ச்சியடைந்தான்.

'ஐயோ! வேதங்களைக் காணவில்லையே! யார் எடுத்துச் சென்றது. இப்போது நான் என்ன செய்வேன்?' என்று பதறினான்.

மழை நின்றுவிட்டது. வெளிச்சம் வந்துவிட்டது. பிரளயத்துக்குப் பின், மூவுலகங்களிலும் அவனுடைய சிருஷ்டி நடந்தாக வேண்டும். ஆனால் வேதங்கள் இல்லாமல் எப்படி சிருஷ்டிப்பது?' - கதிகலங்கிப் போனவன் பகவானைத் துதித்தான்.

பிரம்மனின் கவலை பரந்தாமனுக்குத் தெரியாதா என்ன?

படகை பத்திரமாகக் கரை சேர்த்த மச்சமூர்த்தி, பிரளய நீருக்குள் மூழ்கி, ஹயக்ரீவனைத் தேடினார். கண்டுபிடித்தார். அவனுடன் போரிட்டுக் கொன்று, வேதங்களை மீட்டு, பிரம்மனிடம் ஒப்படைத்தார்.

பிரம்மன் மீண்டும் சிருஷ்டியைத் தொடங்கினான். மன்னன் சத்தியவிரதனே, 'வைவஸ்தவ மனு' என்கிற பெயருடன் ஆட்சி செய்யத் தொடங்கினான்' -

மச்ச அவதாரப் பெருமையை பரீட்சித்துக்கு விளக்கிய சுகர் மகரிஷி தொடர்ந்து சொன்னார்.

'வைவஸ்தவ மனுவின் மூலமாக தொடங்கிய சூரிய வம்சம், அவனுக்குப் பின் புகழ் பெற்ற மன்னர்களான திரிசங்கு, அரிச்சந்திரன், பகீரதன் என்று வழிவழியாகத் தொடர்ந்தது. மகாவிஷ்ணுவின் பிரசித்தி பெற்ற ராம அவதாரமும் கூட சூர்ய வம்சத்தில் வந்ததுதான்!' என்றார்.

'ஆஹா! ஜகம் புகழும் புண்ணிய கதையல்லவா ராமன் கதை! அவன் தந்தையின் வாக்கைக் காப்பாற்ற, பதினான்கு வருடங்கள் காட்டுக்குப் போனதும், அங்கு சீதையை ராவணனிடம் பறிகொடுத்ததும், வானரர்கள் உதவியானால் லங்காபுரி சென்று, ராவணனைக் கொன்று சீதையை

மீட்டதும், அயோத்திக்கு திரும்பி பட்டாபிஷேகம் செய்து கொண்டு, ஒரு வண்ணான் அவதாறு பேசியதால், சீதையை கானகத்தில் கொண்டு போய் விடச் சொன்னதும் அதுவரையிலான நகழ்ச்சிகள் எனக்குத் தெரியும். ஆனால் அதற்குப் பிறகு சீதை என்னவானாள்? ராமனும், சீதையும் மறுபடி சேர்ந்தார்களா? இல்லையா?' என்று கேட்டான் பரீட்சித்.

'சீதை லட்சுமணனால், காட்டில் கொண்டு போய் விடப்பட்டாள் அல்லவா? அப்போது அவள் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள். கானகத்தில் அநாதரவாக விடப்பட்டவளை, வால்மீகி மகிரிஷி, மனம் தேற்றி, தன் ஆசிரமத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கேயே அவளைத் தங்க வைத்து தன் மகளைப் போலப் பார்த்துக் கொண்டார்.

ஒரு சுபயோக தினத்தில் சீதை இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். வால்மீகி, அவர்களுக்கு லவன் - குசன் என்று பெயரிட்டார். குழந்தைகள் துருதுருவென புத்திசாலிகளாக வளர்ந்தார்கள். வால்மீகி, அவர்களுக்கு கல்வியுடன், சகல கலைகளிலும் பயிற்சியளித்தார்.

இந்தச் சமயத்தில் ராமன் அசுவமேத யாகம் செய்ய நிச்சயித்தான். யாகக் குதிரை எல்லாத் தேசங்களுக்கும் சென்று வலம் வந்தது. அனைத்து தேச மன்னர்களும் ராமனை சக்ரவர்த்தியாக ஒப்புக் கொண்டு அந்தக் குதிரைக்கு மரியாதை செய்து அனுப்பி வைத்தார்கள். ஆனால் அந்த யாகக் குதிரையை, லவ, குசர்கள் பிடித்துக் கட்டிவிட்டார்கள். காரணம், அந்தக் குழந்தைகள் அப்போது ராமன் மீது கோபத்தில் இருந்தார்கள். ராமன் தன் மனைவி சீதையை ஒரு சலவைத் தொழிலாளியின் பேச்சைக் கேட்டு காட்டுக்கு அனுப்பி விட்டார் என்கிற கோபம். இதில் விசேஷம் என்னவென்றால், தங்கள் தாய்தான் சீதை என்பதோ, ராமன் தங்கள் தந்தை என்பதோ அப்போது அவர்களுக்குத் தெரியாது.

அயோத்தியில் ராமன் ஆச்சரியமடைந்தான். இரண்டு சிறுவர்கள் யாகக் குதிரையை கட்டி வைத்துக்கொண்டு தர

மறுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்கள் இருக்கும் இடத்துக்கே வந்தான். லவ குசர்களைப் பார்த்ததுமே அவன் மனத்தில் இனம் புரியாத பாசத்தால் அவன் மனம் தத்தளித்தது. அவன் சிறுவர்களிடம் மிகுந்த அன்பு கொண்டவனாக, 'என் அன்புக் குழந்தைகளே, உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். எதைக் கேட்டாலும் தருகிறேன். யாகக் குதிரையை மட்டும் விட்டு விட்டுங்கள்' என்றான்.

சிறுவர்கள் விட மறுத்தார்கள். 'கட்டிய மனைவியைக் கை விட்டவரின் பேச்சை நீங்கள் கேட்க மாட்டோம்!' என்று ராமனைத் தூற்றினார்கள்.

ராமன் கெஞ்சினான். கொஞ்சினான். மென்மையாகக் கேட்டுப் பார்த்தான். எதையுமே காதில் வாங்காத லவகுசர் கள், ராமனை தங்களுடன் போரிட்டு வென்று யாகக் குதிரையை கொண்டு போகச் சொன்னார்கள்.

அதற்குள் தகவல் அறிந்து பதறியோடி வந்தாள் சீதை. பிள்ளை களின் தவறை மன்னிக்கும்படி வேண்டி, அவர்களை ராமனுக்கு அறிமுகம் செய்தாள். இம்மாதிரி ஒரு நிலை ஏற்பட்டதே என்று அழுதாள்.

ராமன் லவ குசர்களை கண்ணீர் மல்க கட்டியணைத்துக் கொண்டான். அவர்களை முத்தமிட்டு மகிழ்ந்தான். சீதையை மீண்டும் தன்னுடனே அயோத்திக்கு அழைத்துச் செல்ல விரும்பினான்.

ஆனால், சீதை அவன் அழைப்பை நிராகரித்தாள். மனம் விரக்தியடைந்து, இனி பூவுலக வாழ்க்கையே வேண்டாம் என்கிற முடிவுக்கு வந்தாள். இரு பிள்ளைகளையும் உச்சி முகர்ந்து ராமனிடம் ஒப்படைத்தாள். 'அம்மா! என்னை ஏற்றுக்கொள்!' என்று தன் தாயான பூமாதேவியை வேண்டி தியானித்தாள்.

ராமனும், லவ குசர்களும் கண்களில் நீர் மல்க பார்த்திருக்க, அவர்களின் முன்பாகவே, பூமி பிளந்து மகள் சீதையை ஏற்றுக் கொண்டது. லவ குசர்களை அழைத்துக் கொண்டு அயோத் திக்குத் திரும்பிய ராமன், தனக்குப் பின் லவ குசர்களுக்கு ராஜ்ஜியத்தைப் பிரித்து பட்டாபிஷேகம் செய்து வைத்தான்.

இப்படியாக ராமனுக்குப் பின் சூரிய வம்சம் அவன் பிள்ளைகள் வழியாக தொடர்ந்தது என்று சுருக்கமாக சொல்லி முடித்த சுகரிடம் பரீட்சித் கேட்டான்.

'ஸ்வாமி, ராம அவதாரத்திலேயே பரசுராம அவதாரமும் வருகிறதே.. அதன் தாத்பரியம் என்ன? பகவானின் பரசுராம அவதாரத்தைப் பற்றியும் சொல்லுங்கள்' என்று கேட்டான்.

நாராயணனின் அவதார மகிமைகளைப் பற்றிச் சொல்ல திகட்டுமா என்ன? சந்தோஷத்துடன் சொல்லத் தொடங்கி னார் சுகர்.

***

ராமனும், பரசுராமனும்

ஜமதக்னி முனிவருக்கும், ரேணுகா தேவிக்கும் பிறந்த பிள்ளைகளில் கடைசி மகன்தான் பரசுராமர்.

கோபத்துக்கு மகா பிரசித்தி பெற்றவர் இவர். ஆம்! தந்தை ஜமதக்னியே ஒரு கோபக்கார மகரிஷி என்னும்போது மகன் மட்டும் எப்படியிருப்பார்?'

ஜமதக்னி, ஒருமுறை கோபத்தால் தன் மனைவியையே கொன்றுவிடும்படி பிள்ளைகளுக்கு ஆணையிட்டவர். அப்படியொரு கோபம் கொண்டவர்!

இவர் இப்படி சினம் கொண்டவராகப் பிறந்ததற்கு ஒரு காரணம் இருந்தது!

குசிக நாட்டின் மன்னன் காதிக்கு ஒரேயொரு மகள். பெயர் சத்தியவதி. அவளை தான் மணம் செய்துகொள்ள விரும்புவதாகச் சொல்லி; பெண் கேட்டார் ரிசீகர் என்கிற மகரிஷி. மன்னன் காதிக்கு மகா தர்மசங்கடமாகிவிட்டது.

அரண்மனைவாசியான தன் மகளை; ஆசிரமவாசியான முனிவருக்கு திருமணம் செய்து தருவதா, என்று தயங்கினான். ஆனால், பிரம்மரிஷியான ரிசீகரைப் பகைத்துக் கொண்டால் அவர் சபித்து விடுவாரோ என்கிற பயத்தில் வேறுவழியில்லாமல், மகள் சத்தியவதியை ரிசீகருக்கு திருமணம் செய்து தந்துவிட்டான்.

நாள்கள் நகர்ந்தன. ரிசீகரின் மனைவியான சத்தியவதி, தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று ஆசைப்பட்டாள். சத்தியவதியின் தாய்க்கும்கூட, தனக்கு ஒரு பிள்ளை பிறக்க வேண்டும்; தங்களுக்குப் பின் அவன் நாட்டை ஆளவேண்டும் என்கிற விருப்பம் இருந்தது.

ரிசீகர் அவர்களின் விருப்பத்தை அறிந்தார். இருவரும் புத்திரபாக்கியம் பெறுவதற்காக ஒரு ஹோமம் செய்வித்தார். பின், சத்தியவதிக்கு தன்னைப் போல ஓர் அந்தண குமாரன் பிறக்கவும், சத்தியவதியின் தாய்க்கு, நாட்டை அரசாளும்படியாக க்ஷத்திரிய குமாரன் பிறக்கவும் தனித்தனியே அன்னக் கவளங்கள் செய்தார்.

சத்தியவதியிடம், யார் எந்த அன்னக் கவளத்தைச் சாப்பிட வேண்டும் என்று சொல்லி, பிரசாதத்தை அவர்களிடம் கொடுத்து விட்டுப் போனார்.

சத்தியவதியின் தாய்க்கு ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. மகள் சத்தியவதிக்கு அவளின் கணவர் கொடுத்த பிரசாதம் தனக்கு அளிக்கப்பட்டதை விட சக்திமிக்கதாக இருக்கும் என்று நினைத்து, அந்தப் பிரகாசத்தை தனக்கு அளிக்குமாறு மகளிடம் கேட்டாள்

தாய் ஆசையுடன் கேட்டதால், சத்தியவதி தனக்கு அளிக்கப் பட்டதை அவளிடம் கொடுத்துவிட்டு தாயின் பிரசாதத்தை தான் வாங்கிச் சாப்பிட்டாள்.

இதை அறிந்த ரிசீகர் மனம் வருந்தினார். சத்தியவதியிடம், 'நான் அவரவர் குலத்துக்குத் தகுந்தது போல புத்திரர்கள் பிறப்பதற்காக பிரசாதங்களைத் தயார் செய்தேன். இப்போது நீங்கள் அவற்றை மாற்றி உண்டதால், உனக்கு பிறக்கப் போகும் மகன், க்ஷத்திரிய குணத்துடன், கோபமும், தண்டனை தரும் மனப்பான்மை கொண்டவனாகவும், உனது தாய்க்குப் பிறப்பவன் பிரம்ம ரிஷியாகும் தகுதி கொண்டவனாகவும் பிறப்பார்கள்!' என்று சொன்னார்.

அதன்படியே, மன்னன் காதிக்குப் பிறந்த கௌசிகன், பிற்காலத்தில் விசுவாமித்திரர் என்கிற பிரம்ம ரிஷியானான். சத்தியவதிக்கு ஜமதக்னி பிறந்தார்.

ஜமதக்னியின் மனைவியான ரேணுகாதேவி கற்பில் சிறந்தவள். தினமும் நதிக்கரைக்கும் சென்று தன் கற்பின் சக்தியினால் வெறும் மணலிலேயே தினம் ஒரு பானை செய்து, அதில் நீர் கொண்டு வருவாள்.

எப்போதும் போல் ஒருமுறை, அவள் நதிக்கரைக்குச் சென்ற போது, அங்கே ஒரு கந்தர்வன் அப்ஸரப் பெண்களோடு நதியில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டாள். தன்னை மறந்து சில நொடிகள் அந்த கந்தர்வனின் அழகில் மயங்கி நின்றாள். உடனே சுதாரித்துக்கொண்டு, மணலில் பானை செய்ய முற்பட்டபோது, பானை உருவாகவில்லை. நீர் எடுக் காமலே மன வருத்தத்துடன் ஆசிரமத்துக்குத் திரும்பினாள்.

ஜமதக்னி முனிவர் தன் தவ வலிமையால் நடந்ததைத் தெரிந்து கொண்டார். குற்ற உணர்வுடன், தன்முன் தலைகுனிந்து நிற்கும் மனைவியின் மீது கோபம் கொண்டார். தன் பிள்ளை களை அழைத்தார்.

'உங்கள் தாய் தவறு செய்துவிட்டாள். அவளைக் கொன்று விடுங்கள்!' என்று கட்டளையிட்டார். பத்து மாதம் தங்களைச் சுமந்து பெற்ற தாயைக் கொல்ல எந்தப் பிள்ளைக்குத்தான் மனம் வரும். எல்லோரும் மறுத்தார்கள்.

ஜமதக்னி, தன் கடைசி மகனான பரசுராமரை அழைத்தார். 'ராமா! தவறு செய்த உன் தாயையும், என் ஆணையை நிறைவேற்ற மறுத்த, உன் சகோதரர்களையும் கொன்றுவிடு!' என்றார்.

பரசுராமர் நொடியும் யோசிக்கவில்லை. தந்தை உத்தரவிட்ட உடனேயே அனைவரையும் வெட்டி வீழ்த்தினார்.

இதைக் கண்ட ஜமதக்னி மனம் மகிழ்ந்தார். பரசுராமனைப் பாராட்டினார்.

'ராமா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!' என்றார்.

'தந்தையே, என்னால் கொல்லப்பட்ட என் அன்னையும், சகோதரர்களும் மீண்டும் உயிர்பெற்று எழ வேண்டும். நான் அவர்களை வெட்டியதை மறந்து போக வேண்டும்!' என்று கேட்டார் பரசுராமர்.

'அப்படியே ஆகட்டும்!' என்று ஜமதக்னி சொல்ல, இறந்த வர்கள் அனைவரும் தூங்கி எழுந்தது போல உயிர் பெற்று மீண்டார்கள்.

இப்படி, தந்தையின் சொற்களையே வேதவாக்காக எடுத்துக் கொண்டு, தாயையும், சகோதரர்களையுமே கொன்றவர், தனது தந்தைக்கே ஒரு அவமானம் என்றால் சும்மாயிருப்பாரா என்ன?

கார்த்தவீர்யார்ஜுனன் என்பவனுடன் பரசுராமருக்கு அப்படித்தான் பகை ஏற்பட்டது!

கார்த்தவீர்யார்ஜுனன் கேகய நாட்டின் மன்னன். பகவானின் அம்சமான தத்தாத்ரேயரைப் பூஜித்து, அவர் அருளால், ஆயிரம் கைகளும், எவரையும் வெல்லும் வல்லமையும், அனிமா முதலான எட்டு ஸித்திகளும், செல்வம், புகழ், வீரியம் என

அனைத்தையும் பெற்றவன். அவனுடைய வீரத்தைக் கண்டு, எல்லா நாட்டு அரசர்களுமே பயந்து பணிந்து நின்றனர். தனக்கு நிகர் யாருமேயில்லை என்று ஆணவம் கொண்டான் கார்த்தவீர்யாஜுனன்.

ஒருமுறை அவன், நர்மதை நதியில் பெண்களுடன் நீராடிக் கொண்டிருந்தான். கொஞ்சலும், குதூகலமுமாக பெண்களுடன் நீரில் விளையாடித் திளைத்தான். தன் ஆயிரம் கைகளாலும் நீரை அணைகட்டித் தடுப்பதும், பின் கைகளை விலக்கிக்கொண்டு, தண்ணீரை வெள்ளம் போல் ஓட விடுவதுமாக உற்சாகமாக ஜலக்ரீடை நடத்தினான்.

அதே நதிக்கரையில், சற்றுத் தள்ளி சிவபூஜை செய்து கொண்டிருந்தான் லங்கேஸ்வரனான ராவணன். அவன் பக்தியில் ஆழ்ந்து பூஜையில் ஈடுபட்டிருந்த தருணத்தில், கார்த்தவீர்யாஜுனன் அணை கட்டித் தடுத்திருந்த தனது ஆயிரம் கைகளையும் நீக்கிக் கொண்டதும், நதிநீர் வெள்ளம் போல் வந்து, ராவணனின் பூஜைப் பொருள்களை அடித்துக் கொண்டு போய்விட்டது.

கோபமடைந்த ராவணன், கார்த்தவீர்யாஜுனனுடன் சண்டைக்குச் செல்ல, அவனை ஒரு சிறுபூச்சி போல சுலபமாக மடக்கி சிறை செய்துவிட்டான் கார்த்தவீர்யாஜுனன். பின் வெகுநாள்களுக்குப் பின், ராவணன் மீது இரக்கப்பட்டு அவனை விடுதலை செய்தான்.

இப்படி எவராலுமே எதிர்கொள்ள முடியாத, கார்த்தவீர்யாஜுனன், ஒருசமயம் காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது, அங்கே ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்தைக் கண்டான். அவரைக் கண்டு வணங்கினான்.

ஜமதக்னி, தன்னிடமிருந்த தேவலோகப் பசுவான காமதேனுவின் அற்புத சக்தியினால் கார்த்தவீர்யாஜுனனுக்கும், அவனுடைய படைக்கும் அறுசுவை விருந்தளித்தார்! அதைக்

கண்டு வியந்து போனான் மன்னன். கேட்டது அனைத்தையும் தரும் அந்த தேவலோகப் பசுவின் மேல் ஆசை கொண்டான். காமதேனுவை தனக்குத் தருமாறு கேட்டான்.

'மன்னா, அதிதிகளை உபசரிக்கவும், வேள்விக்குத் தேவையான பால், தயிர், நெய் முதலியவற்றுக்காகவும் எனக்கு இந்தக் காமதேனு அவசியம் தேவை. எனவே, என்னால் இதைத் தங்களுக்குத் தர இயலாது! தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள்' என்றார்.

கார்த்தவீர்யாஜுனன் கோபம் கொண்டான். தன் படை வீரர்களை அழைத்து, 'எனக்கு யார் அனுமதியும் தேவையில்லை. ஆசைப்பட்டதை அடைந்தே தீருவேன். இந்தப் பசுவை எனது அரண்மனைக்கு ஓட்டிச் செல்லுங்கள்!' என்று ஆணையிட்டான்.

அவனைத் தடுக்க முடியாமல் ஜமதக்னியும், ரேணுகா தேவியும் கண்கலங்கி நின்றார்கள். இந்தச் சம்பவம் நடந்த போது பரசுராமர் அங்கில்லை. பின் ஆசிரமத்துக்குத் திரும்பியவர் கார்த்தவீர்யாஜுனனின் அதர்மச் செயலைக் கேள்விப்பட்டு மனம் கொதித்துப் போனார்.

கண்கள் சிவக்க, சினத்துடன், தனது ஆயுதமான கோடரியையும், வில், மற்றும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

கார்த்தவீர்யாஜுனனிடம் சென்று அவனை போருக்கு அழைத்தார். தன்னை எதிர்க்க வந்த அவனுடைய படைகளை புயல்வேகத்தில் பாய்ந்து நிர்மூலப்படுத்தினார்.

கார்த்தவீர்யாஜுனன், மிகுந்த கோபத்துடன் பரசுராமருடன் போரிட்டான். இருவருக்குள்ளும் கடுமையான யுத்தம் நடந்தது. இறுதியில் கார்த்தவீர்யாஜுனனின் ஆயிரம் கைகளையும் தனது கோடரியால் துண்டித்தார் பரசுராமர். அவனுடைய தலையையும் வெட்டி வீழ்த்தினார்.

காமதேனுவை மீட்டுக் கொண்டு ரத்தம் சொட்டும் தன் கோடரியுடன் ஆசிரமத்துக்குத் திரும்பினார்.

ஜமதக்னி அதைக் கண்டு பதைத்துப் போனார். தவறு செய்து விட்டாயே ராமா! ராஜ்ஜியத்தின் காவலனாக இருந்து மக்களைக் காக்கும் மன்னனைப் போய் கொன்று விட்டாயே! இதனால் பெரும் பாவமல்லவா வந்து சேரும்! என்றவர், 'க்ஷத்திரியனைக் கொன்ற பாவம் தீர வேண்டுமானால், நீ தீர்த்த யாத்திரைக்குச் செல்ல வேண்டும். உடனே புறப்பட்டுச் செல்!' என்று ஆணையிட்டார்.

தந்தையின் சொல்லைத் தட்டாத பரசுராமர் அப்போதே தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டுப் போனார்.

அவர் யாத்திரை முடித்துத் திரும்பியபோது, ஓர் பேரதிர்ச்சி காத்திருந்தது!

கார்த்தவீரியனைக் கொன்றதனால், மிதமிஞ்சிய கோபத்தில் இருந்த அவனுடைய புதல்வர்கள், தந்தையின் மரணத்துக்கு பழி தீர்த்துக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தனர். பரசுராமர் இல்லாத சமயத்தில், ஆசிரமத்து வந்தவர்கள், அவனுடைய தந்தை ஜமதக்னியைக் கொன்று ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார்கள்!

தந்தையின் மரணமும், தாய் ரேணுகாதேவியின் பொட்டிழந்த அலங்கோலமும், பரசுராமரின் மனத்தில் அக்னியை மூட்டியது. வனத்தை சுட்டெரிக்கும் பிரளயத் தீயைப் போல சென்றவர், கார்த்தவீரியனின் மகன்கள் அனைவரையும் கோடரியால் கொன்று தீர்த்தார். அப்போதும் சினம் அடங்காதவராக, 'ஆணவம் கொண்ட க்ஷத்திரிய குலத்தை இருபத்தொரு தலைமுறை வதைப்பேன்!' என்று சபதமிட்டார். அதைச் செய்து முடித்தார்.

மலைமலையாகக் கொன்று குவித்த க்ஷத்திரியர்களின் ரத்தத்தை குருக்ஷேத்திர பூமியில் ஒரு மடுவாகத் தேக்கினார்.

அதுவே பிற்காலத்தில் 'ஸமந்தபஞ்சகம்' என்கிற புண்ணியத் தலமாக பிரசித்தி பெற்றது.

பின், தன் தந்தைக்கு இறுதிக் கடன்கள் செய்து, ஒரு பெரிய யாகம் நடத்தினார். அந்த யாகத்தின்போது, தான் மன்னர்களைக் கொன்று ஜெயித்த ராஜ்ஜியங்களையும், பொன்னையும், பொருளையும் மற்ற அனைத்து செல்வங்களையும் எல்லோருக்கும் தானம் வழங்கினார்.

இவையெல்லாம் நடந்த பிறகுதான் பின்னாளில், பகவானின் மற்றொரு அவதாரமான ராமனும், பரசுராமரும் நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது.

மிதிலையில், ஜானகியை மணப்பதற்காக ராமன் சிவதனுசுவை வளைத்தான் என்பதைக் கேள்விப்பட்ட பரசுராமர், க்ஷத்திரியனான ராமனின் வீரத்தை சோதிக்க நினைத்தார்.

சீதையை மணந்து கொண்டு, அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருந்த, தசரதனின் பரிவாரத்தை வழி மறித்துத் தடுத்தார்.

'ராமா, சிவதனுசை முறித்தாய் என்று கேள்விப்பட்டேன். உண்மையா?' என்றார்.

அமைதியே சொரூபமாக 'ஆம்!' என்றான் ராமன்.

உடனே, தன் கையிலிருந்த வில்லை ராமனிடம் நீட்டினார். 'இது விஷ்ணு தனுசு! இதை வளைத்து நாண் ஏற்று. அல்லது என்னோடு போரிடு!' சவாலுக்கு அழைத்தார் பரசுராமர்.

தசரதன் முதலானவர்கள் பதறினார்கள். ராமன் பதற்றமே இல்லாமல் வில்லை வாங்கினான். மிக எளிதாக வில்லை வளைத்து நாண் ஏற்றிக் குறிவைத்தான்.

'பரசுராமரே, என் குறிக்கான இலக்கு என்ன?' என்று கேட்டான்.

அந்த நொடியே பரசுராமரின் சக்தி மறைந்து போனது. ராமன் குறிவைத்த அம்புக்கு இலக்காக தனது தவ வலிமை முழுவதையும் கொடுத்து விட்டுத் திரும்பினார்.

பரசுராம அவதாரத்தின் கடமைகள் முடிந்து விட்டதாலேயே, ராம அவதாரம் அவரின் சக்தியை தன்னிடம் சேர்த்துக் கொண்டுவிட்டது.

பரசுராமர், தான் வென்ற நிலங்களை தானம் அளித்து விட்டதால், இனி அந்தப் பகுதிகளில் வசிக்கக் கூடாதென்று கருதினார். கடலை நோக்கி தன் கோடரியை வீசியெறிந்தார். அவர் கோடரியை வீசியெறிந்த தூரம்வரை கடல்நீர் பின் வாங்கி புதிய நிலப்பரப்பு தென்பட்டது. 'பரசுராம க்ஷேத்ரம்' என்று அந்தப் பகுதிக்கு பெயர் ஏற்பட்டது. அதுவே பின்னாளில் கேரள தேசமாகியது.

பரசுராமர் அப்பகுதியில் குடியேறி, மகேந்திர பர்வதத்தில் வசிக்கலானார்! அவர் இன்னும் சிரஞ்சீவியாக வாசம் செய்கிறார்!'

சுகர் மகரிஷி பகவானின் ராம, பரசுராம அவதார மகிமையைச் சொல்லி முடிக்க, புத்திப் பரவசத்தில் ஆழ்ந்திருந்தான் பரீட்சித். சுகர் தொடர்ந்து சொன்னார்.

'வைவஸ்த மனுவில் தொடங்கி அரிச்சந்திரன், பகீரதன், ஸ்ரீராமன் என்று சூரிய வம்சம் தழைத்து வந்தது போல, மற்றொருபுறம் சந்திரகுலமும் தழைத்தது. பரசுராமர் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்தாம்.

பிரம்மாவின் புதல்வனான அத்ரி மகரிஷியின் புதல்வனே சந்திரன். சந்திரனில் தொடங்கி, அவன் மகன் புதன், புதனின் புதல்வன் புரூரவஸ், என்று நகுஷன், யயாதி, துஷ்யந்தன், பரதன் வரை வந்தது. பின் பரத கண்டத்தை ஆண்ட பரதனின் வம்சாவளிகளாக, ஹஸ்தியில் ஆரம்பித்து, சந்தனு, பீஷ்மர், பாண்டவர், துரியோதனன் என்று தொடங்கி இப்போது உன் சந்ததிகளாக நான்கு புதல்வர்களும் இருக்கிறார்கள்.

உன் மூத்த மகனான ஜனமேஜயன் உனது மரணத்துக்கு பழி தீர்ப்பதற்காக ஒரு பெரும் யாகத்தை நடத்தி, எல்லா நாகங்களையும் ஹோம குண்டத்தில் விழச் செய்யப் போகிறான். உன்னுடைய மூன்றாவது தலைமுறைக் காலத்தில் அஸ்தினாபுரம் கங்கை வெள்ளத்தில் மூழ்கப் போகிறது. உன் வம்சத்தின் கடைசி அரசன் க்ஷேமகன் என்பவனோடு சந்திர வம்சம் முற்றுப் பெறப் போகிறது!' என்று நடக்கப் போவதையும் உரைத்தார் சுகர் மகரிஷி.

பரீட்சித் பற்றவற்றவனாக, 'மகரிஷி, எனது முன்னோர்களான பாண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும், நண்பனாகவும், உறவினனாகவும், இறைவனாகவும் இருந்து அருள் பாலித்த பகவான் கிருஷ்ணனின் திருக்கல்யாண குணங்களையும், அவனுடைய லீலா விநோதங்களையும் கேட்க விரும்புகிறேன். தங்கள் திருவாக்கால், அந்த மாயனின் பெருமைகளைக் கூற வேண்டும்!' என்று வேண்டினான்.

சுகர் மகரிஷியின் முகம் பூப்போல் மலர்ந்தது. பரீட்சித்தை கருணையுடன் நோக்கினார்.

'புனிதமான கங்கைக் கரையில், மரணத்தை வரவேற்கும் நிலையில் ஏழு நாள்களாக உணவு, தண்ணீர்கூட இல்லாமல் பாகவத புராணத்தைக் கேட்டு வருகிறான் பரீட்சித். இவன் தான் எத்தனை பாக்கியசாலி!' என்று மனத்துக்குள் நெகிழ்ந்தார்.

'தாயின் வயிற்றுக்குள் இருக்கும்போதே கிருஷ்ண பரமாத்மாவால் காப்பாற்றப்பட்டவன். பிறந்தது முதல் தன் வாழ்நாள் முழுவதும் அந்த கிருஷ்ணனையே தேடித் தேடி ஒவ்வொருவரையும் உற்று நோக்கியதால் 'பரீட்சித்' என்று பெயர் பெற்றவன். கிருஷ்ண சரிதத்தை கேட்க இவனைத் தவிரவும் அருகதை பெற்றவர் வேறு யார்?' என்றும் நினைத்தார்.

பின் பரீட்சித்திடம், 'பாக்கியவானே, பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனின் அவதாரங்கள் எல்லாமே மகிமை

வாய்ந்ததுதான் என்றாலும் கூட அவற்றில், ராமனும், கிருஷ்ணனுமே பூர்ணாவதாரம். மற்ற அவதாரங்கள் எல்லாமே ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காகவே தோன்றி, அதை செயல்படுத்தி மறைந்துவிட்டவை. ராமனும், கிருஷ்ண னும் மட்டுமே மனிதர்களோடு மனிதர்களாக வாழ்ந்தவர்கள். அதிலும் ராமன் தன்னை கடவுளாகக் காண்பித்துக் கொள்ளா மல், மனிதனுக்குரிய ஆசாபாசங்களில் சிக்கி, இன்ப துன்பங் களை அனுபவித்து இறுதிவரை லட்சிய புருஷனாகவே வாழ்ந்து காண்பித்த அவதாரம்.

ஆனால் கிருஷ்ணனோ பரிபூரண அவதாரம். ஆம்! அவன் அவதரிக்கும்போதே, தான் கடவுள் என்று அனைவரும் உணரும்படியாகவே பிறந்தான். அதற்குப் பின்னும், தன் ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினான். கடவுள் என்று உணர்த்தியும், அதை உணர்ந்தவர்களை மறக்கடித்தும் மாயைகள் புரிந்தான்.

இப்படி கிருஷ்ணனாக அவதரிக்க மகா விஷ்ணுவுக்கு ஒரு நோக்கம் இருந்தது. அது பூமாதேவியின் பூவுலக பாரத்தைக் குறைக்க வேண்டிய நோக்கம்!

முன்பு அசுரர்களாக இருந்தவர்கள் எல்லாம் துவாபர யுகத்தில் அரசர்களாகப் பிறந்து அநேக அட்டூழியங்களைச் செய்து வந்தனர். தீயவர்கள் அதிகரித்து பாவங்கள் பெருகியதால், பூமாதேவி தாங்க முடியாத சுமையால் அவதிப்பட்டாள். பிரம்ம தேவனிடம் சென்று முறையிட்டாள்.

பிரம்மதேவன், நாராயணனை வேண்டித் துதிக்க, அவர் அசரீரியாகக் கூறினார்.

'பூமாதேவியின் துன்பத்தைப் போக்கவும், பூவுலகின் பாரத்தைக் குறைக்கவும் விரைவில் நானே பூமியில் அவதாரம் செய்யப் போகிறேன். யாதவ குலத்தில் வசுதேவருக்கு மகனாகப் பிறக்கப் போகிறேன். எனது அம்சமான ஆதிசேஷ னும், வசுதேவர் - ரோகிணிக்கு மகனாக எனக்கு முன்பாகவே

பிறக்கப் போகிறார். இந்தக் காரியத்தில் என்னுடைய யோக மாயையும் துணை புரியப் போகிறாள். எனவே, தேவர்களாகிய நீங்கள் அனைவரும் யதுகுலத்தில் யாதவர்களாகப் பிறந்து என் வருகைக்காக காத்திருங்கள். தேவ மங்கைகள் கோபிகை களாகப் பிறக்கட்டும்!' என்று கட்டளையிட்டார்.

பகவான் ஆடப் போகும் ஆட்டத்தில், சதுரங்கக் காய்களாக அனைவரும் நகர்த்தப்பட்டு, ஆட்டம் தொடங்கியது. காலம் பகடையை வீசியது. விளையாட்டு சூடு பிடித்தது!' என்று கிருஷ்ண அவதாரத்தை விவரிக்கத் தொடங்கினார் சுகர்.

***

ஸ்ரீமத் பாகவதம்

இரண்டாம் பாகம்

1

எதிரியாகப் பிறந்த எட்டாவது குழந்தை!

ஓர் அசரீரிதான் அந்த ராஜ திருமணத்தின் ஒட்டுமொத்த சந்தோஷத்தையும் சிதைத்துப் போட்டது!

மணப்பெண்ணின் கழுத்தில் கணவன் மாங்கல்யம் சூட்டி சில மணிநேரங்கள்கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே கழுத்தில் கத்தி வைத்துவிட்டான் அண்ணன்!

தங்கையின் தலையில் அட்சதை தூவி ஆசீர்வதித் ததையே மறந்து, அவளின் தலையையே எடுக்கத் துணிந்துவிட்டான்!

காரணம்... அசரீரி தந்த எச்சரிக்கை!

மதுரா நகரம் அழகாக அலங்கரிக்கப்பட்டு தோர ணங்கள், கொடிகள், வாழை மரங்கள், கமுகு

மரங்கள் கட்டப்பட்டு வெகு கோலாகலமாகக் காட்சி யளித்தது.

சூரசேனனின் மகனான வசுதேவருக்கும், உக்ரசேனனின், சகோதரனான தேவகனின் மகள் தேவகிக்கும் கல்யாணம். ராஜ திருமணம்! கேளிக்கைகளுக்கு என்ன பஞ்சம்!

எங்கு பார்த்தாலும் மங்கல வாத்தியங்கள் இன்னிசை பொழிய, பலவிதமான கலைநிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தன. மக்கள் அனைவரும் உயர்ந்த ஆடை ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டு சந்தோஷ மாகக் காணப்பட்டனர்.

உக்ரசேனனின் மகனும் தேவகியின் அண்ணனுமான கம்சன், புது மணப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் தேரில் ஏற்றிக் கொண்டு, தானே ரதத்தைச் செலுத்தினான்.

தங்கை தேவகியையும் மாப்பிள்ளை வசுதேவரையும் கேலி செய்து சிரித்துக் கொண்டு, நகரின் பிரதான வீதிகளில் கம்சன் ரதத்தை மெல்லச் செலுத்தினான். இரண்டு பக்கமும் நின்று கொண்டிருந்த மக்கள், பூக்கள் தூவி மணமக்களை வாழ்த்தி னார்கள். மணமக்களின் ஜோடிப் பொருத்தத்தைப் புகழ்ந்து பேசினார்கள்.

அப்போது திடீரென்று கருமேகங்கள் திரண்டு மூடியது. வானம் இருண்டது. இடி இடித்து, மின்னல் வெட்டியது. கூடவே ஓர் 'அசரீரியும் ஒலித்தது!

'கம்சா! நீ ஒரு முட்டாள். எந்தத் தங்கையை அன்புடன் ஊர்வலம் அழைத்துச்செல்கிறாயோ, அந்தத் தேவகியின் எட்டாவது கர்ப்பம்தான், உன் உயிருக்கு எமனாகப் போகிறது. அந்தப் பிள்ளையால்தான் உனக்கு மரணம் சம்பவிக்கப் போகிறது!' என்றது.

அவ்வளவுதான்! அதுவரை அன்பான அண்ணனாக இருந்த கம்சன், அரக்கன் ஆனான். உயிருக்கு ஆபத்தென்றால் யாருக்குத்தான் பயம் வராது?

அங்கேயே அப்போதே வாளை உருவியவன், தேவகியின் கூந்தலைப் பிடித்து இழுத்து அவளை வெட்டப்போனான்.

தேவகியின் கணவரான வசுதேவர், அவன் கையைப்பற்றித் தடுத்தார். பதற்றமில்லாமல் பக்குவமாகப் பேசினார்:

'கம்சா! போஜ வம்சத்தின் பெரிய வீரன் நீ. அப்படிப்பட்டவன் ஒரு பெண்ணை, அதுவும் தங்கையைக் கொன்றா வீரத்தை வெளிப்படுத்த வேண்டும்? வேண்டாம்! இந்த இழிவான செயலைச் செய்யாதே! உன் மரணபயத்தைப் போக்கிக் கொள்ள நான் வழி சொல்கிறேன், கேள். தேவகிக்குப் பிறக்கும் குழந்தையால்தானே உனக்கு ஆபத்து என்று அசரீரி சொன்னது? எனவே, அவளுக்குப் பிறக்கும் அத்தனை குழந்தைகளையுமே உன்னிடம் ஒப்படைத்துவிடுகிறேன். போதுமா? தயவுசெய்து தேவகியை ஒன்றும் செய்யாதே!'

வசுதேவர் சொன்னதைக் கேட்ட கம்சன் நிதானமானான். மனம் சமாதானமானான். தேவகியைக் கொல்லாமல் விட்டான்.

ஆனாலும், 'தேவகியின் எட்டாவது கர்ப்பம் தனக்கு யமன்!' என்பது மட்டும் அவனது மனத்தில் அழுத்தமாகப் பதிந்து அதற்காகவே காத்திருந்தான். நாள்கள் நகர்ந்தன. காலம் உருண்டது. தேவகி முதல் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

வசுதேவர், அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு கம்சனிடம் சென்றார்.

'போஜ வீரனே! இதோ தேவகிக்குப் பிறந்த முதல் குழந்தை! பெற்றுக்கொள்!' என்று நீட்டினார்.

வசுதேவரின், வாக்குத் தவறாத செயலால் கம்சன் மனம் மகிழ்ந்தான்.

'வசுதேவரே! தேவகியின் எட்டாவது குழந்தைதான் எனக்கு எதிரி! இந்தக் குழந்தையை நீங்களே எடுத்துச்செல்லுங்கள்!' என்றான்.

வசுதேவருக்கு ஆச்சரியமாக இருந்தாலும், பெரிதாக சந்தோஷம் கொள்ளவில்லை. 'முன்னே போனால் முட்டி, பின்னே வந்தால் உதைக்கும் கழுதை இவன். எப்போது, என்ன செய்வான் என்று யாருக்குத் தெரியும்?'

தேவகிக்குப் பிறந்த அடுத்தடுத்த குழந்தைகளையும்கூட, கம்சன் ஒன்றும் செய்யவில்லை. வசுதேவரிடமே திரும்பக் கொடுத்துவிட்டான்.

கம்சனின் இந்த நேர்மையான நடத்தையினால் கவலையடைந்தவர் ஒருவர் இருந்தார். அவர் திரிலோக சஞ்சாரியான நாரதர்.

'அடடா! கம்சன் இத்தனை உத்தமனாக நடந்துகொண்டால் காரியம் ஆகாதே!' என்று யோசனையில் ஆழ்ந்தார்.

கம்சன் தப்புப் தப்பாக காய் நகர்த்தினால்தானே வெட்டுப்பட சுலபமாக இருக்கும் என்று நினைத்தவர், உடனே புறப்பட்டு கம்சனிடம் சென்றார். கலகத்தைத் தொடங்கினார்.

'கம்சனே! இது நீ எச்சரிக்கையாக இருக்கவேண்டிய சமயம்! நீ, சென்ற பிறவியில் காலநேமி என்னும் அசுரனாக இருந்தாய். தேவர்களை எதிர்த்தாய். அந்தப் பகை இந்தப் பிறவியிலும் தொடர்கிறது. வசுதேவர், நந்தகோபன் முதலிய எல்லா யாதவர்களுமே தேவர்களின் சொரூபம்தான்! அசுர வம்சத்தவர்களான உன்னையும் உனது உறவினர்களையும் வதம் செய்யவே அவர்கள் இப்போது பூலோகத்தில் பிறந்திருக்கிறார்கள்!' என்று மூட்டிவிட்டார்.

பிறகென்ன! வேதாளம் மறுபடியும் முருங்கைமரம் ஏறி விட்டது!

கம்சன், தேவகியையும் வசுதேவரையும் உடனடியாகச் சிறையிலிட்டான். அவர்களுக்குப் பிறந்திருந்த அத்தனை குழந்தைகளையும் கொன்று போட்டான். தன்னைத் தடுத்த தனது தந்தை உக்ரசேனனையும் சிறையில் அடைத்து தானே மன்னனானான்.

யாதவர்கள் எல்லோரும் தேவர்கள் என்றே முடிவு கட்டிய கம்சன், பலவகைகளிலும் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினான். ஏராளமான வரிகளை விதித்தான். தனக்குக் கப்பம் கட்டுமாறு செய்தான். சிறுகுற்றம் செய்தாலும் மாறுகால் மாறுகை வாங்கினான். எதிர்ப்பவர்களைக் கொன்றான். சிறையில் அடைத்து சித்ரவதை செய்தான்.

அப்பாவிகளான யாதவர்கள் கம்சனுக்குப் பயந்து, அடிமை போல் வாழத் தொடங்கினார்கள். ஒவ்வொரு நாளையும் நரகத்தில் இருப்பதுபோலக் கழித்தார்கள். இருண்டுபோன தங்கள் வாழ்க்கையில், என்றாவது ஒருநாள் வெளிச்சம் வரும் என்று காத்திருந்தார்கள்.

அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை! விரைவிலேயே கோடி சூரியப் பிரகாசமாக் வெளிச்சம் வரத்தான் செய்தது!

தேவகி சிறைச்சாலையில் ஏழாம் முறை கர்ப்பமடைந்தாள். கம்சன் எச்சரிக்கையானான்! அவளுக்குக் குழந்தை பிறந்ததுமே தனக்குத் தகவல் தெரிவிக்கும்படி கட்டளையிட்டு, சிறையில் அவர்களைச் சுற்றி வீரர்களை நியமித்தான். வெகு ஜாக்கிரதையாகக் காவல் காக்கும்படி கட்டளையிட்டான்.

கம்சனின் நடவடிக்கைகளைக் கண்டு பகவான் புன்னகைத்துக் கொண்டார். தன் யோகமாயையைக் கூப்பிட்டார்.

'மாயா! தேவகியின் வயிற்றில் ஏழாவதாக வளர்ந்து வரும் கரு ஆதிசேஷனின் அம்சம். நீ அந்தக் கருவை எடுத்து, கோகுலத்தில் வசித்து வரும் வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோஹிணியின் வயிற்றில் சேர்த்து விடு! அடுத்ததாக, நான் தேவகியின் வயிற்றில் எட்டாவது கருவாக வளரப் போகிறேன். அதேசமயத்தில் நீ, கோகுலத்தில் நந்தகோபன் என்பவனின் மனைவியான யசோதையின் கர்ப்பத்தில் வளர்ந்து வா!' என்று அனுப்பிவைத்தார்.

யோகமாயை அதன்படியே செய்தாள்.

தேவகியின் ஏழாவது கரு வயிற்றிலேயே கலைந்துவிட்டது என்று கேள்விப்பட்ட கம்சன், 'கொல்லும் வேலை எனக்கு மிச்சமானது!' என்று சந்தோஷப்பட்டான்.

தேவகியின் வயிற்றில் எட்டாவது கருவாக, பகவான் குடியேறினார். அதனால் கர்ப்பிணியான அவளின் அழகு மேலும் ஒளிர்ந்தது! இதைக்கண்ட கம்சன் கலக்கமடைந்தான். குழப்பமும் கொண்டான்.

'உயிரோடு பிறக்கப்போகும் குழந்தை என்று பார்த்தால் இது ஏழாவதுதான். ஆனால் கர்ப்பத்தைக் கணக்கிட்டாலோ இது எட்டாவது! இந்தக் குழந்தையால் ஆபத்து உண்டாகுமா இல்லையா என்று தெரியவில்லையே!' என்று நினைத்தவன், 'எதற்கு இந்த வீண் கவலை? பிறந்ததுமே இந்தக் குழந்தையையும் கொன்றுவிட்டால் துயரம் தீர்ந்தது!' என்று முடிவெடுத்தான்.

மேலும் எச்சரிக்கையாக, தேவகிக்கும் வசுதேவருக்கும் கை, கால்களில் விலங்கிட்டுப் பூட்டினான். குழந்தை பிறப்பதற்காகக் காத்திருந்தான்.

அந்த நாள் விரைவிலேயே வந்தது!

ஆவணி மாதம், அஷ்டமி திதி, ரோகிணி நட்சத்திரம் கூடிய இரவு வேளையில், நல்லவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றவும், தீயவர்களைப் பொசுக்கவுமாக சுட்டெரிக்கும் சூரியப் பிரகாசத்துடன், தேவகி மைந்தனாக பகவான் பூவுலகில் பிறந்தான்.

ஆகாயத்தில் மங்களப் பேரிகைகள் முழங்க, கிந்தர கந்தர்வர்கள் கானம்பாட, அப்ஸர கன்னிகைகள் நடனமாட, திவ்விய திருக்கோலத்துடன் மகாவிஷ்ணுவே சிறுகுழந்தையாக அவதரித்தார்.

சங்கு சக்கரம் கொண்டவனாக, வனமாலையும் பீதாம்பரமும் அணிந்து சதுர்ப்புஜனாக, எழிலான வடிவத்துடன் பிறந்த

குழந்தையைப் பார்த்து, தேவகியும் வசுதேவரும் சிலிர்த்துப் போனார்கள். பரவசத்துடன் பகவானைத் தொழுதார்கள்.

பகவான் அவர்களிடம் கூறினார்:

'முன்பிறவியில் நீங்கள் இருவரும் என்னை நோக்கி கடும் தவம் செய்து, என்னைப்போல் ஒரு மகன் வேண்டும் என்று வேண்டினீர்கள். அதன்படியே இப்போது உங்களுக்கு மகனாகப் பிறந்திருக்கிறேன். அந்த முந்திய பிறவியை உங்களுக்கு நினைவுபடுத்துவதற்காகவே, என் தெய்வீக வடிவை உங்களுக்குக் காட்டினேன்!' என்றார். பின், சாதாரண மானிடக் குழந்தை வடிவமானார்.

இதே சமயம் நந்த கோகுலத்தில், யசோதையின் குழந்தையாக யோகமாயை பிறந்திருந்தாள்.

தேவகிக்கு மகனாகப் பிறந்த பகவான், வசுதேவரிடம் கூறினார்:

'கோகுலத்தில் யசோதைக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. என்னைக் கொண்டுபோய் அவளிடம் விட்டு விட்டு, அந்தக் குழந்தையை இங்கே கொண்டு வாருங்கள்!'

அவர் சொன்னதுமே, வசுதேவரின் விலங்குகள் தெறித்தன. வசுதேவர் குழந்தையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

சிறைக்கதவுகள் தானே திறந்தன. காவலர்கள் பகவானின் மாயத்தால் மயங்கிப் போயினர். வெளியே இடி, மின்னலுடன் மழை பெய்துகொண்டிருந்தது. ஆதிசேஷனே, தனது படங்களை விரித்துக் குடைபிடித்து பகவான் மீது மழைநீர் படாதபடி பின்தொடர்ந்து சென்றான். வழியில் தென்பட்ட யமுனை நதியில், வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. ஆனாலும், அது வசுதேவர் செல்வதற்காக இடம் கொடுத்து விலகிக்கொண்டது.

கோகுலத்தை அடைந்த வசுதேவர், தனது குழந்தையை அவள் பக்கத்தில் வைத்துவிட்டு, அவளிடம் இருந்த பெண்

குழந்தையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். மீண்டும் சிறைச்சாலைக்கே வந்து சேர்ந்தார்.

சிறைக்கதவுகள் மீண்டும் தாமே மூடிக்கொண்டன. விலங்குகள் பூட்டிக்கொண்டன. இதுவரை நடந்தது எதுவும் தெரியாமல், காவலர்கள் கண்விழித்து முன்போலவே காவல் காக்கத் தொடங்கினார்கள். குழந்தை அழும் சப்தம் கேட்டு கம்சனிடம் சென்று தெரிவித்தார்கள்.

கம்சன் பதற்றமும் பயமுமாக ஓடி வந்தான். 'எட்டாவதாகப் பிறந்த குழந்தை எங்கே?' என்று கேட்டான். வசுதேவர் பெண் குழந்தையை எடுத்து நீட்டினார்.

கம்சன், அதைப் பெற்றுக்கொண்டு வாளால் வெட்டப் போனான். அப்போது அந்தக் குழந்தை அவன் கையிலிருந்து விடுபட்டு ஆகாயத்தில் சென்று நின்றது. விஷ்ணுவின் தங்கையான அந்த மோக மாயை, எட்டுக் கைகளும் அவற்றில் பலவகையான ஆயுதங்களும் ஏந்திக் காட்சி தந்தாள்.

கம்சனைப் பார்த்துச் சிரித்தபடி, 'மடையனே! என்னைக் கொல்வதால் உனக்கு எந்தப் பயனுமில்லை. உன்னைக் கொல்லப்போகிறவன், வேறு இடத்தில் பிறந்திருக்கிறான். வீணாக அப்பாவிகளைத் துன்புறுத்தாதே!' என்று கூறி மறைந்தாள்.

கம்சன் ஏமாற்றமடைந்தான்.

'எட்டாவது கர்ப்பம்தானே எனக்கு எமன் என்று அசரீரி கூறியது. ஆனால் இந்த எட்டாவது பெண் குழந்தை என்னை ஒன்றும் செய்யவில்லையே! கடைசியில் அசரீரி சொன்னது பொய்யாகி விட்டதே! அதை நம்பியல்லவா, தங்கை தேவகியையும் வசுதேவரையும் சிறையிலிட்டேன்? குழந்தைகளையெல்லாம் கொன்றேன். ச்சே! தவறு செய்து விட்டேனே!' என்று மனம் வருந்தினான். தேவகியிடமும் வசுதேவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவர்களை விடுதலை செய்தான்.

ஆனாலும், தன்னைக் கொல்லப்போகும் குழந்தை வேறிடத்தில் பிறந்துவிட்டது என்று யோகமாயை கூறியதை அவன் மறக்கவில்லை.

அசுர மந்திரிகளுடனும் சேனாதிபதியுடனும் சேர்ந்து அதைப் பற்றி ஆலோசனை நடத்தினான். 'கம்சனைக் கொல்லப்பிறந்த குழந்தை எங்கே பிறந்திருக்கிறது? அந்தக் குழந்தையை எப்படிக் கண்டுபிடிப்பது' என்று யோசித்தவர்கள், இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

'நாலாபுறமும் அசுரர்களை அனுப்பி, இந்த ஒரு மாத காலத்துக்குள் பிறந்த எல்லாக் குழந்தைகளையும் கொன்று விடச் சொல்லலாம்!' என்பதே அந்தக் கொடிய திட்டம்.

கம்சன் காலதாமதம் செய்யாமல், உடனே அசுரர்களை நாலாதிசைகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு, கலக்கமும் பயமுமாகத் திரியத் தொடங்கினான். எங்கு பார்த்தாலும் யமன் பாசக்கயிறுடன் நிற்பது போலவே அவன் கண்களுக்குத் தெரிந்தது. கம்சன் மொத்தமாக நிம்மதியிழந்தான்.

அதே சமயத்தில் கோகுலத்திலோ, கொண்டாட்டமும் குதூகலமும் கொடிகட்டிப் பறந்தது.

குழந்தையைக் குறிவைத்த அசுரர்கள்!

கோபர்களும் கோபியர்களும் விழா ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தார்கள்.

யசோதைக்கும் ரோகிணிக்கும் பிறந்த குழந்தைகளால் கோகுலம் முழுவதுமே மகிழ்ச்சி நிலவியது. நந்தகோபன், குழந்தைகளுக்கு மங்கள ஸ்நானம் செய்து அந்தணர்களை அழைத்து பூஜைகள் நடத்தி ஏராளமான தானங்கள் செய்தான். வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று அறுசுவை விருந்து படைத்தான். ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று, வெகுநாள்களுக்குப் பிறகு கோகுலத்தில் சந்தோஷமும் கலகலப்பும் எங்கும் எதிரொலித்தது.

இந்தக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில் நந்தகோபனுக்கு ஒரு முக்கியமான வேலை

இருந்தது. கம்சனுக்கு கப்பம் கட்டவேண்டிய கடமை! தன்னுடைய ஆள்களை அழைத்து, கோகுலத்தில் உள்ள அனைவரையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு மதுராவுக்குப் பயணமானான்.

கம்சனுக்குச் செலுத்தவேண்டிய கப்பத் தொகையைச் செலுத்தி விட்டு, வசுதேவரைச் சந்திக்கச் சென்றான்.

வசுதேவர், தன் உறவினரான நந்தகோபனை அன்புடன் வரவேற்றார்.

‘நந்தகோபரே! வெகு நாள்களுக்குப் பிறகு தங்களுக்கு மகன் பிறந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி! யசோதையும் ரோஹிணியும் மற்றவர்களும் நலம்தானே?’ என்று விசாரித்தார்.

‘எல்லோரும் நலம்தான் வசுதேவரே! ஆனால், தங்களைப் பற்றித்தான் யாதவர்கள் எல்லோருமே துயரம் கொண்டுள்ளோம். தங்களுக்குப் பிறந்த எல்லாக் குழந்தைகளையும் கம்சன் கொன்றுவிட்டான் என்று கேள்விப்பட்டு, தாளாத வேதனையடைந்தோம்!’ என்று கூறி வருந்தினான்.

‘என்ன செய்வது? எல்லாம் விதியின் செயல்!’ என்று கூறிய வசுதேவர், ‘நந்தகோபரே! நீங்கள் வந்த காரியம் முடிந்து விட்டதல்லவா? இனி, இங்கு காலதாமதம் செய்யாமல் உடனே கோகுலத்துக்குப் புறப்பட்டுச் செல்லுங்கள். அங்கு ஏதாவது ஆபத்துகள் நிகழலாம் என்று எனக்குத் தோன்றுகிறது’ என்றார்.

அவர் சொன்னபடியே, ஓர் பேராபத்து கோகுலத்தில் அடியெடுத்து வைத்திருந்தது!

எட்டுத் திசைகளிலும் குழந்தைகளைக் கொல்வதற்காக கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கர்களில் ஒருத்தி பூதனை. கோர சொரூபம் கொண்ட அவள், கோகுலத்தில் நுழையும் முன்பாக தன்னை ஒரு பேரழகியாக உருமாற்றிக்

கொண்டிருந்தாள். அடிக்கடி வந்து செல்பவள் போல நந்தன் வீட்டுக்குள் அவள் நுழைந்தபோது, யாருக்கும் அவளை தடுக்கக்கூடத் தோன்றவில்லை. எல்லோரும் அவள் அழகில் மெய்மறந்து நின்றிருந்தனர்.

பூதனை, தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த குழந்தையை நெருங்கினாள். அன்போடு கொஞ்சுவதுபோல அவனை அள்ளித் தூக்கினாள். மடியில் போட்டுக்கொண்டு விஷப் பால் நிரம்பிய தன் மார்பை குழந்தையின் வாய்க்குக் கொடுத்தாள். பாலை உறிஞ்சிக் குடித்த மறுநொடியே குழந்தை இறந்து போய்விடும் என்று நினைத்தாள்.

குழந்தை கண்ணன் அவளைப் பார்த்து கன்னம் குழியச் சிரித்தான். பூதனையின் எண்ணப்படியே மார்பை இறுகப் பிடித்துக்கொண்டு பாலை உறிஞ்சத் தொடங்கினான். ஆனால், பூதனை அதைக்கண்டு மகிழாமல் அலறத் தொடங்கினாள்! ஆம்! குழந்தை கண்ணன் விஷப்பாலை மட்டும் உறிஞ்சாமல், அவள் உயிரையும் சேர்த்து அல்லவா உறிஞ்சினான்!

பூதனை துடித்தாள். குழந்தையை உதறிவிட முயற்சித்தாள். 'விடு... விடு என்னை! விட்டு விடு!' என்று கத்தினாள். பின் தடாலென்று சுய உருவத்துடன் உயிரற்று கீழே விழுந்தாள்.

அரக்கியின் மரணக்கூச்சலைக் கேட்டு ஓடி வந்தவர்கள், சிறு குன்றைப்போல வாய் பிளந்து விழுந்து கிடந்த பூதனையின் உடலைக்கண்டு மலைத்துப்போனார்கள். அரக்கியின் உடல்மீது சிரித்தபடி விளையாடிக்கொண்டிருந்த கண்ணனைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். யசோதை பதற்றத்துடன் வந்து கண்ணனைத் தூக்கிக்கொண்டாள். அவனுக்கு திருஷ்டி கழித்தாள். பயம் விலகாமல் வெடவெடத்தாள்.

மதுராவிலிருந்து அப்போதுதான் திரும்பிய நந்தகோபன், நடந்ததையெல்லாம் கேள்விப்பட்டான். வசுதேவர் சொன்னதுபோலவே ஆபத்து வந்துவிட்டதே என்று நினைத்து கலங்கினான்.

கோபர்கள், அரக்கி பூதனையின் உடலை கோடரிகளால் துண்டு துண்டாக வெட்டி தீயிட்டுக் கொளுத்தினார்கள். அது எரியும்போது பிணவாடை வீசாமல், அகில் சந்தனத்தின் வாசனை வீசுவதை நுகர்ந்து ஆச்சரியப்பட்டார்கள்!

பகவானின் ஸ்பரிசம் பட்டதாலேயே அந்த அரக்கிக்கும் மோட்சம் கிடைத்துவிட்டது என்பதை அவர்கள் அறியவில்லை!

கோகுலத்தில் அரக்கி பூதனை செத்துப்போன தகவல் கம்சனை எட்டியது. திடுக்கிட்டுப் போனான். அவன் உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. 'அப்படியானால், எனக்கு யமனாக வந்திருப்பவன் கோகுலத்தில்தான் பிறந்திருக்கிறான்!' என்று தீர்மானத்துக்கு வந்தான். சகடாசுரன், திருணாவர்த்தன் என்கிற அரக்கர்களை அழைத்தான். 'கோகுலத்தில் பிறந்திருக்கும் என் எதிரியை தீர்த்துக் கட்டிவிடுங்கள்!' என்று கட்டளையிட்டான்.

சகடனும் திருணாவர்த்தனும் உற்சாகத்துடன் கிளம்பினார்கள்.

பாவம்! அடுத்த பலி ஆடுகள்!

கோகுலத்தில், கண்ணன் பிறந்து மூன்று மாதங்கள் ஆகியிருந்தன. அவன், அழகாகப் புரண்டு குப்புறக் கவிழத் தொடங்கியிருந்தான்.

யசோதைக்கும் மற்ற கோபிகைப் பெண்களுக்கும் மாற்றி மாற்றி அவனைத் தூக்கிவைத்துக் கொஞ்சுவதற்கே நேரம் சரியாக இருந்தது. குண்டு குண்டுக் கண்களும் கொழு கொழு கன்னமும் பூப்போன்ற புன்னகையுமாக, எல்லோர் மனங்களையும் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான் அந்த மாயவன்.

கண்ணன் குப்புறக் கவிழ்ந்துகொள்ளத் தொடங்கியதை, யசோதை ஒரு வைபவமாகக் கொண்டாடினாள். கோகுலத்தில் எல்லோரையும் விருந்துக்கு அழைத்திருந்தாள்.

குழந்தை குளித்து முடித்து, பால் குடித்த அசதியில் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான்.

வீட்டினுள்ளே விருந்துபசாரம் நடந்து கொண்டிருந்ததால், யசோதை குழந்தையை தொட்டிலுடன் வெளியே கொண்டு வந்தாள். வண்டி ஒன்று வெளியே நிற்பதைக் கண்டாள். 'இந்த வண்டியை இதற்கு முன்பு பார்த்ததில்லையே!' என்று நினைத்தாள். ஆனாலும், நிழலுக்காக அந்த வண்டியின் கீழே தொட்டிலைப் போட்டு அதனுள் குழந்தையைப் படுக்க வைத்தாள். விருந்தினர்களைக் கவனிக்க உள்ளே போனாள்.

யசோதை நினைத்தது சரிதான்! கம்சன் அனுப்பிவைத்த சகடாசுர அரக்கன்தான் அங்கு வண்டியாக உருமாறி நின்றிருந்தான். யசோதை கச்சிதமாக அந்த வண்டியின் கீழேயே குழந்தையை விட்டுப்போக, சகடன் சந்தோஷமானான். குழந்தையைச் சுலபமாகக் கொன்றுவிடலாம் என்று நினைத்தான். அப்படி அவன் நினைத்தபோதே, கண்ணன் பசியால் அழத்தொடங்கினான்.

யசோதை வேலையில் ஆழ்ந்திருந்ததால், குழந்தை அழுத சப்தம் அவளுக்குக் கேட்கவில்லை.

கண்ணன், பசி தாளாமல் கை கால்களை உதைத்துக்கொண்டு அழுவதுபோல வீறிட்டான். வண்டியை எட்டி ஓர் உதை விட்டான். அவ்வளவுதான்! அவன் பிஞ்சுப் பாதங்கள் பட்டு சக்கரங்கள் நொறுங்கியது. வண்டி உடைந்து சிதறியது. சகடாசுரன் அலறியபடி செத்து மடிந்தான்.

கோபர்களும் கோபியரும் யசோதையும் சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள். வண்டி சுக்கு நூறாகச் சிதறிக்கிடப்பதைப் பார்த்தார்கள். இது எப்படி நடந்தது என்றுதான் ஒருவருக்கும் புரியவில்லை. குழந்தை கண்ணன் எட்டி உதைத்ததால்தான் வண்டி தூளானது என்று, அங்கு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் பெரியவர்களிடம் சொன்னார்கள். ஆனால், அதை யாரும் நம்பவில்லை.

நந்தகோபன், குழந்தையை மேலும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளும்படி யசோதையை எச்சரித்தான்!

யசோதை எச்சரிக்கை ஆனாளோ இல்லையோ, சகடாசுரனுடன் வந்த திருணாவர்த்தன் எச்சரிக்கையானான்.

'அசுரர்களான எங்களைவிட, இந்தக் குழந்தை பெரிய மாயாவியாக இருக்கிறானே! மேலும் இவனை விட்டு விடாமல், சர்வ ஜாக்கிரதையாகத் தீர்த்துவிட வேண்டும்!' என்ற முடிவுக்கு வந்தான்.

ஒரு பெரும் சூறைக்காற்றாக மாறி, மிகுந்த வேகத்துடன் கோகுலத்துக்குள் நுழைந்தான்.

அப்போது யசோதை, கண்ணனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள். திடீரென குழந்தை கனக்க ஆரம்பித்தது போல அவளுக்குத் தோன்றியது. ஆமாம், அது பிரமையில்லை! குழந்தையின் பளுவை போகப் போக அவளால் தாங்க முடியவில்லை. ஆச்சரியத்துடன் குழந்தையைத் தரையில் இறக்கிவிட்டாள்.

சூறைக்காற்றாக புழுதியைக் கிளப்பிக்கொண்டு புயல்போல நுழைந்த திருணாசுரன், வந்த வேகத்திலேயே, குழந்தையைத் தூக்கிக்கொண்டு மேலெழும்பினான். ஒரு சுழற்று சுற்றி குழந்தையை வீசியெறிந்து கொன்றுவிடலாம் என்று நினைத்தான்.

வானத்தில் புயல் காற்று ஒரு சுழலாகச் சுற்றுவதையும், கீழே குழந்தையைக் காணாததையும் கண்டு யசோதை அலறினாள். சுற்றுமுற்றும் பதற்றத்துடன் தேடினாள்.

ஆகாயத்திலோ, 'குழந்தை தன்னிடம் சிக்கிக்கொண்டு விட்டது!' என்று எண்ணிய திருணாசுரன், இப்போது கண்ணனிடம் சிக்கி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். குழந்தையை பூப்போல கசக்கி வீசி விடலாம் என்று நினைத்தவன், கண்ணன் தன் கழுத்தைப் பற்றிக்கொண்டதுமே திகைத்துப்

போனான். குழந்தையின் கனத்தை அவனால் தாள முடிய வில்லை.

கண்ணனின் பிஞ்சுக் கை, அசுரனின் கழுத்தைப்பற்றி நெறித் தது. அசுரன் விழிகள் தெறிக்க வேதனைப்பட்டான். குழந்தை யின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளப் போராடி னான். முடியாமல் மூச்சுத் திணறி, கண்கள் பிதுங்கி பிணமாக தரையில் வந்து விழுந்தான்.

கோகுலவாசிகள் பதறி ஓடிவந்து பார்த்தபோது, பெரும்பூதம் போல விழுந்துகிடந்த அசுரனின் மார்பில் குழந்தை குத்தி விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள்!

'இதெல்லாம் என்ன! எப்படி நடந்தது?' என்று ஒன்றும் புரியவில்லை. 'எதுவானால் என்ன? குழந்தைக்கு ஒன்றும் ஆகவில்லை. அது போதும்!' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்கள், கண்ணனைத் தூக்கி முத்தமிட்டுக் கொஞ்சிய படி வீடு திரும்பினார்கள்.

இந்தச் சமயத்தில் யாதவர்களின் குலகுருவான கார்க்காசாரியார் கோகுலத்துக்கு வந்தார். வசுதேவர்தான் அவரை அங்கு அனுப்பி வைத்திருந்தார். நந்தகோபன், மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்று உபசரித்தான்.

'ஸ்வாமி! நீங்கள்தான், யசோதைக்கும் ரோகிணிக்கும் பிறந்த குழந்தைகளுக்கு பெயர் சூட்டவேண்டும்!' என்று கேட்டுக் கொண்டான்.

'நந்தகோபா! நான் யாதவர்களின் குரு. குழந்தைகளுக்கு நான் பெயர் சூட்டியது தெரிந்தால் கம்சன் சந்தேகப்படுவான். நீயும் வசுதேவரும் நண்பர்கள் என்பதால், இது வசுதேவனின் குழந்தையோ என்று எண்ணி அவன் ஏதாவது ஆபத்தை விளைவிக்க முயற்சி செய்யலாம்!' என்று எச்சரித்தார் கர்க்காசாரியார்.

மகாபலி சக்ரவர்த்திக்கு அருள்புரியும்
வாமன அவதாரம்.

ராம, லவகுசர்கள் எதிரே சீதையை பூமி பிளந்து அழைத்துக்கொள்கிறது.

சரி அப்படியானால், யாருக்கும் தெரியாமல் என் வீட்டுக் குள்ளேயே பெயர் சூட்டும் வைபவத்தை முடித்துக் கொள்ள லாம்!' என்றான் நந்தகோபன்.

அதன்படி, கர்க்கர் பெயர் சூட்டும் நிகழ்ச்சியை முறைப்படி நடத்தினார்.

பின், 'ரோகிணியின் மகனான இந்தக் குழந்தைக்கு ராமன் என்று பெயர் சூட்டுகிறேன். ராமன் என்றால் 'எல்லோரையும் மகிழ்விப்பவன்' என்று பொருள். இவன் மிகுந்த பலசாலியாக வும் விளங்குவான் என்பதால், 'பலன்' என்றும் அழைக்கலாம். மொத்தத்தில் இவன் பலராமன்!' என்றார்.

அடுத்து யசோதையின் மகனைப் பார்த்துச் சொன்னார்:

'இந்தக் குழந்தை பகவான் நாராயணனின் அவதாரம். இவன் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நிறத்துடன் பிறந்தவன். கடந்த மூன்று யுகங்களில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் நிறங் களில் பிறந்தவன், இம்முறை கருப்பு நிறத்தவனாகப் பிறந்திருக் கிறான். எனவே, இவனுக்கு கருநிறத்தவன் என்ற பொருளில் 'கிருஷ்ணன்' என்று பெயர் சூட்டுகிறேன். இவனே முன் னொரு சமயம் வசுதேவருக்குப் பிள்ளையாகப் பிறந்ததால் 'வாசுதேவன்' என்றும் அழைக்கப்படுவான்!' என்றவர் தொடர்ந்து சொன்னார்:

'நந்தகோபா! இந்தக் குழந்தையால் உங்கள் கோகுலமும் கோப கோபியர்களும் மிகுந்த சிறப்பை அடையப்போகிறீர்கள். இவன் உங்களுக்கு எல்லையில்லாத சந்தோஷத்தைத் தருவான். எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் காப்பாற்றுவான்!' என்று சொல்லி, கர்க்கர் விடைபெற்றுக்கொண்டார்.

யசோதையும் ரோகிணியும் தங்கள் பிள்ளைகளை பெயர் சொல்லிக் கூப்பிட்டு மகிழ்ந்தார்கள்.

***

கொஞ்சம் குறும்பு; கொஞ்சம் விஷமம்!

குழந்தைகள் பலராமனும் கிருஷ்ணனும் தவழத் தொடங்கினார்கள்!

தங்க ஆபரணங்கள் அணிந்து, கைகளில் கங்கணமும் கால்களில் சலங்கைகளும் குலுங்க அவர்கள் தவழ்ந்த காட்சி, அலாதி யான இன்பத்தைத் தந்தது. வீட்டில் ஒரு பொருளையும் கீழே வைக்க முடியவில்லை. தட்டிக் கவிழ்த்து, கொட்டி, களேபரம் செய் தார்கள்! யசோதையும் ரோகிணியும் அதைக் கண்டு ரசித்துச் சிரித்தார்கள். கொஞ்சி மகிழ்ந்தார்கள்.

தவழ்ந்த குழந்தைகள், நின்று, நடந்து ஓடத் தொடங்கினார்கள். கோகுலத்தில் இருந்த மற்ற சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டு ஓடிப்பிடித்து

விளையாடினார்கள். எல்லோரையும்விட கிருஷ்ணன் மிகுந்த குறும்புக்காரனாக இருந்தான்.

பசுக்களிடம் பால் கறப்பதற்கு முன்பாகவே கன்றுகளை அதனிடம் அவிழ்த்து விடுவது, கறந்து வைத்திருக்கும் பாலை யாருக்கும் தெரியாமல் குடித்து விடுவது, வெண்ணெய் பானையை எடுத்துக்கொண்டு ஓடி விடுவது என்று அவனு டைய குறும்புச் செயல்கள் அதிகரித்துக்கொண்டே போனது!

கோபிகைகள் இதைக்கண்டு அவனைத் திட்டினால், முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு சிணுங்குவான். கண்கள் கலங்கு வது போல் தோன்றும். இதைப் பார்த்ததுமே கோபிகை களுக்கு மனம் தாளாது. அவனைச் சமாதானப்படுத்துவதற் காக, வெண்ணெயை கைநிறைய அள்ளித் தருவார்கள். அப் போது அவன் சிரிக்கும் மாயப் புன்னகையைப் பார்க்க வேண்டுமே! அடடா! மனம் அப்படியே அவனிடம் திருடு போய்விடும்!

சரி, அதற்காக எத்தனைதான் பொறுத்துக்கொள்ள முடியும்? கண்ணனின் சேஷ்டைகள் தாங்காமல் எல்லா கோபிகைகளும் ஒன்று திரண்டு யசோதையிடம் போய்ச் சொன்னார்கள்:

'யசோதா! உன் பிள்ளை கிருஷ்ணனை கொஞ்சம் கண்டித்துவை. அவனுடைய குறும்புகள் எல்லைமீறிப் போகின்றன. யாருமில்லாத வீட்டில் புகுந்து தயிர், வெண் ணெயைத் திருடித் தின்கிறான். தான் சாப்பிடுவது மட்டு மில்லாமல் குரங்குகளுக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறான். இவன் கைக்கு எட்டாதபடி உறியில் எடுத்து வைத்தாலும், உரல்கள், முக்காலி போன்றவற்றை அடுக்கி, அதன் மீதேறி பானைகளில் ஓட்டை போட்டு எடுத்து உண்கிறான். வீட்டில் சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்காவிட்டால், தொட்டிலில் இருக்கும் குழந்தைகளைக் கிள்ளி அழவிட்டு ஓடுகிறான்!' என்று புகார் பட்டியலை அடுக்கினார்கள்.

யசோதை கோபத்துடன் திரும்பி கிருஷ்ணனைப் பார்த்தாள். பரம சாதுவாக நின்றுகொண்டிருந்தான் கிருஷ்ணன். 'இந்த

சமத்துப் பிள்ளையா இத்தனை விஷமங்கள் செய்தான்?' யசோதையால் நம்ப முடியவில்லை. 'கண்டிக்கிறேன்' என்று சொல்லி கோபிகைகளை அனுப்பிவிட்டாள்.

'ஏண்டா கண்ணா, நீ இப்படியெல்லாம் விஷமங்கள் செய்கிறாயா என்ன?' - சந்தேகத்துடன் கேட்டாள்.

'இல்லையம்மா!' - பாவமாக பதில் சொன்னான் கண்ணன்.

'பின் ஏன் இப்படிச் சொல்கிறார்கள்?'-குழம்பினாள் யசோதை.

ஒருமுறை, பலராமனும் மற்ற சிறுவர்களும் யசோதையிடம் ஓடி வந்தார்கள்.

'அம்மா! கிருஷ்ணன் மண்ணைத் தின்கிறான். சாப்பிடாதே என்று சொன்னால் கேட்க மறுக்கிறான்!' என்று புகார் சொன்னார்கள்.

யசோதை கடுங்கோபத்துடன் கிருஷ்ணனைப் பிடித்து தரதர வென இழுத்து வந்தாள். அவனுடைய இரண்டு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டு, 'கிருஷ்ணா, உண்மையைச் சொல்! மண்ணைத் தின்றாயா?' என்று மிரட்டலுடன் கேட்டாள்.

'இல்லையம்மா! நான் மண்ணைத் தின்னவேயில்லை!' - சாதித்தான் கிருஷ்ணன்.

நீ மண்ணைத் தின்றதை, அண்ணன் பலராமனும் மற்ற சிறுவர்களும் பார்த்ததாகச் சொல்கிறார்களே!'

'அவர்கள் சும்மா விளையாட்டுக்குச் சொல்கிறார்கள். நீ வேண்டுமானால் பார்!' என்று, வாயைத் திறந்து காட்டினான் மாயக் கண்ணன்.

பார்த்தாள் யசோதை! பிரமித்துப் போனாள்! அவளுக்கு மயக்கமே வரும் போலிருந்தது.

கண்ணனின் வாய்க்குள் பிடி மண்ணை எதிர்பார்த்தவள், அண்ட சராசரப் பிரபஞ்சத்தையே அதனுள் பார்த்தாள்!

உயர்ந்த மலைகள், கடல்கள், ஆகாயம், நட்சத்திரங்கள், பூலோகம், கோகுலம், கோபிகைகள்... அட! அதோ யசோதையும், அவள் முன் வாய் திறந்து காட்டும் கண்ணனும்கூட இருக்கிறார்களே!

'இதென்ன! கனவா மாயாஜாலமா? அல்லது எனக்குத்தான் புத்தித் தடுமாற்றமா? இல்லை கண்ணனின் விசேஷ சக்தியா?' என்று சந்தேகம் கொண்டாள். கண்ணனை பிரமிப்புடன் பார்த்தாள். கைகூப்பித் தொழுதாள். உடனே கண்ணன், தன் தெய்வீகக் காட்சியை மறைத்துக்கொண்டு, மாயையால் யசோதை பார்த்த அனைத்தையும் மறக்கடித்தான்.

யசோதை தான் கண்டது எதுவும் நினைவில்லாமல், கள்ள மில்லாச் சிரிப்புடன் தன்முன் நிற்கும் கண்ணனை வாரி அணைத்துக்கொண்டாள்.

யசோதை, கிருஷ்ணனைக் கூப்பிட்டுக் கண்டிக்கப் போகிறாள் என்று பார்த்தால், திட்டாமல் கண்ணனைக் கொஞ்சுகிறாளே என்று பலராமனும் சிறுவர்களும் குழம்பினார்கள். பின் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு விளையாடச் சென்று விட்டார்கள். யசோதையும் புறப்பட்டு ரோகிணியின் வீட்டுக்குப் போனாள்.

கண்ணன் மட்டும் வாசலில் தனியாக நின்றுகொண்டிருந்தான்.

அப்போது ஒரு பழக்காரி, கூடை நிறைய பழங்களைச் சுமந்து கொண்டு 'பழம் வாங்கலையோ பழம்' என்று கூவிக்கொண்டு வந்தாள்.

கிருஷ்ணன் அவளைக் கூப்பிட்டான். 'அம்மா! எனக்கு பழம் தருவாயா?' என்று கேட்டான்.

'குழந்தை மிகுந்த ஆசையுடன், மழலைமொழியில் கேட்டது பழக்காரிக்கு ஆனந்தத்தை ஏற்படுத்தியது.

'ஓ! தருவேனே! பதிலுக்கு நீ என்ன தருவாய்?' என்று கேட்ட படி, கிருஷ்ணனின் பிஞ்சுக் கைகள் கொள்ளாதபடி, பழங் களை அடுக்கினாள்.

'என்ன வேண்டும்?' - கொஞ்சு மொழியில் கேட்டான் கண்ணன்.

'நீ அன்புடன் என்ன தந்தாலும் பெற்றுக்கொள்கிறேன் கண்ணா!'

குழந்தை கிருஷ்ணன், கைகளில் பழத்தைச் சுமக்கமுடியாமல் சுமந்து, பிஞ்சுக் கால்கள் தள்ளாடியபடி நடந்து உள்ளே போனான். பழங்களை வைத்துவிட்டு, தானியப் பானைக்குள் கை விட்டான். தானியத்தை இரண்டு கை நிறைய அள்ளி எடுத்தான். பழக்காரியிடம் தர விரைந்து வந்தான்.

அள்ளியெடுத்ததில் பானைக்குள்ளேயே கொஞ்சம் சிதற, வீட்டின் உள்ளிருந்து வெளியே வருவதற்குள் வழியெல்லாம் தானியங்கள் சிந்திக்கொண்டே வந்து பழக்காரியிடம் கொடுக்கும்போது, சில தானிய மணிகளே இருந்தன.

பழக்காரி, குழந்தையின் செயலிலேயே மனம் ஆனந்தப்பட்டு, அந்த சில தானியமணிகளை திருப்தியுடன் வாங்கி கூடைக் குள் போட்டுக்கொண்டு குழந்தையைக் கொஞ்சி முத்தமிட்டு விட்டுப் புறப்பட்டாள். அவள் கூடையில் வாங்கிப் போட்டுக் கொண்ட தானியங்கள் அத்தனையும் ரத்தினங்களாக மாறி யிருந்தன!

கிருஷ்ணன் அத்தனை ஆசையுடன் பழக்காரியிடம் வாங்கிய பழம் நாவற்பழம். அவனைப் போலவே கரிய நிறமுள்ள பழம்! துதிப்பவர்களின் மனத்தில் தங்கியிருக்கும் கிருஷ்ண னைப் போலவே, சாப்பிட்டவர்களின் நாக்கில் தனது நிறத்தைப் பதிக்கும் பழம்.

கிருஷ்ணன், பழங்களை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புறத் தில் தோட்டத்துக்குச் சென்று அமர்ந்துகொண்டான். பழங் களை நிதானமாக சுவைத்துச் சாப்பிடத் தொடங்கினான்.

அப்போது அவனுடைய அருள்பார்வை, தோட்டத்தில் இருந்த இரண்டு மரங்களின்மீது விழுந்தது. அவற்றைப்

பார்த்து புன்னகைத்தவன், தனது அடுத்த லீலைக்குத் தயாரானான்.

அடுத்த நாள், யசோதை தயிர் கடைந்துகொண்டிருந்தாள். கிருஷ்ணன் அவளருகே வந்து நின்று மெல்லச் சிரித்தான். நெருங்கி உரசினான். பின் மெதுவாக, யசோதையின் மடியில் அமர்ந்துகொண்டான்.

அவன் இப்படியெல்லாம் செய்தால், தாயிடம் பால் அருந்த விரும்புகிறான் என்று அர்த்தம். யசோதை அதைப் புரிந்து கொண்டு, 'கள்ள கிருஷ்ணா! நீ எதற்கு வந்து நிற்கிறாய் என்று எனக்குத் தெரியும். வா இங்கே!' என்று கொஞ்சியபடி, அவனைத் தூக்கி மடியின்மீது கொண்டு, பால் கொடுக்கத் தொடங்கினாள்.

அப்போது, அடுப்பில் பால் பொங்கும் சத்தம் கேட்டது. அவசரமாகக் கண்ணனை கீழே இறக்கி விட்டுவிட்டு, சமையலறைக்கு ஓடினாள் யசோதை.

பாதி பால் குடித்துக்கொண்டிருந்தபோதே, அவள் தன்னைக் கீழே இறக்கிவிட்டுப்போனதால் கிருஷ்ணன் கோபம் கொண்டான். விசும்பலும் அழுகையுமாக மத்தை எடுத்து பக்கத்திலிருந்த வெண்ணெய் பானையை ஆத்திரத்துடன் உடைத்தான். வழிந்த வெண்ணெயை எடுத்து ஓடோடி வந்த ஒரு குரங்குக்குக் கொடுத்துவிட்டு, தானும் உண்ணத் தொடங் கினான்.

சமையலறையிலிருந்து வந்த யசோதை, கண்ணனின் விஷமத் தனத்தைக் கண்டாள். அவனுடைய சுட்டித்தனத்தைக் கண்டு உள்ளுக்குள் ரசித்தாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் பொய்க் கோபத்தை வரவழைத்துக்கொண்டாள்.

'கிருஷ்ணா! வர வர உன் குறும்புத்தனங்கள் எல்லைமீறிப் போகிறது. உன்னை தண்டித்தால்தான் வழிக்கு வருவாய்!' என்றவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ஒரு கயிறை எடுத்துக் கொண்டு கிருஷ்ணனிடம் வந்தாள்.

‘இப்போது, உரலுடன் உன்னைக் கட்டிப்போடப் போகிறேன். வெளியே எங்கும் போக முடியாமல் இங்கேயே இரு. அது தான் உனக்குத் தண்டனை!’ என்றாள்.

உரலுடன் கிருஷ்ணனைக் கட்டிப்போட முயன்றாள். ஆனால் கயிற்றின் நீளம் போதவில்லை. இரண்டங்குலம் குறைவாக இருந்தது. மேலும் சில கயிற்றுத் துண்டுகள் கொண்டுவந்து முடிச்சுப் போட்டு, கண்ணனின் இடுப்பைச்சுற்றி கட்ட முயற்சித்தாள். அப்போதும் இரண்டங்குலம் போதாமலே போனது. இன்னும் கொஞ்சம் கயிறுகள். ம்ஹூம்! இதுவும் போதவில்லை.

எல்லையில்லாப் பரம்பொருளை ஒரு சிறிய கயிறைக் கொண்டு கட்டிவிட முடியுமா என்ன? யசோதைக்கு ஆச்சரிய மாக இருந்தது. அவள் சோர்வடைந்து போனாள்.

கிருஷ்ணனுக்கு அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. கருணையுடன் யசோதை அடுத்தமுறை கட்ட முயற்சிக்கும் போது, அவள் அன்புக்கும் கயிறுக்கும் கட்டுப்பட்டு விட்டான்.

‘கொஞ்ச நேரம் இப்படியே இரு. அப்போதுதான் புத்தி வரும்!’ என்று சொல்லி, மறுபடியும் தயிர் கடையச் சென்றுவிட்டாள் யசோதை.

‘தாமம்’ என்றால் கயிறு. ‘உதரம்’ என்றால் வயிறு. இடுப்பில் கயிறால் கட்டுண்டதால், கண்ணன் ‘தாமோதரன்’ ஆனான்.

உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணன் அக்கம்பக்கம் பார்த்து விட்டு, உரலையும் இழுத்துக்கொண்டு தோட்டத்துப் பக்கம் செல்லத் தொடங்கினான். இப்போது அவனுடைய நோக்க மெல்லாம், அங்கிருந்த இரண்டு மருத மரங்களின் மீதுதான் இருந்தது.

ஆமாம்! அவை அவனுக்காகத்தான் பல வருடங்களாகக் காத்துக்கொண்டிருக்கின்றன! சாப விமோசனம் பெற ஏங்கிக் கொண்டிருக்கின்றன. ஆம்! அவை மரங்களல்ல; தேவர்கள்!

பொதுவாகவே தேவர்களுக்கு, ‘தாங்கள் எல்லோருக்கும் மேலானவர்கள்’ என்கிற கர்வம் உண்டு. அந்த ஆணவத்தின் காரணமாகத்தான் அடிக்கடி ‘குட்டு’ பெறுவார்கள். பரிதவிப் பார்கள். பகவானைச் சரணடைவார்கள். கஷ்டங்களிலிருந்து விடுதலை பெறுவார்கள். இது தொடர்ந்து நடக்கிற சங்கதி.

அதிலும் செல்வச் செழிப்புள்ள வீட்டில் பிறந்த பிள்ளைகள் என்றால், கேட்கவா வேண்டும்! குபேரனின் பிள்ளைகளான நலகூபரன், மணிக்ரீவன் என்கிற இருவரும் அப்படித்தான் இருந்தார்கள். செல்வச் செருக்கு, குபேரனின் பிள்ளைகள் என்கிற ஆணவம், பெரியோர்களை மதிக்காத மமதை, எளியவர்களை ஏளனப்படுத்தும் அகங்காரம் என்று பெரிய இடத்துப் பிள்ளைகளுக்கு உண்டான மோசமான குணங்கள் மொத்தமும் அவர்களிடம் குடிகொண்டிருந்தன.

ஒருமுறை அவர்கள் இருவரும் கங்கா நதியில் ஜலக்ரீடை நடத்திக்கொண்டிருந்தார்கள். ஒரு கையில் ‘வாருணீ’ என்கிற மதுவும் மறு கையில் அப்ஸரப் பெண்களுமாக, புனிதமான நதியில் பொல்லாத காரியம் செய்துகொண்டு கொட்டமடித் தார்கள். குதூகலமும் கொண்டாட்டமுமாக எல்லோரும் விளையாடிக்கொண்டிருந்தபோது, தேவரிஷி நாரதர் அந்தப் பக்கமாக வந்தார்.

நாரதரைக் கண்டவுடன் அலங்கோல நிலையிலிருந்த அப்ஸரப் பெண்கள், அவசர அவசரமாக தங்களின் ஆடை களை உடுத்திக்கொண்டு அச்சத்துடன் விலகிச்சென்றார்கள். குடிபோதையில் இருந்த குபேரனின் மகன்களோ, தங்களின் நிர்வாணக் கோலத்தைக்கூட உணராமல், அலட்சியமாக இருந்தனர். ‘அட, நம்ம நாரதர்தானே!’ என்கிற இளக்காரம்.

பொதுவாகவே நாரதருக்கு கோபம் வராது. சாத்வீகமான பேர்வழி அவர். இப்போதும் அவருக்கு கோபம் வரவில்லை. என்றாலும், மனத்தில் சலிப்பு வந்தது. ‘பணக்கார வீட்டுப் பிள்ளைகள் என்கிற திமிரில்தானே, இவர்கள் இப்படி

மடையர்களாக இருக்கிறார்கள். கொஞ்சமாவது கஷ்டத்தை அனுபவித்தால்தான் திருந்துவார்கள்!' என்று நினைத்தார்.

'மரியாதையோ வெட்க உணர்வோ எதுவும் இல்லாமல் ஜடம் போல் கிடந்த நீங்கள், மரங்களாக மாறக்கடவீர்!' என்று சாபம் கொடுத்தார்.

நலகூபரனும் மணிக்ரீவனும் நடுங்கிப் போனார்கள். தண்டனை கொடுத்தவரின் காலில் சாஷ்டாங்கமாக விழுந் தார்கள். 'மகரிஷியே, மனம் திருந்திவிட்டோம். தெரியாமல் செய்த தவறை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு சாப விமோசனம் அருளுங்கள்!' என்று வேண்டினார்கள்.

நாரதரும் அவர்கள் மனம் திருந்தவேண்டும் என்றுதானே எதிர்பார்த்தார்.

'கவலைப்படாதீர்கள்! கோகுலத்தில் நீங்கள் இருவரும் மருத மரங்களாக மாறியிருங்கள். அங்கே பகவான் குழந்தையாக உலவும் தருணத்தில், உங்களுக்கு சாப விமோசனம் அருள் வான்!' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

நாரதரின் சாபப்படி மருத மரங்களாக மாறி விட்ட குபேர மைந்தர்கள். சாப விமோசனம் தருவதற்காக கிருஷ்ணன் உரலை இழுத்துக்கொண்டு அவர்களிடம் போனான். பிரும் மாண்டமாக நின்ற இரண்டு மரங்களுக்கு நடுவே தவழ்ந்து சென்றான். அப்போது அவனுடைய இடுப்புடன் கட்டப் பட்டிருந்த உரல், மரங்களுக்கு இடையே சிக்கிக் கொண்டது.

கிருஷ்ணன், உரலையும் சேர்த்து இழுத்தான். அது வர வில்லை. மேலும் பலம் கொண்ட மட்டும் சேர்த்து இழுத்தான். அவ்வளவுதான்! மரங்கள் இரண்டுமே வேரோடு சாய்ந்து மண்ணில் விழுந்தன. அதிலிருந்து நலகூபரனும் மணிக் ரீவனும் வெளிப்பட்டனர். சாப விமோசனம் தந்த பகவானுக்கு நன்றி சொல்லி வணங்கிவிட்டு மறைந்தனர்.

தோட்டத்தில் மரங்கள் முறிந்து விழுந்த சப்தம் கேட்டு, நந்தகோபரும் மற்றவர்களும் ஓடி வந்தார்கள். பல வருடங் களாக திடமாக இருந்த மரங்கள் எப்படி விழுந்தன என்று திகைத்தார்கள்.

அங்கிருந்த சிறுவர்கள், 'கிருஷ்ணன் உரலை இழுத்ததனால் தான் மரங்கள் விழுந்தன. மரங்களிலிருந்து இரண்டு தேவ புருஷர்கள் வெளிவந்து மறைந்து போனார்கள்!' என்று சொன்னதை யாருமே நம்பவில்லை.

எப்படியோ, குழந்தை கண்ணன்மேல் மரங்கள் விழாமல் அவன் ஆபத்திலிருந்து தப்பினானே அதுவே போதும் என்று நினைத்து நிம்மதியடைந்தார்கள். ஒன்றுமே தெரியாத சாதுப் பிள்ளை போல் அப்பாவியாக நின்ற கிருஷ்ணனை, அள்ளி அணைத்து முத்தமிட்டான் நந்தகோபன்.

ஆனாலும் அவன் மனத்துக்குள் கவலை கூடிக்கொண்டே வந்தது.

'அடுக்கடுக்காக கிருஷ்ணனைச்சுற்றி ஏதாவது ஆபத்துகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறதே!' என்று கலக்கமடைந் தான். மற்றவர்களிடமும் இதைப்பற்றி விவாதித்தான்.

அப்போது யாதவ கூட்டத்தில் மூத்தவனான உபநந்தன் என்பவன் சொன்னான்:

'நந்தகோபா! இனியும் இந்த கோகுலத்தில் வசிப்பது சரி யென்று தோன்றவில்லை. இங்கு பாதுகாப்பில்லாமல் போய் விட்டது. குழந்தைகளைச்சுற்றி ஏதாவது விபரீதங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. எனவே, நாம் அனைவரும் கோகுலத்தைவிட்டு வேறிடத்துக்கு குடிபெயர்ந்து விடு வோம்!' என்றான்.

'நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், வேறு எங்கே செல்வது? அதுதான் தெரியவில்லை!'

'அதைப்பற்றி கவலைப்படாதே! பிருந்தாவனம் என்கிற காட்டுப் பிரதேசம் இருக்கிறது. மிக அற்புதமான இடம். செழுமையான பிரதேசம். இடையர்களான நாம் நமது

பசுக்களுடன் அங்கு நிம்மதியாக இருக்கலாம்!' என்று வழி சொன்னார்.

இந்த யோசனையை நந்தகோபர் முதலான எல்லா கோபர்களுமே ஏற்றுக்கொண்டனர். தங்கள் உடைமைகளை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, பசுக்களை ஓட்டிக்கொண்டு, மனைவி, பிள்ளைகளுடன் புறப்பட்டனர்.

***

4

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்...

பிருந்தாவனப் பிரதேசம் அதி அற்புதமாக இருந்தது!

கோவர்த்தன மலையும் அதைச் சுற்றி ஓடும் யமுனை நதியும் வெண்மணற்பாங்கான பிரதேசமும் மனத்தை ஈர்த்தது. பசுக்களை மேய்ச்சலுக்கு அனுப்ப வசதியாக, பரந்த புல்வெளி கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென காட்சியளித்தது.

புதிய இடத்துக்குக் குடிவந்ததில், கிருஷ்ணனும் பலராமனும் மகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்டார்கள். நதிமணல் கரையில் சிறுவர்களுடன் ஒருவரையொருவர் துரத்திப் பிடித்து விளையாடுவதும் கன்றுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதும் புல்லாங்குழல் இசைப்பதும் மாடு,

கன்றுகளைப்போல குரல் எழுப்புவதுமாக பொழுது போக்கி னார்கள்.

கோப கோபியர்களுக்கும் பிருந்தாவனப் பிரதேசம் பிடித்துப் போனது. ஆனாலும் நந்தகோபன் எதிர்பார்த்தபடி அபா யங்கள் கோகுலத்துடன் முடிந்து போகவில்லை. இங்கும் தொடரத்தான் செய்தது.

கோபர்கள், கோகுலத்தை விட்டு இடம் பெயர்ந்து பிருந்தா வனத்துக்குச் சென்றுவிட்டார்கள் என்று தெரிந்ததும் கம்சன் மேலும் பதற்றமானான். தன் கண்களில் படாமல் அவர்கள் வேறெங்காவது சென்று ஒளிந்துகொள்ளும் முன்பாக, கண்ணனைக் கொன்றுவிடத் துடித்தான். மேலும் சில அரக்கர்களைத் தேர்ந்தெடுத்து, கண்ணனை அழித்துவிடும் படி பிருந்தாவனத்துக்கு அனுப்பிவைத்தான்.

வத்சாசுரன், பகாசுரன், அகாசுரன் என்று அரக்கர்கள் பலரும், பொறியல் சிக்கிக்கொள்ள விரையும் எலியைப்போல பிருந்தாவனத்தை நோக்கி விரைந்தார்கள்.

வத்சாசுரன் பிருந்தாவனத்துக்கு வந்த சமயம், சிறுவர்கள் எல்லோரும் கன்றுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

வத்சாசுரன் யோசித்தான். 'இந்தக் கன்றுக்குட்டிகளோடு நாமும் கன்றாக உருமாறிக் கலந்துவிட்டால் யாருக்கும் தெரியாது. சமயம் பார்த்து கிருஷ்ணனைக் கொன்று விடலாம்!' என்று திட்ட மிட்டான். அதன்படியே கன்றாக மாறிக் கலந்துவிட்டான்.

உலகத்தின் ஒவ்வொரு அசைவும் தெரிந்த பரமாத்மாவுக்கு இது தெரியாதா என்ன?

கிருஷ்ணன், வத்சாசுரக் கன்றை கண்காணித்துக் கொண்டே வந்தான்.

அப்போது, எல்லோரும் ஒரு விளாமரத்தின் அடியில் வந்து சேர்ந்திருந்தனர்.

ஒரு சிறுவன், 'கண்ணா! இந்த விளாமரத்தின் பழங்கள் மிகப்பெரியதாக நன்றாக இருக்கின்றன. பறிக்கலாம் என்று பார்த்தால் மிக உயரத்தில் இருக்கின்றன. எப்படிப் பறிப்பது?' என்று நாவில் நீர் சொட்டக் கேட்டான்.

'உனக்கு விளாம்பழங்கள்தானே வேண்டும்? ஒரு நொடியில் அவற்றை கீழே விழச்செய்கிறேன் பார்!' என்ற கிருஷ்ணன், கன்றாக மாறியிருந்த வத்சாசுரன் அருகில் வந்தான். கன்றின் பின் கால்களை பிடித்துத் தூக்கி, ஒரு சுழற்று சுழற்றி பருத்த விளாமரத்தின் மேல் வேகமாக வீசினான். மோதிய வேகத்தில் சுய உருவம் பெற்ற வத்சாசுரன், பெரும் அலறலுடன் கீழே விழுந்து ரத்தம் கக்கி செத்துப்போனான்.

விளாமரமும் முறிந்து, பழங்களுடன் கீழே விழுந்தது. சிறுவர்கள் கூச்சலும் கும்மாளமுமாக கிருஷ்ணனைத் தூக்கிக் கொண்டாடினார்கள்.

அடுத்ததாக வந்து விழுந்த விட்டில் பூச்சி, பகாசுரன்!

இவன் வந்தபோது, கிருஷ்ண பலராமனும் மற்ற சிறுவர்களும் ஒரு நீரோடைக்கு அருகில் இருந்தார்கள்.

கன்றுகளுக்கு தண்ணீர் காட்டவும், தாங்களும் தாகத்துக்கு நீர் அருந்துவதற்காகவும் அவர்கள் நீரோடைக்கு வந்திருந்தார்கள். கன்றுகள் நீர் பருக, தாங்களும் நீர் அருந்தி களைப்பைப் போக்கிக்கொண்டார்கள்.

பகாசுரன், நீரோடைக்கு நடுவே ஒரு மிகப்பெரிய கொக்காக மாறினான். தனது பெரிய சிறகுகளால் படபடத்து பறந்து வந்தவன், அலகுகளால் கிருஷ்ணனைப் பற்றிக்கொண்டு பறந்தான். கிருஷ்ணனை அப்படியே விழுங்க முயற்சித்தான். முடியாமல் திணறினான்!

கிருஷ்ணன் நெருப்புப் பந்துபோல் தகித்தான். பகாசூரனால் சூட்டைத் தாங்க முடியவில்லை. கிருஷ்ணனை கீழே உமிழ்ந் தவன், பயங்கர கோபம் கொண்டான். அவனைக் குத்திக் குதறத் தீர்மானித்தான்.

புயல்போல கீழே இறங்கி, கிருஷ்ணனை கொத்த முயன்றான். கிருஷ்ணனோ, லாகவமாக அவன் அலகுகளைப் பற்றி மூங்கி லைப் பிளப்பதுபோல கொக்கின் அலகுகளை அலட்சியமாக கிழித்துப் போட்டான்.

மரணக்கூச்சலுடன், மலைபோல மண்ணில் விழுந்து உயிர் விட்டான் பகாசுரன்.

இடையச் சிறுவர்கள் இதைக்கண்டு வியப்படைந்தார்கள். கண்ணனைக் கொண்டாடினார்கள்.

பெரியோர்கள் பகாசுரன் அழிந்ததற்காக சந்தோஷப்பட்டா லும், கவலையும் அடைந்தார்கள்.

'சிறுவர்களைக் குறிவைத்து வரும் அரக்கர்கள், எப்படியோ மாண்டு போகிறார்கள். இது ஏன் நடக்கிறது, எதற்காக நடக் கிறது? ஒன்றும் புரியவில்லையே!' என்று குழம்பினார்கள்.

மூன்றாவதாக பிருந்தாவனம் வந்து சேர்ந்தான் அகாசுரன். கிருஷ்ணனால் வதம் செய்யப்பட்ட பூதனைக்கும் பகாசுரனுக் கும் தம்பி இவன். அதனாலேயே பலமடங்கு கோபத்துடன் கிருஷ்ணனைக் கொன்றுவிடத் துடித்தான். பழிக்குப் பழி வாங்க சரியான நேரத்துக்காகக் காத்திருந்தான்.

கிருஷ்ணனே அதற்கான சமயத்தை அமைத்துத் தந்தான். ஒருநாள், எல்லாச் சிறுவர்களையும் வனபோஜனத்துக்குச் செல்லலாம் என்று அழைத்தான் கண்ணன். உற்சாகமடைந்த சிறுவர்கள், விதவிதமான கட்டுச்சோறு, பலவிதமான பல காரங்களை எடுத்துக்கொண்டு, உல்லாசமாகப் பொழுதுபோக வனத்துக்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் வரும் வழியில் அகாசுரன், பெரிய மலைப்பாம்பு உருவெடுத்துப் படுத்திருந்தான். தனது வாயை மிகப் பெரியதாக ஒரு மலைக்குகை போல திறந்து வைத்திருந்தான். அங்கு வந்த சிறுவர்களுக்கு மலைப்பாம்பின் உடல் தெரிய வில்லை. அகலத் திறந்திருந்த வாயை மலைக்குகை என்று

நினைத்து, ஒருவர்பின் ஒருவராக அனைவரும் மலைப் பாம்பின் வாய்க்குள் சென்றனர். கன்றுகளும் கூடவே நுழைந்துவிட்டன.

கிருஷ்ணனுக்கு இது, அசுரனின் மாயை என்பது புரிந்து விட்டது. சிறுவர்களையும் கன்றுகளையும் காப்பாற்றுவதற் காக, ஒன்றும் அறியாதவன் போல தானும் உள்ளே நுழைந்து விட்டான். அகாசுரனும் இதற்காகத்தானே காத்துக் கொண்டிருந்தான்? வானத்தில் தேவர்கள் பதறினார்கள்.

'பகவானும் பாம்பின் வாய்க்குள் போய்விட்டாரே! அகாசுரன் அனைவரையும் விழுங்கி விடுவானே!' என்று கவலைப் பட்டார்கள்.

யாரும் நினைத்துப்பார்க்க முடியாத அதிசயம் அப்போது நடந்தது!

கிருஷ்ணன் மலைப்பாம்பின் வாயில் புகுந்ததும், அசுரன் வாயை மூட முடியாதபடி தன் உருவத்தைப் பிரும்மாண்டமாக வளர்த்தான். அகாசுரனைத் திணறடித்தான். அதனால், அகாசுரன் மூச்சுவிட முடியாமல் திண்டாடினான். உருண்டு புரண்டு துடித்தான். விழிகள் பிதுங்க உயிர்விட்டான்.

அவனுடைய வயிற்றுக்குள் மயங்கிக் கிடந்த,கன்றுகளையும் சிறுவர்களையும் வெளியே மீட்டு வந்தான் கிருஷ்ணன். வானவர்கள் மகிழ்ச்சியுடன் பூக்கள் தூவி வாழ்த்தினார்கள்.

மயக்கத்திலிருந்து மீண்ட சிறுவர்கள், வீட்டுக்குச் சென்றதுமே இதைத் தங்கள் பெற்றோர்களிடம் சொல்லி ஆச்சரியப் பட்டார்கள்.

ஆனால், இதில் மற்றொரு மிகப்பெரிய அதிசயமும் அடங்கி யிருந்தது அந்தச் சிறுவர்களுக்கே தெரியாது.

ஆம்! மிகவும் அற்புதமான கிருஷ்ண லீலை அதற்குள்ளேயே நடந்து முடிந்திருந்தது.

மலைப்பாம்பான அகாசுரனின் வதம் நடந்தபோது சிறுவர்களின் வயது ஐந்து. வீட்டுக்கு வந்து, இந்தச் சம்பவத்தை சிறுவர்கள் சொல்லும்போது அவர்களுக்கு வயது ஆறு ஆகியிருந்தது!

இடைப்பட்ட ஒரு வருட காலத்தில் சிறுவர்கள் எங்கே போயிருந்தார்கள்? என்னவானார்கள்? அவர்கள் காணாமல் போனது பெற்றோர்களுக்கு எப்படி தெரியாமல் போனது?

மறுபடியும், அகாசுரன் சம்பவத்தைப் பார்ப்போம்!

மலைப்பாம்பான அகாசுரன் செத்து மடிந்ததும், அதன் வயிற்றுக்குள்ளிருந்து மீட்ட சிறுவர்களுடன் அங்கிருந்து புறப்பட்டான் கிருஷ்ணன். யமுனை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தான்.

'உச்சிப்பொழுதாகிவிட்டது. நாமெல்லோரும் கொண்டு வந்திருக்கும் கட்டுச்சோற்றை இங்கேயே சாப்பிட்டு ஓய்வெடுக்கலாம். கன்றுகளும் நீர் பருகி புல் மேயட்டும்' என்றான்.

கண்ணன் அமர்ந்து கொண்டதும், தோழர்கள் அவனைச்சுற்றி உட்கார்ந்தனர். கொண்டுவந்த உணவை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு, கேலியும் கிண்டலுமாகச் சாப்பிட்டனர்.

இடுப்பில் புல்லாங்குழலைச் செருகிக்கொண்டு, இடது கையில் தயிர் சாதமும் வலது கை விரல்களில் ஊறுகாயுமாக, இடையச் சிறுவர்களின் மத்தியில் ஒரு சாதாரணப் பாமரனாக கண்ணன் சாப்பிடுவதைக் கண்டு தேவர்கள் ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.

இப்படி இவர்கள் உணவும் உரையாடலுமாக இருந்ததால், கன்றுகள் புல் மேய்ந்தபடியே காட்டுக்குள் சென்றுவிட்டதை யாரும் கவனிக்கவில்லை. இடையச் சிறுவர்கள் பதறினார்கள்.

கண்ணன் எழுந்தான். 'கவலைப்படாதீர்கள்! நீங்கள் இங்கேயே சாப்பிட்டுக்கொண்டிருங்கள். நான் போய் அவற்றை ஓட்டி வருகிறேன்!' என்று புறப்பட்டான்.

காட்டுக்குள் வெகுதூரம் சென்று பார்த்தும் கன்றுகளைக் காணவில்லை! 'கன்றுகள் எங்கே போய்விட்டன?' திகைத்துத் தேடினான்.

கன்றுகளை மறைத்து வைத்து விளையாடிக்கொண்டிருந்தது பிரம்மன்தான்! மானிட அவதாரம் எடுத்துள்ள கிருஷ்ணனிடம் தெய்வ சக்தி எவ்வளவுதான் இருக்கிறது? என்று சோதிப்பதற்காகவே, கன்றுகளைக் கவர்ந்துசென்று ஒரு மறைவான குகையில் ஒளித்து வைத்திருந்தான். கன்றுகளைத் தேடி கண்ணன் புறப்பட்ட சமயத்தில், இந்தப் பக்கம் சிறுவர்களையும்கூட கவர்ந்து ஒளித்து வைத்து விட்டான்.

கன்றுகளைக் காணாமல் நதிக்கரைக்குத் திரும்பிவந்த கிருஷ்ணன் மேலும் திகைத்துப்போனான். அங்கு சிறுவர்களையும் காணவில்லை!

நடந்தது என்னவென்பது கண்ணனுக்குப் புரிந்துவிட்டது! 'பிரம்மதேவன் தன்னைச் சோதிக்கிறான்!' - புன்னகைத்துக் கொண்டான் கண்ணன்.

'பிரபஞ்சத்தைப் படைத்து கூடவே பிரம்மதேவனையும் சிருஷ்டித்த தன்னிடமே பிரம்மன் விளையாடுகிறானா? அவன் விருப்பப்படியே இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தை ஆடிப் பார்த்துவிடுவோம்!' என்று முடிவெடுத்தான்.

காணாமல்போன அத்தனை கன்றுகளாகவும் சிறுவர்களாகவும் தன்னையே படைத்துக்கொண்டான். அவர்களின் பிரம்புகள், கொம்பூதிகள், அவரவர்களின் நடையுடை பாவனைகள் என்று அச்சு அசலாக அவர்களையே பிரதிபலித்தான்.

யாதவச் சிறுவர்கள் அவரவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கன்றுகள் தொழுவத்தை அடைந்தன.

பெற்றோர்களுக்கோ தாய்ப் பசுக்களுக்கோ எந்தவிதமான மாற்றமும் தெரியவில்லை. யாரும் சந்தேகிக்கவும் இல்லை. ஒருநாள், இரண்டு நாள் அல்ல... இப்படியாகவே இந்த நாடகம் ஒரு வருடம் நடைபெற்றது.

ஒரு வருடம் என்பது பிரம்மனுக்கு ஒருகணம்தான் இல்லையா? பிரம்மன் மீண்டும் வந்து பார்த்தபோது, சிறுவர்களும் கன்றுகளும் அவரவர் வீட்டில் இருப்பதைக் கண்டார். ஆச்சரியப்பட்டார்.

சிறுவர்களையும் கன்றுகளையும் தான் மறைத்து வைத்துள்ள இடத்துக்குச் சென்று பார்த்தார். அவர்கள் எல்லோரும் அங்குதான் இருந்தார்கள். யாரும் தப்பித்துச் செல்லவில்லை.

'அப்படியானால் இங்கு இருப்பவர்கள் யார்?'

குழப்பத்துடனே அவர் பிரம்மலோகம் சென்றார். அதிர்ந்து போனார். அங்கே அவரிடத்தில் வேறு பிரம்மா அமர்ந்திருந் தார்.

'சிருஷ்டி செய்கிற என் இடத்திலேயே என்னைப்போல் ஒரு சிருஷ்டியா?' - பதறினார். எல்லாம் கிருஷ்ண லீலை என்பதை உணர்ந்துகொண்டார். கண்ணனிடம் ஓடினார்.

'பிரபு! உங்கள் மகத்துவத்தை உணராமல் தவறு செய்து விட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள்!' என்று பணிந்தவர், கிருஷ்ணனை வணங்கிவிட்டு பிரம்மலோகம் திரும்பினார்.

பிரம்மனின் மாயையிலிருந்து மீண்ட சிறுவர்கள் நடந்தது எதுவுமே தெரியாதவர்களாக வீடு திரும்பினார்கள்.

அசுரர்கள் வதம் மேலும் தொடர்ந்தது. ஒருமுறை யமுனா நதிதீரப் புல்வெளியில், கன்றுகளை மேயவிட்டு கண்ணன் குழலூதிக்கொண்டிருந்தான். நண்பர்கள் அவனைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களுள் ஒரு சிறுவன் கிருஷ்ண பலராமனிடம் கூறினான்:

'கிருஷ்ணா! ராமா! இங்கே பக்கத்தில் ஒரு தோப்பு இருக்கிறது. அந்தப் பனந்தோப்பில் ஏராளமான பனம்பழங்கள் இருக்கிற தாம்! அவை மிகவும் ருசியாகவும் இனிப்பாகவும் இருக்கு மென்று சொல்கிறார்கள்!' - நாக்கை சப்புக்கொட்டிக் கொண்டு சொன்னான் அவன்.

'அப்படியா? இப்போதே சென்று ருசித்துப் பார்த்து விடு வோம். வாருங்கள்!' என்று புறப்பட்டார்கள் பலராம, கிருஷ்ணர்கள்.

அதற்குள் மற்றொரு சிறுவன் இடைமறித்துச் சொன்னான்:

'வேண்டாம் கிருஷ்ணா! அந்தத் தோப்பு ஆபத்தான இடமாம்! அங்கே தேனுகாசுரன் என்கிற அரக்கன், கழுதை உருவத்தில் தன் கழுதைக் கூட்டங்களுடன் வசிக்கிறானாம். தோப்புக்குள் செல்லும் மனிதர்களை அந்த அரக்கன் உயிரோடு விடுவ தில்லையாம். நாம் அங்கே சென்று அபாயத்தைத் தேடிக் கொள்ள வேண்டாம்!' என்றான்.

'அதெல்லாம் சிறுவர்களைப் பயமுறுத்த பெரியவர்கள் சொல்கிற கதை. பயப்படாதீர்கள்! என்னுடன் வாருங்கள். நான் உங்களுக்கு பழம் பறித்துத் தருகிறேன்!'

கிருஷ்ணன் தைரியம் சொல்ல, சிறுவர்கள் தயக்கத்துடன் அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

தோப்பில் ஏராளமான பனைமரங்கள் அணிவகுத்து நிற்க, அவற்றில் கொத்துக் கொத்தாகப் பழங்கள் தொங்கின.

பலராமன் தன் பலத்தைத் திரட்டி பனைமரங்களை உலுக்க, பனம்பழங்கள் பொலபொலவென்று உதிர்ந்தன. சிறுவர்கள் சந்தோஷமாகப் பழங்களைச் சேகரித்தார்கள்.

சிறுவர்களின் ஆரவாரத்தைக் கேட்டு, பாய்ந்து வந்தான் தேனுகாசுரன்.

பலராமன் பார்த்தான். மிகப்பெரிய கழுதை உருவத்தில் வேகமாக வந்த அசுரனின் பின்னங்கால்களைப்பற்றி மிகச்

சுலபமாகச் சுழற்றி, ஒரு பனைமரத்தின்மீது வீசியெறிந்தான். அடுத்த நொடியே எலும்புகள் முறிந்து மாண்டு விழுந்தான் தேனுகாசுரன்.

அவன் தூக்கியெறியப்பட்ட வேகத்தில், அநேக பனை மரங்கள் சடசடவென்று முறிந்து விழுந்தன. காடு முழுவதும் பனம் பழங்களாக இறைந்தன!

பனந்தோப்பு, அதற்குப்பின் அபாயமில்லாத பகுதியாக சிறுவர்களின் வசமானது.

இப்படி அடுக்கடுக்காக அசுரர்கள் அழிந்து கொண்டிருந் தாலும், கம்சன் தன் முயற்சியைக் கைவிடவில்லை. அவனால் அனுப்பப்பட்ட மற்றொரு அரக்கன் பிரலம்பன்!

அன்றைக்கு பலராமனும் கிருஷ்ணனும், இரண்டு பிரிவாகப் பிரிந்து அவரவர் பக்கம் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

ஆட்டத்தில் தோற்றுப்போகிறவர்கள், ஜெயித்த கட்சியைச் சேர்ந்தவர்களை தோள்களில் தூக்கிச்செல்ல வேண்டும் என்பது நிபந்தனை!

அசுரன் பிரலம்பன், தன்னை ஓர் இடைச்சிறுவன் போல உருவம் மாற்றிக்கொண்டு, சிறுவர்கள் மத்தியில் வஞ்சக மாகப் புகுந்துகொண்டான்.

விளையாட்டில் கிருஷ்ணன் பிரிவைச் சேர்ந்தவர்கள், பலராமன் கோஷ்டியை தோளில் தூக்கிச்செல்ல வேண்டி வந்தது.

கிருஷ்ணன் ஸ்ரீதாமன் என்கிற நண்பனைத் தூக்கிக்கொண்டு ஓட, சிறுவன் பிரலம்பன், பலராமனை தோளில் தூக்கிக் கொண்டான். மற்றவர்கள் குறிப்பிட்ட தூரம்வரை சென்று எல்லையோடு நின்றுகொள்ள, பிரலம்பன், பலராமனைத் தூக்கிக்கொண்டு எல்லை தாண்டி ஓடினான். ஒரு தனியான இடத்துக்குச் சென்றதும், பலராமனைக் கொன்றுவிடலாம் என்பது அவனுடைய திட்டம்!

எல்லையைத் தாண்டியதும் அவன் அரக்க உருவத்துக்கு மாறினான். அவ்வளவுதான்! அடுத்த நொடியே பலராமனின் முஷ்டி இடிபோல அரக்கனின் தலைமீது இறங்கியது. அந்த ஓர் அடியிலேயே தலை நொறுங்கி ரத்தம் கக்கிச் செத்துப் போனான் பிரலம்பன்.

இப்படி பலராம கிருஷ்ணர்களின் அசுர வதங்கள், விளை யாட்டுப் போலவே நிகழ்ந்தன! கோபர்கள் இதைக் கண்டு அதிர்ச்சியும் ஆனந்தமுமாக திகைத்துப்போனார்கள்.

அவர்கள் மேலும் மலைத்துப்போகும்படியான நிகழ்வு, ஒரு விஷ மடுவில் நடந்தது! அதுவொரு அற்புத நர்த்தனம்! கிருஷ்ணனின் ஆனந்த நர்த்தனம்!

***

5

காளிங்க நர்த்தனமாடிய நந்தகுமாரன்!

யமுனை ஆற்றங்கரையில், அடர்ந்த புதர்களுக்கு மத்தியில் இருந்தது அந்த மடு!

அந்தப் பிரதேசத்தின் காற்றிலேயே விஷம் கலந்திருந்தது. விஷக்காற்றை சுவாசித்த தாலேயே ஏராளமான பறவைகள் அங்கு செத்து விழுந்திருந்தன. மடுவின் கரையி லுள்ள மரங்கள்கூட கருகிப் போயிருந்தன!

இவற்றுக்கெல்லாம் காரணம், அந்த மடுவில் வசித்த வந்த காளிங்கன்.

காளிங்கன், நூறு தலைகள் கொண்ட கொடிய விஷ நாகம்.

அவன் இந்த மடுவுக்கு வரும் முன்பாக, கடலி லுள்ள ரமணகம் என்கிற தீவில்தான் வசித்து வந்தான்.

அங்கு தொடர்ந்து கருடன் வந்து துன்புறுத்தியதால், உயிருக் குப் பயந்து தன் மனைவி, மக்களுடன் இந்த மடுவுக்குள் வந்து குடியேறி இருந்தான்.

இந்த இடத்துக்கு கருடன் வரமுடியாது. அருகில் சௌபரி என்கிற முனிவரின் ஆசிரமம் இருக்கிறது. ஒருமுறை கருடன் மீன்களைத் தின்றுவிட்டு ஆசிரமத்தைச்சுற்றி அசுத்தப் படுத்தியதால், இனி இந்த ஆசிரமத்து எல்லைக்குள் வந்தால் கருடனின் உயிர் போய்விடும் என்று அவர் சபித்திருந்தார். சாபத்துக்குப் பயந்து கருடனும் அதற்குப் பிறகு இங்கு வருவ தில்லை. இந்த ரகசியம் தெரிந்ததாலேயே காளிங்கன் இங்கு பயமின்றி வாழ்ந்து வந்தான்.

இப்படியொரு ஆபத்து மடுவில் ஒளிந்திருப்பது தெரியாமல், கிருஷ்ணனும் அவன் நண்பர்களும் ஒருமுறை இங்கு வந்து சிக்கிக்கொண்டனர். அன்று பலராமன் அவர்களுடன் வரவில்லை.

உச்சி வெயில் மண்டையைப் பிளந்துகொண்டிருந்த நேரம். மேய்ந்துகொண்டிருந்த பசுக்களுக்கும் சிறுவர்களுக்கும் கடும் தாகம் ஏற்பட்டது.

'கிருஷ்ணா! இங்கே பக்கத்தில் ஒரு மடு இருக்கிறது. வா, அங்கே போய் நீர் அருந்தலாம்!' என்று சொல்லியபடி, சிறுவர்கள் பசுக்களையும் ஓட்டிக்கொண்டு புறப்பட்டனர்.

மடுவுக்கு வந்து தாகம் தணித்துக்கொள்ள நீர் அருந்தினர். விஷநீரைக் குடித்ததுமே செத்து விழுந்தனர்.

கிருஷ்ணன் விஷயத்தைப் புரிந்துகொண்டான். இறந்த போன வர்களை தனது அருட்பார்வையால் உயிர்ப்பித்தான். அவர்கள் உயிர்பெற்று எழுந்ததும், அனைவரையும் ஓரமாக இருக்கச் சொல்லிவிட்டு அருகிலிருந்த கதம்பமரத்தின் உச்சிக்கு ஏறினான். அங்கிருந்து யமுனை நீருக்குள் குதித்தான்.

அவன் குதித்த வேகத்தில் மடுவின் நீர் உயரக் கிளம்பிச் சிதறியது. நீருக்குள் இருந்த காளிங்கன் சீற்றத்துடன்

வெளிப்பட்டான். அதைக் கண்டதுமே மடுவின் கரையி லிருந்த சிறுவர்கள் பயந்து அலறினார்கள். சிலர் மூர்ச்சித்து விழுந்தார்கள். மற்றும் சிலர் கோபர்களிடம் விஷயத்தைச் சொல்ல பிருந்தாவனத்துக்கு ஓடினார்கள்.

மடுவிலிருந்து வெளிப்பட்ட காளிங்கன், கிருஷ்ணனை ஆக்ரோஷத்துடன் தனது வாலால் வளைக்க முயன்றான். விஷப் பற்களால் கடிக்க முற்பட்டான். கண்ணன் அவன் பிடியிலிருந்து லாகவமாக நழுவினான். காளிங்கனுக்குப் போக்கு காட்டி நீந்தினான்.

காளிங்கன் பொறுமை இழந்தான். தனது நூறு படத்தையும் உயர்த்தி, பிளவுபட்ட நாக்குகளால் 'உஸ்' என்று சீறினான். விஷ மூச்சைப் பரவ விட்டான்.

இதற்குள் சேதி பரவி, கோப கோபியர்கள் எல்லோரும் மடு வுக்கு வந்து சேர்ந்தார்கள். கண்ணெதிரே நூறு தலை நாகத் துடன் கிருஷ்ணன் போராடிக்கொண்டிருப்பதைக் கண் டார்கள். அலறினார்கள். அழுதார்கள். 'கண்ணா வா! வந்து விடு!' என்று கூக்குரல் கொடுத்தார்கள்.

நந்தகோபனும் யசோதையும் தாங்களும் மடுவுக்குள் குதிக்க முயற்சித்தார்கள். பலராமன் அவர்களைத் தடுத்து 'கண்ண னுக்கு ஒன்றும் ஆகாது' என்று சமாதானப்படுத்தினான்.

காளிங்கன் கடிக்க முயற்சிப்பதும் கண்ணன் விலகித் தப்பிப்பதுமாக நேரம் கழிய, இனியும் தாமதிக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்த கிருஷ்ணன் சரேலென்று தாவினான். காளிங்கனின் தலைமீது லயத்துடன் இறங்கினான்.

நூறு தலைகள் கொண்ட காளிங்கன் சீறிச் சீறி படமெடுத்து கண்ணனைக் கொத்த முயற்சித்தான். கண்ணன் அவனுடைய நூறு தலைகளின் மீதும் ஒவ்வொன்றாக தாவித் தாவிக் குதித்து நர்த்தனம் செய்தான்.

அவனுடைய அழகிய சிவந்த பிஞ்சுப் பாதங்களுக்கு, காளிங்கனின் படம் விரித்த நூறு தலைகளுமே நடன அரங்கமானது. பாம்பின் தலைகளில் இருந்த ரத்தினங்களே விளக்குகளாக மின்ன, கண்ணனின் காளிங்க நர்த்தனத்தை தேவர்களும் கூடி நின்று கண் குளிர ரசித்தனர்.

கிருஷ்ணனின் நர்த்தன வேகம் தாங்காமல் காளிங்கன் துடித் தான். கண்ணனின் திருவடிகள் தனது நூறு தலைகளின் மீதும் பதிந்த வேகத்தில் அவை புண்ணாகி, ரத்தம் கசிய வாய்களால் விஷம் கக்கி மூச்சுத் திணறினான். வலிமை குறைந்து பலவீன னாக அவஸ்தைப்பட்டான்.

காளிங்கனின் நிலையைக் கண்டு கலங்கிப்போன அவனு டைய மனைவி மக்கள், கண்ணனிடம் மண்டியிட்டு மன்றாடி னார்கள். 'பிரபு! தயவுசெய்து எங்கள் கணவரை மன்னித்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு மாங்கல்ய பிச்சையளியுங்கள்!' என்று கெஞ்சினார்கள்.

காளிங்கனும் கண்ணனிடம் மண்டியிட்டான்.

'கண்ணா! நான் கருடனுக்குப் பயந்துதான் இங்கு வந்து மறைந்திருந்தேன்! என்னை மன்னித்துவிடு!' என்று வேண்டினான்.

'காளிங்கா! நீ உடனடியாக இந்த இடத்தைவிட்டு கடலுக்குச் சென்றுவிடு. உன் மேனியில் எனது காலடித் தழும்புகள் உள்ளதால், கருடன் இனி உன்னைத் துன்புறுத்த மாட்டான்!' என்று தைரியம் சொல்லி விடுவித்தான்.

அதன்படி, அப்போதே தனது மனைவிகளுடன் கடலுக்குச் செல்லப் புறப்பட்டான் காளிங்கன்.

யமுனா நதிதீரம் மீண்டும் தூய்மையானது.

***

6

காற்றினிலே வரும் கீதம்!

பருவ காலங்கள் மாறி வந்து போயின. கிருஷ்ணனும் பலராமனும் இப்போது வாலிபத்தின் தலைவாசலில் ஆணழகர்களாக ஜொலித்தார்கள். அதிலும் கிருஷ்ணன் பேரழகோ, பார்ப்பவர்களின் உள்ளங்களை முதல் பார்வையிலேயே வசீகரித்தது.

பிருந்தாவனத்து கோபிகைகளின் நிலைமை தான் பாவம்! ஒருவர் தவறாமல் அத்தனை பேருமே கண்ணனைப் பார்த்துப் பார்த்து ஏங்கினார்கள். பெருமூச்சுவிட்டார்கள். காதல் வயப்பட்டு தூக்கத்தைத் தொலைத்தார்கள். பித்துப் பிடித்தவர்கள் போலத் திரிந்தார்கள். கண்ணன் ஒருவனாலேயே பிருந்தாவனம் அவர்களுக்கு பூலோக சொர்க்கமாகத் தெரிந்தது.

கண்ணனும் அவன் தோழர்களும், அதிகாலையிலேயே பசுக்களை மேய்ச்சலுக்கு அழைத்துப் போய்விடுவார்கள். பசுக்களை மேயவிட்டு, கண்ணன் தன் புல்லாங்குழலை எடுத்துக்கொள்வான். இனிமையாக ஊதத் தொடங்கி விடுவான். அவன் குழலூதுவதைக் காண்பதே அற்புதம்தான்!

தலையில் மயிற்பீலியும், காதுகளில் அசைந்தாடும் அழகிய குண்டலங்களும், இடுப்பில் பட்டுப் பீதாம்பரமும், கழுத்தில் வைஜயந்தி மாலையும், சிவந்த இதழ்களில் புல்லாங்குழலுமாக அவன் வேணுகானம் இசைக்கும்போது, உலகமே அக்கணம் அசைவின்றி ஸ்தம்பித்து விடுகிறது.

பசுக்கள் எல்லாம் மேய்ச்சலை மறந்து, தம் காதுகளை விறைத்துக்கொண்டு இசையில் லயித்துவிடுகின்றன. கன்றுகளும்கூட தாயிடம் பால் குடிப்பதையும் புற்களை மேய்வதையும் நிறுத்தி சிலைபோல் நிற்கின்றன. பறவைகளும் மான்களும் மீன்களும், ஏன் மரங்களும் கூட, சகல ஜீவராசிகளுமே அப்படியே உறைந்து போகின்றன.

யமுனா நதிக்கரையில் கண்ணன் ஊதும் வேணுகானம், காற்றில் மிதந்து வந்து பிருந்தாவனத்துக்குள்ளும் நுழைந்து தவழ்கிறது. கோபியர்களின் இதயம் இசைப் பிரவாகத்தில் மிதக்க, அவர்கள் கண்கள் செருகி கிறங்கிப்போகிறார்கள்.

'ஏய்! முதலில் கண்ணனிடமிருந்து புல்லாங்குழலைப் பிடுங்க வேண்டும்!' - செல்லமாகக் கோபிக்கிறாள் ஒருத்தி.

'ஆமாம்! அது நம் வேலைகள் அனைத்தையும் கெடுக்கிறது!'- சலித்துக்கொள்கிறாள் மற்றொருத்தி.

'அதுமட்டுமில்லாமல், அந்தப் புல்லாங்குழல்தான் எப்போதும் அவனோடு நெருக்கமாக இருக்கிறது! அலுப்பில்லாமல் அவனுடைய இதழ் அமுதத்தை சுவைத்துக் கொண்டேயிருக்கிறது!' - பொறாமையோடு புலம்புகிறாள் இன்னொருத்தி.

'ஆனால் என்னடி செய்வது? கிருஷ்ணனின் வேணுகானத்தை கேட்காமலும் இருக்க முடியவில்லை. அந்த இசை என் உள்ளத்தில் ஊடுருவி, எத்தனை விஷயங்களைச் சொல்கிறது தெரியுமா?' - வெட்கத்துடன் சொல்லி, முகம் பொத்திக் கொண்டாள் ஒருத்தி.

ஒரு கிருஷ்ணனை, பிருந்தாவனத்தின் ஓராயிரம் கோபியர் களும் காதலித்தார்கள்! ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு நொடியையும் அவனை நினைத்தே, அவனோடு தங்களை இணைத்தே, ஆனந்தமும் அவஸ்தையுமாக காலம் கழித் தார்கள்.

அதுவொரு மார்கழி மாத பனிக்காலம்!

பிருந்தாவனத்தின் கோபியர்கள், 'காத்யாயனி விரதம்' என்கிற நோன்பை நோற்றார்கள்.

அத்தனை பேருக்கும் ஒரே பிரார்த்தனைதான்!

'காத்யாயனி தேவி! மஹாமாயே! மஹாயோகினி! உலக நாயகி! உன்னை வணங்குகிறேன். நந்தகோபனின் மகனான கிருஷ்ணனே எனக்குக் கணவனாக வாய்க்க அருள் செய்!' - தூய்மையான மனத்துடன் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள்.

கிருஷ்ணனை அடைவதற்காக அவர்கள் விரதம் இருந்ததில் தவறில்லை. ஆனால் அதைச் செய்ததில்தான் ஒரு தவறு செய்துவிட்டார்கள்.

நோன்பு முடியும் கடைசி நாள் அவர்கள் அனைவரும் யமுனைக்கு வந்தார்கள். தங்களின் ஆடைகளை அவிழ்த்து கரையிலேயே வைத்துவிட்டு, வெற்றுடம்புடன் நதியில் இறங்கிக் குளித்தார்கள்.

அப்போது, கிருஷ்ணன் அங்கே வந்தான். கோபியர்களின் ஜலக்ரீடையைப் பார்த்தான். அவர்கள் ஆடையின்றி நீராடு கிறார்கள் என்பது தெரிய வர, எல்லா கோபியர்களின் ஆடை

களையும் எடுத்துக்கொண்டு கதம்ப மரத்தில் ஏறி, அதன் கிளைமீது அமர்ந்துகொண்டான்.

கிருஷ்ணன் இதைச் செய்தது குறும்புத்தனத்துக்காக மட்டு மல்ல! அதில் வேறு காரணமும் இருந்தது!

மரத்தின் மீதிருந்த கிருஷ்ணன், 'என்ன இன்னுமா உங்கள் நீராடல் முடியவில்லை?' என்று குரல் கொடுத்தான்.

கோபியர்கள் நிமிர்ந்து பார்த்தார்கள். கிளையில் கண்ணன், ஆடைக்குவியல்களுடன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். கரையைப் பார்த்தார்கள். அவர்கள் அவிழ்த்துவைத்த ஆடை களைக் காணவில்லை. திடுக்கிட்டுப் போனார்கள்! அந்த ஆடைகளைத்தான் கண்ணன், அவன் கைகளில் வைத்திருக் கிறான் என்று புரிந்துகொண்டார்கள். கோபத்துடன் சீறி னார்கள்.

'கிருஷ்ணா, இதென்ன விளையாட்டு! எங்களின் ஆடை களைக் கொடுத்துவிடு!' என்றாள் ஒருத்தி.

'கண்ணா, குறும்புத்தனத்துக்கும் ஒரு எல்லையிருக்கிறது! வேண்டாம் இந்த பொல்லாத்தனம்! எங்களைக் கோபப் படுத்தாமல் கொடுத்துவிடு ஆடைகளை!' என்றாள் மற்றொருத்தி.

'நான் தரமாட்டேன் என்றா சொல்கிறேன்? எல்லோரும் கரையேறி வந்து என்னிடம் ஆடைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்!' என்றான் கண்ணன்.

'கேலி செய்கிறாயா? ஆடையில்லாமல் வெறும் மேனியாக இருக்கிறோம். ஆண்பிள்ளையான உன்னிடம் எப்படி வந்து ஆடைகளைப் பெறமுடியும்? தயவுசெய்து எங்களின் உடை களைக் கொடுத்துவிடு!' என்றார்கள் கோபியர்கள்.

'என் அன்புக்குரிய கோபியர்களே! ஆடையில்லாமல் நீராடக் கூடாது என்பது சாஸ்திரம். அதுவும் காத்யாயனி விரதம் மேற்கொண்ட நீங்கள், இப்படி நீராடியதால் விரதத்தின்

பலனை இழந்து விடுவீர்கள். தவிர, தோஷமும் உண்டாகும். அதிலிருந்து விடுபட வேண்டுமானால், நான் சொல்கிறபடி செய்யுங்கள்! இரு கைகளையும் தலைக்குமேல் குவித்து, எனக்கு அஞ்சலி செய்தபடி, நீரிலிருந்து எழுந்து வந்து ஆடைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்!' என்றான்.

கோபமும் பயமும் வெட்கமுமாக கோபியர்கள் திண்டாடினார்கள். குளிர்நீரிலேயே கழுத்துவரை நின்று கொண்டு, வெடவெடத்தபடி கண்ணனிடம் பலவிதமாக வேண்டினார்கள், கெஞ்சினார்கள், கொஞ்சினார்கள், சீறினார்கள், சினந்தார்கள்.

கண்ணன் எதையும் கேளாமல், உறுதியாக இருந்தான்.

கோபியர்கள் அவன் செயலுக்கான அர்த்தத்தை யோசித்தார்கள். மனம் தெளிந்தார்கள். கிருஷ்ணன் கூறியபடியே, தலைக்குமேல் கைகூப்பித் தொழுது அவனிடம் வந்து ஆடைகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

கண்ணன் அவர்களுக்கு வாக்களித்தான்:

'கோபியர்களே! உங்கள் விருப்பங்கள் எனக்குத் தெரியும். நோன்பின் பலனை விரைவிலேயே நீங்கள் அடைவீர்கள். சரத்கால இரவுகளில் என்னுடன் கூடி ஆனந்தம் பெறுவீர்கள்! என்னிடம் காதல் கொண்ட உங்கள் மனங்களில் மற்ற ஆசைகள் எதுவும் இடம் பெறாது!' என்று அருள்பாலித்தான்.

கோபியர்களின் உடைகளை அபகரித்த கிருஷ்ண லீலை சொல்லும் தத்துவம் மிகவும் எளிமையானது.

கோபியர்கள், 'நான் வேறு, கிருஷ்ணன் வேறு!' என்று நினைத்தபோதுதான் வெட்கம், பயம் போன்ற உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்டார்கள். பின் மதுசூதனன் சொன்னபிறகு, மனம் தெளிந்துவிட்டார்கள்.

'ஆம்! கண்ணன் வேறு, நான் வேறல்ல! கண்ணனே நான்! நானே கண்ணன்!' - கோபியர்கள் இதை உணர்ந்த பிறகு,



அரக்கி பூதனையை கிருஷ்ணன் வதம் செய்யும் காட்சி.

காளிங்கன்மீது கண்ணனின் ஆனந்த நடனம்.

அவர்களுக்கு அச்சம் இல்லை, நாணம் இல்லை.

ஜீவாத்மா பரமாத்மாவை உணர்ந்து, அதனோடு ஐக்கியப் பட்டுவிட்டது.

கிருஷ்ணனுடைய இந்த லீலையின் நுட்பத்தை உணர்ந்த மனம், காமத்தை வென்றுவிடுகிறது! பரமானந்தத்தில் திளைக் கிறது!

***

7

ராஸலீலை.. ராஸ நடனம்.. ஜலக்ரீடை!

யாதவர்களின் மிகப்பெரிய சொத்து, சுகம் எல்லாமே பசுக்கள்தாம்!

அந்தப் பசுக்கள் நல்ல ஆரோக்கியமாக இருந்தால்தான், யாதவகுலம் சிறப்பாக இருக்கும். பசுக்கள் திடகாத்திரமாக இருக்க வேண்டுமானால், தாவரச் செழுமையும் நல்ல நீர்வளமுமே அவசியத் தேவை. இதை அளிப்பது மழை! மழைக்குக் காரணம் வருணன். வருணன் போன்ற திசை பாலகர்களுக்குத் தலைவன் இந்திரன். எனவே, யாதவர்கள் இந்திரனை வழிபடுவது வழக்கம். ஆண்டுக்கு ஒருமுறை 'இந்திர விழா' மிகுந்த கோலாகலமாக நடைபெறும்.

எப்போதும்போல அந்த வருடமும் நந்தகோபன் இந்திர விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான்.

அப்போது கிருஷ்ணன், நந்தகோபனும் மற்ற பெரியோர்களும் கூடியிருந்த சபையில் கேட்டான்.

'இந்திராவிழாக் கொண்டாட்டம் எதற்காக?'

நந்தகோபன் பதில் சொன்னான்:

'கிருஷ்ணா! இடையர்களான நம் வாழ்க்கைக்கு பசுக்களே ஆதாரம். பசுக்களுக்குத் தேவையான புல், தாவர வகைகளும் அவை அருந்துவதற்கான நீர்நிலைகளும், மழை பெய்வதால் தான் கிடைக்கிறது. தவிர, உண்ணத் தேவையான தானியங்கள் முதலியவையும் மழையினால்தான் விளைச்சல் அதிகரித்து நமக்குக் கிடைக்கிறது. ஆகவே, மழைக் கடவுளான இந்திரனுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அதற்கு நன்றி தெரிவிக்கவும், இந்திரனை மகிழ்ச்சிப்படுத்தவும் தொடர்ந்து அவன் அருளைப் பெறுவதற்காகவுமே வருடந்தோறும் இந்திரவிழா எடுக்கிறோம்!'

கண்ணன் புன்னகையுடன் கூறினான்:

'அப்பா! நமது வாழ்க்கைக்குத் தேவையானவை காடுகள், மலைகள், பசுக்கள் போன்றவைதான். அப்படியிருக்க, இந்திரனை ஏன் நாம் வழிபட வேண்டும்? அதைவிட, இந்த கோவர்த்தன மலைக்குப் பூஜை செய்வோம். வழிபாடுகள் நடத்துவோம். யாகம் செய்து அந்த அக்னி தேவனை ஆராதிப்போம். இது என் யோசனை. பிறகு, பெரியவர்கள் விருப்பம்!' என்றான்.

கிருஷ்ணன் ஒன்று சொல்லிவிட்டால், யார் அதற்கு மறுப்புச் சொல்லப்போகிறார்கள்! அவன் விருப்பப்படியே, கோவர்த்தன மலைக்கு விழா எடுக்கலாம் என்று முடிவானது.

இந்திர விழாவுக்குச் செய்வது போலவே பசுக்களை நன்கு அலங்கரித்து, வேதியர்களுக்குத் தானங்கள் செய்தனர்.

கோவர்த்தன மலைக்கு முன்பாகப் படையலிட்டு, விதவித மான சாதவகைகளையும் பலகாரங்களையும் படைத்தனர். கோவர்த்தன மலையை கிரிவலம் சுற்றிவந்து பூஜித்தனர்.

கண்ணனின் மாயத்தால் கோவர்த்தன மலையிலிருந்து, பிரும்மாண்டமான ஓர் உருவம் வெளிப்பட்டு, 'நானே இந்த மலையின் தேவன்!' என்று சொல்லி, கோபர்கள் படைத் திருந்த நிவேதனங்களை திருப்தியாகச் சாப்பிட்டது. மலை யில் சென்று மறைந்தது.

கோபர்களுக்கு நம்பிக்கை தருவதற்காகவே இதைச் செய்தான் கண்ணன். அதுபோலவே அனைவரும், 'இத்தனை காலமாக இந்திரனுக்கு விழா நடத்தினோம். ஒருமுறைகூட அவன் வந்ததில்லை. ஆனால் கோவர்த்தன கடவுள், முதல்முறை பூஜித்ததுமே வெளிப்பட்டு அருள்பாலித்துவிட்டாரே!' என்று சிலிர்ப்புடன் பேசிக்கொண்டார்கள்.

சரி, கண்ணன் எதற்காக இந்திரபூஜை வேண்டாம் என்று முடிவெடுத்தான்?

எப்போதுமுள்ள காரணம்தான்! அளவில்லாத செல்வமும் மூவுலகங்களுக்கு அதிபதி என்ற எண்ணமும் இந்திரனிடம் மிகுந்த ஆணவத்தை உண்டாக்கியிருந்தன. கண்ணன் அதை உணர்ந்ததாலேயே இந்திரபூஜையை கோவர்த்தன பூஜையாக மாற்றியிருந்தான்.

இதனால் இந்திரன் கோபமானான். பகவானின் அவதாரமான கிருஷ்ணனையே சாதாரண மானிடச் சிறுவன் என்று மதி மயங்கிவிட்டான்.

'ஒரு அற்பச் சிறுவன் சொன்னதைக் கேட்டு, இந்தக் கோபர்கள் என்னையே அவமதித்துவிட்டார்கள். நான் யார் என்பதை இவர்களுக்குப் புரியவைக்கிறேன். இவர்களுடைய சொத்து சுகங்கள் எல்லாவற்றையும் அழித்து, புத்தி புகட்டு கிறேன்!' என்று வஞ்சம் கொண்டான்.

மேகக் கூட்டங்களை அனுப்பி பிருந்தாவனத்தின்மேல், பெரு மழை பெய்யச் செய்தான். மழை என்றால் சாதாரண மழை யல்ல! பிரளயமே வந்துவிட்டதோ என்று அஞ்சும்படியான மழை! கூடவே, சூறைக்காற்றும் சேர்ந்து கொண்டது. மரங் களைச் சாய்த்து, வீடுகளைப் பறக்கவிட்டு துவம்சம் செய்தது. பிருந்தாவனம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து கொண்டது.

மக்கள், பசுக்கள், கன்றுகள் எதற்கு தங்குவதற்கு இடமே இல்லை. கோபர்கள் பயந்து போனார்கள்.

'கிருஷ்ணா! இந்திரனைப் பூஜிக்காததால் அவன் கோபம் கொண்டுவிட்டான். இந்தக் கடுமையான மழை அவனால் தான் ஏற்பட்டிருக்கிறது. நீதானே கோவர்த்தன மலைக்குப் பூஜை செய்யலாம் என்றாய். இப்போது நீதான் இந்த மழையி லிருந்தும் எங்களைக் காப்பாற்ற வேண்டும்!' என்று வேண்டி னார்கள்.

கண்ணன் பதறாமல் புன்னகைத்தான். ஓர் அதிசயம் நிகழ்த்தி னான்!

கோவர்த்தன மலையை சிறிதும் சிரமமில்லாமல் பெயர்த் தெடுத்து, தனது சுண்டுவிரல் கொண்டு அந்த மலையைக் குடைபோல் பிடித்தான். 'எல்லோரும் இதன்கீழ் வாருங்கள்!' என்றழைத்தான்.

கோபர்கள், கோபியர்கள், பசுக்கள், கன்றுகள், இன்னும் அவர்கள் வளர்த்த பலவிதமான செல்லப்பிராணிகள் மற்றும் உடைமைகளுடன் எல்லோரும், மதுசூதனன் குடைபோல் பிடித்த கோவர்த்தன மலையின்கீழ் தஞ்சம் புகுந்தனர்.

இந்திரன் விடாமல் தொடர்ந்து ஏழு நாள்கள் மழை பெய்வித் தான். அந்த ஏழு நாள்களும், கிருஷ்ணன் சிறிதும் அயராமல் மலையைப் பிடித்தபடியே நின்றான்.

இந்திரன் கர்வத்திலிருந்து மீண்டான். பரமாத்மாவின் அவதார புருஷனுக்கு எதிராக தான் செயல்பட்டது முட்டாள்தனம்

என்று உணர்ந்துகொண்டான். மழையை நிறுத்திக் கொண் டான்.

யாதவர்கள், பசுக்களோடும் கன்றுகளோடும் வீடு திரும்பி னார்கள். கண்ணனை 'கோவர்த்தனதரன்' என்றும், 'கிரிதாரி' என்றும் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

அனைவரும் பிருந்தாவனம் சென்றதும், இந்திரன் யாரும் அறியாமல் கிருஷ்ணனிடம் வந்து பணிந்தான். 'நான் என்கிற பொல்லாத அகங்காரத்தினால் ஆட்பட்டு தவறு செய்து விட்டேன். மன்னித்து அருளவேண்டும்!' என்று மண்டி யிட்டான்.

'இந்திரா! புகழும் பதவியும் செல்வமும் அதிகாரமும் எப்போது வரும், எப்போது கைவிட்டுச் செல்லும் என்று யாருக்கும் தெரியாது. எந்த நிலையிலும் ஆணவம் கொள்ளா மல் இருப்பதுதான் சிறந்தது. இதை நீ, அடிக்கடி மறந்து விடுகிறாய். அதை உனக்கு உணர்த்துவதற்காகத்தான் நான் இப்படிச் செய்தேன்!' என்றான் கிருஷ்ணன்.

மனம் திருந்திய இந்திரன், தெய்வப் பசுவான காமதேனுவின் பாலாலும் ஐராவதத்தின்மீது கொண்டுவரப்பட்ட தேவகங்கை யினாலும் கண்ணனுக்கு அபிஷேகம் செய்தான். அப்போது, சுற்றியிருந்த தேவர்களும் ரிஷிகளும் கண்ணனுக்கு 'கோவிந்தன்' என்ற சிறப்புப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

பரமாத்மா கிருஷ்ணனாகப் பிறந்து, தாமோதரனாக ஆகி, கோவர்த்தன் என்று புகழப்பட்டு, இப்போது இந்திராதி தேவர்களால் 'கோவிந்தன்' என்று கொண்டாடப்பட்டான்.

கோபர்கள் பிருந்தாவனத்தில் எந்தப் பயமும் இன்றி காலம் கழித்தனர்.

அதுவொரு சரத்கால இரவு!

ஆகாயத்தில் சந்திரன் குளிர்ந்து பிரகாசித்தான்.

பிருந்தாவனம் முழுவதும் மல்லிகை மலர்கள் வாசத்தை நிரப்பியிருந்தன. நிசப்தமான சூழலில் ஒரு மெல்லிய குழ லோசை மனத்தை மயக்கும்விதமாக வலம்வரத் தொடங் கியது. இசையா அது? வேணுகானம்! மனத்தின் அழுக்கு களையெல்லாம் போக்கும் கானம்!

அந்தக் குழலோசையில் அத்தனை கோபியர்களும் தங்களை மறந்தனர். இதயத்தைப் பறிகொடுத்தனர். உயிரெல்லாம், உடலின் ரத்தநாளங்களில் எல்லாம் ஊடுருவிய அந்த வேணு கானம் அவர்களின் இதயத்தை உருகவைத்தது. ஆத்மாவை ஈர்த்துக் கவர்ந்தது. காதலில் மூழ்கவைத்தது.

கோபியர்கள் தவித்துப்போனார்கள். வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அதை அப்படியே நிறுத்தி ஸ்தம்பித்துப் போனார்கள். ஒரு கோபிகையின் வீட்டில் அடுப்பில் பால் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. இன்னொருத்தியின் வீட்டில் சாதம் கொதித்துக்கொண்டிருந்தது. குழந்தைக்குப் பால் புகட்டிக்கொண்டிருந்தவள் அதை அப்படியே நிறுத்தி விட்டுப் புறப்பட்டாள். கணவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தவள் அதை அப்படியே மறந்து போனாள். தலை யலங்காரம் செய்துகொண்டிருந்தவள், உடை மாற்றிக் கொண் டிருந்தவள், தயிர் கடைந்துகொண்டிருந்தவள் - இப்படிப் பலவித வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் அப்படி அப்படியே நிறுத்திவிட்டு, குழலோசை கேட்கும் திசை நோக்கி நடந்தார்கள்.

எல்லோரும் யமுனை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அழகிய மாயன், இதழ்களில் புல்லாங்குழலை வைத்து ஊதியபடி, ஒற்றைக்காலை ஊன்றி மற்றொரு காலை சற்றே மடித்து நின்றவாறு கண்கள் மூடி, மனம் லயித்து வேணுகானம் பொழிந்துகொண்டிருந்தான்.

கோபிகைகளின் வரவால் மோனநிலையிலிருந்து மீண்டவன், அவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

இப்போது எல்லோரும் எதற்காக 'இங்கே வந்திருக்கிறீர்கள்? இது இரவுவேளை. கானகம் வேறு. நானோ வேற்று ஆண் மகன்! உங்கள் கடமைகளை மறந்து இப்படி வருவது தவறில்லையா?' என்று கேட்டான்.

'நாங்கள் என்ன செய்வோம் கண்ணா? உன்மீது நாங்கள் எல்லையற்ற அன்பு வைத்துவிட்டோம். உன்னுடைய குழலோசை, நாங்கள் எங்கிருந்தாலும் எங்களைக் கட்டியிழுத்து வந்துவிடுகிறது! எதற்கும் நாங்கள் பொறுப்பில்லை! நீயே காரணம்!' என்று குற்றம் சாட்டினார்கள் கோபியர்கள்.

'கோபியர்களே! உங்கள் அன்பை நான் அறிவேன். அதற்காக எப்போதும் என் அருகில் இருக்கவேண்டும் என்று ஆசைப் படுவது சரியல்ல. தூர இருந்தாலும், என்னை நினைத்து என்னிடம் மனத்தைச் செலுத்துங்கள். நான் அருகில் இருப்ப தாகவே நீங்கள் உணர்வீர்கள்! இப்போது அனைவரும் அவரவர் இல்லத்துக்குச் செல்லுங்கள்!' என்றான் கிருஷ்ணன்.

கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டதுமே கோபியர்களின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

'கண்ணா! எல்லாவற்றையும் துறந்து உன்னையே நாடிவந்த எங்களை இப்படி உதறித்தள்ளுவது நியாயமா? வீடு, குடும்பம், குழந்தைகள் என்று லௌகீகக் கடமைகள் எங்களுக்கு இருப்பது நிஜம்தான்! ஆனால் உன்மேல் பற்று வைத்தபின், அவற்றின்மேல் எங்களின் நாட்டம் செல்ல வில்லையே! நாங்கள் என்ன செய்வோம்? எங்களின் இதயம் முழுதாக உன்னிடமே வசப்பட்டுவிட்டது. இனி அது, சராசரியான லௌகீக நாட்டங்களில் ஈடுபடுவது சாத்தியமே இல்லை. எங்களைப் போகச் சொல்லாதே! இனி உன்னைத் தவிர எங்களுக்கு வேறு எந்த உறவுமில்லை. நீ எங்களை ஏற்க மறுத்தால், இங்கேயே உன் பாதங்களில் உயிர் துறப்போம்!' என்று கதறினார்கள்.

கண்ணன், கோபியர்களின் மன உறுதியையும் காதலின் ஆழத்தையும் புரிந்துகொண்டான். அவர்களை அழைத்துக் கொண்டு யமுனை நதிக்கரையின் வெண்மணல் பரப்பை அடைந்தான். அனைவரோடும் 'ராஸலீலை' தொடங்கினான்.

வைஜயந்தி மாலையணிந்த பட்டுப் பீதாம்பரதாரியான கண்ணன், நூற்றுக்கணக்கான கோபிகைகளுடன் வேணு கானம் செய்தபடி நடனம் ஆடினான். அவர்களை உல்லாசத் தில் ஆழ்த்தி, பல்வேறு காமக்கேளிக்கைகள் செய்தான். பருவப் பெண்கள், சிறுமிகள், மணமானவர்கள், மூத்தோர்கள் என்று எல்லா கோபியர்களும் பாகுபாடில்லாமல் அவனுடன் கலந்து இன்பமடைந்தார்கள். வேட்கை தணிந்தார்கள். கூடவே, கர்வமும் கொண்டார்கள்.

ஆம்! அண்ட சராசரங்களையும் தன்னுள் கொண்டுள்ள கண்ணனே, தங்களிடம் மையல் கொண்டு மோகிக்கிறான் என்கிற நினைப்பு கோபிகைகளில் மனத்தில் தோன்றி விட்டது. அதனாலேயே அவர்கள் அழகின்மேல் கர்வம் வந்து விட்டது.

ஒவ்வோர் அணுவின் அசைவையும் தெரிந்துகொள்ளும் மாயனுக்கு, கோபிகைகளின் எண்ணம் புரியாமல் போகுமா? அவர்களின் கர்வத்தை அழிக்கத் தயாரானான். கோபிகை களின் மத்தியிலிருந்து மாயமானான்.

கிருஷ்ணனைக் காணாத கோபிகைகள் திகைத்தார்கள், தேடினார்கள். அவனைக் கண்டுபிடிக்க முடியாமல் பரிதவித் தார்கள். வனத்தின் ஒவ்வொரு மரம், செடி கொடியிடமும் சென்று, 'எங்களின் கண்ணனைக் கண்டாயா? அழகிய அந்தத் திருமகனைப் பார்த்தாயா? அவன் எந்த திசை போனான் என்று நீ அறிவாயா?' என்று கேட்டுக் கேட்டு அழுதனர். பைத்தியம் பிடித்தவர்களைப்போல சுற்றிவந்தனர்.

கண்ணனைப் போலவே, பேசிக்கொண்டும் பாடிக் கொண் டும் அவனாகவே தங்களைப் பாவித்துக்கொண்டனர். அவனு டைய பால லீலைகளை அபிநயித்து ஆடினர். கிருஷ்ண சித்தத் திலேயே ஒன்றிப்போய் தன்னை மறந்தனர். சுயநிலைக்கு

மீளும்போது, மீண்டும் பிரிவின் துயரம் தாங்காமல் புலம்பினார்கள். கண்ணனின் மகிமைகளை ஒவ்வொன்றாகச் சொல்லி அவர்கள் புலம்பிப் பாடிய பாடல்களே 'கோபிகா கீதம்' என்று போற்றப்படுகிறது.

கோபிகைகளைச் சோதித்தது போதும் என்று கருதிய கிருஷ்ணன், அலங்கார சொரூபனாக, மன்மதனை வெட்கப் படச் செய்யும் அழகுடையவனாக, அவர்கள்முன் தோன்றினான். மந்தகாசப் புன்னகையுடன் கண்களாலேயே அவர்களை அருகில் அழைத்தான்.

கண்ணனைக் கண்ட கோபிகைகள், உயிர்த்தெழுந்தவர்களைப்போல பரவசமடைந்தனர். ஆனந்தக்கண்ணீருடன் அவனருகே ஓடி வந்தனர். ஒருத்தி தன் கைகளோடு அவன் கைகளைக் கோர்த்து பின்னிக்கொண்டாள். தாபத்தால் அவன் விரல்களை பற்றி நெரித்தாள். இன்னொருத்தி அவன் தோள்களில் சாய்ந்துகொண்டு, அவனுடைய புஜத்தை வலிக்காமல் கடித்தாள். ஒருத்தி அவனை மார்புறத் தழுவிக் கொண்டு, திரண்ட மார்பில் தலை சாய்த்துக்கொண்டாள். மற்றொருத்தி அவன் முதுகின்மீது தன் மார்பகங்களை அழுத்தி அணைத்துக் கொண்டாள். இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

ஒருத்தி அவன் தலைமுடியைக் கலைக்க, ஒருத்தி அவனுடைய சிவந்த உதடுகளைச் சுண்டிவிட, ஒருத்தி கண்ணனுடைய திவ்ய உருவத்தை கண்கள் முழுவதும் நிரப்பிக்கொண்டு, மீண்டும் அவன் வெளியேற முடியாதபடி கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

'கண்ணா! எங்களை விட்டுப் பிரிந்துசெல்ல, உனக்கு எப்படி மனம் வந்தது! ஏன் இப்படிச் செய்தாய்? எதற்காக எங்களைச் சோதிக்கிறாய்?' - கொஞ்சலும் கோபமுமாகக் கேட்டார்கள்.

'ஒரு பொருளைத் தொலைத்துவிட்டு, அதைத் தேடி ஏங்கி, மீண்டும் அது கைக்குக் கிடைத்தால், அப்போது இரட்டிப்புச் சந்தோஷம் கிடைக்குமல்லவா? அந்தச் சந்தோஷத்தை நீங்கள் உணரவேண்டும் என்றுதான் காணாமல் போய் திரும்பி

வந்தேன். ஊடலுக்குப்பின் கூடல்சுகம் தேன்போல தித்திக்கும் தெரியுமா?' - கள்ளப்புன்னகையுடன் கண்சிமிட்டினான் கண்ணன்.

யமுனையின் வெண்மணல் பரப்பு, நிலவின் ஒளியில் பிரகாசித்தது. ஒரு சிறிய மணல் குன்றின்மேல் கோபிகைகள் தங்களின் மேலாடைகளை விரித்தனர். நடுநாயகமாக கிருஷ்ணனை அமரவைத்து, அவனைச் சுற்றிலும் தாங்கள் அமர்ந்துகொண்டனர். அவனைப் பிரிந்து தவித்தது, துடித்தது, தாபவசப்பட்டது என்று பல கதைகளையும் பேசிக் கொண்டிருந்தனர். நேரம் போவதே தெரியாமல் இரவுப் பொழுது இனிமையாகக் கழிந்துகொண்டிருந்தது.

நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தபின் 'ராஸ நடனம்' தொடங்கியது.

ஒருவருக்கொருவர் கை கோர்த்துக்கொண்டு வட்டம் வட்டமாக கூடிக்கொண்டு, ஒருவர் தோள்மேல் ஒருவர் கைவைத்து அணைத்துக்கொண்டு, ஒரே லயத்தோடு நடனமாடினார்கள். கண்ணனும் கோபியர்களும் சேர்ந்து ஆடிய அந்த 'ராஸ நடனம்' கண்களைக் கவர்ந்திழுத்தது.

பகவானின் ராஸ நடனத்தைக் காண வானவர்களும் விண்ணில் வந்து கூடினார்கள். கந்தர்வர்கள் தாங்களும் கானம் பாடினார்கள். யாழ் இசைத்தார்கள். அப்ஸரஸ்களும் கலந்துகொண்டார்கள். நடனம் வேகம் கூடியது! கால் சலங்கைகளும் கை வளையல்களும் குலுங்கும் சப்தம், இன்னிசையாக எங்கும் எதிரொலித்தது!

என்ன அதிசயம் இது! ஒவ்வொரு கோபிகையுடனும், தனித்தனியே ஒரு கண்ணனாக ஏராளமான கண்ணன்கள் அங்கே நடனமாடிக்கொண்டிருந்தனர். வேகம்... வேகம்... மேலும் மேலும் நடனத்தில் வேகம் கூடியது. கோபிகைகளின் வேர்வைத்துளிகளால் கண்களுக்கு இட்ட மை கரைந்து வழிந்தது. நெற்றித்திலகம் ஈஷிக்கொண்டது. கூந்தல் கலைந்தது. ஆடைகள் நழுவிக் கீழே விழுந்தன. மாலைகள் உதிர்ந்தன. ஆபரணங்கள் கழன்று சிதறின.

ஆட்டம் முடிவுக்கு வந்தது. கோபியர்கள் களைத்துப்போய் சோர்வடைந்தனர். கண்ணன் அவர்கள் அனைவரையும் அன்புடன் அணைத்து அரவணைத்து, யமுனை நதியின் குளிர்ந்த நீருக்குக் கூட்டிச்சென்றான். அங்கும், சிரிப்பும் கேலியும் குதூகலமுமாக 'உல்லாச ஜலக்ரீடை' நடத்தினான்.

எல்லாம் சரி! பிருந்தாவனக் கோபிகைகள் அனைவரும், இங்கே யமுனை நதிக்கரைக்கு வந்துவிட்டார்களே! கோபிகைகளின் வீட்டில் யாரும் அவர்களைத் தேடவில்லையா?

இல்லை. அவர்கள் தேடவில்லை. ஏனென்றால், கண்ணனுடன் இருந்த கோபிகைகள் அதே சமயத்தில் வீட்டில் அவர்கள் கணவர்களோடும் இருந்தார்கள். பிரம்மன் குறும்பு செய்தபோது, தானே கன்றுகளாகவும் சிறுவர்களாகவும் உருக்கொண்ட மாயவன், கோபியர்களின் வீட்டில் தானே கோபிகைகளாகவும் இருந்தான்.

அதனால்தான் கண்ணனின் லீலைகளால் மனம் குளிர்ந்து கோபிகைகள் வீடு திரும்பியபோது, கோபியர்களின் கணவன்கள் தங்களைவிட்டு எந்த கோபிகையுமே பிரிந்திருந்ததாக உணரவில்லை. இதுவரை கோபியர்களாக வீட்டில் இருந்தது கண்ணன்தான் என்பதையும் அறியவில்லை!

கோபியர்களுடனான 'ராஸலீலை' என்பது, ஆத்மா-ப்ரமாத்மா என்பதான ஜீவதத்துவம்.

இந்த உலகமே பிருந்தாவனம். இங்கு வாழும் ஜீவன்களே கோபியர்கள். பரமாத்மாவாகிய கிருஷ்ணன், இந்த ஜீவன்களிடம் மறைந்தும் வெளிப்பட்டும் விளையாடுகிறான். தான் பரமாத்மா என்பதை, இந்த ஜீவன்கள் உணர்ந்து தன்னிடம் லயப்பட வேண்டும் என்றே அவன் இப்படிச் செய்கிறான். எனவே, அவனுடைய லீலைகள் எல்லாம் ஜீவன்கள் சுகப்படுவதற்காகத்தானே தவிர, தான் சுகப்படுவதற்கல்ல!

***

8

அழிக்கிறான் கண்ணன்; அழைக்கிறான் கம்சன்!

பிருந்தாவனத்தில், பலராம கிருஷ்ணர்களை நேசிக்காதவர்களே இல்லை. இருவருமே சாதாரணப் பிள்ளைகள் இல்லை. தெய்வாம்சம் பொருந்தியவர்கள் என்று அவர்கள் பூரணமாக உணரத் தொடங்கிவிட்டார்கள்.

ஒன்றா இரண்டா! தொடர்ந்து எத்தனை ஆபத்துகள்! எல்லாவற்றிலிருந்தும் பிருந்தாவனவாசிகளைக் காப்பாற்றியது பலராம கிருஷ்ணர்கள்தானே!

முதல் ஆபத்து ஒரு பாம்பின் ரூபத்தில் வந்தது.

மகரிஷிகளிடம் சாபம் பெற்று பாம்பாக உலவி வந்தான் சுதர்சனன் என்கிற வித்யாதரன். 'அம்பிகாவனம்' என்கிற இடத்துக்கு நந்தகோபன் சென்றபோது, அவன் காலைப்பற்றி விழுங்க

முயற்சித்தான் அவன். நந்தகோபனோடு வந்த இடையர்கள் நெருப்புக்கட்டைகளைக் கொண்டு தாக்கியும்கூட, நந்தனை விடாது பற்றியிருந்தது பாம்பு.

கிருஷ்ணன் ஓடி வந்தான். தன்னுடைய காலால் பாம்பை ஓங்கி மிதித்தான். உடனே பாம்பு, வித்யாதரனாக உருமாறியது. நந்தகோபன் தப்பித்தான். பகவானின் திருவடி ஸ்பரிசத்தால் சாப விமோசனம் பெற்ற சுதர்சனன், கண்ணனை வணங்கி நன்றி தெரிவித்துவிட்டு விண்ணுலகம் போனான்.

அடுத்த ஆபத்து கோபியர்களுக்கு வந்தது!

ஓர் இரவு நேரத்தில், பலராம - கிருஷ்ணர்கள் கோபிகைகளு டன் விளையாடிக்கொண்டிருந்தனர். கண்ணன் குழலிசைக்க, கோபியர்கள் நடனமாடிக்கொண்டிருந்த நேரத்தில் அங்கு வந் தான் சங்கசூடன் என்பவன். அவன் குபேரனின் பணியாள்.

கிருஷ்ணனும் பலராமனும் இசையில் மெய்மறந்திருந்த நேரத்தில், கோபிகைகளை வெகுதூரம் கடத்திப் போய்விட் டான் சங்கசூடன். பின் கோபியர்களின் அலறலைக் கேட்ட பலராமனும் கிருஷ்ணனும், சங்கசூடனைத் துரத்திச் சென்று கோபியர்களை மீட்டனர்.

பலராமன் கோபிகைகளுக்குத் துணையாக நிற்க, தப்பித்து ஓடிய சங்கசூடனை துரத்திப்பிடித்து அவனைக் கொன்று வீழ்த்தினான் கிருஷ்ணன். சங்கசூடனின் தலையில் இருந்த ரத்தினத்தை அறுத்தெடுத்து பலராமனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

இதெல்லாம் நடந்த சில நாள்களுக்குள்ளாகவே, காளைமாடு ரூபத்தில் பாய்ந்து வந்தது மற்றொரு ஆபத்து!

அரிஷ்டன் என்கிற அரக்கன், பெரிய காளைமாட்டின் உருவத் தில், புயல் வேகத்தில் பாய்ந்து வந்தான்.

தன் கூரிய கொம்புகளால் அவன் பூமியைக் குத்திக் கிழித்த போது, புழுதியுடன் நெருப்புப் பொறியும் பறந்தது. சீறும் உறுமலுடன் அவன் பிருந்தாவனவாசிகளைத் துரத்தினான்.

கோபர்களும் கோபியர்களும் குழந்தைகுட்டிகளும் அலறி யடித்துக்கொண்டு ஓடினார்கள்.

'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று கூக்குரலிட்டார்கள்.

கிருஷ்ணன் அபயக்குரல் கேட்டு ஓடி வந்தான்! 'ஆஹா! இரை சிக்கிக் கொண்டுவிட்டது' என்று நினைத்தான் அரிஷ்டன். தன் மூச்சுக்காற்றில் அனல் பறக்க, தலையைத் தாழ்த்திக் கொண்டு, கூரிய கொம்புகளால் கிருஷ்ணனின் குடலைக் குத்திக் கிழித்தெறிய பாய்ந்தோடி வந்தான்.

கண்ணன், அரிஷ்டனின் கூரிய கொம்புகளை இறுகப் பற்றி னான். அவனைக் கீழே தள்ளினான். உடல்மீது கால்வைத்து அழுத்தினான்.

அரிஷ்டன், கிருஷ்ணனின் பிடியிலிருந்து விடுபடுவதற்காகப் போராடினான். தலையை உயர்த்தி முட்டுவதற்கு முயற்சித் தான். பலமனைத்தும் திரட்டி, கண்ணனை வீழ்த்த முயன்று தோற்றான்.

கண்ணன், கொம்புகளைப் பிடுங்கினான். முஷ்டியினால் ஓங்கி முகத்தில் குத்தினான். அடுத்த நொடி, அரக்கன் அரிஷ்டன் ரத்தம் கக்கி மாண்டுபோனான்.

கோபர்களும் கோபியர்களும் கிருஷ்ணனை பாராட்டிக் கொண்டாடினார்கள். பிருந்தாவனத்துக்கு இனி ஒரு பயமுமில்லை என்று நிம்மதியடைந்தார்கள்.

ஆனால், கண்ணனிடம் கொண்ட பயத்தினாலேயே நிம்மதி யிழந்து தவித்தான் கம்சன்!

மதுராபுரியில், கம்சனுக்கு வந்த தகவல்கள் எல்லாம் கசப்பான தாகவே இருந்தன.

அவன் அனுப்பிவைத்த அசுரர்கள் எல்லோருமே ஒருவர்பின் ஒருவராக எமனுலகம் சென்றுவிட்டார்கள் என்று அறிந்த போது, அவனால் நம்பவே முடியவில்லை. சாதாரண

சிறுவர்களை கொல்ல முடியவில்லை என்றால், அதில் ஏதோ சதியிருக்கிறது என்று யூகித்தான். என்ன என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

அதைப் புரியவைக்க வந்தார் நாரத மகரிஷி.

'என்ன கம்சா! ஏதோ கவலையில் இருக்கிறாய் போலிருக்கிறதே!' என்றபடி அரண்மனைக்குள் நுழைந்தார் நாரதர்.

'கவலையா? எனக்கா? சேச்சே! அதெல்லாம் ஏதுமில்லை நாரதரே!' - கலக்கத்தை மறைத்துக்கொண்டு பதில் சொன்னான் கம்சன்.

'கம்சா! உன்னைப்போன்ற நல்லவர்களின் நலத்தில் அக்கறை கொண்டவன் நான். என்னிடமே மறைக்கிறாயே! போகட்டும். நீ மறைத்தாலும், நான் எனக்குத் தெரிந்த உண்மையை உன்னிடம் ஒளிக்கப்போவதில்லை! ஆனால், அதைச் சொல்வதற்கு இது சமயமா என்றுதான் தெரியவில்லை!' - தயங்குவது போல நடித்தார் நாரதர்.

ஒரு விஷயத்தைச் சொல்லவந்து, சொல்லாமல் போனால் எதிராளியின் மனம் எப்படித் தவிக்கும் என்று அவருக்குத் தெரியாதா என்ன?

அதுபோலவே ஆர்வத்துடன் கேட்டான் கம்சன்.

'நாரதரே! உண்மையைச் சொல்வதற்கு சமயமென்ன, சந்தர்ப்பம் என்ன? விஷயத்தைச் சொல்லுங்கள்!' என்றான்.

'சரி. அப்படியானால், நீ முதலில் சொல்! எதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தாய்?'

'பிருந்தாவனப் பிரதேசத்தில், அடுத்தடுத்து பல அசுரர்கள், யாரோ சிறு பாலகர்களால் கொல்லப்பட்டதாக தகவல் வந்தது. அதைப்பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். சாதாரண இடையச் சிறுவர்களால் இது எப்படி முடிந்தது என்றுதான் எனக்குத் தெரியவில்லை!'

'கம்சா! இங்கேதான் நீ தவறு செய்கிறாய். நான் சொல்லவந்த உண்மையும் அதைப்பற்றிதான். கேட்டுக்கொள்! நீ நினைப்பது போல், பிருந்தாவனச் சிறுவர்கள் சாதாரண சிறுவர்களல்ல! தேவகியின் ஏழாவது கர்ப்பம் கலைந்து போய்விட்டதாக நினைத்தாயல்லவா! அந்தத் தேவகியின் ஏழாவது கர்ப்பமாக இருந்தவன், ரோகிணியின் மகனான பலராமன். தேவகியின் எட்டாவது குழந்தையாகப் பிறந்து ஆகாயத்தில் போன பெண் குழந்தை யசோதையின் மகள். உண்மையில், தேவகிக்கு எட்டாவது மகனாகப் பிறந்தவன் கிருஷ்ணன்தான்! அவன் இப்போது பலராமனுடன், நந்தகோபன் - யசோதையின் மகனாக பிருந்தாவனத்தில் வளர்ந்து வருகிறான். அவன்தான் உனக்கு யமன்!

'என்ன சொல்கிறீர்கள் நாரதரே! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?' - பதறினான் கம்சன்.

'நான் பொய் பேசுவதில்லை என்பது உனக்குத் தெரியாதா என்ன? சொல்வதைச் சொல்லிவிட்டேன். இனி உன் சாமர்த்தியம்!'

வந்த வேலையை கச்சிதமாகச் செய்துவிட்டு விடைபெற்றுக் கொண்டார் நாரதர்.

கம்சன் கொந்தளித்துப்போனான்.

'வசுதேவா! துரோகி! என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றி, எனது எமனை மறைவாக வைத்து வளர்த்து வருகிறாயா? அதற்கு என் தங்கை தேவகியும் உடந்தையா? இப்போதே உங்களைத் தீர்த்துவிடுகிறேன்!' என்று வாளெடுத்துக் கொண்டு புறப்பட்டான். பின் எதனாலோ தன் மனத்தை மாற்றிக்கொண்டவன், காவலர்களை அழைத்தான்.

'உடனே சென்று, வசுதேவரையும் தேவகியையும் பாதாளச் சிறைக்குள் தள்ளிப் பூட்டுங்கள்!' என்று கட்டளையிட்டான்.

அவர்களை சிறையில் தள்ளிய கையோடு, கேசி என்கிற அரக்கனைக் கூப்பிட்டான்.

'கேசி! உடனே நீ பிருந்தாவனத்துக்குச் சென்று, அங்கிருக்கும் வசுதேவரின் பிள்ளைகளான பலராமன், கிருஷ்ணன் இரு வரையும் கொன்றுவிடு!' என்று கட்டளையிட்டான்.

கம்சன், கேசியை அனுப்பிவிட்டானே தவிர, அவன் அதைச் செய்துமுடிப்பான் என்று அவனுக்கே நம்பிக்கையில்லை.

மனத்துக்குள்ளேயே அடுத்தகட்டமாக என்ன செய்யலாம் என்று யோசித்தவன், மறுநாள் ராஜ சபையைக் கூட்டினான். சாணூரன், முஷ்டிகன் போன்ற தனக்குப் பிரியமான மல்லர் களை வரவழைத்தான். மந்திரிகள், சேனாதிபதிகள் மத்தியில் தன் திட்டத்தை தெளிவாக விளக்கினான்.

'பிருந்தாவனத்தில் வளரும், வசுதேவனின் பிள்ளைகளான பலராமனும் கிருஷ்ணனும்தான் எனது உயிருக்கு எமன்கள் என்று தெரிந்துவிட்டது. நான் அவர்களை இங்கே அழைக்கப் போகிறேன். அவர்கள் இங்கே வந்ததும், இருவரையும் மல்யுத்தப் போட்டியில் பங்குகொள்ளச் செய்வேன். அப் போது சாணூரனும் முஷ்டிகனும் அவர்களுடன் மோதி, இருவரையும் சதைப் பந்துகளாக்கி விடவேண்டும்!' என்று கூறினான்.

பின், மல்லர்களைப் பார்த்துச் சொன்னான்:

'உங்களுடன் அவர்கள் சண்டையிடுவதற்கு முன்பாகவே, நமது குவாலயா பீடம் என்கிற யானையால் அவர்களை நசுக்கி விடவும் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் அவர்கள் தப்பிவிட்டால், உங்கள் கரங்களுக்கு விருந்துதான்!' என்று உரக்கச் சிரித்தான்.

அப்போது, மந்திரிகள் கம்சனிடம் கேட்டார்கள்:

'மன்னவா! அவர்களை என்ன காரணம் சொல்லி வரவழைக் கப் போகிறீர்கள்? அவர்களை அழைத்துவரப் போவது யார்?'

கம்சனின் பார்வை, சபையிலிருந்த அக்ரூரரின் பக்கம் சென்றது.

அக்ரூரர் நற்குணங்கள் கொண்டவர். மிகச்சிறந்த பக்திமான். யாதவர்களின் மதிப்பிற்குரியவர். வசுதேவருக்கு உறவினர். அவர் சென்று கூப்பிட்டால் எந்தச் சந்தேகமும் வராது என்று தீர்மானித்தான் கம்சன்.

'அக்ரூரரே! நாளையே நீங்கள் என் சார்பில் பிருந்தாவனத் துக்குப் புறப்படுங்கள். மதுராவில் நான் தனுர்யாகம் நடத்தப் போவதாகவும், அந்த யாகத்தில் பங்கேற்கவும், மதுராபுரியின் சிறப்பைக் கண்டுகளிக்கவும், பலராமனையும் கிருஷ்ண னையும் அழைத்ததாகச் சொல்லுங்கள். நந்தனிடம் சம்மதம் பெற்று, இரண்டு சிறுவர்களையும் உங்களுடனேயே அழைத்து வந்து விடுங்கள்!' என்றான்.

அரச கட்டளையை எப்படி மறுக்க முடியும்? சம்மதித்து தலையசைத்தார் அக்ரூரர்.

'விழா என்கிற பெயரில் இரண்டு பாலகர்களை வரவழைத்து, கொல்லத் துடிக்கிறானே கம்சன்!' என்ற வேதனை ஏற்பட்ட போதிலும், அவனுடைய நோக்கம் நிச்சயம் நிறைவேறப் போவதில்லை என அக்ரூரருடைய உள்மனம் திடமாக நம்பியது. இது தவிர, பிருந்தாவனம் சென்றால் கிருஷ்ணனைத் தரிசிக்கலாம் என்கிற சந்தோஷமும் அவரை துரிதமாக புறப்படத் தூண்டியது.

அக்ரூரருக்கு முன்பாகவே நாலுகால் பாய்ச்சலில் பிருந்தா வனத்துக்குள் வந்து சேர்ந்திருந்தான் அசுரன் கேசி!

ஆம்! அப்போது அவன், பிரும்மாண்ட குதிரை ரூபத்தில் வந்திருந்தான். காற்றை எதிர்த்து அசுரப்பாய்ச்சலில் நிலம் அதிரப் பாய்ந்துவந்த கேசியைக் கண்டு கோபர்கள் திகைத்து நின்றார்கள். கேசியின் குளம்போசையால் நிலம் நடுங்கியது. புல் பூண்டுகள் சிதறிப் பறந்தன. எங்கும் புழுதி கிளம்பி, பார்வையை மறைத்தது.

முன்னங்கால்களை உயர்த்தி பனைமர அளவுக்கு உயர்ந்து, பயங்கரமாகக் கனைத்தான் கேசி. அதைக்கேட்டு கோபியர்கள் அலறினார்கள்.

கிருஷ்ணன், குதிரையின் எதிரே வந்து நின்றான்!

கேசி, கிருஷ்ணனைக்கண்டு கனைத்துச் சிரித்தான். 'வா... சிறுவனே வா! என் குளம்புகளாலேயே மிதித்து, உன்னைச் சிதைக்கிறேன்!' என்று எண்ணியபடி தாவிப் பாய்ந்தான்.

கண்ணன் வேகமாக நகர்ந்துகொள்ள, அவனை பின்னங்கால் களால் உதைக்க முயற்சித்தான் கேசி. கண்ணன் அந்தக் கால் களைப் பற்றித்தூக்கினான். வேகமாகச் சுழற்றி, தூக்கி எறிந்தான்.

கேசி, சமாளித்துக்கொண்டு எழுந்தான். நேருக்கு நேராக தாக்க ஓடினான். கண்ணன் குதிரை வந்த வேகத்திலேயே, தன் கையை குதிரையின் வாய்க்குள் செலுத்தினான். குதிரைக்கு மூச்சுத் திணறும்படி, தன் கையை பெரியதாக்கிக் கொண்டான்.

அசுரனான கேசிக்கு, மூச்சு முட்டித்திணறியது. கண்கள் விரிந்தன. துள்ளினான். துடித்தான். உயிர்மூச்சு நின்றுபோய், நிலத்தில் செத்து விழுந்தான்.

கோபர்கள் சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தார்கள். கண்ணனை, தூக்கிக் கொண்டாடினார்கள். 'கேசிநிகேதன்' என்று வாழ்த்தினார்கள்.

இந்த மகிழ்ச்சியான சூழலில் பிருந்தாவனத்துக்குள் நுழைந் தார் அக்ரூரர்.

நந்தகோபன் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தான். ஆசனம் தந்து அமரவைத்தான். அப்போது அவரெதிரே மஞ்சள் பட்டுடுத்திய கண்ணனும் நீலப்பட்டு உடுத்தியவ னாக பலராமனும் எதிரே வந்து நின்றார்கள். அக்ரூரரை வணங்கினார்கள்.

அக்ரூரர், பலராம - கிருஷ்ணர்களின் திவ்ய தரிசனம் கண்டதில் மெய்சிலிர்த்துப் போனார். ஆனந்தக்கண்ணீர் வழிய, இரு வரின் கரங்களையும் பற்றிக் கொண்டு பக்கத்தில் அமர வைத்துக்கொண்டார். அவர்களுடன் பேசிப் பேசி மகிழ்ந்தார்.

அன்றைய இரவு பிருந்தாவனத்திலேயே கழிய, மறுநாள் தாம் வந்த காரியத்தைப்பற்றி தெரிவித்தார்.

'நந்தகோபரே! மதுராபுரியில் மன்னன் கம்சன் தனுர்யாகம் செய்யப்போகிறான். அதில் பலராம - கிருஷ்ணர்கள் வந்து கலந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறான். நீங்களும் அவர்களுடன் மதுராபுரி வந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்!' என்று அழைப்பு விடுத்தார்.

அவர் முன்தினம் இரவே, பலராம - கிருஷ்ணர்களிடம் கம்சனின் சூழ்ச்சியைப்பற்றி தெரிவித்திருந்தார். நந்தகோப னுக்குத் தெரிந்தால் அவன் அச்சம் கொள்வான் என்பதால், சதித்திட்டம் பற்றி அவனிடம் சொல்லவில்லை. சொல்ல வேண்டாம் என்பது பலராம கிருஷ்ணர்களின் வேண்டுகோள்.

கம்சனின் அழைப்பால், நந்தகோபனின் மனமும் சஞ்சலப் பட்டாலும் அதை காண்பித்துக்கொள்ளவில்லை.

'அரசனின் அழைப்பை, நிச்சயம் நாம் நிராகரிக்க முடியாது. மதுராபுரிக்கு செல்லத்தான் வேண்டும்!' என்றவன், கோபர் களிடம் அதற்கான ஏற்பாடுகளை செய்யச் சொன்னான்.

அக்ரூரர், கண்ணனை அழைத்துப்போக வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு, கோபியர்கள் துயரத்தில் மூழ்கி னார்கள். 'கிருஷ்ணா! மதுராவுக்குப் போனதும் எங்களை மறந்துவிட மாட்டாயே! மீண்டும் பிருந்தாவனத்துக்கு வந்து விடுவாய் அல்லவா?' என்று கேட்டு, கண்கலங்கினார்கள்.

கண்ணன் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி சமாதானப்படுத்தி விட்டு, தேரில் ஏறிப் புறப்பட்டான். மற்றவர்களும் வண்டியில் ஏறி அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

தங்களின் உயிரே புறப்பட்டுச் செல்வதாக எண்ணிய கோபியர்கள், தேரின் பின்னேயே 'கோவிந்தா! தாமோதரா! மாதவா! மணிவண்ணா!' என்று வெட்கத்தைவிட்டுப் புலம்பி னார்கள்.

‘என் அன்பு கோபியர்களே, மனம் வருந்தாதீர்கள்! நிச்சயம், நான் உங்களைக்காண திரும்பி வருவேன்!’ என்று வாக்களித் தான் கண்ணன்.

கண்ணீர் சிந்திய கோபிகைகள், கண்ணன் அளித்த வாக்குறுதி யால் மனம் மலர்ந்தார்கள். பிரியாவிடை தந்து வழியனுப்பி னார்கள்.

அன்பு உள்ளங்கள் நிறைந்த பிருந்தாவனம் கண்களிலிருந்து மறைய, கொடியவனான கம்சனின் மதுராபுரி பார்வைக்குத் தட்டுப்படத் தொடங்கியது.

***

9

மதுராபுரி சாகசங்கள்!

பலமான பாதுகாப்புடன் திகழ்ந்தது மதுராபுரி நகரம்!

உயர்ந்த மதில்கள். உச்சியில் ஆயுதம் தாங்கிய வீரர்கள். நகரைச்சுற்றி அகலமான அகழி. ஆயிரக்கணக்கில் முதலைகள் என்று எளிதில் எதிரிகள் நெருங்கமுடியாதபடி காட்சியளித்தது.

அக்ரூரருடன் வந்த பலராமனும் கிருஷ்ணனும், நகரை நெருங்கியதுமே தேரிலிருந்து இறங்கிக் கொண்டார்கள்.

‘அக்ரூரரே! நம்முடன் புறப்பட்ட தந்தையும் மற்ற கோபர்களும், நகருக்கு வெளியே உபவனத்தில் தங்கியிருப்பதாகக் கூறியுள்ளார்கள். எனவே, நாங்களும் அவர்களுடனே சென்று தங்கிக்

கொள்கிறோம். நீங்கள் நகருக்குள் செல்லுங்கள். எங்கள் அன்பு மாமனிடம், நாங்கள் வந்துவிட்ட தகவலைச் சொல்லி விடுங்கள். நாங்கள் நாளை வந்து அவனைச் சந்திக்கிறோம்!' என்றான் கண்ணன்.

'கண்ணா! உன்னிடம் ஒரு சிறிய வேண்டுகோள். நீ எனது இல்லத்துக்கு வரவேண்டும். வந்து என்னை, புனிதப்படுத்த வேண்டும்!' - கோரிக்கை விடுத்தார் அக்ரூரர்.

'அக்ரூரரே! நான் வந்த காரியம் முடியட்டும். நிச்சயம் தங்கள் இல்லத்துக்கு வருகிறேன்!'

கண்ணன் வாக்குறுதியளிக்க, சந்தோஷத்தோடு புறப்பட்டுச் சென்றார் அக்ரூரர். கம்சனிடம் சென்று கிருஷ்ண, பலராமன் வந்துவிட்ட செய்தியைத் தெரிவித்துவிட்டு, வீட்டுக்குப் போனார்.

கம்சன், மறுதினத்தை ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினான்.

உபவனத்தில், தந்தையோடும் மற்ற கோபர்களுடனும் இளைப்பாறிய கண்ணனும் பலராமனும், மாலைப் பொழுதானதும் மதுராபுரியைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர்.

நகரத்தின் அழகையும் அலங்காரத்தையும் செல்வச் செழிப்பையும் கண்டு ரசித்தனர். அப்போது, வழியில் ஒரு சலவைத் தொழிலாளி எதிர்ப்பட்டான். அவனுடைய மூட்டையில் ராஜ உடைகள் தென்பட்டன.

'அன்பனே! உன் மூட்டையிலிருந்து நாங்கள் அணிந்து கொள்ள ஒரு நல்ல ஆடையைத் தருவாயா?' - என்று கேட்டான் கிருஷ்ணன்.

சலவைத் தொழிலாளி சீறி விழுந்தான்.

'நீங்கள் இப்படிக் கேட்டதற்கே, உங்கள் தலையைச் சீவி விடுவார் மன்னர். இவையெல்லாம் அரசருக்குரிய ஆடைகள். இதை அணிவதற்கு உங்களுக்குத் தகுதியில்லை! உடனே இந்த இடத்தை விட்டு ஓடிவிடுங்கள்!' என்றான்.

பலராமன் கோபத்துடன், அவனை அறைந்து கீழே தள்ளினான். பின், அவனும் கிருஷ்ணனும் மூட்டையிலிருந்து சிறந்த ஆடைகளை எடுத்து தோழர்களுக்குக் கொடுத்துவிட்டு, தாங்களும் அணிந்துகொண்டார்கள். தொடர்ந்து நடந்தார்கள்.

சிறிது தூரம் சென்றதுமே, பூமாலைகள் கட்டுபவனான சுதாமா என்பவனைக் கண்டார்கள். கிருஷ்ண, பலராமனின் தெய்வாம்ச சொரூபத்தில் கவரப்பட்ட சுதாமா, இருவருக்கும் சந்தனமும் புஷ்ப மாலைகளும் அளித்தான். சுதாமாவை அன்புடன் தழுவி ஆசீர்வதித்தான் கண்ணன்.

அங்கிருந்து நகர்ந்ததும் எதிர்ப்பட்டாள் திரிவிக்ரா என்கிற அரண்மனைத் தாதி. உடலில் மூன்று கோணல்கள் கொண்ட கூனி அவள். கம்சனுக்காக, சந்தனம் போன்ற வாசனைத் திரவியங்களை தயாரித்து எடுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தாள்.

நறுமணப் பிரியனான கிருஷ்ணன் அவளிடம், 'அம்மா! இந்த வாசனைத் திரவியங்களை எனக்கும் தருவாயா?' என்று ஆவலுடன் கேட்டான்.

கிருஷ்ண, பலராமனின் திவ்ய அழகைக் கண்குளிர ரசித்த திரிவிக்ரா மிகுந்த சந்தோஷத்துடன், 'என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? உங்களுக்கு இல்லாத வாசனைப் பூச்சா? இதைப் பூசிக்கொள்ள தகுதியானவர்கள் நீங்கள்தான்!' என்று சொல்லி, ஆசையுடன் அவர்களுக்கு வாசனைத் திரவியங்களை அள்ளிக்கொடுத்தாள்.

திரிவிக்ராவின் அன்பால் மனம் மகிழ்ந்த கிருஷ்ணன், அனைவரும் கேலி செய்த அவளுடைய கூனைப் போக்க நினைத்தான். அவளின் கால்களை தன் விரல்களால் அழுத்திக் கொண்டு, தன் மிருதுவான கைகளால் அவளுடைய முகவாயைப்பற்றி லேசாகத் தூக்கினான். திரிவிக்ராவின்

மூன்று கோணல்களும் மறைந்துபோயின. கூன் அகன்று, அழகிய இளம்பெண்ணாக மாறிப்போனாள் திரிவிக்ரா.

ஆனந்தக்கண்ணீருடன், கிருஷ்ணனின்முன் மண்டியிட்டு அவன் பாதங்களைத் தொட்டு வணங்கினாள் திரிவிக்ரா. ஆசீர்வதித்துவிட்டுப் புறப்பட்டான் கண்ணன்.

கம்சன் ஏற்பாடு செய்திருந்த 'தனுர் யாகம்' எங்கே நடக்கிறது என்று விசாரித்துக்கொண்டு இருவரும் யாகசாலைக்கு விரைந்தார்கள்.

யாகசாலையில், பலவிதமான ரத்தினங்கள் பதிக்கப்பட்ட வில் ஒன்று அலங்கரிக்கப்பட்டு ஜொலித்துக்கொண்டிருந்தது. வில்லைச்சுற்றி நிறைய காவலாளிகள் பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தனர்.

கிருஷ்ணன் அந்த வில்லை எடுக்க முயல, காவலர்கள் கோபத்துடன் தடுத்தனர். பலராமன் அவர்களை எதிர்த்துத் தள்ளிவிட, கிருஷ்ணன் வில்லை எடுத்தான். நாணேற்றினான். அது படீரென்ற சத்தத்துடன் முறிந்தது.

அதைக்கண்ட காவலர்கள் மேலும் ஆக்ரோஷத்துடன், பலராம, கிருஷ்ணர்களைத் தாக்கத் தொடங்கினார்கள். சகோதரர்கள் இருவரும், முறிந்த வில்லின் துண்டுகளாலேயே காவலர்களை தாக்கி வீழ்த்தினார்கள். பின், உபவனத்துக்கே வந்து சேர்ந்தார்கள். இரவாகி விட்டதால், சாப்பிட்டு முடித்து நிம்மதியாக உறக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

கம்சன் உறக்கம் வராமல் தவித்தான். பட்டுப் பஞ்சணை, அகில் நறுமணம், சுகமான தென்றல் காற்று, இத்தனை இருந் தும் தூக்கம் மட்டும் தொலைதூரம் விலகிப் போயிருந்தது.

சிறுவர்கள் வில் முறித்த செய்தி, அந்த நொடியே அவன் காதுக்கு வந்துவிட்டது. சலவைத் தொழிலாளியிடமிருந்து அரச உடைகளை அவர்கள் அபகரித்த செய்தியும் அவனுக்கு சொல்லப்பட்டிருந்தது. கேட்கக் கேட்க, ஆத்திரத்தால் அவனுடைய நரம்புகளே தெறித்து விடும் போலிருந்தது! கூடவே, அச்சமும் அவனை வதைத்தது!

'பூதனை முதல் கேசி வரை - இந்தச் சிறுவர்களால் கொல்லப் பட்டதாகச் சொல்லும் அரக்கர்கள் - எல்லோருமே மிகப் பெரிய பலசாலிகள்! அப்போது நம்பத் தோன்றவில்லை. ஆனால் அவர்கள், வில்லை முறித்ததையும் காவலர்களை வீழ்த்தியதையும் பார்த்தால் அது உண்மைதான் என்பது ஊர்ஜிதமாகிறது. அப்படியானால் இந்த எட்டாவது பிள்ளை, என் உயிருக்கு எமன் என்பது நிஜமாகிவிடுமோ?'

அதற்குத் தகுந்ததுபோல அவனைச்சுற்றி தீய சகுனங்கள் ஏராளமாகத் தென்பட்டன. கண்ணாடியில் தலை இல்லாமல் உடல் மட்டும் தென்பட்டது. அவன் நிழலில் ஓட்டைகள் தெரிந்தது. ஆவிகள் தழுவுவது போலவும் கழுதையின்மீது ஊர்வலம் செல்வது போலவும் கனவுகள் வந்தன.

கம்சன், இரவு முடிந்து விடிந்துபோனதே தெரியாமல் பிரமை பிடித்தவன் போல் அமர்ந்திருந்தான். பின் சுதாரித்துக் கொண்டு, தான் நியமித்திருந்த மல்லர்களை அழைத்தான். குவாலயா பீட யானையை தயாராக நிறுத்திவைக்கச் சொல்லி விட்டு, மல்லர்களையும் எச்சரித்து அனுப்பினான். பின் தானும் எழுந்து குளித்து முடித்து, அலங்கரித்துக் கொண்டு புறப்பட் டான்.

மல்யுத்த அரங்கம், மக்களால் நிரம்பியிருந்தது. சாணூரன், முஷ்டிகன், கூடன், சாலன், தோசலன் போன்ற புகழ்பெற்ற மல்யுத்த வீரர்கள் வரிசையாக அணிவகுத்து நின்றனர். பேரிகைகள் ஒலிக்க, கம்சன் வந்து தன் விலையுயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டான். நந்தகோபனும் உடன் வந்த மற்ற கோபர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடங்களில் சென்று அமர்ந்துகொண்டார்கள்.

அப்போது, பலராமனும் கிருஷ்ணனும் மல்யுத்த அரங்குக்கு வருவதற்காக, நுழைவாயிலுக்குள் புகுந்தனர். அங்கே

தோரண வாயிலில் 'குவாலயா பீடம்' என்கிற பட்டத்து யானை வழிமறித்து நிறுத்தப்பட்டிருந்தது.

'பாகனே! யானையை விலக்கி நிறுத்து. நாங்கள் உள்ளே செல்லவேண்டும்!' என்றான் கிருஷ்ணன்.

'நீங்கள் உள்ளே செல்லவேண்டிய அவசியமில்லை. மேலே யமனுலகம் சென்று சேருங்கள்!' என்றபடி, யானையை பலராம கிருஷ்ணர்கள்மீது ஏவினான் யானைப் பாகன்.

யானை தன் துதிக்கையால் கிருஷ்ணனை வளைத்துப்பிடிக்க முனைந்தது. அதன் பிடியிலிருந்து தப்பித்த கிருஷ்ணன், யானையின் கால்களுக்குள் புகுந்துகொண்டு போக்கு காட்டினான். அதன் வாலை இழுத்து வேதனை தந்தான். இந்தவிதமாகவே யானையை களைப்புறச் செய்தவன், திடீரென்று அதன்முன் வந்து நின்று, கையால் முகத்தில் பலமாக அறைந்தான்.

யானை கோபத்துடன் கிருஷ்ணனை தன் தந்தங்களால் குத்த பாய்ந்து வந்தது. கண்ணன் அதன் தந்தங்களைப் பிடித்து, வேகமாக இழுத்து கீழே தள்ளினான். இரண்டு தந்தங்களையும் வேரோடு பிடுங்கி, அந்தத் தந்தங்களாலேயே யானையையும் பாகனையும் குத்திக் கொன்றான்.

யானையின் வேதனை அலறலைக் கேட்டதுமே, கிருஷ்ணன் அதைக் கொன்றுவிட்டான் என்பதை கம்சன் உணர்ந்து கொண்டான். மனத்துக்குள் திகிலடைந்தான். ஆனாலும், தன் முன் நின்றிருந்த பலசாலிகளான மல்லர்களைப் பார்த்து சற்று நிம்மதியடைந்தான்.

அப்போது, பட்டத்து யானையின் நீண்ட இரண்டு தந்தங்களையும் ரத்தம் சொட்ட தோளில் போட்டுக்கொண்டு மல்யுத்த அரங்கினுள் நுழைந்தார்கள் பலராம, கிருஷ்ணர்கள்!

மல்யுத்த அரங்கத்தினுள் இருந்த எல்லோரின் பார்வையும் கண்ணன்மேல் பதிந்தது. ஒவ்வொருவருக்கும், மனத்தில் ஒவ்வொருவிதமான உணர்வு ஏற்பட்டது!

மல்லர்கள் 'இடி போன்றவன்' என்று நினைத்தார்கள். மக்கள், 'போற்றக்கூடிய புருஷோத்தமன்!' என்று கருதினார்கள். இளம் கன்னிகைகள் 'மன்மதன் அவதாரம்' என உணர்ந்தார்கள். கோபர்கள் 'தீயவர்களின் எதிரி' என்றும், பெற்றோர்கள் 'குழந்தை' என்றும், கம்சன் 'இவன் எனக்கு யமன்' என்றும் உணர்ந்தார்கள்.

இப்படி ஒவ்வொருவரையும் பலவாறாக நினைக்கவைத்த பிருந்தாவன நாயகனான கண்ணன், பலராமனுடன் அரங்கத்தின் நடுவில் வந்து நின்றான்.

அவனுடைய வடிவழகை துளித்துளியாக ரசித்த மக்கள், கண்ணனுடைய வசீகரத்தால் கவரப்பட்டு பார்வையை அவன் மீதிருந்து பிடுங்கமுடியாமல் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அவர்களின் கவனத்தைக் கலைப்பதுபோல தாரை தப்பட்டைகள், பேரிகைகள் முழங்கின. போட்டி தொடங்கலாம் என்பதை அறிவித்தன.

மல்யுத்த வீரனான சாணூரன், உரத்த குரலில் கிருஷ்ணனை அழைத்தான்.

'கிருஷ்ணா! நீயும் உன் சகோதரன் பலராமனும் யுத்தத்தில் வல்லவர்கள் என்று மன்னர் கேள்விப்பட்டார். உங்களின் வீரத்தைக் கண்டு மகிழ்வதற்காகவே உங்களை இங்கே வரவழைத்திருக்கிறார். வா! வந்து மன்னரின் விருப்பத்தை நிறைவேற்று. எங்களுடன் மல்யுத்தம் செய்!'

கிருஷ்ணன் புன்சிரிப்புடன் சொன்னான்:

'மன்னரின் விருப்பத்தை நிறைவேற்றவே நாங்களும் விரும்புகிறோம். சிறுவர்களாகிய நாங்கள், எங்களுக்குச் சமமானவர்களுடன் போட்டியிட தயாராகவே இருக்கிறோம்!'

சாணூரன் கேலியாக குரல் உயர்த்திச் சிரித்தபடி, 'பட்டத்து யானையான குவாலயா பீடத்தையே கொன்ற நீங்களா சிறுவர்கள்? தோற்றத்தில் சிறுவர்களாக இருந்தாலும் ஆயிரம்

யானை பலமுள்ளவர்கள் நீங்கள் என்பது எனக்குத் தெரியும்! எனவே, எங்களுடன் போட்டியிட நீங்கள் தகுதியானவர்கள் தான். நீ என்னுடன் சண்டையிடு. பலராமன் முஷ்டிகனோடு மோதட்டும்!' என்றான்.

அடுத்து அங்கே தொடங்கியது ஆக்ரோஷமான மல்யுத்தம்.

மெல்லிய பூவைப் பிய்த்தெறிய புயற்காற்று மோதுவதுபோல உணர்ந்தார்கள் மக்கள்!

சாணூரனும் அப்படித்தான் நினைத்தான். கிருஷ்ணனின் உயிரை சுலபமாகப் பறித்து, உதிர்த்துவிடலாம் என்று கணக்கிட்டான். ஆனால், அது நடக்கவில்லை. வலிமையாகப் பற்றிய கிருஷ்ணனின் கைகளிலிருந்து அவனால் தன்னை விடுவித்துக்கொள்ளவே முடியவில்லை. போராடினான். இருவரும் கட்டிப்புரண்டு உருண்டார்கள். ஒருவருக்கொருவர் சளைக்காமல் சண்டையிட்டுக்கொண்டார்கள்.

பலராமனுடன் மோதிய முஷ்டிகனும் அப்படித்தான் அவஸ்தைப்பட்டான். பலராமனின் பிடிக்குள் சிக்கிக் கொண்டு மூச்சுத் திணறினான். விடுவித்துக்கொள்ளப் போராடி கண்கள் பிதுங்கினான்.

'ராட்சஸ பலம் கொண்ட மல்லர்களுடன், பால்மணம் மாறாத சிறுவர்களைப்போய் சண்டையிடச் சொல்கிறார்களே! இது அநீதியான யுத்தம்! முறையற்ற இந்த யுத்தத்தைக் காண வேண்டாம்!' என்று நினைத்த மக்கள், யுத்தம் போகும் போக்கைக் கண்டு மனம் மகிழ்ந்தார்கள். உற்சாகம் கொண்டவர்களாகக் கூக்குரலிட்டார்கள்.

கண்ணன், சாணூரன் எதிர்பாராத சமயத்தில் சட்டென்று அவனைத் தலைக்குமேல் தூக்கி வேகமாகச் சுழற்றி தரையில் மடேலென அறைந்தான். அந்த நொடியே சாணூரன் ரத்தம் கக்கி உயிரை விட்டான்.

பலராமன் தனது முஷ்டியினாலேயே, முஷ்டிகனை இடைவிடாமல் குத்திக் கொன்றான். அடுத்தடுத்தும் சவால் விட்டு வந்த சாலன், கூடன், தோசலன் முதலிய அத்தனை மல்யுத்த வீரர்களையும், கிருஷ்ணனும் பலராமனும் மோதி வீழ்த்தினார்கள். இதைக்கண்ட மற்ற மல்யுத்த வீரர்கள் உயிருக்குப் பயந்து ஓட்டமெடுத்தார்கள்.

அரங்கம் முழுவதும் மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

கம்சனின் முகம் கோபத்தால் சிவந்தது. அதிர்ச்சியும் ஏமாற்றமும் அவனை கொலைவெறி கொள்ளவைத்தது. தன் காவலாளிகளை அழைத்துக் கட்டளையிட்டான்.

'அந்த ராம-கிருஷ்ணர்களை அடித்து விரட்டுங்கள். நந்தகோபனைப் பிடித்து சிறையில் அடையுங்கள். சிறையிலிருக்கும் வசுதேவரைக் கொன்றுவிடுங்கள். யாதவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்யுங்கள்!' என்று அடுக்கடுக்காக ஆணையிட்டான்.

இதைக்கேட்ட கண்ணன், கோபத்துடன் பாய்ந்து கம்சனின் சிம்மாசனத்தின்மீது குதித்தான்.

இதை எதிர்பார்க்காத கம்சன், திகைத்துப்போய் கண்ணனை வெட்ட முயன்று வாளெடுத்தான். கண்ணன் அந்தக் கையைப் பற்றி முறித்தான். கம்சனின் தலைமுடியைப் பிடித்து இழுத்து, சிம்மாசன மேடையிலிருந்து கீழே தள்ளினான்.

கிரீடம் கழன்று தனியே தரையில் உருள, மல்லாந்து விழுந்து கிடந்தான் கம்சன். கண்ணன் மேடை மேலிருந்து அவன் மார்பின்மீது மிகுந்த வேகத்துடன் இடிபோல் இறங்கினான். அந்த வேகத்திலேயே கம்சனின் உயிர் சட்டென அவன் உடலைவிட்டுப் பிரிந்தது. யாரால் தனக்கு மரணபயம் என்று நடுங்கிக்கொண்டிருந்தானோ அந்தக் கண்ணனிடமே அவனுடைய ஜீவன் சென்று அடைக்கலமானது.

அண்ணன் கம்சனின் மரணத்தால் கோபம் அடைந்த அவனுடைய எட்டுச் சகோதரர்களும் கிருஷ்ணனை தாக்க வந்தார்கள். அவர்கள் அத்தனைபேரையும் பலராமன் அடுத்தடுத்து கொன்றுமுடித்தான்.

தேவர்கள் மலர்கள் தூவினர். கந்தர்வர்கள் பாடினர். அப்ஸரஸ்கள் ஆடி மகிழ்ந்தனர். ரிஷிகள் மனம் குளிர்ந்தனர். பகவானின் அவதார காரியங்களில் ஒன்று நடந்து முடிந்தது.

கம்சன் இறந்ததுமே, மதுராபுரியின் சிறையில் அடைபட்டிருந்த தேவகியும் வசுதேவரும் விடுவிக்கப்பட்டார்கள். பலராமனும் கிருஷ்ணனும் அவர்களின் பாதம் பணிந்து வணங்கினார்கள். ஆனால் தேவகியும் வசுதேவரும், பிள்ளைகளை நெருங் காமல் தயங்கி நின்றார்கள். பலராம, கிருஷ்ணர்கள் பகவா னின் அவதாரங்கள் என்பதை அவர்கள் உணர்ந்திருந்ததால், உரிமையுடன் அவர்களைத் தழுவிக்கொள்ள முடியாமல் தத்தளித்தார்கள்.

பெற்றோர்களின் தயக்கத்தை உணர்ந்த கிருஷ்ணன், தனது மாயையால் அந்த நினைவை மறக்கடித்தான். அதனால் தங்கள் குழந்தைகளின்மேல் அளவற்ற பாசம் கொண்ட தேவகியும் வசுதேவரும், இருவரையும் உச்சிமுகர்ந்து தழுவிக் கொண் டார்கள்.

மதுராபுரியின் மன்னனாக, கிருஷ்ணனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய அனைவரும் விரும்பினார்கள். ஆனால் அதை அன்போடு மறுத்த கிருஷ்ணன், கம்சனின் தந்தையான உக்ரசேனரையே மீண்டும் மதுராவின் மன்னனாக்கினான்.

நந்தகோபன் பிருந்தாவனம் புறப்படத் தயாரானான். கண்ணன் அவனிடம், 'தந்தையே! நீங்களும் அன்னை யசோதையும், பேரன்புடன் பாசத்தைக் கொட்டி எங்களை வளர்த்தீர்கள். இப்போது, இத்தனை காலம் பிரிந்திருந்த தேவகி வசுதேவ ருடன் சிறிதுகாலம் தங்கிவிட்டு வருகிறோம். நீங்கள் பிருந்தா வனம் சென்று, அன்னையரிடம் இதைத் தெரிவித்து விடுங்கள்!' என்று சொல்லி வழியனுப்பி வைத்தான்.

வண்டி புறப்பட்டது. பார்வையிலிருந்து மறையும்வரை பலராம கிருஷ்ணர்களை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே சென்றான் நந்தகோபன். பிரிவின் வலி, அவன் மனத்தை வருத்தியது.



கோபியர்களான அழகுப் பெண்களோடு
கண்ணனின் ராஸலீலை.



கண்ணன், கம்சனை துவம்சம் செய்கிறான்.

10

குருதட்சணையாக ஓர் உயிர்!

வருடக்கணக்காக பிரிந்திருந்த பிள்ளைகளை, வசுதேவரும் தேவகியும் பக்கத்தில் வைத்து பார்த்துப் பார்த்து பூரித்தார்கள். பலராமனையும் கிருஷ்ணனையும் குழந்தைகள் போலவே பாவித்து, கேட்டுக் கேட்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள்.

வசுதேவர், இரு பிள்ளைகளுக்கும் முதல் காரியமாக அவர்கள் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பிள்ளைகளை அழைத்துச் சொன்னார்:

'கிருஷ்ணா! பலராமா! மாடு, கன்றுகளை மேய்த்தே உங்களின் பெரும்பாலான காலங்கள் கழிந்துவிட்டன. உரிய காலத்தில் கல்வி கற்க

முடியாமல் போய்விட்டது. ஆனால், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. வாழ்வில் அத்தியாவசியமான கல்வியைக் கற்க, நீங்கள் குருகுலம் செல்லவேண்டும். ஒரு சிறந்த குருவை உங்களுக்காக ஏற்பாடு செய்திருக்கிறேன்!' என்றார்.

'அப்படியே ஆகட்டும் தந்தையே!' - பணிவுடன் கூறினார்கள் ராம, கிருஷ்ணர்கள்.

சாந்தீபினி முனிவருக்கு, தன் கண்களையே நம்ப முடியவில்லை.

கிருஷ்ணன் பலராமன் இருவரும் சாதாரண மனிதர்கள் அல்ல, அவதார நாயகர்கள் என்பதை அவர் தன் உள்ளுணர்வால் அறிந்தே இருந்தார். 'அந்த திவ்ய புருஷர்களுக்கு தான் குருவாக இருந்து கல்வி கற்றுத்தர வேண்டுமா?' - திகைத்துப் போனார்.

'குருவே! நமஸ்காரம்!' - பாதம் தொட்டுப் பணிந்தார்கள் ராம, கிருஷ்ணர்கள். சுயநிலைக்கு மீண்டவர் அவர்களுக்கு ஆசி கூறினார்.

'மகரிஷியே! இனி இவர்கள் உங்கள் பிள்ளைகள்! இவர்களை கல்வியில் சிறந்தவர்கள் ஆக்குவது தங்கள் பொறுப்பு!' - வசுதேவர், சாந்தீபினியிடம் பலராம கிருஷ்ணனை ஒப்படைத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

சாந்தீபினி, அவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுத்த சில நாள்களிலேயே புரிந்துகொண்டார்.

பெயருக்குத்தான் தான் குரு! பலராம கிருஷ்ணனுக்கு எந்த குருவும் தேவையில்லை! அவர்கள் அத்தனை சூட்டிகையாக இருந்தார்கள். 'ஏக சந்தக்ராஹி' என்பார்களே! அப்படித்தான் இருந்தார்கள் இருவரும். ஒருமுறை சொன்னதுமே, புரிந்து அதை நன்றாக உள்வாங்கிக்கொண்டார்கள். நுணுக்கமாக உணர்ந்து, அதன் பொருளை தெள்ளத்தெளிவாக விளக்கினார்கள்.

சாந்தீபினி, இப்படியொரு சீடர்களை தாம் பெற்றதற்காக பெருமிதம் கொண்டார். அவர் மேலும் ஆச்சரியப்படும்படியாக, அறுபத்து நான்கு கலைகளையும் அறுபத்து நான்கு நாள்களில் கற்றுத் தேர்ந்தார்கள்.

'அற்புதம்! மிகமிக அற்புதம்! கிருஷ்ணா, பலராமா! இதுவரை உங்களைப்போன்ற சீடர்களை நான் சந்தித்ததேயில்லை! வாழிய நீங்கள்!' - மனப்பூர்வமாக வாழ்த்தினார் சாந்தீபினி.

'குருவே! தங்களின் திருவருளால் நிறைந்த கல்வியைப் பெற்றோம். அதற்காக தங்களுக்கு குருதட்சணை செலுத்த விரும்புகிறோம். என்ன வேண்டுமோ கேளுங்கள்!' என்றான் கிருஷ்ணன்.

ஆசிரமவாசியான சாந்தீபினி ஆசைகள் இல்லாதவர், தேவைகள் அற்றவர். எனவே, என்ன கேட்பது என்று தெரியாமல் திகைத்தார். அப்போது அவருடைய மனைவி, கணவரான சாந்தீபினியை உள்ளே அழைத்து அவரிடம் ஏதோ சொன்னாள்.

பின், பலராம கிருஷ்ணரின் முன்வந்து தயங்கி நின்றார்.

கிருஷ்ணன், அவரின் தயக்கத்தைப் போக்கும்விதமாகக் கூறினான்:

'குருவே! சீடர்களான எங்களிடம் தங்களுக்கு தயக்கமே தேவையில்லை. கேளுங்கள்! எதுவானாலும் தரக் கடமைப்பட்டுள்ளோம்!' என்றான்.

கிருஷ்ணா! பலராமா! நீங்கள் இருவரும் தெய்வீக புருஷர்கள் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான், மனிதர்களின் சக்திக்கு மீறிய ஒன்றை நான் உங்களிடம் கேட்கிறேன். முடியுமானால் நிறைவேற்றுங்கள். இல்லாவிட்டால், மனம் வருந்த வேண்டாம்!' என்றார்.

'உங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது எங்கள் பாக்கியம். சொல்லுங்கள்!' என்றார்கள் கிருஷ்ண பலராமர்கள்.

'என்னுடைய மகன் சில வருடங்களுக்கு முன் பிரபாஸ க்ஷேத்திரத்தில் கடலில் மூழ்கி இறந்து விட்டான். அவனை உங்களால் மட்டுமே மீட்டுத்தர முடியுமென்பது என் மனைவியின் எண்ணம். என் விருப்பமும் அதுதான்!' என்றார் சாந்தீபினி.

பலராம, கிருஷ்ணர்கள் அப்போதே புறப்பட்டு பிரபாச க்ஷேத்திரம் வந்தனர். கடலரசனை அழைத்து, கடலில் மூழ்கி இறந்துபோன குருபுத்திரனின் உடலைக் கொண்டுவருமாறு கேட்டனர்.

கடலரசன், 'கிருஷ்ணா! குருபுத்திரன் என்னிடத்தில் இல்லை. பிள்ளைகளைக் கடத்திப்போகும் சங்கின் உடலைக் கொண்ட பஞ்சஜனன் என்கிற அரக்கன், ஒரு வேளை உங்கள் குருவின் புதல்வனை கடத்திப்போய் வைத்திருக்கலாம்!' என்றான்.

கண்ணன் கடலுக்குள் புகுந்து, அரக்கனைத் தேடிப்பிடித்துக் கொன்றான். ஆனால், குருவின் புதல்வன் அங்கும் இல்லை. பஞ்சஜனன் என்கிற அந்த அரக்கனின் உடலிலிருந்த சங்கை கண்ணன் எடுத்துக்கொண்டான்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு, எமனுடைய நகரான 'ஸம்யமனீ' பட்டணத்துக்குச் சென்றான். கிங்கரர்கள் கண்ணனின் வருகையை எமனுக்குத் தெரிவிக்க, அவன் எதிர் கொண்டு வரவேற்றான். அமரச்சொல்லி உபசரித்தான். வந்த காரியத்தைச் சொன்னான்:

'தர்மதேவனே! எனது குரு சாந்தீபினியின் மகன் பிரபாஸ க்ஷேத்திரத்தில் கடலில் மூழ்கி மாண்டுவிட்டான். குருதட்ச ணையாக அவர் தனது மகனைக் கேட்டதால், உன்னிடம் அவனைக் கேட்பதற்காகவே வந்தேன்!' என்றான் கண்ணன்.

எமன், ஒரு வார்த்தையும் பேசாமல் குரு புத்திரனைக் கொண்டுவந்து கண்ணனிடத்தில் ஒப்படைத்தான்.

கிருஷ்ணனும் பலராமனும் குருபுத்திரனுடன் சாந்தீபினியிடம் வந்தார்கள்.

சாந்தீபினியாலும் அவருடைய மனைவியாலும் இதை நம்பவே முடியவில்லை. சில நொடிகள் ஸ்தம்பித்துப் போன வர்கள், மகனை வாரித் தழுவிக்கொண்டார்கள். ஆனந்தக் கண்ணீருடன் மாறி மாறிக் கொஞ்சினார்கள். முத்தமிட்டு மகிழ்ந்தார்கள்.

'கண்ணா! எல்லையில்லாப் பரம்பொருளே! உன் கருணைக்கு மிக்க நன்றி!' என்று தழுதழுத்தார்கள். கிருஷ்ணனையும் பலராமனையும் வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள்.

இருவரும், மீண்டும் மதுராபுரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கல்வியில் சிறந்தவர்களாக, ஆயுதப் பயிற்சியில் திறமையான வர்களாக, சாஸ்திரங்களை உணர்ந்தவர்களாகத் திரும்பிய மகன்களைக் கண்டு, வசுதேவரும் தேவகியும் மனம் மகிழ்ந்து போனார்கள்.

தாய் தந்தையருக்கு சந்தோஷத்தைத் தந்த கிருஷ்ணன், தொலைதூரத்தில் தன்னையே நினைத்து ஏங்கிக் கொண் டிருக்கும் ஜீவன்களை நினைத்துப்பார்க்கவும் தவறவில்லை.

பிருந்தாவனத்தில், நந்தகோபனும் யசோதையும் கோபியர் களும் தன்னுடைய பிரிவால் வருந்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அஸ்தினாபுரத்தில் அத்தை குந்தியும் தன்னையே நினைத்துக்கொண்டு, ஏதோ வேதனையில் தவித்துக்கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குத் தெரிந்தது.

விருஷ்ணி வம்சத்து மந்திரியான உத்தவரை பிருந்தாவனத் துக்கும், அக்ரூரரை அஸ்தினாபுரத்துக்கும் தன் சார்பாக அனுப்பிவைத்தான்.

உத்தவர், பிருந்தாவனத்துக்குச் சென்றார். நந்தகோபனும் யசோதையும் கண்ணனின் நினைவாகவே துயரத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டார். அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

'நந்தகோபரே! கண்ணனை சிறுவயது முதல் வளர்த்து வரும் பாக்கியம் பெற்றவர் நீங்கள். உங்களைக் கண்டதிலேயே நான் பாக்கியம் பெற்றேன். பகவான் நாராயணனின் அவதாரமான கிருஷ்ணன், விரைவிலேயே தங்களைக் காண இங்கு வருவார். தங்களிடமும் தாய் யசோதையிடமும் இதைத் தெரிவிக்கச் சொன்னார். தங்களின் நலனையும் கண்டறிந்து வரும்படி என்னை அனுப்பிவைத்தார்' என்று ஆறுதல் சொல்லி, நந்தகோபரிடமும் யசோதையிடமும் கண்ணனின் பால்ய லீலைகளை கேட்டுக் கேட்டு பரவசமானார்.

நந்தகோபரின் வீட்டு வாசலில் தேர் நிற்பதைக் கண்டதும், கண்ணனை அழைத்துப்போன அக்ரூரர்தான் மீண்டும் கண்ணனைக் கொண்டுவிட வந்திருக்கிறாரோ என்கிற ஆவலுடன் பிருந்தாவனக் கோபியர்கள் அனைவரும் அங்கு வந்து சூழ்ந்துகொண்டனர். கண்ணன் வரவில்லை என்பது அறிந்து ஏமாற்றமடைந்தனர்.

கண்ணனின் தூதுவராக உத்தவர் வந்திருக்கிறார் என்று தெரிந்ததும், அவரிடம் தங்கள் மனக்குமுறலை வெளிப்படுத்தினார்கள்.

'கண்ணனின் தூதுவரே, எப்படியிருக்கிறான் கண்ணன்? அவனுக்கென்ன! மதுராபுரியிலும் ஏராளமான அழகிகள் இருப்பார்கள். மன்மதன்போல் அவன் சந்தோஷமாகத்தான் இருப்பான். இங்கே, நாங்கள்தான் அவனை நினைத்தே உருகிக் கொண்டிருக்கிறோம். தனது தாய், தந்தையருக்கு உங்களிடம் தகவல் சொல்லி அனுப்பியவன் எங்களை எங்கே நினைக்கப் போகிறான்? நிச்சயம் அவன், எங்களை மறந்தே போயிருப்பான்!' என்று புலம்பினார்கள்.

உத்தவர் பிரமித்துப்போனார். கண்ணன்மேல் கொண்ட காதலால், வெட்கத்தைவிட்டுப் புலம்பி, அவனை உரிமையுடன் கடிந்துகொள்ளும் கோபியர்களின் இணையில்லாத அன்பு அவரை நெக்குருக வைத்தது.

அதை மனம் திறந்து அவர்களிடம் சொல்லவும் செய்தார்:

'கோபியர்களே! நீங்கள் கண்ணன்மேல் கொண்டுள்ள எல்லையில்லாக் காதல் என்னை மலைக்கவைக்கிறது. கிருஷ்ணனிடம் மனம் பறிகொடுத்து, அவனால் ஆண்டு கொள்ளப்பட்ட உங்களுக்கு உலகில் அடையவேண்டியது ஏதுமில்லை! பிறவியின் பயனை முழுதும் அடைந்தவர்களே! நான் உங்களை வணங்குகிறேன். எத்தகைய அன்பை பகவான் விரும்புவானோ, அந்த அன்பின் வடிவம் நீங்கள்!' என்று நெகிழ்ச்சியுடன் சொன்னவர், கண்ணன் அவர்களுக்குச் சொல்லியனுப்பியதையும் தெரிவித்தார்:

'கோபியர்களே! நான் ஒருபோதும் உங்களைவிட்டுப் பிரிந்திருப்பதில்லை. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் காற்றுபோல, நானும் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறேன். என்னை நினைத்து, என்னிடம் உங்கள் மனத்தை நிலை நிறுத்தவேண்டும் என்பதற்காகவே நான் உங்களை விட்டு விலகி நிற்கிறேன். நான் உங்கள் அருகில் இருப்பதை விட, வெகுதூரத்தில் இருக்கும்போதுதான் என் நினைவு உங்களிடத்தில் பசுமையாக நிலைத்திருக்கும்!'

கண்ணனின் இந்த வார்த்தைகளால், கோபியர்கள் சிறிதளவு மனச்சாந்தி அடைந்தனர். உத்தவரிடம், கண்ணனின் லீலா வினோதங்களைச் சொல்வதிலேயே ஆத்ம திருப்தி கொண்டனர். சில நாள்கள் உத்தவர், கோபியர்களின் மன ஆறுதலுக்காக அவர்களுடன் தங்கியிருந்துவிட்டு மதுராபுரி திரும்பினார். கண்ணனிடம், கோபியர்களின் நிகரற்ற பக்தியைப் பாராட்டி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கினார்.

உத்தவர் சென்ற பிருந்தாவனம் பக்திப்பாவத்தால் திகழ்ந்தது என்றால், அக்ரூரர் சென்றிருந்த அஸ்தினாபுரத்திலோ விரோத பாவம் குடிகொண்டிருந்தது.

துரியோதனன் தலைமையிலான கௌரவர்கள், பாண்டவர்களை வெறுத்து, அவர்களுக்குப் பலவிதங்களிலும்

தீங்கிழைத்துக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டிக்க வேண்டிய அஸ்தினாபுர மன்னன் திருதராஷ்டிரனோ, துரியோதனன் மேல் கொண்ட பாசத்தால் வாய்மூடிக் கிடந்தான்.

குந்தி அனைத்தையும் அக்ரூரரிடம் சொல்லிப் புலம்பி, அக்ரூரரே! நான் நம்பியிருப்பது, எனது சகோதரனான வசுதேவரின் பிள்ளைகளைத்தான்! கிருஷ்ணனும் பலராமனும் அவதரித்திருப்பது தீயோரை அழித்து நல்லவர்களைக் காப்பதற்கே! அவர்கள்தான் இங்கு வந்து எங்களின் துன்பங்களைப் போக்கவேண்டும்!' என்று சொல்லி அனுப்பினாள்.

அக்ரூரர் மதுரா திரும்பி, குந்தி தெரிவித்த தகவலையும் அஸ்தினாபுரத்தில் தான் பார்த்த நிலையையும் கண்ணனிடம் தெரிவித்தார்.

கண்ணன் அஸ்தினாபுரம் செல்லலாம் என்று தீர்மானித்த போது, அவனை குறுக்கே வந்து வழிமறித்தது ஒரு பெரும் போர்!

***



11

ஜராசந்தனின் தொடர் போர்!

மகதநாட்டு மன்னன் ஜராசந்தன், கோபத்தின் உச்சத்தில் கொந்தளித்தான்.

அவனுடைய இரண்டு மகள்களான அஸ்தியும் பிராப்தியும் கண்ணெதிரே விதவைக் கோலத்தில் நின்ற காட்சி, மனத்தை அறுத்து வதைத்தது!

மதுராபுரி மன்னன் கம்சனுக்குத்தான், தனது இரண்டு மகள்களையும் திருமணம் செய்து தந்திருந்தான் ஜராசந்தன். கண்ணன் கம்சனைக் கொன்றதால், துயரமும் வேதனையும் கண்ணீருமாக நிற்கும் மகள்களின் அவலம், அவனை கோபம் கொள்ள வைத்தது.

கேவலம்! இரண்டு இடைச்சிறுவர்கள் என் மாப்பிள்ளையைக் கொன்றார்களா? மாடு

மேய்ப்பவர்கள், என் மகள்களின் தாலியை அறுபட வைத் தார்களா? விடமாட்டேன்! பழிக்குப் பழி வாங்கியே தீரு வேன்! அந்த இரண்டு சிறுவர்களையும் என் கைகளாலேயே கொன்று, அவன் பிறந்த யாதவ குலத்தையே அடியோடு அழித்துவிடுகிறேன்!' என்று கர்ஜித்தான்.

பெரும்படையுடன் புறப்பட்டு வந்து மதுராபுரியை முற்றுகை யிட்டான்.

ஜராசந்தனின் லட்சக்கணக்கான வீரர்களைக் கொண்ட படையைப் பார்த்ததுமே, கிருஷ்ணன் மனத்துக்குள் உற்சாக மானான். அவதார நோக்கத்துக்கு காலம் வந்துவிட்டது என்று மகிழ்ந்தான். பலராமனிடம் சொன்னான்:

'அண்ணா! உங்களின் வீரத்துக்கு பெரும் தீனியுடன் வந்திருக் கிறான் ஜராசந்தன். இந்த மதுராபுரி நகரையும் குடிமக்களையும் காக்கும் பொறுப்பு, இனி தங்களுடையதே!' என்றான்.

'ஜராசந்தனையும் அவனுடைய படைகளையும் அப்பளமாக நொறுக்கிவிடுகிறேன் கிருஷ்ணா!' என்று சொல்லியபடி தேர் ஏறினான் பலராமன். அவனுடன் கிருஷ்ணனும் புறப்பட, மதுராபுரிப் படைகள் ஜராசந்தனின் படைமீது சீறிப் பாய்ந்தன.

ஜராசந்தனின் மிகப்பெரிய படைபலம், பலராம, கிருஷ்ண னின் சிறிய படையால் துவம்சம் செய்யப்பட்டது! பலராம, கிருஷ்ணன் தந்த உற்சாகத்தால் மதுராபுரி வீரர்கள் ஒவ்வொருவரும், பத்து வீரர்களுக்குச் சமமாகப் போரிட்டனர்.

பலராமனின் தாக்குதலால் ஜராசந்தன் வில் முறிக்கப்பட்டு, வாள் உடைபட்டு தேரை இழந்து தரையில் நின்றான். பலராமன் அவனை வருண பாசத்தால் கட்டிப்போட்டான். பின், கிருஷ்ணன் பலராமனிடம் சொல்லி அவனை விடு வித்தான்.

அவமானப்பட்டு தலைகுனிந்து நாடு திரும்பினான் ஜராசந்தன். அவன் மனத்தில், வன்மம் மேலும் அதிகமானது.

எதிரியான ஜராசந்தனை அழிக்காமல், கிருஷ்ணன் ஏன் அவனை விடுவிக்கச்சொன்னான் என்று பலராமனுக்குப் புரியவில்லை. கிருஷ்ணன் விளக்கினான்:

'அண்ணா! ஜராசந்தனைக் கொல்வதைவிட, அவனுடைய சேனைகளை அழிப்பதுதான் நம் அவதார நோக்கத்துக்கு பலம் சேர்க்கும். ஜராசந்தனை உயிரோடு விட்டால்தான், அவன் மீண்டும் மீண்டும் படைகளைத் திரட்டிக்கொண்டு வருவான். நமக்கும் பூபாரத்தைக் குறைப்பது சுலபமாக இருக்கும்!' என்று சிரித்தான்.

கிருஷ்ணன் எதிர்பார்த்தபடியே, மறுபடியும் படை திரட்டிக் கொண்டு வந்தான் ஜராசந்தன். அம்முறையும் படைகளை முழுவதும் அழித்து, ஜராசந்தனை விரட்டினார்கள் பலராம கிருஷ்ணர்கள். அப்போதும் ஜராசந்தன் அடங்கவில்லை. சிலநாள்களிலேயே மறுபடியும் போருக்கு வந்தான். மீண்டும் தோற்கடிக்கப்பட்டான். ஒருமுறை, இருமுறை அல்ல! இது போலவே பதினேழு முறை போர் நடத்தி தோற்றான் ஜரா சந்தன்.

ஆனாலும் மனம் சலிக்காமல், பதினெட்டாவது முறையாக வும் படை திரட்டினான். மதுராபுரியை, தாக்கப் புறப்பட்டான்.

அதேசமயத்தில், மதுராபுரியை நோக்கி மற்றொரு ஆபத்தை யும் அனுப்பியிருந்தார் நாரதர்!

அந்த ஆபத்தின் பெயர் காலயவனன்!

காலயவனன் ஒரு முரட்டு அரசன். கொடூர புத்தி கொண்ட வன்! மிகப்பெரிய படைபலம் கொண்டவன்! உலகையே தன் காலடியின்கீழ் கொண்டுவரும் பேராசை மிக்கவன்!

கோடிக்கணக்கான வீரர்களைக் கொண்ட தன்னுடைய படை பலத்தால், கண்ணில்படும் ராஜ்ஜியங்களை எல்லாம் தாக்கி அடிமைப்படுத்தினான். அந்த தேசத்து குடிமக்களைக்

கொடுமைப்படுத்தி, கொள்ளையடித்தான். நகரங்களை தீவைத்துக் கொளுத்தினான்.

அவனை எதிர்கொள்ளமுடியாமல் மன்னர்கள் பலரும் தோற்றுப்போய் தலைவணங்கினார்கள். மற்றும் பலர் சமாதானம் செய்துகொண்டார்கள். இதனாலேயே காலயவனன் ஆணவம் கொண்டவனானான். பலத்திலும் வீரத்திலும் வல்லவனான தன்னை, வீழ்த்த யாருமே இல்லை என்று மார்தட்டினான்.

'இது பகவானின் கையில் சிக்கவேண்டிய பூச்சி' என்று எண்ணினார் நாரதர்.

'காலயவனா! நீ மாபெரும் வீரன்தான். ஆனாலும், மதுராபுரியில் யாரோ கிருஷ்ணனாம்! பெரும் பலசாலிகளான மல்லர்களையும், ஏன், யானையையும்கூட கைகளாலேயே குத்திக் கொன்றவனாம்! அவனை யாராலும் வெல்ல முடியாது என்று சொல்கிறார்கள். காலயவனன் வந்தாலும் அவனிடம் தோற்றுப்போவான் என்று பேசிக்கொள்கிறார்கள்!' என்று காலயவனனைத் தூண்டிவிட்டார்.

அவர் செலுத்திய பாணம் சரியாக சென்று தாக்கியது.

'நாரதரே, தகவலுக்கு நன்றி! அந்தக் கிருஷ்ணனை வெற்றி கொண்ட பிறகு உமக்குச் சொல்லியனுப்புகிறேன்!' என்று சொன்ன காலயவனன், அப்போதே படையுடன் மதுராபுரி நோக்கி புறப்பட்டு விட்டான்.

பலராமன், கிருஷ்ணனிடம் கவலையுடன் கேட்டான்:

'கிருஷ்ணா! ஒருபக்கம் ஜராசந்தன், இன்னொருபுறம் காலயவனன். இருவருக்கும் இடையில் மதுராபுரி மத்தளம் போல் மாட்டிக்கொண்டுவிட்டதே! என்ன செய்யலாம்?'

முன்பே இதைப்பற்றி யோசித்திருந்த கிருஷ்ணன், 'அண்ணா, இது மிகவும் சிக்கலான சூழ்நிலைதான்! இரண்டு பக்கமும் தாக்கப்படுமானால் மதுராபுரி அழிந்துபோவது உறுதி. மதுராபுரி மக்களை ஆபத்திலிருந்து காக்க வேண்டுமானால், அவர்களை உடனடியாக இங்கிருந்து வெளியேற்றி வேறெங்காவது குடியேற்ற வேண்டும்!' என்றான்.

'எங்கே கொண்டு செல்வது?'

'கடலுக்கு நடுவே புதிதாக ஒரு நகரை உருவாக்கலாம். மதுராபுரி மக்களை எல்லாம் அங்கு கொண்டுசெல்லலாம். பின், நாம் திரும்பி வந்து எதிரிகளைப் பார்த்துக்கொள்ளலாம்!'

கிருஷ்ணனின் யோசனை பலராமனுக்கும் பிடித்திருந்தது. உடனே தேவ சிற்பியான விசுவகர்மாவைக் கொண்டு, கடல் நடுவே ஒரு நகரத்தை சிருஷ்டித்தான் கண்ணன். தன்னுடைய மாயாசக்தியால் மதுராபுரி மக்கள் அனைவரையும் அந்த நகரத்துக்குக் கொண்டுசென்றான். நகரத்துக்கு துவாரகை என்று பெயர் சூட்டினான்.

பின், துவாரகையைக் காக்கும் பொறுப்பை பலராமனிடம் ஒப்படைத்துவிட்டு, மதுராபுரிக்கு வந்தான். காலயவனன் முற்றுகையிட்டிருந்த வடக்கு வாசலைத் திறந்துகொண்டு நிராயுதபாணியாக வெளிப்பட்டான்.

காலயவனன், அவனை ஆச்சரியமாகப் பார்த்தான். 'ஓ! இவன்தான் கிருஷ்ணனா? ஏன், ஆயுதங்கள் இல்லாமல் வருகிறான்? நேருக்கு நேர் மோதும் எண்ணமோ! அப்படியானால், நானும் ஆயுதம் ஏந்தாமலே இவனுடன் போர் செய்வேன்!' என்று எண்ணியபடி, தானும் தேரிலிருந்து இறங்கி கிருஷ்ணனை எதிர்நோக்கி வந்தான்.

'கிருஷ்ணன் முதலில் தாக்குவானா? அல்லது அவனை தான் தாக்குவதா?' என்று யோசித்தபடி நடந்த காலயவனன், ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தான்!

காலயவனன் கொஞ்சமும் எதிர்பாராதபடி, ஓடத் தொடங்கினான் கிருஷ்ணன். எதிர்பாராத ஏமாற்றத்தால் கோபம்

கொண்ட காலயவனன், கிருஷ்ணனைப் பின் தொடர்ந்து துரத்தினான். வெகுதூரம் ஓடிக்கொண்டேயிருந்த கிருஷ்ணன், ஒரு மலையின்மீது ஏறி அங்கிருந்த குகைக்குள் சென்று மறைந்தான்.

'இனி, இந்தக் கோழை என்னிடமிருந்து தப்ப முடியாது. குகைக்குள் வைத்தே அவனைக் கொன்றுவிடுகிறேன்' என்று கொதித்தபடி, காலயவனனும் பின் தொடர்ந்து குகைக்குள் சென்றான். உள்ளே இருள் மண்டிக்கிடந்தது. தட்டுத் தடுமாறி நடந்தான். கண்கள் இருட்டுக்குப் பழகிய பின், சற்று தூரத்தில் யாரோ கீழே படுத்துக்கிடப்பது தெரிந்தது. அதைப் பார்த்ததுமே கோபம் மனத்துக்குள் சூறாவளியாகச் சுழன்றது.

'மாபெரும் வீரனான தன்னை இத்தனை தூரம் மூச்சிரைக்க ஓடவிட்டு, இங்கு வந்து நிம்மதியாகப் படுத்துக்கொண்டானே' என்கிற சினத்துடன், ஓங்கி ஓர் உதை விட்டான். படுத்திருந்தவன் உறக்கம் கலைந்து கண் விழித்தான். எதிரே நின்றிருந்த காலயவனனைப் பார்த்தான். அவ்வளவுதான்! எரிந்து சாம்பலானான் காலயவனன்!

காலயவனனை, எரித்துச் சாம்பலாக்கியவன் முசுகுந்தன்!

இஷ்வாகு குலத்தில் தோன்றிய முசுகுந்தன், முன்பொரு சமயம், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் தேவர்களின் சார்பாகப் போரிட்டவன். முருகப்பெருமான் சேனாதிபதியானதும் முசுகுந்தன் பூமிக்குத் திரும்பிவிட்டான். ஆனால், பூமியில் இதற்குள் பல தலைமுறைகள் கடந்திருந்தன. அவனுடன் வாழ்ந்தவர்கள் யாரும் இப்போது இல்லை.

பல வருட காலங்கள் உறங்காமல் போரிட்டதால், யுத்தம் செய்து களைத்திருந்த முசுகுந்தன் யாருடைய தொந்தரவும் இல்லாமல் உறங்கவேண்டும் என்று விரும்பினான். அதன்படியே தேவர்கள் இந்தக் குகையைக் காண்பித்து, 'இங்கு அவன் ஆயிரம் ஆண்டுகள் தூங்கலாம் என்றும், அவனை யார் தூக்கத்திலிருந்து எழுப்புகிறார்களோ அவர்கள் முசுகுந்தனின் அக்னிப் பார்வையில் பொசுங்கிப் போவார்கள்' என்றும் வரம் அளித்துவிட்டுச் சென்றார்கள்.

காலயவனன், முசுகுந்தனை கிருஷ்ணன் என்று நினைத்து காலால் உதைத்து பொசுங்கிப் போனான். காலயவனன் அழிந்ததும் வெளிப்பட்ட கிருஷ்ணன், முசுகுந்தனுக்கு பரமாத்மாவாக தரிசனம் தந்தான். 'பக்தியில் சிறந்தவரான நீர், உரிய காலத்தில் எம்மை வந்தடைவீர்!' என்று ஆசீர்வதித்தான்.

முசுகுந்தன் அங்கிருந்து புறப்பட்டு பதரிகாசிரமம் சென்று, நாராயணனை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினான்.

கிருஷ்ணன் மீண்டும் மதுராபுரிக்குத் திரும்பினான். பலராமனும் அவனுமாகச் சேர்ந்து காலயவனனின் கோடிக் கணக்கான வீரர்களையும் போரிட்டுக் கொன்றனர்.

அப்போது ஜராசந்தன் பதினெட்டாம் முறையாக, தன் படைகளுடன் வந்து பலராம கிருஷ்ணனின் முன் நின்றான். பலராமனும் கிருஷ்ணனும் ஜராசந்தனின் படையுடன் போரிட்டு, எதிர்க்க முடியாமல் பயந்தவர்கள் போல் பின் வாங்கி ஓடினார்கள்.

ஜராசந்தன் வெற்றிப்பெருமிதத்துடன் அவர்களைத் துரத்த, இருவரும் ப்ரவர்ஷணம் என்கிற மலையின்மீது ஏறி ஒளிந்து கொண்டார்கள். ராம-கிருஷ்ணர்களைக் கண்டுபிடிக்க முடியாத ஜராசந்தன், அந்த மலையைச் சுற்றிலும் கட்டைகளை அடுக்கி தீயை மூட்டினான். அந்தத் தீயில் ராம, கிருஷ்ணர்கள் அழிந்திருப்பார்கள் என்கிற எண்ணத்துடன் வெற்றிப்பெருமிதத்தோடு நாடு திரும்பினான்.

ஆனால், பலராமனும் கிருஷ்ணனும் மலையிலிருந்து கீழே குதித்து பத்திரமாக துவாரகை சென்று சேர்ந்துவிட்டதை அவன் அப்போது அறியவில்லை.

***

கண்ணனுக்கு வந்த காதல் கடிதம்!

***து**வாரகையில், கண்ணனைத் தேடிவந்தது ஒரு காதல் கடிதம்!*

அதை அனுப்பியிருந்தவள் விதர்ப்ப நாட்டு மன்னனின் ஒரே மகளான ருக்மிணி!

மகாலட்சுமியின் அவதாரமாக பூவுலகில் பிறந்திருந்த ருக்மிணி, கண்ணனைப்பற்றி கேள்விப்பட்ட நாளில் இருந்தே அவன்மீது காதலாகித் தவித்தாள்.

விதர்ப்ப நாட்டு சபைக்கு வரும் பெரியோர்கள் கிருஷ்ணனைப்பற்றிப் புகழ்ந்து அவனுடைய சிறப்புகளைப்பற்றி விவரிக்கும்போது மெய் மறந்து கேட்டுக்கொண்டிருப்பாள்! தனது குல தெய்வமான கௌரியிடம் அவள் வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். 'தாயே! தயாபரி! பிரபு கிருஷ்ணனையே எனக்குக் கணவனாக மணம் முடித்து வை!'

ருக்மிணியின் இந்த விருப்பத்தைக் கேள்விப்பட்டபோது, தந்தை பீஷ்மகனும் தாயும்கூட ஏற்றுக்கொண்டுவிட்டனர். அவளின் ஐந்து அண்ணன்களான ருக்மி, ருக்மரதன், ருக்மபாகு, ருக்மகேசன், ருக்மமாலி என்பவர்களுள் ருக்மியைத் தவிர மற்ற நான்கு அண்ணன்களும்கூட, அவள் கிருஷ்ணனை மணப்பதற்கு மறுப்பு சொல்லவில்லை. ஆனால், மூத்தவனான ருக்மி மட்டும் ருக்மிணியின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

அரச மகளான தன் சகோதரி, மாடு மேய்க்கும் குலத்தில் பிறந்தவனை மணப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அது மட்டும் காரணமல்ல! கிருஷ்ணனை எதிரியாகக் கருதிய தனது நண்பன் சிசுபாலனுக்கே ருக்மிணியை மணமுடிக்க ஆசைப் பட்டான். ஆசைப்பட்டதுடன் நிற்காமல், சிசுபாலனுக்கு ருக்மிணியை நிச்சயம் செய்தும் முடித்து விட்டான். எவராலும் அவன் முடிவை மீற முடியவில்லை.

ருக்மிணி கலங்கிப்போனாள். மனத்துக்குப் பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பவும், இதயத்துக்குப் பிடித்தவனை மணக்கவும் என்ன வழி என்று யோசித்தாள். தனக்கு நம்பிக்கையான ஓர் அந்தணரிடம், கிருஷ்ணன் மீதான தன் காதலைத் தெரிவித்து, இதை கிருஷ்ணனிடம் சென்று தெரிவிக்குமாறும், அவரை விரைந்து நடவடிக்கை எடுக்கச் சொல்லும்படியும் வேண்டினாள்.

அந்த அந்தணர்தான் துவாரகைக்கு வந்து கிருஷ்ணன்முன் நின்றிருந்தார். ருக்மிணி, கிருஷ்ணனிடம் சொல்லும்படியாகத் தெரிவித்திருந்த காதலை, அவளின் வார்த்தைகளாகவே சொல்லத் தொடங்கினார்:

'புவனசுந்தரா!

மற்றவர்களின் புகழ்மொழியால் உன் குணாதிசயங்களைக் காதால் கேட்டே, மனத்தவிப்பைப் போக்கிக்கொண்டவள் நான். உன் திருவுருவத்தை தரிசிப்பதற்கென்றே கண்களைப்

பெற்ற பாக்கியசாலி நான்! நாணம் கடந்து உன்னையே நாடி நிற்கிறது என் மனம்.

நல்லகுலத்தில் உதித்து, நற்குணங்களில் சிறந்து விளங்குகிற எந்த இளம்பெண்தான் உன்னை விரும்பாதிருக்க முடியும்?

மனத்துக்கு இதமானவரே! நீங்களே என் கணவர் என்று இதயத்தில் எழுதிவிட்டேன். என்னை ஆட்கொண்டவரே! என் உயிர் தங்களுக்கே அர்ப்பணம். எனவே, உமக்கு உரியவளான என்னை நீங்கள் மனைவியாக ஏற்றுக்கொண்டு அருள்புரிய வேண்டும். சிங்கத்தின் இரையை நரி கவர்ந்து செல்வதுபோல, உமக்கே உரியவளான என்னை வேறு எவரும் தீண்டக் கூடாது.

நான் விரதங்கள் இருந்து, நாராயணனை பக்தியுடன் பூஜித்து அவனை மகிழச்செய்தது உண்மையானால், கிருஷ்ணனே வந்தென்னை மாலையிடட்டும். நாளை எனக்குக் கல்யாணம் என்று நிச்சயித்திருக்கிறார்கள். நீ சேனையுடன் வந்து எதிரிகளைச் சிதறடித்து, என்னை ராட்சஸ முறைப்படி கவர்ந்துசென்று மணந்துகொள்வாயாக!

இதைச் சாதிக்க ஒரு வழி இருக்கிறது. கல்யாணத்துக்கு முன்தினம் எங்களுடைய குலதெய்வமான பார்வதியைப் பூஜிக்க, மணமகளை எல்லையில் இருக்கும் கோயிலுக்கு அழைத்துச்செல்வது சம்பிரதாயம். அந்தச் சமயத்தில் நீங்கள் வந்து என்னைத் தூக்கிச் செல்லலாம்.

தாமரைக் கண்ணா! இது மட்டும் நடக்காமல் போய் தங்களுடைய திருவருளை நான் அடையாமல் போனால், நிச்சயம் நான் உயிர் துறப்பது உறுதி. இனி, எத்தனை பிறவிகள் எடுப்பதானாலும் உங்களுக்காகவே காத்திருப்பேன்!'

ருக்மிணியின் கடிதத்தில் வெளிப்பட்ட அவளின் இதயம் தோய்ந்த அன்பை உணர்ந்துகொண்டான் கிருஷ்ணன். அந்தணரை அழைத்துக்கொண்டு உடனே புறப்பட்டான்.

ருக்மிணியை கிருஷ்ணன் திருமணம் செய்துகொள்ள அவனுக்கு எந்தத் தடையுமில்லை. அண்ணன் பலராமனுக்கும் திருமணமாகிவிட்டது. ஆனர்த்தம் தேசத்து அரசனான ரைவதனின் மகள் ரேவதியை மணந்துகொண்டிருந்தான் பலராமன். அடுத்து கண்ணனின் கல்யாணம்தான் என்று பேசிக்கொண்டிருந்தபோது சரியான தருணத்தில் வந்து விட்டது ருக்மிணியின் கடிதம்.

கிருஷ்ணன், அந்தணருடன் ஒரே இரவில் விதர்ப்ப தேசத்தின் குண்டினபுரத்துக்கு வந்து சேர்ந்துவிட்டான். குண்டின புரத்தில்தான் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

ருக்மிணி, மாளிகையில் தவித்துக்கொண்டிருந்தாள். அவள் கோயிலுக்குப் போகும் நேரம் வந்துவிட்டது. ஆனால் இன்னும் கிருஷ்ணரிடம் அனுப்பிய அந்தணர் வந்து சேரவில்லையே என்று துடித்துக்கொண்டிருந்த நேரத்தில், மனக்கலக்கத்தை தீர்க்க வந்துவிட்டார் அந்தணர்.

'அம்மா! உன்னை ஏற்றுக்கொண்டு அழைத்துப்போக கிருஷ்ணப் பிரபு வந்துவிட்டார்!' என்று அவளின் காதருகில் ரகசியமாகக் கூறினார்.

ருக்மிணி, உள்ளம் குளிர்ந்தாள். நல்ல செய்தியைக் கொண்டு வந்த அந்தணருக்கு என்ன வெகுமதி கொடுப்பது என்று ஒன்றும் தோன்றவில்லை. சட்டென்று அவரை விழுந்து வணங்கினாள்.

செல்வங்களுக்கு அதிபதியான மகாலக்ஷ்மியின் அருளை வேண்டி மூவுலகத்தினரும் வணங்கி நிற்க, அந்த மகாலக்ஷ்மியே அந்தணனை வணங்கினாள் என்றால், அதைவிட உயர்ந்த வெகுமதி என்னதான் இருக்கிறது!

ருக்மிணி மிகுந்த சந்தோஷத்துடன் பார்வதி தேவி கோயிலுக்குச் சென்று தேவியை வணங்கினாள். தைரியத்துடன் வெளியே வந்தாள். அங்கே தயாராக ரதத்தில்

காத்திருந்தான் கண்ணன். ருக்மிணியின் கரத்தைப் பற்றி, தனது ரதத்தில் ஏற்றிக்கொண்டான். துவாரகை நோக்கி புறப்பட்டான்.

தோழிகள் பதறி ஓடிப்போய், இந்தத் தகவலை அரண் மனையில் தெரிவித்தார்கள்.

கண்ணன், ருக்மிணியைத் தூக்கிச்செல்வதை அறிந்த சிசுபாலன் ஆத்திரம் கொண்டான். அவனும் ருக்மணியின் அண்ணன் ருக்மியும் இன்னும் அவர்களைச் சார்ந்த மற்ற மன்னர்களும் கிருஷ்ணனைப் பின் தொடர்ந்து துரத்தினார்கள்.

இந்தச் சமயத்தில் கிருஷ்ணன் விதர்ப்ப தேசத்துக்கு தனியே சென்றிருக்கிறான் என்று அறிந்த பலராமன், ஆபத்தை எதிர்பார்த்து தனது சேனையுடன் விரைந்து வந்துகொண் டிருந்தான். எதிரே ருக்மிணியுடன் தேரில் வரும் கிருஷ்ண னையும், பின் தொடர்ந்து துரத்தி வரும் பகைவர்களையும் பார்த்தான் பலராமன்.

அந்த நடுவழியிலேயே இருதரப்பினருக்கும் யுத்தம் மூண்டது. கிருஷ்ணனும் பலராமனும் சிசுபாலன் முதலான அரசர்களைத் தோற்கடித்து, பகைவர்களை துரத்தியடித்தனர். ஆனால் ருக்மிணியின் அண்ணன் ருக்மியோவிடாமல் மேலும் மேலும் பின்தொடர்ந்து சண்டையிட்டான். முடிவில் கண்ணன், ருக்மியின் தேரோட்டியையும் தேர்க்குதிரைகளையும் கொன்று, ருக்மியின் ரதத்தையும் உடைத்து நொறுக்கினான். பின் அவன் ருக்மியை வாளால் வெட்டப் போக, ருக்மிணி அண்ணனைக் கொல்ல வேண்டாம்!' என்று கேட்டுக் கொண்டதால், ருக்மியின் தலைமுடியையும் மீசையையும் சிதைத்து அவனை விகாரப்படுத்தி விரட்டினான்.

அவமானமடைந்த ருக்மி, அதன்பிறகு விதர்ப்ப தேசம் செல்லாமல் அங்கேயே 'போஜகடகம்' என்ற நகரை நிர்மாணித்து தங்கிவிட்டான்.

கிருஷ்ணனுக்கும் ருக்மிணிக்கும், துவாரகையில் திருவிழாக் கோலத்துடன் திருமணம் நடந்தது.

கிருஷ்ணனின் இந்தத் திருமணக்கோலம் ருக்மிணியுடன் நின்றுவிடவில்லை. தொடர்ந்து பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு பெண்கள் அவனுக்கு மனைவியானார்கள்.

இதில் கரடிராஜனான ஜாம்பவானின் மகளை மணந்தது ஒரு சுவாரஸ்யமான சம்பவம்.

ஒருமுறை, கண்ணனின்மேல் விபரீதமான பழி ஏற்பட்டது!

சத்ராஜித் என்பவன் சூரிய பகவானை வழிபடும் சிறந்த பக்தன். அவனுடைய ஈடுஇணையில்லாத பக்தியைக் கண்டு மகிழ்ந்த சூரியன் 'சியமந்தகம்' என்கிற அற்புதமான ரத்தி னத்தை, அவனுக்கு பரிசாகக் கொடுத்தான்.

சியமந்தக மணியின் சக்தி அலாதியானது. அது இருக்கும் இடத்தில் செல்வத்துக்குப் பஞ்சம் இருக்காது. வியாதிகளோ அகால மரணமோ ஏற்படாது. தீயசக்திகள் எதுவும் நெருங்க முடியாது. எப்போதும் சுபிட்சமே நிலவும்!

இத்தகைய மகிமை வாய்ந்த மணி, ஒரு தேசத்தின் அரசனிடம் இருப்பதைவிட தேசத்தின் அரசனிடம் இருந்தால் அந்தத் தேசமே சுபிட்சமாக இருக்கும் என்று நினைத்தான் கிருஷ்ணன். உக்ரசேன மன்னனுக்கு அதைத் தரும்படி சத்ராஜித்திடம் கூறினான்.

சத்ராஜித், கிருஷ்ணன் கூறியதை தவறாகப் புரிந்து கொண் டான். தன்னிடம் அந்த சியமந்தக மணி இருப்பது பொறுக் காமல், பொறாமையினால்தான் கிருஷ்ணன் இப்படிச் சொல்கிறான் என்று நினைத்து அதைத்தர மறுத்துவிட்டான். கண்ணனும் அதற்குமேல் அவனை வற்புறுத்தவில்லை.

ஆனால், விதி விளையாடியது!

ஒருநாள், சத்ராஜித்தின் தம்பி பிரசேனன் என்பவன் அந்தச் சியமந்தக மணியை கழுத்தில் அணிந்து கொண்டு, காட்டுக்கு

வேட்டையாடச் சென்றான். கொடிய மனம் கொண்ட அவன், தேவையில்லாமல் விலங்குகளின் குட்டிகளையெல்லாம் கொன்றபடியே சென்றான். கோபம் கொண்ட ஒரு தாய் சிங்கம், அவன்மேல் பாய்ந்து கடித்துக் கொன்றுவிட்டது. அகாலமரணமே நேராது என்று சொல்லப்பட்ட சியமந்தக மணி, பிரசேனனைப் பொறுத்தவரை அவன் செய்த பாவத்தால் அந்தச் சமயத்தில் சக்தி இழந்து போனது. சிங்கம் அந்த மணியை எடுத்துக்கொண்டு போனது. அப்போது அந்த வழியே வந்த கரடிராஜனான ஜாம்பவான், சிங்கத்தின் வாயில் ஜொலிக்கும் மணியைக் கண்டான். தன் பிள்ளைக்கு விளையாட்டுப்பொருளாக இருக்கட்டும் என்று எண்ணி, சிங்கத்தைக் கொன்று மணியைப் பறித்துக்கொண்டு தனது குகைக்குச் சென்றுவிட்டான்.

வேட்டைக்குப் போன தன் தம்பி வெகுநாள்களாகியும் திரும்பி வராததைக் கண்ட சத்ராஜித், கிருஷ்ணனின்மேல் சந்தேகம் அடைந்தான். அவன்தான் தன் தம்பியைக் கொன்று சியமந்தக மணியைப் பறித்திருப்பான் என்று, கண்ணனின் மேல் அநியாயமாகப் பழி சுமத்தினான். எல்லோரிடமும் அப்படியே சொல்லிப் புலம்பினான்.

கண்ணன் இதைக் கேள்விப்பட்டு மனம் வருந்தினான். தன் மீது சுமத்தப்பட்ட வீண்பழியைப் போக்கிக்கொள்வதற்காக, நகரத்தின் முக்கியப் பிரமுகர்கள் சிலரை அழைத்துக்கொண்டு பிரசேனனைத் தேடி புறப்பட்டான்.

காட்டுக்குள் சென்றவன், அங்கே இறந்துகிடந்த பிரசேதனனையும் அங்கிருந்து சற்றுத் தொலைவில் செத்துக்கிடந்த சிங்கத்தையும் கண்டான். பிரமுகர்கள் பிரசேதனன் சிங்கத்தால் அடிபட்டுச் செத்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டார்கள். ஆனால், சியமந்தக மணியைக் காணவில்லை.

அந்த மணியைத் தேடியலைந்தவர்கள், பெரிய குகை ஒன்றைக் கண்டார்கள். அது ஜாம்பவானின் குகைதான்!

மற்றவர்களை வெளியே நிறுத்திவிட்டு, கண்ணன் மட்டும் குகைக்குள் சென்றான். அங்கே சிறுகுழந்தையொன்று, சியமந்தக மணியை கையில் வைத்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். கண்ணன் சிறுவனை நெருங்கினான்.

அப்போது உள்ளிருந்து வெளியே வந்த பணிப்பெண், புதிய மனிதனைக் கண்டதால் வீறிட்டு அலறினாள். அலறல் சப்தம் கேட்டு ஓடி வந்தான் ஜாம்பவான்! குழந்தையின் பக்கத்தில் கண்ணனைக் கண்டதும் கோபத்துடன் அவன் பாய்ந்து அறைந்தான். கண்ணன் அதைத் தடுத்து ஜாம்பவானைத் தாக்கினான். இருவருக்கும் மத்தியில் நீண்டநேரம் தொடர்ந்து சண்டை நடந்தது. பலவானான ஜாம்பவான் சோர்வடைந்தான். 'எளிதில் வெல்ல முடியாதவனான தன்னை, இத்தனை தூரம் எதிர்ப்பவர் யாராக இருக்கக்கூடும்?' என்று உள்ளுணர்வால் யோசித்தபோது, கண்ணன் யாரென்பது அவனுக்குப் புரிந்துபோனது.

'ராமா! எனது இதயத்துக்குள் வாழ்பவரே! நீங்களா இது?' என்று மகிழ்ந்துபோனான்.

தன்னை யாரென்று அறிந்துகொண்ட ஜாம்பவானை, அன்புடன் தழுவிக்கொண்டான் கண்ணன்.

பின், 'கரடி ராஜனே! இந்தச் சியமந்தக மணியினால், என்மீது வீணான பழி ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்கிக் கொள்வதற்காகவே இங்கே வந்தேன்!' என்றான் கிருஷ்ணன்.

ஜாம்பவான், அந்தச் சியமந்தக மணியை சந்தோஷத்துடன் கிருஷ்ணனிடம் கொடுத்தான். கூடவே, தன் மகளான ஜாம்பவதியையும் அவனுக்கு மணமகளாக அளித்து மகிழ்ந்தான்.

கிருஷ்ணன், ஜாம்பவதியுடனும் மற்ற பிரமுகர்களுடனும் நகரத்துக்கு வந்தான். சத்ராஜித்திடம் எல்லோர் முன்னிலையிலும் சியமந்தக மணியை ஒப்படைத்தான். அது கிடைத்த

விவரத்தையும் சொன்னான். ஜாம்பவதியை மணம் செய்து கொண்டான்.

சத்ராஜித் மனம் வருந்தினான். 'நிரபராதியான கிருஷ்ணனின் மேல் சந்தேகப்பட்டு அநியாயமாக அவனை அபவாதத்துக்கு உள்ளாக்கிவிட்டேனே' என்கிற குற்ற உணர்ச்சியினால் வதைபட்டான். பிராயச்சித்தம் செய்ய தீர்மானித்தான்.

கிருஷ்ணனிடம், தனது மகள் சத்யபாமாவையும் அழைத்துக் கொண்டு சென்றான். தலை குனிந்தபடி பேசினான்:

'கிருஷ்ணா! என்னை மன்னித்துக் கொள். உன்னைத் தவறாக நினைத்து வீண்பழி சுமத்திவிட்டேன். அதற்குப் பிராயச் சித்தமாக, இதோ என் மகள் சத்யபாமாவை உனக்கு அளிக் கிறேன். அவளை உன் மனைவியாக மறுக்காமல் ஏற்றுக் கொள். அத்துடன் இந்தச் சியமந்தக மணியையும் நீயே பெற்றுக்கொள்!' என்று வேண்டினான்.

அவனுடைய வேண்டுகோள்படி சத்யபாமாவை சந்தோஷ மாக ஏற்றுக்கொண்ட கிருஷ்ணன், சியமந்தக மணியை சத்ராஜித்திடமே திருப்பிக் கொடுத்துவிட்டான்.

இந்தச் சமயத்தில் அவனுக்கு அஸ்தினாபுரத்திலிருந்து தகவல் வந்திருந்தது. காசியில் அரக்கு மாளிகையில் சிக்கி மாண்டு விட்டதாகக் கருதப்பட்ட பாண்டவர்கள் உயிரோடு வந்து விட்டார்கள் என்றும், திருதராஷ்டிரன் அவர்களுக்கு ராஜ் யத்தில் பாதியைத் தர ஒப்புக்கொண்டிருப்பதாகவும், கிருஷ்ணன் அங்கு வரவேண்டுமென்று தருமர் விரும்பு வதாகவும் தூதுவன் கூறினான்.

கிருஷ்ணன் புறப்பட்டுச் சென்றான். பாண்டவர்களையும் அத்தை குந்தியையும் சந்தித்துப் பேசினான். பாண்டவர் களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பகுதி, முன் காலத்தில் காண்டவப் பிரஸ்தம் என்று அஸ்தினாபுரத்தின் தலைநகரமாக இருந்த பகுதி. இப்போது அது பாழடைந்திருந்தது.

கிருஷ்ணன் தேவசிற்பியான விசுவகர்மாவை அழைத்தான். அங்கே புதிதாக ஒரு நகரத்தை நிர்மாணிக்கச் சொன்னான். தேவலோகத்துக்கு நிகராக பாண்டவர்களின் தலைநகரம் மனத்தை மயக்கும்படியாக உருவானது. கிருஷ்ணன் அந்த நகரத்துக்கு 'இந்திரப் பிரஸ்தம்' என்று பெயர் சூட்டினான். பாண்டவர்களோடு சிறிது நாள்கள் தங்கினான்.

அப்போது ஒருநாள், கிருஷ்ணனும் அர்ஜுனனும் வேட் டைக்குச் சென்றார்கள். மிருகங்களைத் துரத்தி களைத்துப் போய், நீர் அருந்துவதற்காக நதிக்கரைக்குப் போனார்கள். அங்கே ஓர் அழகிய பெண் தனியே நின்றிருந்தாள். அர்ஜுனன் வியந்து போய் அவளை யாரென்று விசாரித்தான்.

'என் பெயர் காளிந்தீ. சூரியனின் புதல்வி. பகவான் நாராயணனின் அவதாரமும் லீலா விநோதனுமான கிருஷ் ணனை மனத்துக்குள் விரும்பி, அவரையே திருமணம் செய்துகொள்ள தவமிருக்கிறேன்!' என்று தெரிவித்தாள். கண்ணன், அவளையும் துணைவியாக ஏற்றுக்கொண்டான்.

மித்ரவிந்தை என்பவள் வசுதேவரின் தங்கை மகள். அவந்தி நாட்டு இளவரசி. அவளும் கிருஷ்ணனை விரும்பினாள். ஆனால் அவள் அண்ணன்கள், கிருஷ்ணனை மணக்கக் கூடாது என்று தடுத்தனர். கண்ணன் அவந்தி நாட்டுக்கு வந்தான். தன்னை எதிர்த்த அத்தனை அரசர்களையும் தோற்கடித்து, மித்ரவிந்தையை தூக்கிச்சென்று திருமணம் செய்துகொண்டான்.

மித்ரவிந்தையைப் போலவே மற்றொரு அத்தை மகளான பத்ரை என்பவளையும், மத்ர தேசத்து இளவரசியான லக்ஷ்மணை என்பவளையும் மணந்தான் கிருஷ்ணன்.

இந்தச் சமயத்தில் கோசல தேசத்து அரசனான நக்னஜித் என்பவன், தன்னுடைய மகள் நக்னஜிதேவி என்கிற சத்யா வுக்கு ஒரு சுயம்வரப் போட்டி அறிவித்திருந்தான். 'என்னிடம் உள்ள ஏழு முரட்டுக்காளைகளையும் எவன் வென்று

வீழ்த்துகிறானோ, அவனுக்கே மகளை திருமணம் செய்து தருவேன்!' என்பதே அந்தப் போட்டியின் நிபந்தனை.

ஏராளமான இளைஞர்கள் இந்தப் போட்டியில் இறங்கி இறந்து போயிருந்தார்கள்.

கிருஷ்ணன் சென்று களத்தில் இறங்கினான்.

சீறிப் பாய்ந்து வந்த ஏழு காளைகளுக்கும், காளைக்கு ஒரு கண்ணனாக தன்னை ஏழு கண்ணன்களாக மாற்றிக் கொண்டான்.

காளைகளின் கொம்பைப் பிடித்து, இழுத்து அலைக்கழித்து, அவற்றின் திமில்களைப் பிடித்து அழுத்தி, எல்லாக் காளை களையும் அடக்கினான்.

வெற்றி வீரனாக சத்யாவை அடைந்தான்.

இந்தவிதமாகவே - ருக்மிணி, சத்யபாமா, ஜாம்பவதீ, காளிந்தீ, சத்யா, பத்ரா, மித்ரவிந்தை, லக்ஷ்மணை என கண்ணனுக்கு எட்டுபேர் பட்டமகிஷிகள் ஆனார்கள்.

எல்லா மனைவிகளையுமே சரிசமமாக நேசித்த கண்ணன், அவர்களோடு இன்பமாகக் காலம் கழித்தான். ஆனால் அவதார நாயகனான பரமாத்மா, மனைவி குடும்பம் குழந்தைகள் என்று அப்படியே இருந்துவிட முடியுமா என்ன?

அவனை நாடி ஏதாவது ஓர் அழைப்பு; எங்கிருந்தாவது ஓர் அபயக்குரல் என்று வந்துகொண்டேதான் இருந்தது.

இதோ! அழுது புலம்பியபடி ஓடி வருகிறான் இந்திரன்!

'கோவிந்தா! கோபாலா! முகுந்தா! காப்பாற்றுங்கள், காப் பாற்றுங்கள்!' - என்று கதறுகிறான்.

'என்ன ஆயிற்று இந்திரா? ஏன் இந்தப் பதற்றம்?' - கேட்டான் கண்ணன்.

'பூமாதேவியின் மகன் எனது இந்திர பதவியைப் பறித்துக் கொண்டு விரட்டிவிட்டான். தேவர்களையும் ரிஷிகளையும் துன்புறுத்துகிறான். அவனுடைய கொடுமை தாங்கவில்லை. நீங்கள்தான் எங்களைக் காப்பாற்றவேண்டும் பிரபு!' - கண்ணீருடன் வேண்டினான்.

ஆபத்பாந்தவன் அப்போதே புறப்பட்டான்.

சரி. யார் இந்த பூமிதேவியின் புதல்வன்? அவன்தான் நரகாசூரன்!

***

13

நரகாசுரன், ஜராசந்தன் முடிவு!

நரகாசூரன், பூமாதேவிக்கும் மகாவிஷ்ணுவுக்கும் பிறந்த மகன். பகவான் வராக அவதாரம் எடுத்து பூமாதேவியைத் தூக்கி வந்தபோது தோன்றியவன்.

அசுரனுக்கே உரிய ஆற்றலாலும், தவம் செய்து பெற்ற வரத்தாலும், தன்னை எதிர்க்க யாருமில்லையென்று ஆணவம் கொண்டான் நரகாசுரன்.

அதுவும் தவிர, மகா விஷ்ணு, பூமாதேவிக்குத் தந்த 'வைஷ்ணவாஸ்திரம்' என்கிற அதிசக்தி வாய்ந்த அஸ்திரம் அவன் வசம் இருந்தது. இத்துடன் 'மகா விஷ்ணுவைத் தவிர வேறு யாராலும் அவனை அழிக்க முடியாது!' என்கிற வரமும் கூடுதல் பலம் சேர்க்க, அவனை வெல்ல யாராலும் முடியவில்லை.

அவனுடைய வல்லமை கண்டு மூவுலகங்களும் நடுங்க வேண்டும் என்பதற்காகவே தேவலோகத்தின்மீது படையெடுத்தான் நரகாசூரன். தேவேந்திரனை வென்று, அவனுடைய இந்திர பதவியை கைப்பற்றியதோடு மட்டும் இல்லாமல், வருணனின் வெண்கொற்றக் குடையையும் இந்திரனின் தாயான அதிதியின் குண்டலங்களையும் கவர்ந்து கொண்டு வந்துவிட்டான்.

நரகாசூரனின் தாய் பூமாதேவி, அவனுக்கு எத்தனையோ விதத்தில் புத்திமதி சொல்லிப்பார்த்தும் அவன் கேட்கவில்லை. அசுரனான அவன், எதிரிகளான தேவர்களை அடியோடு வெறுத்தான். அவர்கள் நிம்மதியாக இருக்கக் கூடாதென்று, துரத்தித் துரத்தி விரட்டினான். சிக்கியவர்களை, சித்ரவதை செய்து துன்புறுத்தும் கொடூரகுணம் கொண்டவனாக விளங்கினான்.

அக்கிரமம் செய்பவர்களை ஆண்டவன் சகித்துக்கொள்வதும் இல்லை. அவர்களை விட்டுவைப்பதும் இல்லை.

அதனால்தான் கிருஷ்ணன் மனம் பொறுக்காமல் பொங்கி எழுந்தான். தேரில் ஏறிச் சென்றால்கூட தாமதமாகும் என்று, கருடன் மீதேறிப் பறந்தான் கண்ணன். அவனுடன் சத்யபாமாவும் சென்றாள்.

கிருஷ்ணன், நரகாசுரனின் நகரமான மிராக்ஜ்யோதிஷபுரத்தை அடைந்தான். அந்த நகரம் மிகப்பெரிய மதில்சுவர்களுடன், பலத்த கோட்டைகள் கொண்டதாக யாராலும் நுழைய முடியாதபடி அமைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி, ஐந்து தலைகள் கொண்ட முராசுரன் என்பவன் அதைப் பாதுகாத்து வந்தான்.

கண்ணன் தன் பாஞ்சஜன்யம் சங்கை எடுத்து, பகைவர்கள் நடுங்கும்படியாக முழங்கினான். இதைக்கேட்ட முராசுரன், பெரும் கர்ஜனையுடன் கிருஷ்ணனைத் தாக்கினான். ஐந்து வாய்கள் மூலம் அக்னியை உமிழ்ந்தும், பலவிதமான

அஸ்திரங்களை எய்தும் கிருஷ்ணனுடன் போரிட்டான். கிருஷ்ணன் தொடர்ச்சியாக அஸ்திரங்களை விடுத்து, முராசுரனின் ஐந்து தலைகளையும் அறுத்தெறிந்தான். பின் தன்னுடைய கதாயுதத்தால், நரகாசுரனின் கோட்டை மதில்களை தூள்தூளாக்கினான்.

அடுத்து முராசுரனின் ஏழு பிள்ளைகளும் ஒருவர் பின் ஒருவராக வந்து கண்ணனிடம் போரிட்டனர். அவர்கள் பிரயோகித்த பாணங்களை எல்லாம் கிருஷ்ணன் பொடிப் பொடியாக்கினான். வரிசையாக அவர்களை வீழ்த்தி, யமனுலகம் அனுப்பிவைத்தான்.

முராசுரனும் அவன் புதல்வர்களும் படைகளும் அழிந்தது தெரிந்த நரகாசுரன், தன் அசுரப்படைகளுடன் ஆக்ரோஷமாக வெளிப்பட்டான். சக்திவாய்ந்த அஸ்திரங்களால் கிருஷ்ண னைத் தாக்கினான். இருவருக்கும் இடையில் கடும்போர் நடந்தது.

கருடன், புயல் வேகத்தில் பறந்துசென்று நரகாசுரனின் படைகளைத் தாக்கி துன்புறுத்தினான். அவன் யானைகளைத் தாக்கியதில், அவை மிரண்டு திரும்பியோடி அரக்கர் சேனையையே அழித்தன.

கிருஷ்ணனும், நரகாசூரனின் வில், வாள் எல்லாவற்றையும் தாக்கி முறித்தான். அசுரன் சூலாயுதத்தைச் செலுத்த, கிருஷ்ணன் தன் சுதர்சன சக்ரத்தை அவன்மேல் ஏவினான். அது சூலாயுதத்தைத் தகர்த்துவிட்டு, மேலும் சென்று நரகாசுரனின் தலையையும் துண்டித்து வீழ்த்தியது.

தேவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். பூமாரி பொழிந்தார்கள். கிருஷ்ணனுக்கு நன்றி தெரிவித்து ஸ்தோத்திரம் செய்தார்கள்.

நரகாசுரனின் தாயான பூமாதேவி, மகன் கவர்ந்துவந்த வருணனின் குடை, அதிதியின் குண்டலங்கள் போன்ற வற்றை கிருஷ்ணனிடம் சமர்ப்பித்தாள்.

கண்ணன் அவற்றைப் பெற்றுக்கொண்டு தேவலோகம் செல்ல முற்பட, அப்போது பதினாறாயிரம் அரசகுமாரிகள் அவனு டைய காலடியில் வந்து பணிந்தனர். அத்தனை பேரும் பல தேசங்களிலிருந்து நரகாசுரனால் கடத்தி வரப்பட்டவர்கள்.

'பகவானே! இனி நாங்கள், எங்கள் தேசங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. எங்கள் அனைவரையும் தாங்களே ஏற்றுக் கொண்டு அருள்புரிய வேண்டும்!' என்றார்கள்.

கண்ணன் அவர்கள் அனைவரையும் பறக்கும் சிவிகைகளில் ஏற்றி, 'எல்லோரும் துவாரகைக்குச் சென்று அங்கிருங்கள். நான் வந்து உங்களை திருமணம் செய்துகொள்கிறேன்!' என்று அனுப்பிவைத்தான்.

பின் சத்யபாமாவுடன் புறப்பட்டு தேவலோகம் சென்றான். இந்திரனிடம், அசுரன் கவர்ந்துசென்ற பொருள்களைக் கொடுத்தான். சத்யபாமா தேவலோகத்தில் இருந்த பாரிஜாத மரத்தின்மீது ஆசை கொண்டாள். அவளின் விருப்பத்தை அறிந்த கண்ணன், பாரிஜாத மரத்தை துவாரகைக்குக் கொண்டு செல்வதற்காக, வேருடன் பிடுங்கிக்கொண்டு கருடன்மீது ஏறினான்.

ஆனால், இந்திரனோ சொர்க்கலோகத்தின் உடைமைகள் பூவுலகுக்குக் செல்லக்கூடாது என்று தடுத்தான். காவலர் களை அனுப்பி, பாரிஜாத மரத்தை கிருஷ்ணனிடமிருந்து பிடுங்கச் சொன்னான்.

கண்ணன், இந்திரனின் நன்றி மறந்த தன்மையை நினைத்துச் சிரித்தபடி, காவலர்களையும் இந்திரனையும் மற்ற தேவர்களையும் தனது பாணங்களால் அடித்தான்.

இதற்குப் பிறகு, இந்திரனுக்கு புத்தி வந்தது. பாரிஜாத மரத்துடன், கிருஷ்ண சத்யபாமாவை வழியனுப்பி வைத் தான்.

துவாரகை திரும்பிய கண்ணன், நரகாசுரனிடமிருந்து விடுவித்த பதினாறாயிரம் பெண்களையும், பதினாறாயிரம்

கண்ணன்களாக மாறி மணம் புரிந்துகொண்டான். பின் ஒவ்வொருத்தியின் வீட்டிலும் ஒவ்வொருவனாக, சாதாரண பாமரனைப்போல் குடும்பம் நடத்தலானான்.

இந்தச் சமயத்தில் பாண்டவர்களிடமிருந்து தூதுவன் ஒருவன் கிருஷ்ணனிடம் வந்தான்.

'மன்னர் தருமர், அசுவமேத யாகம் நடத்த விரும்புகிறார். தங்களின் யோசனையைக் கேட்பதற்காக, உங்களின் வரவை அவர் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்!' என்றான்.

அப்போது நாரதர், இதைக் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

'அசுவமேத யாகமாவது, தருமன் நடத்துவதாவது! இதெல்லாம் நடக்காத காரியம்!' என்று சிரித்தார்.

'என்ன! இங்கும் ஒரு கலகத்துக்காக வந்திருக்கிறீரா நாரதரே?' என்றான் கண்ணன்.

'கலகமில்லை கண்ணா! உண்மை! ஒரு மன்னன் அசுவமேத யாகம் செய்ய விரும்பினால், எல்லா தேசத்து மன்னர்களும் அவனை ராஜாதிராஜனாக ஒப்புக்கொள்ள வேண்டும். ஏற்க விரும்பாதவரோடு சண்டையிட்டு வெல்ல வேண்டும்!'

'ஆம்! அர்ஜுனன் ஒருவன் போதுமே! அனைத்து அரசர்களையும் ஒரு நாழிகையில் ஜெயித்துவிடக்கூடிய வீரனாயிற்றே அவன்!'

'ஆனால், ஜராசந்தன் இருக்கிறானே! அவனை யார் வெல்ல முடியும்? அத்துடன் அவன் நரமேதம் என்னும் யாகத்தை செய்ய நிச்சயித்து இதுவரை எண்பத்தியாறு அரசர்களை வென்று சிறைப்படுத்தி வைத்துள்ளான். இன்னும் பதினான்கு அரசர்களை அவன் ஜெயித்துவிட்டால், நூறு அரசர்களையும் ருத்ரனுக்கு பலி கொடுத்து கட்டுக்கடங்காத சக்தி பெற்றுவிடுவான். ஏற்கெனவே மூர்க்கன் அவன்.



கரடி அரசன் ஜாம்பவானுடன் போர் புரிகிறான் கிருஷ்ணன்.



பரீட்சித்துவை நாகம் தீண்ட, பகவான் நாராயணன்
அவனுக்கு முக்தி அருள்கிறான்.

அதன்பிறகு அவனை யாரால் ஜெயிக்க முடியும்!' என்று சொன்ன நாரதர், வந்த காரியம் முடிந்ததென்று புறப்பட்டுப் போனார். கிருஷ்ணன் இதைப்பற்றிச் சொன்னபோது தருமனும் யோசனையில் ஆழ்ந்தான்.

ஆனால், அர்ஜுனனும் பீமனும் கோபத்தில் கொதித்தார்கள்.

'கண்ணா, இதை நாம் பொறுக்கக் கூடாது! ராஜசூய யாகம் செய்கிறோமோ இல்லையோ, ஜராசந்தனிடம் சிறைப்பட்டிருக்கும் அரசர்களை மீட்டு, அவர்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காகவாவது நாம் ஜராசந்தனை வென்றாக வேண்டும்!' என்றான் அர்ஜுனன்.

'ஆம் கண்ணா! இப்போதே படைதிரட்டிப் புறப்படுவோம்!' - துடித்தான் பீமன்.

'இல்லை பீமா! நேர்வழியில் மோதி ஜராசந்தனை நாம் ஜெயிக்க முடியாது. சூழ்ச்சியால்தான் வெல்ல வேண்டும். ஜராசந்தனுக்கு பிராமணர்களிடம் விசுவாசம் அதிகம். அவர்கள் எதைக் கேட்டாலும் மறுக்காமல் தந்து விடுவான். அந்த பலவீனத்தை நாம் பயன்படுத்திக்கொள்வோம். நாம் மூவர் மட்டும் ஜராசந்தனிடம் செல்வோம்!' என்றான் கிருஷ்ணன்.

மூவரும் தங்களை அந்தணர்கள்போல மாற்றிக்கொண்டு புறப்பட்டார்கள். மகதநாட்டுக்குச் சென்று ஜராசந்தனை சந்தித்தார்கள்.

அந்தணர்கள் என்பதால் அன்புடன் வரவேற்றான் ஜராசந்தன். ஆனால், வந்தவர்களின் உடலிலும் கைகளிலும் வாளின் வடுக்கள் பதிந்திருப்பதைக் கண்டு இவர்கள் அந்தணர்கள் அல்ல என்று உணர்ந்தான். என்றாலும் மூவரையும் வணங்கி உபசரித்தான்.

'அந்தணர்களே நீங்கள் யார்? வந்த நோக்கம் என்ன? என்னிடம் எதை நாடி வந்திருக்கிறீர்கள்!' என்று கேட்டான்.

'மன்னா! நாங்கள் உன்னுடன் த்வந்த யுத்தத்தையே யாசிக்கிறோம். எங்களில் ஒருவருடன் நீ சண்டையிட வேண்டும்! இவர்கள் குந்தியின் மகன்கள். இவன் அர்ஜுனன், இவன் பீமன். நான் இவர்களின் மாமன் மகனும் உன்னுடைய பகைவனுமான கிருஷ்ணன்!' என்று தங்களை வெளிப்படுத்திக் கொண்டான் கண்ணன்.

இதைக்கேட்டு, கோபத்துடன் நிலம் அதிரச் சிரித்தான் ஜராசந்தன்.

'நல்லது கிருஷ்ணா, மிக நல்லது! நீங்கள் கேட்ட யுத்தத்தை நிச்சயம் நான் தருகிறேன். நீ எனக்குப் பயந்து ஓடிய கோழை! உன்னுடன் யுத்தம் செய்வது எனக்கு அகௌரவம். அர்ஜுனன் வயதில் சிறியவன். ஆனால், பீமன் எனக்குச் சமமான பலசாலி. எனவே, நான் அவனுடன் த்வந்த யுத்தம் செய்கிறேன். அவனை ஜெயித்துவிட்டு, பின் உங்கள் இருவரையும் கொன்று விடுகிறேன்!'

ஆத்திரத்துடன் சொன்ன ஜராசந்தன், பீமனுடன் யுத்தத்துக்குத் தயாரானான்.

அவனும் பீமனும் முதலில் கதாயுதத்தால் தாக்கிக்கொண்டார்கள். கதைகள் முறிந்ததும் மல்யுத்தத்தில் இறங்கினார்கள். சமபலம் கொண்ட அந்த இருவரின் யுத்தம் பிரமிக்க வைத்தது.

ஒருவரை ஒருவர் மாறி மாறி தாக்கிக்கொண்டார்கள். கட்டித் தழுவி குத்திக்கொண்டார்கள். சுற்றிச் சுழன்ற அந்தப் போராட்டத்தின் முடிவில், பீமன், ஜராசந்தனை கீழே வீழ்த்தி அவனுடைய இரு கால்களையும் பற்றி உடலை இரண்டாகக் கிழித்துப்போட்டான்!

அப்போது ஓர் எதிர்பாராத அதிசயம் நடந்தது!

கிழித்துப்போட்ட ஜராசந்தனின் உடல் மீண்டும் ஒட்டிக் கொண்டது.

பீமனும் அர்ஜுனனும் ஆச்சரியமடைந்தார்கள்.

கண்ணன் அதிசயிக்கவில்லை.

ஜராசந்தனின் உடல் மீண்டும் தானாகவே ஒட்டிக் கொண்டதற்கு காரணம் இருந்தது!

அது அவனுக்குத் தெரிந்திருந்தது.

மகத மன்னனான பிருகத்ரதனுக்கு இரண்டு மனைவிகள். இருவருக்குமே குழந்தையில்லை. அதனால் மனம் வருந்தினான் மன்னன். அப்போது சண்டகௌசிக மகரிஷி என்பவர் அவனைச் சந்தித்து ஒரு பழத்தைக் கொடுத்தார். 'இதைச் சாப்பிட்டால் உன் மனைவிக்கு குழந்தை பிறக்கும்' என்றார். பிருகத்ரதன், ஒருவர் மட்டுமே சாப்பிடவேண்டிய அந்தக் கனியை, இரண்டு மனைவிகளுக்கும் பகிர்ந்து கொடுத்தான்.

இருவரும் கர்ப்பமடைந்தனர். ஆனால், பிறந்ததோ இரண்டு துண்டான உடல்கள்! மன்னனும் அவன் மனைவியரும் துயரத்தில் ஆழ்ந்தனர். வருத்தத்துடன் அந்த உடல் துண்டுகளை வெளியே தூக்கி எறிந்தனர். உயிரற்ற அந்தப் பிண்டங்களை 'ஜரா' என்கிற அரக்கி உண்பதற்காக எடுத்தாள். அவள் அந்த இரு பாதி உடல்களை ஒன்றுசேர்த்ததும் அந்தக் குழந்தை உயிர் பெற்றது. ஜராவால் உயிர் பெற்றதாலே அந்தக் குழந்தை 'ஜராசந்தன்' என்றானது.

பீமன் ஜராசந்தனை, மீண்டும் மீண்டும் கிழித்துப் போட்டும் உடல் சேர்ந்துகொண்டதால் செய்வது அறியாமல் திகைத்தான்.

அப்போது கிருஷ்ணன் அருகே கிடந்த புல்லை எடுத்தான். அதைச் சரிபாதியாகக் கிழித்து, தலைமாற்றிப் போட்டான். யுத்தம் செய்தபடியே அதைக் கவனித்த பீமன் குறிப்பை உணர்ந்துகொண்டான்.

ஜராசந்தனை வீழ்த்தி மறுபடியும் அவன் உடலைக் கிழித்தவன், இம்முறை அதை தலைமாற்றிப் போட்டான்.

ஜராசந்தனின் கிழிந்த உடல் ஒன்றுசேர முடியாமல் செத்துப் போனான்.

அவன் சிறைப்படுத்தியிருந்த மன்னர்கள் விடுதலை பெற்றார்கள்.

இதன்பின் இந்திரப் பிரஸ்தத்தில் ராஜசூய யாகம் சிறப்பாக, வெகு விமரிசையாக நடந்தது. உலகத்தின் அத்தனை அரசர்களும், கௌரவர்களும், பீஷ்மர், துரோணர், கிருபாச்சாரியார் போன்ற பெரியோர்களெல்லாம் கலந்து கொண்ட அந்த யாகத்தில், முதல் மரியாதையை யாருக்குச் செய்வது என்று கேள்வி எழுந்தது.

அதனால், அங்கு பெரும் கலகம் விளைந்தது! மற்றொரு வதமும் நடந்தது.

***

14

நண்ணனைப் பழித்த சிசுபாலன்!

அசுவமேத யாகத்தில் 'அக்ரபூஜை' என்கிற முதல் மரியாதை மிக முக்கியமானது.

'அந்த முதல் மரியாதையை நான் யாருக்குச் செய்வது?' என்று கேட்டான் தருமன்.

சகாதேவன் எழுந்து சொன்னான்:

'அண்ணா! கண்ணெதிரே காட்சி தரும் தெய்வமாக நம்முன் நிற்பவன் கிருஷ்ணனே! அவனே, எல்லா உலகங்களாலும் எல்லாவகையிலும் வழிபடத் தகுந்தவன். அண்ட சராசரங்களை தன்னுள் கொண்ட கிருஷ்ணனே, முதல் மரியாதை பெறும் தகுதியுடையவன்!' - உறுதியாகவும் தீர்க்கமாகவும் சொன்னான்.

யாகத்தை நடத்திவைக்க வந்திருந்த வியாசர், கண்வர் முதலான மகரிஷிகளும், பீஷ்மர்,

துரோணர் உள்ளிட்ட பெரியோர்களும்கூட அதை ஏற்றுக் கொண்டு ஆதரித்தனர்.

தருமன், ஆனந்தம் கொண்டவனாக கிருஷ்ணனை பயபக்தி யுடன் பூஜித்து முதல் மரியாதை செய்தான்.

அப்போது மன்னர்களின் நடுவிலிருந்து கோபத்துடன் எழுந்தான் சேதிநாட்டு மன்னனான சிசுபாலன்.

'பாண்டவர்களுக்கு பித்துப் பிடித்துவிட்டது என்று நினைக் கிறேன். இல்லாவிட்டால், தவத்தில் சிறந்தவர்களும் ஞானத்திலும் வீரத்திலும் பெருமை பெற்றவர்களும் நிறைந்திருக்கும் இந்தச் சபையில், அவர்களில் யாருக்காவது முதல் மரியாதை செய்வதைவிட்டு, தகுதியே இல்லாத வனுக்கு மரியாதை செய்கிறார்களே! இந்தக் கௌரவம் பெற கிருஷ்ணனுக்கு என்ன தகுதி இருக்கிறது? ஒரு இடையனான இவன் எந்த விதத்தில் பெரியவன்? குலத்திலா? குணத்திலா? வீரத்திலா? ஜராசந்தனுக்குப் பயந்து பின்வாங்கி ஓடிய கோழை இவன்! சூழ்ச்சிக்காரன்! நேர்மையில்லாதவன்!' என்று கிருஷ்ணனை, மனம் பொறுக்க முடியாதபடி இழி வாகப் பேசிக்கொண்டே போனான்.

சிசுபாலனின் வசைச்சொற்களைப் பொறுக்காமல், பாண்ட வர்கள் பொங்கி எழுந்தார்கள். சிசுபாலனை எதிர்க்க ஆயுதமெடுத்தார்கள்.

இத்தனை நேரம் சிசுபாலனின் வசைச்சொற்களை புன்ன கையுடன் கேட்டுக்கொண்டிருந்த கிருஷ்ணன், பாண்டவர் களைத் தடுத்தான். 'இது, சிசுபாலனுக்கும் எனக்குமான பிரச்னை! நானே தீர்த்துக்கொள்கிறேன்!' என்றான்.

இதைக்கேட்ட சிசுபாலன், கத்தியுடன் பாய்ந்து கிருஷ்ண னையும் பாண்டவர்களையும் தாக்க வந்தான்.

கிருஷ்ணன் அதற்குமேல் பொறுமை காக்காமல், தன் சுதர்சன சக்கரத்தை ஏவி, சிசுபாலனின் தலையைத் துண்டித்தான்.

அப்போது சிசுபாலனின் உடலிலிருந்து ஒளி எழுந்து, கிருஷ்ணனின் உடலுக்குள் சென்று மறைந்தது. இதைக்கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

ஆனால், அங்கிருந்த மகரிஷிகள் இதன் காரணத்தை உணர்ந்து கொண்டனர்.

பாற்கடலின் துவார - பாலகர்களான ஜய விஜயர்களே சாபத் தின் காரணமாக மூன்று பிறவிகள் எடுத்து, பகவானை விரோதித்தார்கள். எவன் ஒருவனும், நண்பர்களையும் உறவினர்களையும்விட விரோதிகளை நினைத்துக் கொண் டிருப்பதே அதிகம்! அதனால் அவர்களும் எப்போதும் பகவான் நினைவுடனே இருந்து முக்தி பெறுகிறார்கள் என்பதை மற்றவர்களுக்கும் கூறினார்கள்.

முதல் பிறவியில், இரண்யாட்சன் இரண்யகசிபுவாகவும், இரண்டாவது பிறவியில், ராவணன் கும்பகர்ணனாகவும், இந்த மூன்றாவது பிறவியில், சிசுபாலன் தந்தவக்த்ரனாகவும் பிறந்த ஜய விஜயர்களில், ஜயனான சிசுபாலன் முக்தி பெற்றுவிட, தந்தவக்த்ரன் மிச்சமிருந்தான்.

அந்த தந்தவக்த்ரனும் விளக்கைத் தேடிவந்து விழும் விட்டில் பூச்சியாக தன் சாவைத் தேடி வந்துகொண்டிருந்தான். கிருஷ்ணனை அழிப்பதற்காக தன் தோழனான சால்வனை கூட்டு சேர்த்துக்கொண்டிருந்தான்.

ருக்மிணியை கிருஷ்ணன் தூக்கி வந்தபோது நண்பர்களான சிசுபாலன் ருக்மிக்கு ஆதரவாக கிருஷ்ணனை எதிர்த்த சால்வன், அப்போது பலராமனாலும் யாதவப் படைகளாலும் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்பட்டிருந்தான். அவமானம் தாங்காத சால்வன் யாதவர்களை பூண்டோடு அழிப்பதற்காக சிவனை நோக்கித் தவமிருந்தான். அவர் அருளால் 'ஸௌபம்' என்கிற அதிசயமான ஆகாய விமானத்தைப் பெற்றான்.

சிசுபாலனை வதம் செய்த கோபத்தில் அவனும் தந்தவக்த் ரனும், துவாரகையில் கிருஷ்ணன் இல்லாத சமயமாகப்

பார்த்து, விமானத்தில் பறந்து சென்றார்கள். துவாரகையின்மீது போர் தொடுத்தார்கள். துவாரகையின் நந்தவனங்களையும் அரண்மனைகளையும் மற்றும் பெரிய கட்டடங்களையும் தகர்த்தார்கள். ஆகாயத்தில் இருந்தபடி கற்கள், மரங்கள், நாகங்கள் போன்றவற்றை பேய்மழைபோல் பொழிந்தார்கள்.

சால்வனை எதிர்த்து கிருஷ்ணனின் மகளான பிரத்யும்னன், தனது படைகளுடன் சென்று தாக்கினான். அஸ்திரங்களைத் தொடுத்தான். ஆனால், விமானம் மாயமாக மறைந்தும் திடீரென்று தோன்றியும் தாக்குதல் நடத்தியதால், சமாளிக்க முடியாமல் திகைத்தான்.

அப்போது யுத்தத்தைக் கேள்விப்பட்டு துவாரகைக்கு வந்து விட்டான் கிருஷ்ணன். அவன் பிரத்யும்னனிடம், 'மகனே! சால்வன் மாயப்போர் புரிவதால், அவனை என்னால் மட்டும் எதிர்கொள்ள முடியும். இனி, நான் பார்த்துக்கொள்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, போரை தானே மேற்கொண்டான்.

சால்வனுக்கும் கிருஷ்ணனுக்குமான யுத்தம் கடுமையாகவே நடந்தது. இறுதியாக, கிருஷ்ணன் தன் கதாயுதத்தால் விமானத்தைத் தாக்கி கடலில் விழ வைத்தான். தன் சுதர்சன சக்ரத்தால் சால்வனின் தலையை துண்டித்து வீழ்த்தினான்.

தோழன் சால்வனின் மரணத்தால் மேலும் ஆத்திரமடைந்த தந்தவக்த்ரன், கதையை ஓங்கிக்கொண்டு கிருஷ்ணனின் மேல் பாய்ந்தான். இருவருக்குமான கதாயுதப் போரில், கிருஷ்ணனால் தலையில் தாக்கப்பட்டு மரணமடைந்தான். மோட்சம் பெற்று மேலுலகம் போனான்.

துவாரகாபுரி மக்கள், படையெடுப்பு நீங்கி எதிரிகள் ஒழிந்ததில் மகிழ்ச்சியடைந்தார்கள். கண்ணனின் பாதுகாப்பில், எல்லோரும் நிம்மதியாக காலம் கழித்தார்கள்.

ஆனால், அந்தக் கண்ணனின் பாதுகாப்பையும் மீறி காணாமல் போனான் அனிருத்தன்!

அனிருத்தன், கிருஷ்ணனின் மகனான பிரத்யும்னனின் மகன்!

அரண்மனையே களேபரமானது. ஆளுக்கு ஆள் மூலை முடுக்கெல்லாம் சென்று தேடினார்கள். நாலாதிசையிலும் அனிருத்தனைத் தேடிக் கண்டுபிடிக்க வீரர்கள் பறந்தனர்.

துயரத்தில் ஆழ்ந்திருந்த ருக்மிணியிடம் கண்ணன் சொன்னான்:

'கவலைப்படாதே ருக்மிணி! அனிருத்தனைக் கண்டுபிடித்து விடலாம். இது ஒன்றும் நமக்கு புது அனுபவமில்லையே! முன்பு தகப்பன் காணாமல் போனான்! இப்போது பிள்ளை!' என்றான்.

ஆம்! கிருஷ்ணனின் பிள்ளையான பிரத்யும்னனும் காணாமல் போய் கிடைத்தவன்தான்!

அது, அவன் குழந்தையாக இருக்கும்போதே நடந்தது!

பிரத்யும்னன் வேறு யாருமில்லை. மன்மதன்தான் அவன்!

தவத்தில் இருந்த சிவனின் மீது, மன்மத பாணம் எய்து நெற்றிக் கண்ணால் சுட்டெரிக்கப்பட்ட மன்மதனே, கிருஷ்ணனுக்கும் ருக்மிணிக்கும் மகனாகப் பிறந்திருந்தான்.

கம்சனுக்கு யமனாக கிருஷ்ணன் எப்படிப் பிறந்தானோ, அதுபோலவே சம்பாசுரன் என்கிற அரக்கனுக்கு பிரத்யும்னனால்தான் மரணம் என்று விதி எழுதியிருந்தது.

முன்பு கம்சனுக்கு அசரீரி சொன்னதுபோல, இந்தத் தகவலை சம்பாசுரனிடம் சென்று சொல்லி விட்டார் நாரதர்!

எதிரி இவன்தான் என்று தெரிந்தபின்பு, அவனை உயிரோடு விட்டுவைக்க சம்பாசுரன் முட்டாளா என்ன?

துவாரகைக்குள் யாரும் அறியாமல் மாயா ரூபத்தில் புகுந்தவன், பச்சைக் குழந்தை என்றும் பார்க்காமல், பிரத்யும்னனைத் திருடிக்கொண்டுபோய் கடலில் போட்டான். 'ஒழிந்தது சனியன் என்று' கையைத் தட்டிக் கொண்டு போய்விட்டான்!

துவாரகையில், பிறந்த குழந்தையைக் காணாமல் அனைவரும் பதறித் துடித்தனர். எப்படிப் போனது என்று வழி தேடினர். அழுது அழுது சோர்ந்து மயங்கினர். குழந்தை என்னவானது என்று கடைசிவரை தெரியவில்லை.

அனைத்தும் தெரிந்த கண்ணனோ அதைப்பற்றி மூச்சு விடவில்லை. எல்லாவற்றையும் அதனதன் போக்கில் நடக்கவிட்டு, முடிவை நிர்ணயிப்பவனே அவன்தானே! சம்பாசுரனின் மரணம் பிரத்யும்னனால் நடைபெற வேண்டும் என்று இருக்கிறபோது, அவன் செய்யக்கூடியது அமைதியாக வேடிக்கை பார்ப்பது மட்டும்தானே! அதைத்தான் செய்து கொண்டிருந்தான் கிருஷ்ணன்.

கடலில் போடப்பட்ட குழந்தையை ஒரு மீன் விழுங்கியது. அந்த மீன் ஒரு செம்படவனின் வலையில் சிக்கியது. அவன் அந்த மீனை அரசனின் அரண்மனைக்குக் கொண்டுசென்று கொடுத்தான். அந்த அரசன் சம்பாசுரன்!

சமையலறைக்கு வந்த மீனை, சமையற்காரன் நறுக்க முனைந்தான். மீனின் வயிற்றுக்குள் ஒரு குழந்தை உயிரோடு இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டான். அரண்மனை பணிப்பெண்ணான மாயாவதி என்பவளும் அதைக்கண்டு அதிசயித்தாள். குழந்தையை தானே வளர்க்க விரும்புவதாகச் சொல்லி வாங்கிக்கொண்டாள்.

வினோதம் என்னவென்றால், மாயாவதி அந்தக் குழந்தையின் மனைவி! ஆம்! மன்மதனின் மனைவியான ரதியேதான் அவள். சம்பாசுரன் ஒருமுறை அவளைக் கடத்தி வந்தபோது, தான் மன்மதனின் மனைவி ரதி என்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், மாயாவதி என்கிற பெயரில் அரண்மனை பணிப்பெண்ணாக பணியாற்றிக்கொண்டிருந்தாள் அவள். சம்பாசுரன் அவள்மீது மிகுந்த மோகம் கொண்டிருந்தான். அவளை அடையத் துடித்தான். தன் ஆசைக்கு இணங்கச் சொல்லி வற்புறுத்தினான்.

மாயாவதி அவனிடமிருந்து தப்பிப்பதற்காக, 'அரக்கர் தலைவரே! நான் இப்போது தங்களை ஏற்றுக்கொள்ள முடியாத துரதிர்ஷ்டசாலியாக இருக்கிறேன். எனக்கு மாங்கல்ய தோஷம் இருக்கிறது. எனவே, என்னை யார் மணந்து கொண்டாலும் விரும்பி அடைந்தாலும், அவர் இறந்துவிடுவார்! நான் இந்த தோஷத்தைப் போக்கிக் கொள்வதற்காக சிவனை எண்ணி விரதம் இருந்து வருகிறேன். தோஷம் நீங்கியதும் நான் உங்களை மணந்துகொள்ள எந்தத் தடையுமில்லை. எனக்கு மட்டும் தங்களின்மீது ஆசை இல்லையா என்ன? தயவுசெய்து சிறிது காலம் பொறுத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு நான் தங்களுக்குச் சொந்தமாக ஆகிவிடுவேன்!' என்று பொய் சொல்லி, சம்பாசுரனை ஏமாற்றி வந்தாள்.

சம்பாசுரனும், அவளைத் தொட்டால் உயிர் போய்விடும் என்கிற பயத்தால், மாயாவதியின் விரதம் முடிவதற்காக வருடக்கணக்கில் காத்துக்கொண்டிருந்தான்.

மீனின் வயிற்றில் கிடைத்த குழந்தையை மாயாவதி அன்புடன் வளர்த்து வந்தாள். ஒருமுறை நாரதர் சம்பாசுரனைச் சந்திக்க வந்தபோது மாயாவதியைப் பார்த்து, 'மீனின் வயிற்றில் இருந்த குழந்தை அவளுடைய கணவன் மன்மதனே!' என்கிற உண்மையைச் சொல்லி, 'இந்தக் குழந்தையை பத்திரமாக வளர்த்து வா! இவன் வளர்ந்து வாலிபனானதும் இவனைக்கொண்டே சம்பாசுரனை அழித்து விடலாம்!' என்று கூறிச்சென்றார்.

அதுபோலவே மாயாவதி, பிரத்யும்னனை, அறிவிலும் போரிலும் வல்லவனாக வளர்த்து, மாயக் கலைகளைச் சொல்லிக்கொடுத்து வலிமையுள்ளவனாக்கினாள். பிரத்யும்னன் வாலிபனானான். மாயாவதி தன் மனைவியே என்பதை அவளிடமிருந்து அறிந்துகொண்டான்.

இந்தச் சமயத்தில், சம்பாசுரனும் உண்மையை அறிந்து கொண்டான். இதை அவனுக்குச் சொன்னவரும் நாரதர்தான்!

அசுரன் வதம் சீக்கிரம் நடைபெற வேண்டாமா? அதற்காகவே ரதி, மன்மதன் ரகசியத்தை சம்பாசுரனிடம் போட்டு உடைத்தார்.

சம்பாசுரன் வெறி கொண்டவனானான். மன்மதனைக் கொல்ல முற்பட்டான். அவனுக்கும் மன்மதனுக்கும் நடந்த போரில், இறுதியில் மன்மதனால் கொல்லப்பட்டான்.

பின், பிரத்யும்னனும் மாயாவதியும் துவாரகையை அடைந்தார்கள். நாரதர் அங்கு வந்து நடந்த அனைத்தையும் விளக்கி, மாயாவதிக்கும் பிரத்யும்னனுக்கும் மணம் முடித்து வைத்தார்.

பிரத்யும்னன் பின்னாளில், தன் தாய் ருக்மிணியின் சகோதரனான ருக்மியின் மகள் ருக்மவதியையும் மணம் செய்து கொண்டான். ருக்மவதிக்கும் பிரத்யும்னனுக்கும் பிறந்த மகனே, காணாமல் போன அனிருத்தன்.

தகப்பன் குழந்தையாக இருக்கும்போது காணாமல் போனான். பிள்ளை அனிருத்தனோ வளர்ந்து வாலிபப் பருவத்தில் காணாமல் போய்விட்டான்.

பிரத்யும்னன் காணாமல் போனது பகையால்! பிள்ளை அனிருத்தன் காணாமல் போனதற்குக் காரணம் காதல்! அந்தக் காதலியின் பெயர் உஷா!

***

15

பாணாசுரனைப் பாதுகாத்த பரமேஸ்வரன்!

உஷா, அரக்கனான பாணாசுரனின் ஒரே மகள்!

இந்தப் பாணாசுரன், மகாபலி சக்ரவர்த்தியின் மகன். மிகச்சிறந்த சிவ பக்தன்.

ஒருமுறை இவன், பரமேஸ்வரன் தாண்டவம் ஆடும்போது தன் ஆயிரம் கைகளாலும் வாத்தியங்கள் இசைத்தான். அதனால் மகிழ்ச்சியடைந்த சிவன்,

'பாணா! உன் வாத்தியத் திறமைக்கு பரிசாக வரம் அளிக்க விரும்புகிறேன். என்ன வேண்டும் கேள்!' என்றார்.

பாணாசுரன், அவரை வணங்கி, 'பரமேஸ்வரா! எனது நகரான சோணிதபுரத்துக்கு தாங்களே பாதுகாவலனாக இருந்து காக்க வேண்டும்' என்று

வேண்டினான். சிவனும் அப்படியே வரம் தந்து, அவனது நகரத்தை பாதுகாத்து வந்தார்.

மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவனே நகரத்தின் காவலனாக இருப்பதால், பாணாசுரன் தன் வலிமையை எண்ணி ஆணவம் கொண்டான். ஆணவம் கொண்ட அசுரர்களுக்குத்தான் தலைகால் புரியாதே! பாணாசுரன் மட்டும் விதிவிலக்காகிவிட முடியுமா?

ஆயிரம் கைகளும் அரிப்பெடுக்க அவன் சிவனிடம் கேட்டான்:

'பெருமானே! என் பலத்தைக் கண்டு பயப்படுவதால், யாரும் என்னுடன் யுத்தம் செய்ய வருவதில்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதிரிகளே தெரியவில்லை. என் கண்களின் முன்னே தாங்கள்தான் இருக்கிறீர்கள். நாம் இருவரும் யுத்தம் செய்து பார்த்தால் என்ன?' என்றான்.

சிவபெருமான், 'பாணா! உன் குரலில் ஆணவம் அதிகமாகத் தெரிகிறது. அது நன்மை தராது. ஆனால், உன் ஆசை நிறைவேறப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை. விரைவிலேயே நீ மலைத்துப்போகும் அளவுக்கு பலமுள்ள எதிரியைச் சந்திப்பாய்!' என்றார்.

அதற்கான விதைதான், உஷாவின் உள்ளத்தில் காதலாக முளைத்திருந்தது!

உஷா, பாணாசுரனின் மகள் ஆனாலும் மென்மையானவள். பக்தி நிரம்பியவள். பெரியோர்களிடத்தில் பணிவு கொண்டவள். அறிவிலும் அழகிலும் குணத்திலும் சிறந்து விளங்கியவள்.

ஒருநாள் அவள் கனவில் ஆணழகன் ஒருவனைக் கண்டாள். அவன்தான் அனிருத்தன். உறக்கத்திலிருந்து விழித்தும்கூட அவளால், கனவில் கண்ட வாலிபனை மறக்க முடியவில்லை. அவன் மீதான காதல் மனத்தில் திடமாகப் பதிந்தது.

கனவில் வந்த அழகனைப்பற்றி, மந்திரி குமாரியான தன் தோழி சித்ரலேகாவிடம் ரகசியமாகப் பகிர்ந்துகொண்டாள் உஷா. சித்ரலேகா, உஷாவின் காதலன் எப்படியிருப்பான் என்று கேட்க, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

சித்ரலேகா பலவிதமான யோகசித்திகள் கொண்டவள். ஓவியம் வரைவதில் கெட்டிக்காரி. அவள் மூவுலகங்களிலும் பேசப்படக் கூடிய அழகான ஆண்களை ஓவியமாக வரைந்து ஒவ்வொன்றாகக் காட்டினாள். அனிருத்தன் ஓவியத்தைப் பார்த்து முகம் சிவந்தபோதே, இவன்தான் உஷாவின் காதலன் என்று புரிந்துகொண்டாள்.

உஷாவின் மேல் அன்பு கொண்ட அவள், காலம் தாமதிக்காமல் அப்போதே துவாரகைக்கு வந்து, தன் மாயாசக்தியால், பஞ்சணையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அனிருத்தனை, கட்டிலோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டுவந்து உஷாவின் கன்னிமாடத்தில் சேர்த்து விட்டாள்.

அப்புறமென்ன! விழித்து எழுந்த அனிருத்தன் நடந்ததைத் தெரிந்துகொண்டான். அவனும் உஷாவின்மேல் காதலானான். காதலர்கள் மன்மத சாம்ராஜ்ஜியத்தை உல்லாசத்துடன் கட்டி ஆண்டார்கள்.

வெகு சீக்கிரத்திலேயே விஷயம் வெளியே கசிந்தது. 'கன்னி மாடத்தில் ஆணரவம் கேட்கிறது' என்கிற கிசுகிசுப்பு, பாணாசுரனின் காதுக்கும் சென்றது. கொதித்துப்போனான் அசுரன். ஆவேசத்துடன் வீரர்கள் பின்தொடர கன்னிமாடம் சென்றான். காதலனோடு, மகள் கொட்டமடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

'வீரர்களே! கன்னிமாடத்துக்குள் புகுந்துள்ள இந்தக் கயவனை பாதாளச் சிறையில் தள்ளிப் பூட்டுங்கள்!' என்று ஆணையிட்டான்.

அசுர வீரர்கள் அனிருத்தனை நெருங்க, ஆயுதமில்லாமலே அனைவரையும் அவன் அடித்து நொறுக்கினான்.

அவனுடைய வீரத்தைக் கண்ட பாணாசுரன், நாகாஸ்திரத்தால் அனிருத்தனை கட்டிச் சிறைப்படுத்தினான்.

உஷா அழுதாள், துடித்தாள். காதலனை விட்டுவிடும்படி தந்தையின் கால்களில் விழுந்து கதறினாள். பாணாசுரன் எதையும் காதில் வாங்காமல், அவளை கண்ணெடுத்தும் பார்க்காமல் உதறிவிட்டுப் போனான்.

கன்னிமாடத்தில் உஷா துயரத்தில் மூழ்க, துவாரகையிலும் துக்கம் மண்டிக்கிடந்தது.

வரவேண்டிய நேரத்தில் மிகச் சரியாக வந்துசேரும் நாரதர், துவாரகைக்குள் புகுந்தார். 'தெரியுமா சேதி' என்று தொடங்கினார்.

'அனிருத்தனைக் காணாமல் நீங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறீர்கள். அவனோ, பாணாசுரனின் பாதாளச் சிறையில் தவித்துக்கொண்டிருக்கிறான். எல்லாம் காதல் படுத்திய பாடு!' என்று அனைத்து விவரங்களையும் சொல்லி முடித்தார்.

அடுத்தகணம் யாதவப் படைகள் அணிவகுத்தன. பாணாசுரனின் நகரம் நோக்கி பாய்ந்து சென்றன.

கிருஷ்ணனின் தலைமையில் சோணிதபுரத்தை முற்றுகையிட்டது யாதவப் படை. பாணாசுரனின் நகரத்தைத் தாக்கி, கோட்டை கொத்தளங்களைத் தகர்த்தெறிந்தது. நகரத்தின் பாதுகாவலரான சிவன், தனது பூத கணங்களுடன் கிருஷ்ணனின் படைகளை எதிர்த்தார். பாணாசுரனும் தனது அசுரப் படைகளுடன் வந்து யாதவர்களைத் தாக்கினான்.

கிருஷ்ணனுக்கும் சிவனுக்கும் மூண்ட யுத்தத்தைப் பார்க்க, தேவர்களும் ரிஷிகளும் வானத்தில் வந்து கூடினார்கள். காக்கும் கடவுளுக்கும் அழிக்கும் கடவுளுக்குமான சண்டை, வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் நடந்தது.

சிவன் மூன்று தலைகள், மூன்று கால்களைக் கொண்ட ஜ்ர புருஷனை சிருஷ்டித்து ஏவினார். அது நாற்புறமும் படைகளை

வெப்பத்தினால் பொசுக்கிக்கொண்டே வர, கிருஷ்ணன் குளிர் ஜ்ரம் என்ற எதிர்சக்தியை உண்டாக்கி ஏவினான். விஷ்ணுவின் சக்திக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிவஜ்ரம் கிருஷ்ணனைத் தஞ்சமடைந்தது. பகவான், அதற்கு அபயமளித்து விடுவித்தார்.

பாணாசுரன், கிருஷ்ணனை எதிர்த்து தன் ஆயிரம் கைகளினாலும் பாணங்களை விடுத்தான். கிருஷ்ணன் தன் சக்ராயுதத்தை வீச, அது அசுரனின் கைகளை துண்டாக்கத் தொடங்கியது.

பாணாசுரனைக் காப்பதாக வாக்களித்திருந்த சிவபெருமான் இடைமறித்தார்.

'வாசுதேவா! இந்தப் பாணன் என் பக்தன். இவனைக் காப்பதாக நான் வாக்களித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல! நீயும் உன் பக்தனான பிரகலாதனுக்கு, அவன் வம்சத்தைச் சேர்ந்தவரை வதம்செய்ய மாட்டேன் என்று வாக்குறுதி தந்திருக்கிறாய். அதன்படி, பிரகலாதன் வம்சத்தைச் சேர்ந்த பாணாசுரனைக் கொல்லாமல் மன்னிக்கவேண்டும்!' என்று பிரார்த்தித்தார்.

கிருஷ்ணனும் அதை ஏற்றுக்கொண்டு, நான்கு கைகளே மிஞ்சியிருந்த பாணாசுரனை மன்னித்து அருள்பாலித்தான்.

பாணாசுரனும் மனம் திருந்தி, சிறையிலிருந்த அனிருத்தனையும் தன் மகள் உஷாவையும் அழைத்து வந்து கிருஷ்ணனிடம் ஒப்படைத்தான். காதலர்களின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தது. அனைவரையும் அழைத்துக் கொண்டு துவாரகைக்குத் திரும்பினான் கிருஷ்ணன்.

துவாரகையில் மகிழ்ச்சி திரும்பியது. மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். செல்வச் செழிப்பில் துவாரகை சொர்க்கபுரியாகவே இருந்தது. இருக்காதா! மகாலஷ்மியின் அவதாரமான ருக்மிணி தேவி இருக்கும்போது,

கண்ணனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் பொன்னுக்கும் பொருளுக்கும் என்ன குறை?

ஆனால், அப்படியும் ஒருவர் பஞ்சத்தில் அடிபட்டு பரதேசி போல் கிடந்தார்!

கிருஷ்ணனுடன் குருகுலத்தில் ஒன்றாகப் படித்த மாணவத் தோழன் சுதாமன்தான் அவர்!

சுதாமா, அதிகமான ஆசைகள் இல்லாதவர். புலன்களை அடக்கிய ஞானசீலர். கிடைத்ததைக் கொண்டு இல்லறம் நடத்தி வந்தவர். அணிந்துகொள்ள நல்ல உடைகள் இல்லாமல் கந்தல் ஆடைகளையே உடுத்தியதால் குசேலர் என்றே அழைக்கப்பட்டார் அவர்.

அவருடைய மனைவி க்ஷுத்தாமா, மிகவும் பொறுமைசாலி. எத்தனை வறுமையிலும் கணவரின் மனம் கோணாமல் இல்லறம் நடத்தி வந்த புண்ணியவதி. ஆனால் அவளாலும் பெற்ற குழந்தைகள் பசியால் தவிப்பதைக் காண சகிக்கவில்லை. வறுமையிலிருந்து மீண்டு எப்படித்தான் கரையேறுவது என்று ஆலோசித்தபோது அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

கணவரிடம், தயங்கித் தயங்கி சொன்னாள்:

'நான் சொல்லப்போவது சரியா தவறா என்று தெரியவில்லை. மனத்தில் பட்டதைச் சொல்கிறேன். துவாரகையில் இருக்கும் கிருஷ்ணன், உங்களின் பால்ய நண்பர்தானே! உங்கள்மேல் மிகுந்த அன்பு கொண்டவர் என்றும் கூறியிருக்கிறீர்கள். நீங்கள் ஒருமுறை அவரைச் சென்றுபார்த்தால், அவரால் சிறிதளவாவது நம்முடைய வறுமை நீங்கும் என்று தோன்றுகிறது. இது நமக்காக அல்ல, நம் குழந்தைகளுக்காக!'

குசேலருக்கு, மனைவியின் யோசனை சரியென்றே தோன்றியது. தவிர, அவருக்கும் கண்ணனைச் சென்றுபார்க்க வேண்டும் என்கிற ஆவல் வெகுநாள்களாகவே இருந்தது.

அது இப்படியாவது நிறைவேறட்டும் என்று புறப்படத் தயாரானார்.

ஆனால், வெகு காலங்கள் கழித்து பார்க்கச்செல்லும் நண்பனை எப்படி வெறும் கையோடு சென்று பார்ப்பது? மனைவியிடம் கேட்டார். க்ஷுத்தாமா ஓடோடிப்போய் நாலு வீடுகளில் யாசகம் கேட்டு, சிறிது அவலை ஒரு கந்தல் துணியில் முடிந்து குசேலரிடம் தந்து வழி அனுப்பினாள்.

குசேலர், துவாரகையை அடைந்தார். வாயில் காவலர்களிடம் சொல்லவே கூச்சப்பட்டு, 'என் பெயர் சுதாமன். கிருஷ்ணனின் பால்ய நண்பன். அவரைத் தரிசிப்பதற்காக வந்துள்ளேன்!' என்று மெல்லிய குரலில் கூறினார்.

காவலன், அவரை நிற்கச் சொல்லிவிட்டு கிருஷ்ணனிடம் சொல்லச் சென்றான். குசேலர், காவலன் வந்து தன்னை உள்ளே போகச்சொல்வான் என்று காத்திருக்க, கிருஷ்ணனே ஓடோடி வந்து, 'வா, சுதாமா!' என்றபடி தன்னை கட்டியணைத்துக்கொண்டதும் கண் கசிந்து போனார்.

கிருஷ்ணன் அளவில்லாத சந்தோஷத்துடன் குசேலரை அழைத்துப்போய் தன் ஆசனத்தில் அமரவைத்தான். அவருடைய பாதத்தைத் தட்டில் வைத்து, ருக்மிணி நீர் வார்க்க, தன் கரங்களால் அலம்பினான். தானே தன் கைகளால் பலகாரங்கள் கொண்டுவந்து உபசரித்தான். ருக்மிணி, குசேலருக்கு வெண்சாமரம் வீசி உபசரித்தாள்.

குசேலர், கண்ணனின் அன்பு கண்டு மனம் கசிந்து உருகினார். இத்தனை அன்புக்கு நான் அருகதை உள்ளவனா? இதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? பால்ய நண்பனுக்கு இப்படியொரு கௌரவம் அளிப்பவனிடம், 'வறுமை தீர்க்க பொருள் கேட்பதா? கூடாது, கேட்கவே கூடாது! கண்ணனின் இந்தப் பிரியமே கோடானு கோடி பொன்னுக்குச் சமம். இதுவே போதும்!' என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

குசேலர் சாப்பிட்டு முடித்ததும் அவருக்கு தாம்பூலம் மடித்துக் கொடுத்தபடி, கிருஷ்ணன் பழைய குருகுலச் சம்பவங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தான்!

பிறகு குசேலரிடம், 'சரி! அண்ணியார் எனக்கென்று எதுவும் கொடுத்து அனுப்பியிருப்பார்களே! எங்கே அது?' என்று கேட்டான்.

கந்தல் முடிச்சைத் தர வேண்டாம் என்று நினைத்திருந்த குசேலர், கண்ணன் வாய்விட்டுக் கேட்டதுமே மனம் பொறுக்காமல், அந்த அவல் மூட்டையை தயக்கத்துடன் எடுத்தார்.

கிருஷ்ணன் ஆவலுடன் அதை பிடுங்கிப் பிரித்தான். 'அடடா! எனக்குப் பிடித்தமான அவல்!' என்றபடி, ஒரு பிடி அவலை அள்ளி வாய்க்குள் போட்டுக்கொண்டான். அதை ரசித்து ருசித்து ரசனையாகச் சாப்பிட்டவன், 'ஆஹா! என்ன சுவை! அண்ணியாரின் கைப்பக்குவம் இதை அத்தனை ருசியாக்கியிருக்கிறது!' என்றான்.

அடுத்த பிடி அவலை எடுத்தான். ருக்மிணி அவன் கையைப் பற்றிக்கொண்டாள்.

'நீங்கள் மட்டும் சாப்பிட்டால் போதுமா! எனக்கும் வேண்டும்!' என்றவள், கண்ணனின் கையிலிருந்து அவல் முடிச்சைப் பெற்றுக்கொண்டாள்.

ஆம்! கண்ணன் ஒரு பிடி அவல் சாப்பிட்டதற்கே, இகம், பரம் அனைத்துக்கும் தேவையான செல்வத்தை லக்ஷ்மி தந்துவிட்டாள். அடுத்த பிடியைச் சாப்பிட்டால் செல்வத்துக்கு அதிபதியான அவளே குசேலரின் வீட்டுக்குச் செல்லும்படி ஆகிவிடும் என்பதாலேயே அவள் அதைத் தடுத்தாள்.

கடைசிவரை தான் வந்த காரியத்தைக் காட்டிக்கொள்ளாமல், கிருஷ்ணனிடம் எதையும் கேட்காமல் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் குசேலர்.

'பகவான் என்னை கட்டியணைத்துக்கொண்டான். லக்ஷ்மி ஆகிய ருக்மிணியே எனக்குச் சாமரம் வீசினாள். ஜென்ம ஜென்மத்துக்கும் இது போதுமே. இதற்குமேல் பொன்னும் பொருளும் எதற்கு? அதைக் கொடுத்தால் நான் மனம் மாறி விடுவேன் என்றுதான் கிருஷ்ணன் எனக்கு செல்வத்தைத் தரவில்லை போலிருக்கிறது!' என்று மனம் சமாதான மடைந்தவராக தன்னுடைய ஊரை அடைந்தார். வீட்டை நெருங்கியபோது திகைத்துப்போனார். குட்டிச்சுவராக இருந்த அவருடைய வீடு பெரிய அரண்மனையாக மாறி இருந்தது. அவருடைய மனைவி சுசீத்தாமா, பட்டும் தங்க ஆபரணங்களுமாக அடையாளமே தெரியாதபடி பொலிவுடன் வந்து, அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினாள். அவள் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. அவருடைய பிள்ளைகள் அனைவரும் புத்தம்புதிய ஆடையும் அழகழகான ஆபரணங்களும் அணிந்து, குபேரன் வீட்டுக் குழந்தைகள் போல ஜொலித்தார்கள். வீட்டில் செல்வச் செழிப்பு தாண்டவமாடியது.

குசேலர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்பி வழிந்தது.

'கிருஷ்ணா! காக்கும் தெய்வமே! நான் கேட்காமலேயே இத்தனை செல்வத்தை அள்ளித் தந்திருக்கிறாயே! குடும்பமே சந்தோஷத்தில் மிதக்கிறது. ஆனால், எனக்குதான் பயமாக இருக்கிறது. செல்வத்தைத் தந்து என்னைச் சோதிக்கிறாயா கண்ணா? வறுமையில் உன்மீது கொண்ட அன்பு, வசதி வந்தபின் மாறிவிடுமோ என்று பார்க்கிறாயா? இல்லை கிருஷ்ணா! இந்த பக்தி எப்போதும் உன்மீது நிலைத்திருக்கும்!' - மனம் நெகிழ தனக்குள்ளேயே வைராக்கியமாக சொல்லிக் கொண்டார். கண்ணனின் கருணையை எண்ணி எண்ணி வியந்துபோனார்.

பகவான் அப்படித்தான்! பக்தன் தன்னை நோக்கி ஓரடி வைத்தாலே போதும். ஆயிரம் அடிகள் எடுத்து வந்து அன்போடு அரவணைத்துக்கொள்கிறான்.

ஆனால் அந்த பகவான் அவதரித்த யதுகுலமோ, ஆணவத்தின் உச்சத்தில் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தது.

கண்ணன் அதை மனத்தில் வைத்துதான், 'இன்னும் என் வேலை முடியவில்லை!' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

அப்படி அவன் சொல்லிக்கொண்டிருந்தது சிவனிடம்! இப்படி அவன் சிவனிடம் சொல்லவேண்டிய அவசியம் என்ன வந்தது?

***

16

யதுகுலத்தின் முடிவு, பரீட்சித்தின் முக்தி!

சிவன் மட்டுமல்ல! கூடவே, பிரம்மனும் இந்திரனும் மற்ற தேவர்களும்கூட கிருஷ்ணனைக் காண வந்திருந்தார்கள்.

'பகவானே! பூவுலகத்தில் நீங்கள் அவதாரம் செய்த காரியத்தை சிறப்பாக நடத்தி முடித்து விட்டீர்கள்!' என்று ஆரம்பித்தார்கள்.

'ஆம்! குழந்தையாகப் பிறந்து பூதனையை வதம் செய்வதில் தொடங்கி, கிருஷ்ணனும் பலராமனும் ஏராளமான அரக்கர்களைக் கொன்று தீர்த்தாகி விட்டது. குருக்ஷேத்திரப் போரில் பாண்டவர்களை முன்னிறுத்தி கிருஷ்ணன் யுத்தத்துக்கு வழிவகுத்ததில் லட்சக்கணக்கானவர்கள் மாண்டு, பூவுலகின் பாரம் குறைந்து தான்விட்டது!

அதனால்தான் அவதார காரியம் முடிந்து விட்டதை அவர்கள் நினைவுபடுத்தினார்கள்.

பிரம்மா கூறினார்:

'பகவானே! இந்தப் பூவுலகுக்கு நீங்கள் வந்து நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அவதார காரியத்தை பூர்த்தி செய்துவிட்டதால், தாங்கள் மீண்டும் வைகுண்டம் வந்து எங்களுக்கு அருள்பாலிக்க வேண்டும்!' என்றார்.

கிருஷ்ணன் புன்முறுவலுடன் கூறினான்.

'இல்லை! இன்னும் என் வேலை முழுவதும் முடியவில்லை. கொஞ்சம் மிச்சமிருக்கிறது! நான் அவதரித்த இந்த யதுகுலம், ஆணவத்தால் ஆர்ப்பரிக்கிறது. தங்களை வெல்ல யாருமேயில்லை என்று மகா கர்வத்துடன் திரிகிறார்கள். உண்மையும் அதுதான்! இவர்கள் என் ஒருவனுக்கு பயந்துதான் இப்போது கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள். நான் இங்கிருந்து புறப்பட்டு விட்டால், அணையை உடைத்துக் கொண்டு ஓடும் காட்டாறாக, பூமியையே நாசம் செய்து விடுவார்கள். எனவே, இவர்களுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுத் திரும்புகிறேன்!' என்றான்.

அதற்குத் தகுந்தபடி சில காரியங்களைச் செய்தான்.

துவாரகையில் ஒரு யாகத்துக்கு ஏற்பாடு செய்து, விசுவாமித்திரர், அஸிதர், துர்வாசர் போன்ற அநேக ரிஷிகளை வரவழைத்தான்.

எல்லோருமே மூக்கின் நுனியில் கோபத்தை வைத்திருக்கும் ரிஷிகள். ஒரு சின்ன அவமரியாதையையும் பொறுக்காமல் சீறி எழுபவர்கள்!

கண்ணனின் அழைப்பை ஏற்று ரிஷிகள் அனைவரும் யாகத்துக்கு வந்து சிறப்பித்தார்கள். கொஞ்சமும் நியமம் தப்பாமல் யாகத்தை மிக நல்லமுறையில் நடத்தித் தந்தனர். பின் கிருஷ்ணனின் மரியாதையை ஏற்றுக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு பிண்டாரகம் என்னும் தலத்துக்குச் சென்றனர்.

அங்கே யதுகுலத்து இளைஞர்கள் சிலர் பேசிச் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தனர். விதவிதமான ரிஷிகளைப் பார்த்ததும் அவர்களுக்குள் குறும்பு கூத்தாடியது. தங்களுக்குள் ரகசியமாகப் பேசிக்கொண்டவர்கள், கிருஷ்ணனுக்கும் ஜாம்பவதிக்கும் பிறந்த மகனான சாம்பனுக்கு, பெண் வேடம் போட்டனர். ஒரு கர்ப்பிணிப் பெண் போல அவனை ரிஷிகளிடம் அழைத்துச்சென்றனர்.

போலியான மரியாதையுடன் ரிஷிகளை வணங்கிவிட்டு மிகுந்த பவ்யமாக சாம்பனைக் காட்டி, 'ரிஷிகளே! நீங்கள்தான் முக்காலமும் அறிந்தவர்கள் ஆயிற்றே! கர்ப்பமடைந்துள்ள இவள், தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என்று அறிய விரும்புகிறாள். தயவுசெய்து சொல்லுங்கள்!' என்றனர்.

அங்குதான் ஆரம்பித்தது யதுகுலத்துக்கான அழிவு! கண்ணன் எதை உத்தேசித்து ரிஷிகளை வரவழைத்தானோ அது மிகச் சரியாக நடந்தது!

ரிஷிகளுக்கு இளைஞர்களின் கேலி புரிந்துபோனது! ஆணவத்துடன் அவர்கள் தங்களைச் சோதிக்கிறார்கள் என்பது மனத்தில் கோபமூட்டியது.

'மடையர்களே! உங்கள் குலத்தையே அழிக்கப்போகும் உலக்கையைத்தான் இவன் பெற்றெடுக்கப் போகிறான்!' என்று சபித்துவிட்டு அங்கிருந்து விலகினார்கள்.

இளைஞர்கள் மனம் கலங்கிப் போனார்கள். 'விளையாட்டு வினையாகப் போய்விட்டதே' என்று வருந்தினார்கள்.

சிறிது நாளிலேயே, ரிஷிகளின் சாபப்படி சாம்பனின் வயிற்றில் இருந்து ஓர் இரும்பு உலக்கை பிறந்தது. இளைஞர்கள் பயந்து போனார்கள்.

மன்னன் உக்ரசேனனிடம், அந்த இரும்பு உலக்கையை எடுத்துச்சென்று நடந்து அனைத்தையும் சொல்லி தலை குனிந்தார்கள்.

உக்ரசேனனும் மற்ற மந்திரி பெரியோர்களும் அதைக்கேட்டு நடுங்கிப்போனார்கள். இளைஞர்களின் குறும்புத்தனம், குலநாசத்துக்கே வழி வகுத்துவிட்டதே என்று வருந்தி னார்கள்.

இளைஞர்களைத் திட்டித் தீர்த்த உக்ரசேனன், அந்த இரும்பு உலக்கையை தூள்தூளாகப் பொடித்து கடலில் கரைத்து விடுமாறு கூறினான். இளைஞர்களும் மன்னன் சொன்ன படியே செய்து முடித்தார்கள்.

அவர்கள் பொடி செய்ததில், ஓர் இரும்புத் துண்டு மட்டும் பொடியாகாமல் கடலில் விழுந்தது. அந்த இரும்புத் துண்டை, ஒரு மீன் விழுங்கியது. அந்த மீன் ஒரு மீனவன் வலையில் சிக்கியது.

மீனை, மீனவன் தன் மனைவியிடம் கொடுத்தான். அவள் அதை சமையலுக்காக நறுக்கும்போது, மீனின் வயிற்றிலிருந்து இரும்புத் துண்டு கீழே விழுந்தது. மீனவன் அந்த இரும்புத் துண்டை எடுத்து, அதை கூராக வடித்து தன் அம்பின் நுனியில் பொருத்திக்கொண்டான்.

கடலில் வீசப்பட்ட இரும்புத் துகள்களோ காலப்போக்கில் அலைகளால் அடித்து வரப்பட்டு, கரையோரம் படிந்தன. அதிலிருந்து நாணல்கள் தோன்றி புதராக மண்டின.

இதன்பிறகு துவாரகையில் பலவிதமான தீய சகுனங்கள் தோன்றின. புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களும் உண்டாகின. துவாரகை உண்டான காலம் முதல் இதுமாதிரியான அபாயங்கள் எதுவும் ஏற்படாததால், இப்போது மக்கள் பயந்து நடுங்கினார்கள். கண்ணனிடம் சென்று முறையிட்டார்கள்.

கண்ணன் அவர்களிடம், 'துவாரகைக்கு விரைவிலேயே பெரிய ஆபத்து வந்தாலும் வரலாம். இவையெல்லாம் அதற் கான சகுனங்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ரிஷிகளின் சாபம் பலித்துவிடுமோ என்றே அஞ்சுகிறேன். இனி நாம், இங்கிருக்கக் கூடாது. எல்லோரும் துவாரகையை விட்டு பிரபாஸ தீர்த்தத்துக்குச் செல்வோம்!' என்று கூறினான்.

அதன்படியே எல்லோரும் துவாரகையைவிட்டு பிரபாஸ தீர்த்தம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது ஒரு தனிமைத் தருணத்தில் உத்தவர் கிருஷ்ண னிடம் கேட்டார்:

'கண்ணா! பரம்பொருளே! நீ செய்யும் காரியங்கள் எல்லா வற்றுக்கும் பொருள் தெரிந்தவனல்ல நான்! அதையெல்லாம் உணரும் அருகதையும் எனக்குக் கிடையாது. ஆனாலும், யது குலத்தவரை இந்த பிரபாஸ தீர்த்தத்துக்குக் கொண்டுவந்ததின் நோக்கம் ரிஷிகளின் சாபம் நிறைவேறுவதற்குத்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. குலம் அழியுமானால், நீயும் என்னைவிட்டு நீங்கி விடுவாயோ என்று அஞ்சுகிறேன். லோக நாயகனே! என்னால் உன்னைவிட்டு பிரிந்திருக்க முடியாது. நீ எந்த லோகத்துக்குச் சென்றாலும் என்னையும் அழைத்துச் செல்!' என்று கண்களில் கண்ணீர் தளும்பக் கூறினார்.

கண்ணன் அவரிடம் அன்புடன் கூறினான்:

'உத்தவரே! யாதவ குலம் சீக்கிரமே அழியப்போவது நிச்சயம். அதுமட்டுமின்றி, இன்றையிலிருந்து ஏழாம்நாள் துவார கையை கடல் பொங்கி மூழ்கடிக்கப் போகிறது. எனவே, நீங்கள் இங்கிருந்து தீர்த்த யாத்திரைக்கு புறப்பட்டுச் சென்றுவிடுங்கள். என்னை மனத்தில் இருத்தி தியானிப் பவனுக்கு, எல்லா இடத்திலும் நான் இருப்பது புலப்படும்.

எனவே, இந்த உலகையே நானாக பாவித்து சஞ்சாரம் செய்யுங்கள்!' என்றான்.

'நீ சொல்வது புத்திக்குப் புரிகிறது. ஆனால், மனம் சஞ்சலப் படுகிறதே கிருஷ்ணா! பந்தபாச மாயைகளிலிருந்து விடுபட மறுக்கிற மனத்தை, தெளிய வைக்க என்ன செய்வது? அதற்கான வழியை நீதான் உபதேசிக்க வேண்டும்!'

உத்தவரின் வேண்டுகோளின்படியே, அவருக்கு மனத்தை நிலைப்படுத்துவதற்கான உபதேசத்தை சொல்லத் தொடங்கி னான் கண்ணன்.

பாகவதத்தில் சிறப்பித்துப் பேசப்படுவது, உத்தவருக்கு கண்ணன் உபதேசித்த உத்தவகீதைதான்!

கிருஷ்ணனால் அர்ஜுனனுக்குச் சொல்லப்பட்ட பகவத்கீதை போலவே, உத்தவருக்குச் சொல்லப்பட்ட உத்தவ கீதையும் மிகச் சிறப்பானது. உத்தவ கீதைக்குள் 'அவதூது கீதை, பிக்ஷுகீதை' என்பனவெல்லாம் உண்டு.

கண்ணனிடம் உபதேசம் பெற்ற உத்தவர், கசியும் கண்களுடன் நா தழுதழுக்கக் கூறினார்:

'உன் அருளால், என் மனத்திலிருந்த இருள் அகன்றது!' என்று அவன் பாதம் பணிந்து வணங்கினார்.

'உத்தவரே! நீர் பதரிகாஸ்ரமம் சென்று, கங்கையில் புனித நீராடி, என்னையே நினைத்து வருவீராக! உரிய காலம் வந்ததும் என்னை வந்து சேர்வீர்!' என்று சொல்லி, அவருக்கு விடைகொடுத்து அனுப்பினான்.

பின் கிருஷ்ணன், பிரபாஸ தீர்த்தத்தின் கரைக்கு வந்தபோது யாதவர்களுக்குள் ஏதோ வாக்குவாதம் நடந்து கொண் டிருந்தது.

விளையாட்டாக ஆரம்பித்த பேச்சுதான் வாக்குவாதமாகி அவர்கள் அருந்தியிருந்த மதுவின் காரணமாக மூர்க்கத்தனம் எழுந்து சண்டையில் முடிந்தது. 'நீ அயோக்கியன்!' 'நீ ஒழுங்கீனமானவன்!' என்று ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக்கொண்டு, அடிதடியில் இறங்கினார்கள்.

துவாரகையில் இருந்து புறப்பட்டபோது உயிருக்குப் பயந்து போட்டது போட்டபடியே வந்துவிட்டதால், யார் கைகளிலும் ஆயுதமில்லை. ஆகவே, கரையில் வளர்ந்திருந்த கோரைப் புற்களைப் பிடுங்கி ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர்.

அந்தக் கோரைப் புற்கள், கடலில் கரைக்கப்பட்டு கரையில் ஒதுங்கிய இரும்புத் துகள்களிலிருந்து தோன்றிய கோரைகள்! எனவே, அவர்கள் பிடுங்கியதும் ஒவ்வொரு கோரையுமே இரும்பு உலக்கைகளாயின. ஆயுதம் கிடைத்த சந்தோஷத்தில் மாறி மாறி அடித்துக்கொண்டனர்.

அலறலும் வெறிக்கூச்சலும் ஓலமுமாக அந்தப் பிரதேசமே ரத்தமயமானது. அப்பனும் பிள்ளையும் அடித்துக் கொண் டனர். அண்ணனும் தம்பியும் தாக்கிக்கொண்டனர். உறவு களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டு கொஞ்ச நேரத்திலேயே ஒருவர் மிச்சமில்லாமல் அத்தனைபேரும் அங்கே மாண்டுகிடந்தனர்.

அவர்களையெல்லாம் சலனமின்றி பார்த்த பலராமன், கடலோரத்திலேயே அமர்ந்து பரமாத்மாவை மனத்தில் வைத்து தியானத்தில் ஆழ்ந்தான். அவன் உடலிலிருந்து ஒரு நாகம் வெளிப்பட்டு கடலுக்குள் சென்று மறைந்தது. தேகம் தரையில் சாய்ந்தது.

யதுகுலம் முழுவதும் அழிந்து பலராமனும் தேகத்தை விட்டு விண்ணுலகம் சென்றதைக் கண்ட கிருஷ்ணன், ஓர் மரத்தின் கீழ் சென்று அமர்ந்தான். வலது துடை மேல் இடது பாதத்தை வைத்து தியானத்தில் ஆழ்ந்தான்.

அப்போது தூரத்தில் வந்துகொண்டிருந்த ஜரை என்கிற வேடனுக்கு, கண்ணனின் பாதம் ஒரு மானைப்போல் தோன்ற, அவன் வில்லை நாணேற்றி அம்பைப் பூட்டினான்.

அந்த அம்பு, தூளாக்கி வீசப்பட்ட இரும்பு உலக்கையில் பொடியாகாமல் போன இரும்புத் துண்டு பொருத்தப்பட்ட அம்பு!

வேடனின் அம்பு, குறி தவறாமல் பாய்ந்து வந்து கண்ணனின் பாதத்தில் தைத்தது. சந்தோஷமாக ஓடிவந்த வேடன், அருகில் நெருங்கியதும் அதிர்ந்துபோனான். கிருஷ்ணனின் உள்ளங் காலில் தன் அம்பு தைத்திருப்பதைப் பார்த்து பதறினான், துடித்தான்.

'ஐயனே! தெரியாமல் தவறிழைத்துவிட்ட இந்தப் பாவியை தண்டியுங்கள்!' என்று காலில் விழுந்தான்.

கண்ணன் அவனைத் தேற்றினான்:

'வேடனே, வருந்தாதே! நான் வேண்டுமென்றேதான் எனது பாதத்தை மான் போன்ற தோற்றம் தெரியுமாறு செய்தேன். அஞ்சாதே! போய் வா! நீ உன் கடமையைத்தான் செய்தாய்! புண்ணிய காரியத்தைச் செய்தவர்களுக்கான சொர்க்கம் உனக்குக் காத்திருக்கிறது!' என்றான்.

அப்போது விண்ணிலிருந்து தேவ விமானம் வந்து, வேடனை சொர்க்கத்துக்கு அழைத்துப் போனது.

அடுத்து, கிருஷ்ணனின் தேரும் ஆயுதங்களும்கூட விண்ணில் சென்று மறைந்தன.

பகவான் பூவுலகிலிருந்து வைகுண்டம் மீள்வதைத் தரிசிக்க, தேவர்கள் விண்ணில் வந்து சூழ்ந்தனர். பூக்களைப் பொழிந் தனர். துந்துபி வாந்தியங்கள் இசைத்தனர். கிருஷ்ணன் தன் கமலக்கண்களை மூடி, யோகத்தில் ஆழ்ந்து வைகுண்ட லோகத்துக்கு எழுந்தருளினான்.

துவாரகையில் மீதம் இருந்தவர்கள் எல்லோரையும், பின் அர்ஜுனன் வந்து அஸ்தினாபுரத்துக்கு அழைத்துப்போனான். கண்ணன் சொன்னபடியே ஏழாம்நாள், துவாரகை கடலில் மூழ்கியது. கிருஷ்ணனின் மாளிகை மட்டும் மிஞ்சி நின்றது!'

சுகர் மகிரிஷி, பகவானின் பெருமைகளையும் சிறப்பு களையும் லீலா வினோதங்களைக் கொண்டதுமான உயரிய பாகவதத்தை மனம் நெகிழச் சொல்லிமுடித்தார்.

பின் அவர் பரீட்சித்திடம், 'பாவங்களைப் போக்குவதும் முக்தியைத் தரக்கூடியதுமான இந்த பாகவத புராணத்தை, பிரம்மா நாரதருக்கும், அவர் வியாசருக்கும், வியாசர் எனக்கும் உபதேசித்தார்கள். அந்த திவ்ய புராணத்தையே நான் இப்போது உனக்குச் சொன்னேன். இந்தப் புராணத்தை பின்னாளில் ஸூதர் முனிவர் என்பவர் நைமி சாரண்யத்தில் சனகாதி முனிவர்களுக்கு சொல்லப்போகிறார்.

இந்த பாகவத புராணத்தைக் கேட்கும் பாக்கியம் பெற்ற தினால், நீ பகவானை தியானிக்கப் பெறுவாய். அதனால், தட்சகன் உன்னைத் தீண்டும் வேதனையைக்கூட உணரமாட் டாய்! வாழி நீ!' என்று ஆசீர்வதித்துவிட்டுப் புறப்பட்டார்.

பரீட்சித், தன்னை தட்சகன் நாகம் தீண்டப்போகும் வேதனையோ மரண பயமோ ஏதுமில்லாமல் மனச் சலன மற்றவனாக, நாராயணனை மனத்தில் துதித்து தியானத்தில் ஆழ்ந்தான்.

ரிஷிகுமாரனின் சாபப்படி தட்சகன் பாம்பு அவனைக் கடிக்க, எதையும் உணராமல் நாராயணனின் திருமுகத்தை மனக் கண்களால் தரிசித்தபடியே மோட்சம் பெற்றான்.

நாகத்தின் விஷ வீரியத்தால், அவனது உடல் அந்த நொடியே கருகிச் சாம்பலானது.

பரீட்சித், முக்திபெற்று பரந்தாமனின் திருவடியை சென்று சேர்ந்தான்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

அந்த அம்பு, தூளாக்கி வீசப்பட்ட இரும்பு உலக்கையில் பொடியாகாமல் போன இரும்புத் துண்டு பொருத்தப்பட்ட அம்பு!

வேடனின் அம்பு, குறி தவறாமல் பாய்ந்து வந்து கண்ணனின் பாதத்தில் தைத்தது. சந்தோஷமாக ஓடிவந்த வேடன், அருகில் நெருங்கியதும் அதிர்ந்துபோனான். கிருஷ்ணனின் உள்ளங் காலில் தன் அம்பு தைத்திருப்பதைப் பார்த்து பதறினான், துடித்தான்.

'ஐயனே! தெரியாமல் தவறிழைத்துவிட்ட இந்தப் பாவியை தண்டியுங்கள்!' என்று காலில் விழுந்தான்.

கண்ணன் அவனைத் தேற்றினான்:

'வேடனே, வருந்தாதே! நான் வேண்டுமென்றேதான் எனது பாதத்தை மான் போன்ற தோற்றம் தெரியுமாறு செய்தேன். அஞ்சாதே! போய் வா! நீ உன் கடமையைத்தான் செய்தாய்! புண்ணிய காரியத்தைச் செய்தவர்களுக்கான சொர்க்கம் உனக்குக் காத்திருக்கிறது!' என்றான்.

அப்போது விண்ணிலிருந்து தேவ விமானம் வந்து, வேடனை சொர்க்கத்துக்கு அழைத்துப் போனது.

அடுத்து, கிருஷ்ணனின் தேரும் ஆயுதங்களும்கூட விண்ணில் சென்று மறைந்தன.

பகவான் பூவுலகிலிருந்து வைகுண்டம் மீள்வதைத் தரிசிக்க, தேவர்கள் விண்ணில் வந்து சூழ்ந்தனர். பூக்களைப் பொழிந் தனர். துந்துபி வாந்தியங்கள் இசைத்தனர். கிருஷ்ணன் தன் கமலக்கண்களை மூடி, யோகத்தில் ஆழ்ந்து வைகுண்ட லோகத்துக்கு எழுந்தருளினான்.

துவாரகையில் மீதம் இருந்தவர்கள் எல்லோரையும், பின் அர்ஜுனன் வந்து அஸ்தினாபுரத்துக்கு அழைத்துப்போனான். கண்ணன் சொன்னபடியே ஏழாம்நாள், துவாரகை கடலில் மூழ்கியது. கிருஷ்ணனின் மாளிகை மட்டும் மிஞ்சி நின்றது!'

சுகர் மகிரிஷி, பகவானின் பெருமைகளையும் சிறப்பு களையும் லீலா வினோதங்களைக் கொண்டதுமான உயரிய பாகவதத்தை மனம் நெகிழச் சொல்லிமுடித்தார்.

பின் அவர் பரீட்சித்திடம், 'பாவங்களைப் போக்குவதும் முக்தியைத் தரக்கூடியதுமான இந்த பாகவத புராணத்தை, பிரம்மா நாரதருக்கும், அவர் வியாசருக்கும், வியாசர் எனக்கும் உபதேசித்தார்கள். அந்த திவ்ய புராணத்தையே நான் இப்போது உனக்குச் சொன்னேன். இந்தப் புராணத்தை பின்னாளில் ஸூதர் முனிவர் என்பவர் நைமி சாரண்யத்தில் சனகாதி முனிவர்களுக்கு சொல்லப்போகிறார்.

இந்த பாகவத புராணத்தைக் கேட்கும் பாக்கியம் பெற்ற தினால், நீ பகவானை தியானிக்கப் பெறுவாய். அதனால், தட்சகன் உன்னைத் தீண்டும் வேதனையைக்கூட உணரமாட் டாய்! வாழி நீ!' என்று ஆசீர்வதித்துவிட்டுப் புறப்பட்டார்.

பரீட்சித், தன்னை தட்சகன் நாகம் தீண்டப்போகும் வேதனையோ மரண பயமோ ஏதுமில்லாமல் மனச் சலன மற்றவனாக, நாராயணனை மனத்தில் துதித்து தியானத்தில் ஆழ்ந்தான்.

ரிஷிகுமாரனின் சாபப்படி தட்சகன் பாம்பு அவனைக் கடிக்க, எதையும் உணராமல் நாராயணனின் திருமுகத்தை மனக் கண்களால் தரிசித்தபடியே மோட்சம் பெற்றான்.

நாகத்தின் விஷ வீரியத்தால், அவனது உடல் அந்த நொடியே கருகிச் சாம்பலானது.

பரீட்சித், முக்திபெற்று பரந்தாமனின் திருவடியை சென்று சேர்ந்தான்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்